In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகம செய்தி விளக்கம்

வினா விடை



சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்ரமணிய ஸ்வாமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சீர்மிகு
ஸ்ரீ வள்ளி கல்யாண சுந்தரர்

சிறுவாபுரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகம செய்தி விளக்கம்

(வினா-விடை)

தொகுப்பாசிரியர் :
T.D.பாலீஸ்வரன்
(ஓய்வுபெற்ற தமிழாசிரியர்)
50/4, சமரபுரி முதலி தெரு,
திருவாயர்பாடி, பொன்னேரி - 601 204.

RMG
GROUP COMPANIES

வெளியிடுபவர்:
சுப.சி.ராஜாமணிமுத்துகணேசன்
பாகனேரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூற்குறிப்பு :

தலைப்பு : சிவாகம செய்தி விளக்கம் (வினா-விடை)

ஆசிரியர் : வித்வான் தி.து. பாலீஸ்வர குருக்கள்

இரண்டாம் பதிப்பு : மார்ச், 2008

உரிமை : திரு. P.C.ஆனந்தசிவாசாரியார்,
அர்ச்சகர்,
சிறுவாபுரி ஸ்ரீபாலசுப்ரமணிய சுவாமி கோவில்

தாள் அளவு : டெம்மி 1 × 8

எழுத்து : 11 புள்ளிகள்

பக்கங்கள் : 212

விலை : ரூ.

வெளியிட்டோர் : திரு. சுப.சி.ராஜாமணிமுத்துகணேசன்,
பாகனேரி.

ஒளி அச்சுக்கோர்வை & அச்சிட்டோர் } T.L.S. பிரிண்டர்ஸ்,
9, தாயுமான் செட்டி தெரு,
பொன்னேரி - 601 204.
☎ : 044-27974228. Cell : 9380512228.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

முருகன் துணை

முதல்பதிப்பின் முகவுரை

"சதுர்புஜே குண்டிகா அக்ஷமாலா
வாமோரு ஹஸ்த: அபய தக்ஷ பாணி:
கிரீடமூர்த்னி: ஸ்திதபாத பத்மம்
வந்தே குஹம் வித்ரும வர்ண சோபம்"

எல்லாம் வல்ல முருகப்பெருமானின் அருள் கூட்டுவித்த படி "சிவாகம செய்தி விளக்கம்" (வினா-விடை) எனும் இந்த நூல் வெளி வருகிறது.

சிவாகம செய்திகளில் சிலவற்றையாவது யாவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் எனும் நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டு வெளிவருகிறது.

பூஜை முறைகள், உத்ஸவமுறைகள், கிரியைகளின் விளக்கங்கள், அவற்றின் தத்துவங்கள் ஆகியனவற்றை விளக்குவ தாக இந்நூல் அமைந்திருக்கிறது.

சிவாமக பாடசாலைகளில் பயிலும் மாணவர்கட்கும், E.O. தேர்வு எழுதும் மற்றவர்களுக்கும் இது ஒரு கையேடாக அமையும்.

இந்நூல் பல்வகையாலும் யாவருக்கும் பயன்படவேண்டு மென்ற பொதுநோக்கத்துடன் எழுதப்பட்டதாகும்.

காமிகம், காரணம், அஜிதம், மகுடம், குமாரதந்திரம் போன்ற ஆகம நூல்களில் கூறப்பட்டுள்ள செய்திகளே ஈண்டு வினா- விடையாகத் தொகுத்து தரப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூல் வெளிவர எனக்குப் பல்லாற்றானும் உதவிபுரிந்த சிவத்திரு. P.C. ஆனந்த சிவாசாரியார் (ஸ்ரீசிறுவாபுரி முருகன் கோவில் ஸ்தானீகர்) அவர்கட்கும், இந்நூல் மீண்டும் இரண்டாம் பதிப்பாக வெளிவரப் பொருள் உதவி புரிந்த பெருந்தகையாளர் உயர்திரு. சுப.சி.ராஜாமணிமுத்துகணேசன் (R.M.G. Group Companies (O.No. 42-B) N.No. 51, C.P. Manor Building, C.P. Ramasamy Road, Alwarpet Chennai - 600 018 அவர்களுக்கும் சிறுவாபுரி முருகன் நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வங்களையும் மட்டில்லாது வாரி வழங்க வேண்டுமென்று இறைஞ்சி அவர் திருப்பாதங்களில் என் சென்னி சேர்த்து வணங்கி வேண்டிக் கொள்கின்றேன்.

குறித்த நேரத்தில், அழகிய முகப்பட்டையோடு இந்நூலை அழகுற அமைத்து அச்சடித்து உதவிய நண்பர் திரு. T.L.சிவலிங்கம் M.A.B.L., T.L.S. பிரிண்டர்ஸ், பொன்னேரி, செயலாளர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அவர்களுக்கும், அழகான முறையில் அச்சுக் கோப்பு செய்து உதவிய செல்வி. **காமாட்சி** அவர்கட்கும் மற்றும் அச்சக ஊழியர் களுக்கும் என் ஆசியைக் கூறிக் கொள்வதுடன் சிறுவாபுரி முருகனின் அருளும் அவர்களுக்குச் சித்திக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்நூலைக் காணும் அன்பர்கள் இந்நூலில் கண்ணுறும் குறை நிறைகளை எனக்கு எழுதுவார்களேயானால் நான் அவர்கட்கு மிக்க நன்றிக்கடன் பட்டவனாவேன்.

வணக்கம்.

தி.து.பாலீஸ்வரன்
50/4, சமரபுரி முதலி தெரு,
திருவாயர்பாடி,
பொன்னேரி - 601 204.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

1. எந்தக் காரியம் தொடங்கினாலும் 9
2. விநாயகர் விளக்குக? 10
3. சுப்ரமண்ணியர் தத்துவ விளக்கம் தருக? 15
4. சர்வ வல்லமை படைத்த கடவுள் சிவபிரான் ஒருவரே 24
5. கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்படுகின்ற 37
6. நம் நாட்டில் லிங்கப் பிரதிஷ்டையில் எத்தனை 37
7. இறைவனின் திருவுருவம் எத்தனை வகைப்படும்? 38
8. ரூபியான (சகளம்) சிவபிரானின் உருவபேதங்கள் 38
8.1. சோமாஸ்கந்தர் 39
8.2 நடராஜர் 42
8.3 விருஷபாரூடர் 44
8.4 கல்யாண சுந்தரர் 45
8.5 சந்திரசேகரர் 45
8.6 பிக்ஷாடனர் 46
8.7 காமாரி 48
8.8 காலாரி 49
8.9 ஜலந்தராரி 50
8.10 திரிபுராந்தகர் 51
8.11 கஜசம்ஹாரர் 53
8.12 வீரபத்திரர் 54
8.13 தட்சிணாமூர்த்தி 56
8.14 கிராதமூர்த்தி 57
8.15 நீலகண்டர் 57
8.16 கங்காளர் 59
8.17 சக்ரதானர் 61
8.18 கஜமுகாநுக்கிரகர் 62
8.19 சண்டேசானுக்கிரஹர் 63
8.20 ஏகபாதர் 65
8.21 லிங்கோத்பவர் 65
8.22 சுகாசனர் 67
8.23 உமாமஹேசர் 68
8.24 ஹரிஹரர் 69
8.25 அர்த்தநாரீஸ்வரர் 69
9. லிங்க வடிவத் தத்துவம் யாது? 70
10. சகள உருவங்களுக்குப் பல கைகளும் 71
11. சிவபிரானுக்கு உரித்தான ஆயுதங்களையும் 71
12. சிவபெருமான், கங்கை, பிறைச்சந்திரன் 73
13. சிவன்கோயில்களில் உள்ளேயும், வெளியேயும் 77

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. கொடிமரம் : துவஜஸ்தம்பம் ஏன்? விளக்குக 81
15. ஆகம முறைப்படியான உத்தம, மத்யம 82
16. யோகபேரம், போகபேரம் என்பன யாவை? 82
17. பூஜைக்கு என்று ஏதாவது கால அளவுகள் 83
18. கோவில்களில் பலிபீடங்கள் உள்ளனவே ஏன்? 83
19. திக்பாலகர்கள் என்பவர் யாவர்? 84
20. திக்பாலகர் பூஜையில் சொல்லப்பட்ட 84
21. சிவபிரானின் ஐந்து பிள்ளைகளாக 85
22. சிவன்கோயில்களில் சில 85
23. சூரியனுக்குத் தனிக்கோயில் உண்டா? 86
24. சிவன் கோவில்களில் சந்திரனுக்குத் தனிக்கோவில் 88
25. சிவன்கோவில்களில் சனிபகவானுக்குத் தனிக்கோவில் 90
26. பஞ்சசுத்திகள் யாவை? ஏன் செய்ய வேண்டும்? 91
27. சூஷ்த்ரபூஜை, பத்ரபூஜை என்பன யாவை? 91
28. லோகபாலகர்கள் என்பவர் யாவர்? 92
29. சிவன் கோவில்களிலும் மற்றச் சைவக் கோவில் 92
30. சிவாகமங்கள் என்பவை எவை? 98
31. ஞானபாத தத்துவத்திரயம் என்பதென்ன? 101
32. சிவாகமம் கற்க வாய்ப்பின்மையால் ஞான பாதத்தை 101
33. பிராணாயாமம் என்றாலென்ன? விளக்கம் தருக? 105
34. சகளீகரணம் என்பதென்ன? ஏன் செய்யவேண்டும்? 106
35. கடவுள் என்பதற்குப் பொருள் யாது? 107
36. கடவுளின் இயல்புகள் யாவை? 107
37. இறைவனுக்குச் சக்தி உண்டென்பது உண்மையா? 108
38. கடவுட் சக்திகளின் செயல்பாடுகள் யாவை? 108
39. சிவனை அதிஷ்டித்த சக்தி வெவ்வேறு பெயர்களை 109
40. சாதாக்கியம் என்பது என்ன? 110
41. ஆத்மார்த்த பூஜையில் சுத்தம், கேவலம், மிஸ்ரம் 113
42. பஞ்சப்பிரம்மத்தின் பஞ்சகிருத்யம் யாவை? 114
43. சிவபூஜையைச் செய்து அதனால் பயனடைந்தவர் 114
44. ஆத்மார்த்த பூஜையை ஒருவர் செய்வதால் 115
45. சிவதர்மங்கள் என்பவை யாவை? 115
46. பஞ்சகவ்யம் என்பதற்குப் பொருள் யாது? 116
47. பஞ்சகவ்யம் தயாரிக்க வேண்டிய முறை 116
48. பஞ்சகவ்யங்களைக் கூட்டும் முறைகள் 118
49. சப்தகோடி மகா மந்திரங்கள் என்பவை யாவை? 119
50. ஆறு ஆசனங்கள் யாவை? 119
51. கலை ஐந்து என்பவை எவை? 120
52. ஷடத்துவா என்பதென்ன? 120
53. கலாத்வா விளக்குக 121

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

54. புவனாத்வா என்பதை விளக்குக 121
55. தத்துவாத்வா என்பதை விளக்குக 122
56. வர்ணாத்வா என்பதை விளக்குக 123
57.பதாத்வா விளக்குக 124
58. மந்திரத்வா விளக்குக. 125
59. கலாத்வா, தத்வாத்வா, புவனாத்வா 125
60. மேற்கண்ட ஆறு அத்வாக்களின் வழியாக 127
61. வர்ணநியாசம் 129
62. அடுத்து வருவது பதன்யாசமாகும் 130
63. ஆறாவதாக மந்திராத்வா கூறப்படுகிறது 130
64. 224 புவனங்களின் பெயர்களும் 131
65. சிவன் கோவில்களில் பஞ்சகோஷ்டம் என்பதென்ன? 140
66. பஞ்ச சுத்தி என்பவை யாவை? 140
67. பூதசுத்தி என்பதென்ன? 141
68. சூக்ஷ்மதேஹ சுத்தி 144
69. ஸ்தூலதேகசுத்தி 144
70. நிவிர்த்திகலாசுத்தி 145
71. பிரதிஷ்டாகலாசுத்தி 145
72. வித்யாகலாசுத்தி 146
73. சாந்திகலாசுத்தி 146
74. சாந்தியதீதகலை 147
75. அனுக்கிரஹக்கிரம பூதசுத்தி 150
76. அந்தர் யாகம் செய்வது எப்படி? 152
77. இடசுத்திக்கு ஸ்தானசுத்தி என்பது பெயராகும் 152
78. பாத்யம் 153
79. ஆசமனம் 153
80. அர்க்யம் 153
81. விசேஷார்க்யம் 154
82. மந்திரசுத்தி 154
83. ஆத்மசுத்தி 155
84. லிங்கசுத்தி 155
85. ஆத்மார்த்தபூஜை செய்ய எவ்வகை 156
86. பரார்த்தபூஜையை எங்குச் செய்யலாம்? 157
87. ஆகமத்தின் இரு பிரிவுகள் யாவை? 157
88. சரீரம் பஞ்சபௌதிக வ்யாபகம் விளக்குக 158
89. பஞ்சாத்மபேதம் என்பது என்ன? 158
90. பூததேக குணங்கள் யாவை? 158
91. கர்ணிகை என்பதென்ன? 158
92. யஜமானன், சிவாசாரியார், சாதாகசாரியார் 159
93. ஆசனம் (இருப்பிடம்) என்பது என்ன? 159

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

94. ஆசமனம் ஏன் செய்ய வேண்டும்? 159
95. சகளீகரளம் எத்தனை வகைப்படும்? 160
96. ஆசமனம் செய்தபின் தொடவேண்டிய இடங்கள் 163
97. அர்க்யதீர்த்தம் (தர்ப்பணம்) எவ்வாறு விடவேண்டும்? 164
98. ஏன் எல்லாக் காரியங்களிலும் பவித்ரம் தரித்துக் 164
99. திருவிழாக்காலங்களில் இறைவனை 164
100. பவித்ரோத்ஸவம் என்பதென்ன? 169
101. தேவி எனப்படும் பராசக்தி 170
102. கிரியை செய்பவர்கள் கிரியைத் தொடங்குமுன் 175
103. விபூதியின் வேறு பெயர்கள் 175
104. விபூதியின் வகைகள் யாவை? 176
105. விபூதியில் பல நிறங்கள் உள்ளனவா? 176
106. விபூதி தாரணம் எத்தனை வகை? 177
107. ருத்ராக்ஷம் விளக்கம் தருக 178
108. கிரியாரம்ப காலத்தில் மணியடிப்பது 180
109. கிரியைகளைச் செய்பவர்கள் தரையில் 180
110. சங்கல்பம் என்றால் என்ன? 181
111. புண்யாகவாசனத்தின் பொருள் என்ன? 182
112. பூஜை முறைகளில் வேறுபாடு உண்டா? 183
113. சங்கோபங்க பூஜை என்பதென்ன? 183
114. பூஜா காலங்களில் சிவாச்சாரியன் எவ்வாறு 184
115. பெரியமணி அடிக்க வேண்டிய காலங்கள் 185
116. சங்கொலிக்கும் காலங்கள் எவை? 185
117. வேதங்கள் எப்பொழுதெல்லாம் ஒலிக்கப்பட 185
118. கோவிலில் இறைவனை எப்போதெல்லாம் 185
119. கோவில்களில் பூஜைக்கு உரித்தான வாத்யங்கள் 185
120. கோவில், ஆலயம் பொருள் தருக 186
121. கோவில் அமைப்பில் எத்தனை வகை உண்டு? 186
122. சிவாகமங்கள் கூறும் முறைப்படியான கோவில் 186
123. ப்ராகாரங்கள் ஐந்து ஏன்? 186
124. தூண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 187
125. கோபுரம், ஸ்தூபி இரண்டிற்கும் வேறுபாடு 187
126. கோவில்களில் பலவகை வாத்யங்கள் 188
127. கோவில்களில் தீபாராதனை செய்கிறபோது 189
128. சோமசூத்ரப்பிரதக்ஷிணம் என்பது என்ன? 190
129. ஷோடசோபசார (16 வகை) பூஜை என்பன யாவை? 191
130. சோடசோபசார தீபாராதனை எவை? 198
131. சிவாசார்யர்கள் தீபராதனையை எப்படி 199
132. வில்வார்ச்சனை செய்வதின் பலன் யாது? 200

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

முருகன் துணை

1. எந்தக் காரியம் தொடங்கினாலும் முதலில் விநாயகரை வழிபட வேண்டும் என்பது ஏன்? எப்படி வணங்கவேண்டும்?

எந்தக் காரியம் செய்யத் தொடங்கும் முன்பும் விநாயகர் வழிபாடு ஏன் செய்யவேண்டுமெனின் விநாயகரின் அருளைப் பெறவும், அவனருளாலே எல்லா விக்நங்களும் நீங்கவும் என்க. மேலும், எப்படி வணங்கவேண்டுமெனின்,

விநாயகரின் மூலமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு இரு கரங்களையும் முஷ்டியாகப் பிடித்துச் சிரசில் ஐந்துமுறை குட்டிக் கொள்ள வேண்டும். அவ்வாறு குட்டிக்கொள்ளும்பொழுது நமது மத்தகத்தில் இருக்கும் அமிர்தமானது பெருக்கெடுத்து 'சுஷூம்நா' எனும் நாடி வழியாக மூலாதாரம்வரை சென்று அங்கு ஒளிரூபமாக விளங்குகின்ற விநாயகரை அடைந்துப் பின் நம் உடம்பில் உட் பகுதியில் அபிஷேக ரூபமாகப் பாய்ந்து விநாயகரின் அருளை நமக்குள் கூட்டுவிக்கின்றது என்பதாக உணரவேண்டும்.

ஐந்துமுறை ஏன் குட்டிக்கொள்ள வேண்டுமெனின், நமக்குண்டான பஞ்ச பாசநீக்கத்தின் பொருட்டாக. பஞ்சபாசமாவன:

1. ஆணவம்
2. திரோதானம்
3. கன்மம்
4. அசுத்த மாயை
5. சுத்த மாயை என்பனவாம்.

மேலும், விக்நேஸ்வர பூஜையை முதலில் செய்யாவிட்டால் செய்யப்பட இருக்கும் செயலில் தடங்கல் நேரிடும். விக்நேஸ்வர பூஜையைச் செய்து எந்தக்காரியம் தொடங்கினாலும், அக்காரியத்தில் உண்டாகும் தடைகள் எல்லாம் விநாயகரின் அருளினால் நீங்கிவிடும். எனவே கட்டாயமாக முதலில் விநாயகர் வழிபாடு செய்யவேண்டும்.

செயல்களைச் செய்யத்தொடங்கும்போது விநாயகர் உருவத்தை மஞ்சள் பொடியால் செய்துகொள்ளலாம். தர்பைக் கூர்ச்சத்திலும் பூஜை செய்யலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. விநாயகர் விளக்குக?

விநாயகர், கணபதி, கஜானனர், ஏகதந்தர் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். விநாயகர் என்பதற்குத் தனக்குமேல் தலைவன் இல்லாதவன் என்பது பொருள்.

கணாநாம் பதி : (கணபதி) கணங்கள் எல்லாவற்றிற்கும் இவரே தலைவர் என்பது இதன் பொருள்.

கஜ+ஆனனம்+அர் = (கஜானனர்) யானையின் முகம் உடையவர் என்பது இதன் பொருள்.

ஏக+தந்த+அர் (ஏகதந்தர்) ஒரு தந்தம் (ஒற்றைக்கோடு) உடையவர் என்பது இதன் பொருள்.

விநாயகருடைய உருவம் ஓம்காரவடிவமாகும். நான்கு கைகள் மற்றும் ஒரு துதிக்கை சேர்த்து இவருக்கு ஐந்து கைகள் உண்டு. எனவே இவரை 'ஐந்துகரத்தன்' என்று கூறுவர்.

ஜேஷ்டராஜன் என்பது இவருடைய பெயர்களில் ஒன்று. கணபதி, முருகன், வீரபத்திரன், பைரவர், சாஸ்தா ஆகிய ஐவரும் சிவகுமார்கள் ஆவார்கள். அவர்களில் மூத்தவர் விநாயகர் எனவே இவருக்கு 'ஜேஷ்டராஜன்' என்று பெயர் உண்டாயிற்று.

இவருடைய தோற்றம் அற்புதமானது. விலங்கு, மனிதன், பூதம், தேவர் என நால்வகைக் கலப்பில் உள்ளதைக் காணலாம்.

யானைத்தலை	:	விலங்கு
உடம்பு	:	மனிதவடிவம்
பெருவயிறு	:	பூதம்
நான்கு கைகள்	:	தெய்வாம்சம்

இவருக்குக் கைகள் நான்கு, அவற்றில் ஒன்றில் 'பாசம்' எனும் கருவியையும், மற்றொன்றில் 'அங்குசம்' எனும் கருவியையும், மற்றொரு கையில் 'மோதகம்' எனும் கொழுக்கட்டையையும், மற்றொரு கையில் 'அபயம்' காட்டியும் அல்லது ஒடிந்த தந்தத்தை ஏந்தியும் இருக்கக் காணலாம்.

உயிர்களின் பாசநீக்கத்தைச் செய்ய வல்லவர் என்பதால் பாசமும், உயிர்களை நேர்வழியில் செலுத்துபவர் என்பதால் அங்கு சமும், கொழுக்கட்டையின் உள்ளே ருசிமிக்க பூரணம் என்ற ஒன்று இருக்கும். அந்தப்பூரணம் மறைந்து காணப்படும். அதை உண்ணும் போது பூரணம் மறைந்திருந்து ருசியை அளிப்பதைப்போல விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்களுக்கு மறைந்திருந்து அருளும் அருள் உள்ளம் உடையவர் என்பதை உணர்த்தும். அபயக்கரம் அநுக்கிரஹம், உயிர்கட்குப் பாது காப்பாக இருப்பவர் என்பதை விளக்கும்.

ஒடிந்த தந்தம் ஞானமயமானது என்பர். போரில் ஆயுதமாகவும், சமகாலத்தில் எழுத்தாணியாகவும் பயன்படுகிறது. அதுமட்டுமல்ல ஒடியாத கொம்பு 'அபரஞானம்' என்றும் ஒடிந்த கொம்பு 'பதிஞானம்' என்றும் கூறுவர். பதிஞானத்தை அளிக்கவே ஒடிந்த கொம்பு எனக் கொள்ளவேண்டும்.

ஓங்கார வடிவமான உடல் அமைப்பால் விநாயகர் மந்திரங்களுக் கெல்லாம் மூலமானவர் என்பதும், மூன்று வேதங்களின் உட் பொருளாக இருப்பவர் என்பதும் எல்லா உலகங்களும் தோன்றி ஒடுங்கும் 'குடிலை' என்னும் சுத்த மாயாதத்துவம் என்பதாகவும் கொள்ளவேண்டும்.

மேலும் இவருடைய ஐந்துகரங்களும் ஐந்து தொழில்களை உணர்த்துவதாகவும் கூறுவார்கள்.

நன்மை தீமை எனும் இருவினைகளையும் களைந்து நேர்வழியில் அழைத்துச் செல்ல பாசமும் அங்குசமும் கைக்கொண்டார். எனவே, பாசம் (நன்மை) சிருஷ்டித் தொழிலையும் அங்குசம் (தீமை) அழித்தல் தொழிலையும் குறித்தன என்பதாக உணரவேண்டும்.

'மோதகம்', திரோதானம் (மறைந்திருந்து அருளுதல்) வரத முத்திரை அநுக்கிரஹம் துதிக்கை. காத்தல் (அதாவது உயிர்களைத் தன் துதிக்கையால் தூக்கி நிறுத்தி அவைகளை துன்பத்திலிருந்து விடுவிக்கிறார்) என்பதாகக் கொள்ளவேண்டும்.

தியானிப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விநாயகரின் உருவம் தத்துவச்சிறப்பு உடையதாகும்.

யானைமுகம் - பிரணவஸ்வரூபம்.

மூன்று கண்கள் - சூரியன், சந்திரன், நெருப்பு இருசெவிகள் (யானைக்!காது) மலங்களை ஆன்மாக்கள் அடையதாபடி தடுத்துக் காத்தல், அத்துடன் இருவினைகளையும் அகற்றுதல்.

ஐந்துகரங்கள் : ஐந்து தொழில் புரியும் ஆற்றல்.

பெருவயிறு : அண்டங்கள் அனைத்தையும் (உயிர்கள் அனைத்தையும்) தன்னகத்தே அடக்கிக் கொள்ளும் ஆற்றல்.

இரண்டு சிறிய திருவடிகள்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வலப்பாதம் : பூமியைத் தொட்டபடி கீழ்நோக்கி இருக்கும். உலக உயிர்கட்கு ஆதாரமான இத்திருவடி. சீவான்மாக்களை மேல்நோக்கிச் செலுத்தும் ஆற்றலுடையதாகும். இடப்பாதம் : ஆணவ மலம் நீங்கி அமைதிபெற இடம் தருவது என்பனவானத் தத்துவப் பொருள்பட விநாயகர் உருவத்தை எண்ணி வழிபடவேண்டும்.

இவருடைய வாகனம். பெருச்சாளி (மூஷிகம் என்பர்).

மிகப்பெரிய உருவமுடைய விநாயகருக்கு மிகச்சிறிய உருவ முடைய பெருச்சாளி வாகனம் என்றால் வியப்பாக இருக்கும்.

கண்ணெதிரில் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்திருந்து வினை யாற்றும் இயல்புடைய பெருச்சாளி அசுரர்களையும் அவர்களின் அடாத செயல்களையும் குறிப்பதாகும்.

அவர்கள் தீய குணம் அடங்க அவர்களை அடக்கி அவர்கள் மூலம் உயிர்களுக்குத் துன்பம் நேராமல் பாதுகாக்கவே அசுர ஸ்வரூபமான பெருச்சாளியை அடக்கி அதன் மீது தான் ஏறி அமர்ந்து அருள் பாலிக்கிறார் என்று கொள்ள வேண்டும்.

நாம் ஒரு குழந்தையை அன்புடன் கொஞ்சினால் அக்குழந்தை யின் தாய் தந்தையர் மகிழ்ந்து நமக்கு அறிமுகமாகாதவர்களாக இருந்தாலும் தங்கள் பிரியத்தை நம்மீது காட்டுவார்கள்.

அதுபோல உலகத்துக்கே தாய் தந்தையரான பார்வதியும் பரமேஸ்வரனும் அவர்களின் பிள்ளையான கணபதியை நாம் கொஞ்சினால் அவரின் தாய்தந்தையரான பார்வதி பரமேஸ்வரரின் அருளை நாம் சுலபமாகப் பெறலாம் என்று காஞ்சிப் பெரியவர் மொழிந்தபடி நாம் விநாயகனை வணங்கி வழிபட்டு அவர்மூலம் உமாமகேஸ்வரர்களுடைய அருளைப் பெற வேண்டும்.

குறிப்பாக நாம் ஒரு செயலைத் தொடங்கும்போது சித்தி விநாயகரை வழிபடவேண்டும்.

அவர், ஒரு தந்தம், யானைக்காது, யானைமுகம், பெருவயிறு, பாசம், அங்குசம் ஆகியன உடையவர். அவர் தேவாதிதேவர். அவரை வணங்கி நாம் செயல்பட்டால் அந்தச் செயல் தடங்கல் ஏதும் இன்றி இனிது நிறைவேறும்.

"ஏக தந்தம் சூர்ப்பகர்ணம் கஜவக்த்ரம் மஹோதரம்!

பாசாங்குசதரம் தேவம்
த்யாயேத் சித்திவிநாயகம்!!"

என்பது அவருடைய ரூபத்தியானமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயரின் திருவுருவம் 16 வகைப்படும்.

1. பாலகணபதி 2. தருணகணபதி 3. பக்திகணபதி 4. வீரகணபதி 5. சக்திகணபதி 6. த்விஜகணபதி 7. பிங்கலகணபதி 8. உச்சிஷ்ட கணபதி 9. விக்நராஜகணபதி 10. க்ஷிப்ரகணபதி 11. ஹேரம்பகணபதி 12. லட்சுமீ கணபதி 13. மஹாகணபதி 14. புவனேசகணபதி 15. நிருத்த கணபதி 16. ஊர்த்துவ கணபதி.

இவை தவிர மேலும் பல உருவங்கள் விநாயகருக்கு உண்டு. அவையாவன:

1. ஏகாட்சரகணபதி 2. வரகணபதி 3. திரயாட்சர கணபதி 4.விஜயகணபதி 5. ஹரித்ராகணபதி 6. ஏகதந்தகணபதி 7. சிருஷ்டி கணபதி 8. உத்தண்டகணபதி 9. ருணமோசன கணபதி 10. டுண்டி கணபதி 11. த்விமுககணபதி 12. மும்முககணபதி 13. பஞ்சமுக கணபதி 14. சிம்ஹகணபதி 15. யோக கணபதி 16. துர்க்கா கணபதி 17. சங்கடஹரகணபதி 18. திருஷ்டி கணபதி

என்பனவாகப் பரந்து காணப்படுவது அறிக.

விநாயகர் வழிபாட்டில், குட்டிக் கொள்வதும் - தோப்புக்கரணம் போடுவதும் மிகவும் இன்றியமையாதனவாகும்.

விநாயகரை வணங்கும்போது முதலில் வலக்கையை இடப்பாக மாகவும் இடக்கையை வலப்பாகமாகவும் மாற்றி முஷ்டியாகச் செய்து கன்னத்தில் (நெற்றிப்பொட்டு) ஐந்து முறை லேசாக குட்டிக் கொள்ள வேண்டும்.

சுக்லாம், அம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம் என்று முறையே ஐந்து பதங்களையும் சொல்லி ஐந்து குட்டுகள் குட்டிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நெற்றியில் குட்டிக் கொள்வதால் அங்குள்ள அமிர்த கலசம் திறந்து வெளிப்பட்டு அவ்வமிர்தம் உடல் முழுவதும் பரவி உடம்பில் சுருசுருப்பையும் அமைதியையும் உண்டுபண்ணும். அதனால் மனம் தெளிவுபெறும். தெளிந்த மனதால் இறைவனைத் தொழுதால் தொழுகையின் முழுப்பலனையும் நாம் அடைய முடியும்.

காதைப்பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதால் நரம்புகள் தூண்டப்பட்டு நாடிகள் செயல்படத் தொடங்கும். இவருக்குப் பிடித்தமான பத்திரம் (பச்சிலை) அருகம்புல். வன்னிப் பத்திரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவகையில் மிகவும் பிடித்தமானது வெள்ளெருக்கம்பூ. இவருக்குத் தேங்காய் உடைப்பதைவிடச் சூரைவிடுவதே சிறப்பாகும். (செதிர்காய்)

திரியம்பக மந்திரம் சொல்லித் தேங்காயைச் சூரையிடல் வேண்டும்.

இவரைச் சதுர்த்தி (வளர்பிறை) நாளில் வழிபடுவது பலன் தரும். இந்த சதுர்த்திக்குச் சங்கடஹர சதுர்த்தி என்று பெயர். அன்றைய தினம் விருதம் இருந்து மாலை சந்திரன் உதயமானபின்பு 16 கொழுக் கட்டைகள் மட்டுமே செய்து விநாயகரை வணங்கி நிவேதனம் செய்ய வேண்டும். அதன் பின்பு சந்திரனைத் தரிசனம் செய்ய வேண்டும். கொழுக்கட்டைகளைப் பிள்ளைகளுக்கு வினியோகம் செய்ய வேண்டும். மீதியைத் தானும் உண்ணலாம். இவ்வாறு விடாது வழிபட்டு வந்தால் வாழ்வின் சகல சங்கடங்களும் தீரும். நலம் தரும்.

மாசி மாதத்தில் வரும் சங்கடஹர சதுர்த்திக்கு மஹாசங்கடஹர சதுர்த்தி என்பது பெயர். இது மங்கள வாரத்தில் வருமானால் மேலும் சிறப்பாகும். வருடம் முழுவதும் நோன்பு செய்ய முடியாதவர்கள் அன்று மட்டுமாவது விரதமிருந்து வழிபடலாம். அதனால் விநாயகரின் அருள்பூரணமாகக் கிடைக்கும்.

இவரைப் பற்றிய புராணங்கள் தோத்திரங்கள் நிரம்ப உள்ளன. விநாயகபுராணம், முத்கள புராணம் போன்றவை அவற்றுள் சிலவாகும். இவற்றின்மூலம் மேலும் பல செய்திகளை அறிந்து கொள்ள முடியும். இவரைப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமானால், ஆகம சாஸ்திரப்படி பிதிஷ்டை செய்து வழிபடுவதே உத்தமமாகும். மற்ற வகையில் செய்வது சிறப்பைத் தராது.

இவருக்கு அரசமரத்தடியிலும், வன்னி மரத்தடியிலும், ஆல மரத்து அடியிலும் தனிக்கோவில் கட்டி வழிபடலாம்.

பெருங்கோவில்களில் (சிவன் கோவில்களில் என்றால்) கோவிலின் தென்மேற்கு மூலையில் தனியாகச் சிறு கோவில்கட்டி அதில் பிரதிஷ்டை செய்து வழிபட வேண்டும்.

கோவில் துவாரங்களிலும் சிறுமாடம் அமைத்துப் பிரதிஷ்டை செய்து வழிபடலாம். அங்கனமாயின் மூலவர்மண்டபம் செல்லும். வழியில் முகமண்டபத்திற்கு வெளியே, அல்லது அர்த்த மண்டபத்திற்கு வெளியே தென்கிழக்குப் பகுதியில் கிழக்கு முகமாகப் பிரதிஷ்டை செய்து வழிபடலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணபதியின் அஷ்டவித்யேஸ்வரர்கள் (த்விதீயாவரணம்)

1. வரதன் 2. வீரன் 3. விக்னேசன் 4. கஜானன் 5. பக்ஷயப்பிரியன் 6. கஜகர்ணகன் 7. விநாயகன் 8. லம்போதரன்.

த்ருதியாவரணம்

1. சுப்ரபூதன் 2. சுவக்த்ரன் 3. வாமனன் 4. சங்கபாலன் 5. மூஷிகன் 6. கிரிதுண்டன் 7. உக்ரன் 8. கும்பசண்டன்.

விநாயகரின் சண்டேசர் : கும்பசண்டர் எனப்படுவார்.

துவாரபாலகர்:

1. கூஷ்மாண்டன், குண்டோதரன். வாஹனம் : மூஷிகம்.

குறிப்பு : ஓம், 'வக்ரதுண்டாய ஹூம்' எனும் விநாயகரின் மந்திரத்தை பதினாறு முறை சொல்லி வழிபட்டுவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றால் திரும்பி வீடு வந்து சேரும்வரை எந்த துன்பமும் உண்டாகாது என்பது புராண வசனமாகும்.

3. சுப்ரமண்ணியர் தத்துவ விளக்கம் தருக?

சிவபெருமானிடம், 'தங்களால் எங்களுக்கு மரணம் நேரக் கூடாது' என்று வரம் பெற்ற (காஸ்யபருக்கும் மாயைக்கும் மக்களாகப் பிறந்த) சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோர் தங்கள் தவபலத்தால் தேவர்களை நிலைகுலையச் செய்து அவர்களை விரட்டிவிட்டனர்.

இந்திரன் முதலான தேவர்கள் வானுலகம் துறந்து மண்ணுலகுக்கு வந்து மறைந்து வாழ்ந்தனர். அவ்வாறு அவர்கள் துன்புறக்காரணம் யாதெனின் நிரீஸ்வரயாகம் (ஈஸ்வரன் இல்லாமல் யாகம்) செய்த தட்சனின் யாகத்தில் கலந்துகொண்டதால் உண்டான சிவத் துரோகமேயாகும்.

தட்சயாகத்தில் அவமதிப்பைப் பெற்ற தாட்சாயணி கயிலையை விட்டு மண்ணுலகு வந்து பர்வதராஜனின் மகளாகப் பிறந்து வளர்ந்து வரலானார்.

சிவபிரானும் உமையில்லாமையால் யோகமார்க்கம் மேற் கொண்டு தட்சிணாமூர்த்தி கோலத்தில் அமர்ந்து சனகாதி முனிகட்டு சரியை, கிரியை, ஞானம், யோகம் எனும் இவற்றை உபதேசித்து வரலானார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நிலையில் பலகாலம் தேவர்கள் துன்பம் அநுபவித்து வரவும் தங்கள் துன்பம் தீரவேண்டுமானால், "சிவபிரான் யோகமார்கத்தை நீத்து மீண்டும் பார்வதியுடன் இணைந்தால்தான் தங்களுக்கு விடிவு காலம் ஏற்படும்" என்று எண்ணி அவர்கள் மன்மதனை ஏவி மலரக் கணையைச் சிவபிரான் மீது விடச் செய்தனர். (அவனும் சிவன் மீது மலர்க்கணை தொடுத்து அவரது நெற்றிக்கண்ணால் எரிக்கப் பட்டான். அவனுடைய மனைவிக்கு மட்டும் உருவத்துடனும், மற்றவர்கட்கு அரூபியாகவும் விளங்கும் வரத்தை அவனது மனைவி யான ரதிதேவி சிவனிடம் பெற்றாள்.)

மாறனின் மலர்க்கணை தன்மீது படவே, யோகத்தினின்று விடுபட்ட சிவபிரான் தேவர்களின் துன்ப நீக்கத்தின் பொருட்டுப் பார்வதியை மணந்தார். மீண்டும் கயிலை சென்று உமையம்மை யுடன் காட்சி தந்தார்.

இவ்வாறு அவர் மகிழ்வுடன் உமையுடன் சேர்ந்து அமர்ந்துள்ள நேரத்தில் பிரமன், விஷ்ணு, இந்திராதி தேவர்கள் அவரை வணங்கி நின்று தங்கள் துன்பத்தைப் போக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர்.

சூரபத்மனையும் அவனது தம்பிகளையும் அவர்கள் முன்பு தன்னிடம் பெற்ற வரத்தின்படி அழிக்க முடியாது. ஆகையால் தனக்கு நிகரான எல்லா சக்திகளும் நிரம்பிய ஒரு குமாரனை தோற்றுவிக்க எண்ணினார் சிவபெருமான்.

தமது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் ஐந்து முகங்களோடு அதோமுகம் எனும் ஆறாவது முகத்தையும் சக்தியின் பால் திருப்பிச் சக்தியைப் பார்த்தார்.

அந்த நேரத்தில் சிவபிரானின் ஆறு முகங்களின் நெற்றிக் கண்ணி லிருந்து ஆறு நெருப்புப் பிழம்புகள் தோன்றி வெளிப்பட்டன.

அதைக்கண்டு அதிசயித்த பிரம்மாதி தேவர்கள் செய்வதறியாது ஒருகணம் திகைத்து நின்றனர். பின்பு பிரம்மன் அந்த நெருப்புக் கோளங்களை வாயுதேவனிடம் எடுத்துக் கொடுத்தார். வாயு அதைத் தாங்கமாட்டாமல் அக்நி பகவானிடம் கொடுத்தார். அவரும் அவை களைத் தாங்கமாட்டாமல் கங்காதேவியிடம் சேர்த்துவிட்டார். கங்காதேவி அந்த நெருப்புக்கோளங்களைச் சரவணப் பொய்கையில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டாள்.

அச்சரவணப் பொய்கையில் ஆறு நெருப்புப் பிழம்புகளும் ஆறு குழந்தைகளாக உருப்பெற்று ஆறு தாமரை மலர்களில் விளங்கின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்குழந்தைகளை ஆறு கிருத்திகைப் பெண்கள் ஏற்று வளர்த்து வந்தனர். ஒருநாள் பார்வதி தேவி அணைக்க அவை ஆறும் ஒருடல் பெற்று ஆறு திருமுகங்களுடன் ஆறுமுகப்பெருமானாகக் காட்சி தந்தார்.

ஆறு நெருப்புக் கோளங்கள் சிவபிரானின் நெற்றிக்கண்ணி லிருந்து தோன்றியபோது அச்சுற்று அகன்ற பார்வதியின் காற் சிலம்புகளிலிருந்து நவரத்தினங்கள் உதிர்ந்தன. அவற்றில் சிவ பிரானின் மேனி பிரதிபலித்தது. உடனே அப்பிரதிபிம்பங்கள் ஒன்பது பெண்களாக மாறின.

1. மாணிக்கவல்லி 2. தரளவல்லி (தரளம் முத்து) 3. புஷ்யவல்லி 4. கோமேதகவல்லி 5. வைடூர்யவல்லி 6. வஜ்ரவல்லி (வஜ்ரம் : வைரம்) 7. மரகத வல்லி 8. பவழவல்லி 9. நீலவல்லி என்பது அவர்களின் பெயர்.

அவர்களுக்குச் சிவபிரானின் அருள் நோக்கினால் ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் முறையே 1. வீரபாஹு 2. வீரகேசரி 3. வீரமஹேந்திரன் 4. வீரமஹேஸ்வரன் 5. வீரபுரந்தரன் 6. வீர ராக்ஷஸன் 7. வீரமார்த்தாண்டன் 8. வீராந்தகன் 9. வீரதீரன் என்பவராவர்.

இவர்களே முருகனின் சேனைத் தலைவர்கள். இவர்களை 'நவ வீரர்கள்' என்பர்.

ஆறுமுகங்களுடன் காட்சிதந்த ஷண்முகப் பெருமானைப் பார்வதியும் பரமேஸ்வரனும் கயிலைக்கு அழைத்துச் சென்று ஆசி வழங்கினர். (முருகனின் இளமைப் பருவ திருவிளையாடல்களை ஸ்காந்தமஹா புராணத்தின் மூலம் அறிந்து தெளிவு பெறலாம்.)

பின்னர் தக்க தருணம் நேர்ந்த போது முருகப்பெருமான் சூரபத்மன் முதலானவர்களை அழித்து தேவர்கட்கு வாழ்வு தந்து 'தேவசேனாபதி' என்ற பெயரையும் பெற்றார். இது முருகபிரானின் தோற்றம் பற்றிய வரலாறு ஆகும்.

தேவாசுரதத்துவம்

பயமில்லாமை, மனத்தூய்மை, தெளிந்த அறிவு, தானம், தபஸ் செய்தல், ஐம்பொறியடக்கம், தெய்வபக்தி, வஞ்சனை இல்லாமை, பிற உயிர்களைக் கொல்லாமை, பொய் பேசாமை, கோபப்படாமை, அஹங்காரம், மமகாரம் இல்லாமை, கோள் சொல்லாமை, மன அமைதி கொள்ளுதல், இரக்கம், கருணை, அன்புடைமை, செயல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களில் மென்மை, பேச்சில் இனிமை, செய்யத்தகுந்த காரியம் செய்தல், தகாத செயல்களைச் செய்யாமை, அறிவொளி பெற்று விளங்குதல், பொறுமையாக இருத்தல், தைரியமுடன் இருத்தல், உடற்தூய்மை, உள்ளத்தூய்மைகளுடன் விளங்குதல், தற்புகழ்ச்சி கொள்ளாமை போன்ற நல்ல குணங்கள் தேவாம்சம் பொருந்தியவை. இவை தேவகுணங்கள் இவைகளைப் பெற்றவர்கள் தேவர்கள்.

வீண் பெருமை, கர்வம், பிறர் பொருள் மீது ஆசை, கோபங் கொள்ளுதல், கொடூரகுணம், அறிவின்மை, கொலை செய்தல் போன்றவை அசுராம்சம் பொருந்திய குணங்கள். இக்குணங்கள் உள்ளவர்கள் அசுரர்கள் எனப்படுவர்.

உயிர்களிடத்தில் அசுரகுணம் அண்டிக்கிடக்குமானால் அவற்றை நீக்கி இறைவன் அவ்வுயிர்களுக்கு தேவகுணம் பொருந்தச் செய்வார் என்பதே தேவாசுரத்தத்துவம் ஆகும்.

சுப்பிரமணியரின் அவதார தத்துவம்:

இறைவனின் ஆறு திருமுகங்களிலிருந்து வெளிப்பட்ட தூய்மை யான அறிவொளியான நெற்றிக்கண்ணுக்கு "ஞானக்கண்" என்று பெயர். முன் கூறியபடி இறைவனுக்கு ஐந்து முகங்கள் வெளிப் படையாகவும், ஒன்று மறைந்தும் இருக்கும் ஆக ஆறுமுகங்கள் உண்டு.

இவற்றில் ஆறாவது முகம் "குடிலாசக்தி" எனப்படும்.

ஆக இந்த ஆறுமுகமும் முறையே 1. பூமி 2. தண்ணீர் 3. நெருப்பு 4. காற்று 5. ஆகாயம் 6. மனம் என்பனவாகும்.

பஞ்சபூதங்களின் தன்மைகள் தனித்தனியாகவும், கூட்டாகவும் 1. கந்தம் 2. ரசம் 3. ரூபம் 4. ஸ்பர்சம் 5. சப்தம் 6. இன்பதுன்பம் (மனம்) என விளங்கும்.

பஞ்சேந்திரியங்களாலும் மனத்தினாலும் அறியத்தக்க ஞானமே ஆறு நெற்றிக்கண்களிலிருந்து ஆறு பொறிகளாக வெளிப்பட்டன.

இவ்வாறு தூய்மையான ஞானமானது சிவனின் ஆறு நெற்றிக் கண்களிலிருந்து வெளிவந்தபோது, ஆகாயத்துடனும், காற்றுடனும், நெருப்புடனும், தண்ணீருடனும், சேர்க்கப்பட்டு முடிவில் மண்ணில் (நாணற்காடு) சேர்க்கப்பட்டமையால் பூமியோடும் தொடர்பு கொண்டு நல்ல குணமும் அழகும் பொருந்திய திருமேனியாகக் காட்சி தந்தது என்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரவணப் பொய்கையின் தத்துவம்

மண்ணிலிருந்தே அற்பபப்புல் முதல் எல்லாமும் வெளிப் படுகின்றன. இங்கு சரவணம் என்பது நாணற்காடு ஆகும். பஞ்ச பூதங்களின் தொடர்பு சரவணப் பொய்கைக்கு உண்டு.

பிரபஞ்சமே கடவுளின் உருவம் எனப்படுகிறது. வடமொழியில் 'சர' என்ற பதத்திற்கு 25 என்பது பொருளாகும்.

வணம் கூட்டம். (சர+வணம்=சரவணம்) 25 புருஷதத்துவத்தின் கூட்டம் என்று பொருள் கொள்ளலாம். உலகுக்கு அதிஷ்டானமான புருஷதத்துவத்தின் விளக்கமே 'சரவணன்' முருகன் என்க.

சிவசக்திகளின் கூட்டு வடிவமே முருகன்

சிவன் பரிபூரணன். பார்வதியோ அழியாத சக்தி ஆக பரி பூரணனான சிவனின் அம்சமும் பார்வதியின் அழியாத சக்திமயமான அம்சமும் கூடியவன் ஷண்முகன். சிவசக்திகளின் ஐக்கிய வடிவமே சுப்ரமணியன் என்று கொள்ள வேண்டும்.

விநாயகனைப் போலவே முருகனுக்கும் 16 வடிவங்கள் உள்ளன.

1. ஞானசக்திரதரன் 2. ஸ்கந்தன் 3. தேவசேனாதிபதி 4. சுப்ர மண்யன் 5. கஜாரூடன் 6. சரவணபவன் 7. கார்த்திகேயன் 8. குமார ஸ்வாமி 9. ஷண்முகசுவாமி 10. தாரகாரி. 11. பிரும்மசாஸ்தா 12. வல்லீ கல்யாணமூர்த்தி 13. பாலமுருகன் 14. கிரௌஞ்சகிரி பேதனர் 15. மயூரவாஹனன் 16. சேநாநீ (சேனாபதி) என்பனவாகும்.

இப்பெயர்களின் பொருள் முறையே,

1. பார்வதியால் அளிக்கப்பட்ட வேலைதரித்தவன்.

2. காமம், குரோதம் முதலான சத்துருக்களை வேரறுப்பவன்.

3. தேவர்கள் மகிழ்ந்து அளித்த தேவசேனா என்பவளின் கணவன்.

4. சுப்ரமணியன் ஆனந்த ஸ்வரூபமுடையவன் (அழகன், முருகன்) 'ஸு': நன்றாக, :பிரம்ஹ' : பெரிய உலகு 'ண்யம்' அகண்ட மானது. அதாவது எங்கும் வியாபித்து உள்ள சக்திதானந்தப் பரம் பொருள் என்பது இதற்குப் பொருளாகும்.

5. கஜாரூடன் யானையை வாகனமாக உடையவன்.

6. சரவணபவன் பஞ்சபூதத் தொடர்புடைய சரவணப் பொய்கை யில் மனித வடிவமும் ஆறு திருமுகமும் கொண்டு தோன்றியவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. கார்த்திகேயன். கிருத்திகை என்னும் ஆறு நட்சத்திரப் பெண்களிடம் பாலுண்டு வளர்ந்தவன். (ஆறுவித ஐஸ்வர்யங்களே கிருத்திகை நட்சத்திரமாகும். 1. செல்வம் 2. தர்மம் 3. கீர்த்தி 4. அழகு 5. அறிவு 6. வைராக்யம் எனும் ஆறு நற்குணங்களே அவையாகும்.)

குமாரஸ்வாமி

8. கு - அசுத்தம் அவை. ஆணவம், கன்மம், மாயை.

மாரன் - அழிப்பவன். அதாவது உயிர்களுக்கு உண்டான மும் மலங்களையும் போக்குபவன் என்பது பொருள்.

கௌ : உலகில் மாம் : மோட்சத்தை (மாம் : லட்சுமியை)

ராதி : அளிப்பவன் 'குமாரன்' என்பதாம்.

அதாவது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் முதலான குற்றங்களைப் போக்கி உயிர்கட்கு ஜீவன் முக்தியளிப்பவன் என்பது குமாரன் என்பதற்குப் பொருளாகும்.

9. ஷண்முகன் : சிவசக்திரூபமானவன்.

மேல், கீழ், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகள் யாவிலும் வியாபித்து இருப்பவன். ஆறு சாதாக்யமானவன். ஆறு லட்சணங்களோடு கூடியவன். ஆறு வேதாங்கப் பொருளானவன். பஞ்சேந்திரியங்களினாலும் மனதாலும் உணரப்படுகின்ற ஞான வடிவானவன் என்பன போன்ற பலதத்துவ நிரூபணன் என்பதாகும்.

10. தாரகாரி தாரகன் என்னும் அசுரனுக்கு எதிரி.

11. பிரம்மசாஸ்தா. பிரம்மனுக்கு பிரணவப் பொருளை உணர்த்தியவன்.

12. வல்லீகல்யாண மூர்த்தி : வல்லி என்னும் வேடுவர் குலப் பெண்ணை மணந்தவன். (ஜீவாத்மாக்களைப் பமாத்மாவான தன்னுடன் இணைத்துக் கொள்பவன்)

13. பாலமுருகன் (பாலாஜி) முருகன் என்றும் இளமை யுடையவன். எப்போதும் புதிதாய் விளங்குபவன்.

14. கிரௌஞ்சகிரிபேதனன். 'கிரௌஞ்சம்' என்னும் மலையைப் பிளந்தவன். (கடினமான அஞ்ஞானமென்னும் இருளைத் தன் ஞான சக்தியாகிய வேலினால் பிளந்தவன் என்பது பொருள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. மயூரவாஹனன். மயிலை வாகனமாக உடையவன். (மயில் என்பது மாயாஸ்வரூபம் அதையடக்கியாள்பவன் என்பது இதன் பொருளாகும்)

16. சேநானீ : தேவர்களின் சேனைக்குத்தலைவன். (நற்குணங் களுக்கெல்லாம் தலைமை ஏற்கும் நாயகன் என்பது இதன் பொருள்)

இவை தவிர சக்திதரன், சேவற்கொடியோன், ஹரசூனு, குஹன், குருமூர்த்தி போன்ற பெயர்களும் முருகனுக்கு உண்டென்று அறிக. சக்திதரன், ஞானசக்தியாகிய வேலைத்தரித்தவன். சேவற் கொடியோன். சேவல் சின்னம் பொறித்த கொடியையுடையவன். ஹரன் - சிவன் (சிவனின்) மகன் ஹரசூனு.

குஹன் : ஹ்ருதயமாகிய குகையில் வசிப்பவன் (யோகிகளின் ஹ்ருதயத்தாமரையில் வசிப்பவன்) என்பது பொருள்.

குருமூர்த்தி பிரமனுக்கும், சிவபிரானுக்கும் குருவாக விளங்கிப் பிரணவப்பொருளை உணர்த்தியவன் என்பது பொருள். இதையே 'சுவாமிநாதன்' என்றும் கூறுவர்.

முருகன் பஞ்சகிருத்யம் புரியும் வல்லமை படைத்தவன் என்பதை

1. செருக்கடைந்த பிரம்மனைத் தலையில் குட்டிச் சிறைப் படுத்தித் தானே சிருஷ்டியைத் தொடங்கியதால் படைத்தல் தொழில் புரிந்தான் (சிருஷ்டி).

2. முறைப்படி செய்யப்படாத யாகத்தில் தோன்றிய ஆட்டுக் கடாவை அடக்கி வாகனமாக்கி கொண்டதால் ஸ்திதி (காத்தல்) தொழில் புரிந்தான்.

3. இந்திரன் முதலான உயிர்களை மாயையால் மயக்கித் தன்னோடு எதிர்க்கச் செய்த காரணத்தால் மறைத்தல் (திரோபாவம்) எனும் தொழில் புரிந்தான்.

4. சூரபத்மா முதலான அசுரர்களை அழித்தமையால் சம்ஹாரம் (அழித்தல்) எனும் தொழில் புரிந்தான்.

5. மாயையால் கட்டுண்டு தன்னையே எதிர்த்த இந்திராதி தேவர் களுக்கு அருள் புரிந்துத் தனது விராட்புருடத் (விஸ்வரூபத்தை) தன்மையைக் காட்டியதால் அநுக்கிரஹம் என்னும் காத்தல் தொழில் புரிந்தான்.

எனவே முருகனும் சிவனோடு ஒப்ப பஞ்சகிருத்யங்கள் செய்யும் பரம்பொருள் என்பதை அறியலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரபத்மாதிகளின் தத்துவம் வருமாறு:

சூரபத்மன் : அஹங்காரஸ்வரூபம்

சிம்ஹமுகன் : குரோத (கோபம்) ஸ்வரூபம்

தாரகன் : மூடதத்துவம்

அஜமுகி : சபலம்

கிரௌஞ்சமலை : ஜடஸ்வரூபம்

பானுகோபன் : விபரீத சிந்தனை ஸ்வரூபம்

அக்நிமுகன் : துக்கஸ்வரூபம்

தர்மகோபன் : அதர்மம் தீயநடத்தை ஸ்வரூபம்

சூரசம்ஹார தத்துவம் வருமாறு:

சச்சிதானந்தஸ்வரூபியான ஸ்ரீமுருகப்பெருமான் ஆணவ, மலம், மாயாமலம், கர்மமலம் ஆகிய மும்மலஸ்வரூபமான மூன்று (சூர பத்மன் முதலான) அசுரர்களை மாய்த்து (அவர்களின் அகந்தையை அழித்து என்று கொள்க) அருளினார் என்பதாம்.

அதாவது சூரபத்மன் முதலானவர்கட்குண்டாகி இருந்த அஹங் காரம், மமகாரம் முதலான தீயகுணங்களைத் தனது ஞானசக்தியாகிய வேலினாலும், வீரசக்தியாகிய வஜ்ராயுதத்தாலும் மாய்த்து அவர்கள் உய்ய அருளினான். முருகப்பெருமானின் வேல் சூரபத்மன் (மாமர வடிவு கொண்டு விளங்கியபோது) மார்பில் பட்டதும் அவன் அறிவு பெற்று எதிரில் இருப்பது இறைவன் என்பதுணர்ந்து தன் தவற்றுக்கு வருந்தி இறைவனிடம் மயிலாகவும், சேவலாகவும் தன்னை மாற்றிக் கொண்டு சரணாகதியடைந்தான். முருகனும் அவனுடைய செயலை ஏற்று மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்டும், சேவலைத் தன் புகழ்பாடும் கொடியின் சின்னமாகவும் ஏற்றுக்கொண்டு அருள் பாலித்தான் என்பதே சூரசம்ஹாரத் தத்துவமாகும்.

தேவயானை : கிரியாசக்தி, வள்ளி, இச்சக்தி வேல் : ஞானசக்தி என்க.

முருகனின் மூர்த்தி பேதங்கள் யாவை?

1. உட்கார்ந்த பேதங்கள் (ஆசனர்)
2. நின்ற கோலம் (ஸ்தானகர்)
3. நடைக்கோலம் (யானகர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டு கைகள் கொண்டு முறையே உட்கார்ந்த கோலமும் நின்ற கோலமும் விளங்குமானால் ஆசனர் என்றும், ஸ்தானகர் என்றும் வழங்கப்படுவார்.

ஆறு எட்டு பன்னிரெண்டு கரங்களுடன் விளங்கும் மூர்தங்கள் நடைக்கோலம் (யானர்) என்பர்.

மேலும் சக்திகள் இல்லாமல் இருந்தால் 'யோக பேரம்' என்றும், சக்திகளோடு விளங்கினால் 'போகபேரம்' என்றும் வழங்கப்படும்.

முருகனின் அஷ்டவித்யேஸ்வரர்கள் (இரண்டாமாவரணம்)

1. ஜயந்தன் 2. அக்நிசிகன் 3. கிருத்திகாபுத்ரன் 4. பூதபதி 5.ஸேநானீ 6. குஹன் 7. ஹேமசூலன் 8. விசாலாக்ஷன்.

மூன்றாமாவரணம்:

1. கஜேந்திரன் 2. சுதேஹன் 3. மஹாவல்லி 4. சுமுகன் 5. மயூரன் 6. சேனாபதி 7. தேவசேனா 8. சுமித்ரன்.

முருகனின் சண்டேஸ்வரருக்குச் 'சுமித்ரசண்டன்' என்பது பெயர்.

வசிஷ்டகோத்திரத்தில் தோன்றிய ஸ்வர்ணாக்ஷன் என்பவனின் மகன் சுமித்ரன் இவன் தோன்றிய இடம் காசிமாநகரம்.

இவன் விதிப்படி முருகனை சதாகாலமும் பூஜை செய்து உபாசித்து வந்தான். அதன் பலனால் முருகப்பெருமான் அவன் முன்தோன்றி 'எனது கணங்களுக்கு நீ தலைவனாக இருப்பாயாக' என்று வரமருளினார். அன்று முதல் சுமித்ரன் முருகனின் கண்டேசர் ஆனார்.

முருகனின் துவாரபாலகர்

சுதேஹன் : சுமுகன்

முருகப்பெருமானுக்குத் தமிழகத்தில் தனிக்கோயில்கள் பல உள்ளன. சிவன் கோவில்களில் பிரதிஷ்டை செய்வதானால் சிவன் சந்நிதானத்துக்கு வடமேற்கு மூலையில் தனிக்கோவில் அமைத்து பிரதிஷ்டை செய்து வழிபடலாம்.

இவருக்கு உகந்த கிழமை : செவ்வாய்

திதி : சஷ்டி

நட்சத்திரம் : கிருத்திகை விசாகம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்" என்பது ஒரு பழமொழி. அதற்கு சஷ்டியில் விரதம் இருந்தால்தான் அகப்பையில் (கருவில்) குழந்தை உண்டாகும் என்பது பொருளாகும் என்றறிக.

"கொக்கறுகோ" என்று சேவல் கூவுவதின் பொருள் வருமாறு:

மாமரமாக நின்ற சூரபதுமனை முருகப்பெருமான் தனது வேலால் பிளந்து அவனுக்கு மெய்யறிவு புகட்டினார். அவன் இரு கூறாகி மயிலாகவும், சேவலாகவும் வந்து முருகனை வேண்டி நிற்க முருகப்பெருமான் மயிலை வாகனமாக ஏற்றுக் கொண்டார். சேவலை தன் கொடிச் சின்னமாக இருந்து தன் புகழைப் பாடச் செய்தார். அதன்படிச் சேவலாகி நின்ற சூரபதுமன் முருகன் புகழ் பாடி நின்றான். அதாவது, கொக்கு மாமரம் அறு : அறுத்தெறிந்த (பிளவுபடச் செய்த) கோ : தலைவன் என்ற பொருளமைந்த (கொக்கு +அறு +கோ) = கொக்கறுகோ = என்று கூறி முருகன் பெருமையைச் சூரபதுமன் சதா பாடி நிற்பதாகக் கூறுவர்.

மாமரமாக நின்ற என்னை அறுத்து எனக்கு உண்மையைப் புகட்டிய தலைவன் என்று சூரபதுமன் கோழி வடிவில் முருகனைப் புகழ்வதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

4. சர்வ வல்லமை படைத்த கடவுள் சிவபிரான் ஒருவரே என்பதை விளக்குக?

ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே! ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்ஜோதி சிவனேயாவான். வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம் போன்ற அனைத்து நூல்களும் ஈசனின் பெருமையை விளக்குகின்றன.

மஹாப்பிரளய காலத்தில் சிவபிரான் ஒருவர் மட்டுமே எஞ்சி நிற்பார். அவரைத் தர்மம் தாங்கி நிற்கும்.

மஹாப்பிரளய காலத்தில் தருமம் அச்சங்கொண்டு விருஷப வடிவு கொண்டு சிவபிரானை அணுகி நமஸ்கரித்து, "ஹே! மஹா தேவரே! நான் உங்கள் திருவடிகளைச் சரணம் புகுகின்றேன்! இந்த மஹாப்பிரளயத்தில் நான் அழிந்து போகாமல் இருக்க உங்களை வேண்டுகிறேன். நீங்கள் என்னை ஏற்று ரட்சிக்க வேண்டும்" என்று வேண்டி நின்றது.

அதன் வேண்டுகோளை ஏற்றுச் சிவபிரான், "தூயவனே! உன்னை நான் வாகனமாகக் கொண்டு விளங்குவேன்! அஞ்சாதே!" என்று கூறி தனது சந்நிதானத்தில் எப்போதும் தங்கும்படிக்கு உத்தரவு பிறப் பித்தார். அதன்படி தருமநந்தி வாஹனம் சிவனுக்கு உண்டாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருமம் விருஷபரூபம் எடுத்து இறைவனைத் தாங்கி நின்றது. சிவ பிரான் ஒருவர் மட்டுமே மஹாப்பிரளய காலத்தில் எஞ்சிநின்றார். இனியும் நிற்பார் என்பது உணர்க.

பஞ்சகிருத்தியம் செய்ய வல்லவர் சிவபிரான் ஒருவர் மட்டுமே.

பிரபஞ்சம் தோன்றக் காரணமாக இருப்பதும் பிரபஞ்சத்தை நிலைநிறுத்துவதும், அதனை அழிப்பதும் உயிர்கள் இன்பதுன்பம் அடையக் காரணமானதும், பின்பு அந்த இன்பதுன்பத்தினின்று விடுபடக் காரணமானதும் எதுவோ அதுவே 'பிரமம்' எனப்படுகிறது என்பது ஸ்வேதாஸ்வதர உபநிஷத் கூறும் கருத்து. இதனால் சிவ பிரானுக்கே பஞ்ச கிருத்தியம் உண்டு என்பது பிரம்மவாதிகள் கருத்தாகும் என்பது உணரப்படுகிறது.

"எவரிடம் உயிர்கள் உண்டாகின்றனவோ, எவரால் உயிர்கள் நிலைபெறுகின்றனவோ, ஞானம் அடைகின்றனவோ, எவரால் எல்லாம் காக்கப்படுகின்றனவோ அவருக்கு என் நமஸ்காம்" என்று கூறும் ஸ்காந்த மஹாபுராணவாக்காலும் சிவபிரானே ஐந்தொழில் கருத்தா என்பது விளக்கப்பட்டது.

சிவபிரான் பிரணவரூபி

பிரணவத்துக்கு பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் மூர்த்தி, அமூர்த்தி வடிவம் உண்டு. அது ஜோதிஸ்வரூபம். அது அகாரம், உகரம், மகரம் எனும் மூன்று அளவைகளை உடையது. அதனால் பிரணவம் ஈஸ்வர சம்மந்தமுடையது என்பது தெளிவாகிறது.

இந்தப் பிரணவம் சாம வேதத்தில் "உத்கீதம்" என்றும் இருக் வேதத்தில் 'பிரணவம்' என்றும் வழங்கப்படுகிறது. இதற்கு மூப்பு அழிவு கிடையாது.

மூன்று பதம் உடையது. மூன்று அட்சாரம் உடையது. பின்னர் இது ஐந்தாக விரிந்தது. "பிரணவாக்ஷரம்" என்றும் "புண்ணியாக்ஷரம்" என்றும் "பரமாக்ஷரம்" என்றும் பெயர்களைப் பெறுகின்றது. இந்தப் பிரணவத்தைத் தெளிவுபட எவன் அறிகின்றானோ அவன் விரும்பியது அனைத்தையும் அடைவான் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன.

பிரணவம் நாதவடிவம் இது. ஆண், பெண், அலி வடிவம் கொண்டது. இது அக்னி, வாயு, பிரம்மவிஷ்ணு ருத்திர ஸ்வரூப மாகும். இது கார்ஹபத்யம், ஆஹவனீயம், தாக்ஷிணாக்கனி என்னும் வடிவு கொண்டதாகும். ருக், யஜுர், சாம வேத வடிவமாகும். பூ: புவ:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவ: (பூமி, பாதாளம், வானுலகு) எனும் உலக வடிவம் உடைய தாகும். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்கால வடிவமானது. பிரராணன், அக்னி, சூரியன் எனும் பெருமைக்குறிய தாகும். உணவு, தண்ணீர், சந்திரன் எனும் வடிவ மாகும். பத்தி, மனம், அஹங்காரம் எனும் சேதன வடிவமுடையது. பிராணன், அபானன், வியானன் எனும் மூன்று வாயுவின் உருவ முடையது என்று பிரணவம் பலவாறு பொருள் தருவதாகவும் பிரணவம் இறைவனைக் குறித்த மந்திரம் என்பதாகவும் "மைத்ராயணோ பநிஷத்" கூறுகிறது.

பிரணவத்தின் ஆறு பொருள்

"ப்ரதமோ மந்த்ர ரூபஸ்யாத், த்விதீயோ யந்த்ரபாவிதம் தேவதார்த்தஸ்த்ரிதீயே அர்த்தம். ப்ரபஞ்சார்த்தம் தத: பரம் சதுர்த்த: பஞ்சமோர்த்தஸ்யாத் குருரூபப்ரதர்சகம்! ஷஷ்ட: சிஷ்யாத்ம ரூபோர்த்த: ஷடர்த்தா: பரிகீர்த்தித:" 1. மந்திரரூபம் 2. யந்திரரூபம் 3. தேவதார்த்தம் 4. பிரபஞ்சார்த்தம் 5. குருரூபம் 6. சிஷ்யாத்மரூபம் என்று ஆறுவகைப் பொருள் பிரணவத்திற்கு உண்டென்க.

முதல் ஒலி, அகரம், ஐந்தாவது ஒலி, உகரம் 'ப'வர்க்கமுடிவு மகரம். விந்து, நாதம் ஆக இந்த ஐந்தும் வேதங்களில் கூறப்படுவன வாகும். இவை சமஷ்டி ரூபமாக (ஒன்று சேர்ந்த ரூபமாக) 'ஓம்' என்று வேதங்களில் உச்சரிக்கப்படுகின்றன.

'நாதம்' என்பது சர்வசமஷ்டி என்றும், மற்ற பிந்து முதலிய நான்கும் சிவவாசகம் என்றும் கூறுவர். இவை கலந்த ஒலியே மந்திர வடிவாகப் 'பிரணவம்' (ஓம்) என்று ஒலிபெற்று வழங்குவதாகக் கூறப் படுகிறது.

யந்திரரூபம் (யந்திரவடிவம்)

சிவலிங்கமே யந்திரவடிவமாகும் என்பர். அடிப்பீடம் வரைந்து அதற்குமேல் முதல் ஸ்வரமான 'அ'வை எழுதுக. அதற்குமேல் 'உ' ஸ்வரத்தை எழுதுக. அதற்குமேல் பிந்துவையும் நாதத்தையும் எழுதுக. இங்ஙனம் வரைந்த பின்பு பிரணவரூபத்தால் அதை வளைத்து கோடிடுக. இப்போது அது யந்திரவடிவம் கொண்டது என்பது விளங்கும்.

தேவதார்த்தம்

இது மிகவும் ரகசியமானதாகும்.

"சத்யோஜாதம் பிரபத்யாமி" என்று தொடங்கி முடிவில் "சதாசிவோம்" என்பதாக பஞ்சப்பிரம்ம மந்திரத்தை வேதங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒலிக்கின்றன. (தைத்ரீய ஆரண்யம்) ஐந்து தேவதாஸ்வரூபமாகப் பிரணவம் விளங்குகிறது. இவை ஐந்தும், (தத்புருஷம், அகோரம், வாமதேவம் சத்யோஜாதம், ஈசானம் சிவபிரானின் மூர்த்தங்களாகக் கூறப்படுகின்றன. எனவே "ஓம்" எனும் வாசகம் (சொல்) சிவபிரானை உணர்த்தும் வாக்கியம் (உண்மைப் பொருள்) ஆயிற்று. "ஓம்" வேறு "சிவன்" வேறு அல்ல. இரண்டு எமான்றே என்பது தேவதார்த்த மாயிற்று என்க.

மேலும் ஈசானம் சிரசு தத்புருஷம் முகம் அகோரம் - ஹ்ருதயம், வாமதேவம் - வயிறு சத்யோகாதம் - பாதம். இந்த உருவம் சகள நிஷ்களம் ஆகும். சர்வக்ஞம் முதலிய ஆறு சக்திகள் இதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம் அஸ்திரம்) அங்கங்களாக விளங்குமென்க.

மேலும் இவ்வைந்து முகங்களில், "நாதஸ்தானம், ஈசானம்" என்றும் பிந்து முதலிய மற்ற நான்கும் தத்புருஷம் முதலாக சத்யோஜாதம் ஈறாக நான்கு முகங்களாகியன" என்பதும் கைலாசசம் ஹிதை எனும் நூலில் கூறப்பட்டுள்ளது காண்க.

பிரபஞ்சார்த்தம்

உலகமெல்லாம் 'ஓம்' என்பதாகும் என்பது உபநிஷத் கூற்றாகும்.

சிவமும் சக்தியும் கூடியது "பரமான்மா" எனப்படும் பரா சக்தியினிடம் தோன்றியது சித்சக்தி. சித்சக்தியிலிருந்து ஆனந்தம் பிறந்தது. ஆனந்தத்தில் இருந்து இச்சாசக்தி பிறந்தது. இச்சாசக்தி யிலிருந்து ஞானசக்தி பிறந்தது. ஞானசக்தியிலிருந்து ஐந்தாவதாகிய கிரியாசக்தி தோன்றியது. இவைகளிலிருந்து நிவிர்த்தி கலை, பிரிதிஷ்டா கலை, சாந்தி கலை, சாந்திய தீதகலை முதலியன உண்டாயின.

மேலும் சிதானந்த சக்தியிலிருந்து நாதம் பிந்து இரண்டும் உண்டாயின. கிரியாசக்தியிலிருந்து 'அ'காரம் உண்டானது. ஞான சக்தியிலிருந்து 'உ'காரம் உண்டானது. இச்சாசக்தியிலிருந்து 'ம'காரம் உண்டானது.

சிவனிடமிருந்து 'ஈ'சானமும் அதிலிருந்து தத்புருஷமும் அதிலிருந்து அகோரமும், அதிலிருந்து வாமதேவமும், அதிலிருந்து சத்யோஜாதமும் உதித்தன.

மேற்கண்ட மாத்ருகாக்ஷரங்களிலிருந்து அஷ்டத்திரிம்சத் மாத்ரு கைகள் உண்டாயின என்று 'கைலாச சம்ஹிதை' எனும் நூல் கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசானம் ஐந்து கலைகள்	5
தத்புருஷம் நான்கு கலைகள்	4
அகோரம் எட்டு கலைகள்	8
வாமதேவம் பதிமூன்று கலைகள்	13
சத்யோஜாதம் எட்டு கலைகள்	8

	38

ஆக முப்பத்தி எட்டு கலைகள் உண்டாயின என்பர்.

ஈசானத்திலிருந்து சாந்திய தீதகலையும், தத்புருஷத்திலிருந்து சாந்தி கலையும், அகோரத்திலிருந்து வித்யா கலையும், வாம தேவத்திலிருந்து பிரதிஷ்டா கலையும், சத்யோஜாதத்தில் இருந்து நிவிர்த்தி கலையும் தோன்றின என்பதை அறிக. மேற்கண்ட இந்த பஞ்ச (ஐந்து) கலைகளிலிருந்து 'ஆகாயம்' முதலிய பஞ்சபூதங்கள் தோன்றின.

ஆகாயம் : சப்தகுணம் ஒன்றை மட்டும் உடையது.

வாயு, சப்தம், ஸ்பரிசம் எனும் இரண்டு குணங்களை உடையது.

நெருப்பு, சப்தம், ஸ்பரிசம் ரூபம் (உருவம்) எனும் மூன்று குணங்களை உடையது.

அப்பு (தண்ணீர்) - சப்த - ஸ்பரிச, ரூப, ரசம் எனும் நான்கு குணங்களை உடையதாகும்.

பிருத்வி (மண்) சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் எனும் ஐந்து குணங் களை உடையதாகும். ஆக சிவதத்துவம், வித்யாதத்துவம், ஆத்ம தத்துவம் ஆகியவற்றின் முப்பத்தாறு தத்துவங்களும் பிரணவமாகிய பிரபஞ்சத்தில் தோன்றுவனவாகும் என்பது காண்க.

எனவே ஓம் எனும் பிரணவம் பிரபஞ்ச ரூபமாயிற்று.

குருரூபம்

சிவாசாரியார்கள் பரமனைப் பூஜிக்கும் முன் பூதசுத்தி, அங்கன் யாசம், கரன்யாசம், அந்தர்யாகம், சிவஹஸ்தம் முதலியன செய்த பின்பே சிவார்ச்சனை புரிய வேண்டும். எனவே அவர்கள் பூதசுத்தி செய்யுங்கால் மேற்கண்ட அஷ்டத்திரம் சத்கலான்யாசம் மற்றும் மாத்ருகான்யாசங்களைச் செய்து பின்தன்னைச் சிவோஹம் எனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாவனையில் பூஜை செய்கின்றனர். இந்த நிலையில் சிவாசாரியார், தேவதாயந்திர, மந்திரான்மாவாக சிவோஹம் பாவனையில் இருக்கின்றார். இதுவே குருரூபபாவனையாகும். எனவேதான் சிவாசாரியார்களை 'குருக்கள்' என்று குருஸ்தானத்தில் வைத்து அழைக்கின்றனர் என்பது காண்க.

மேற்கண்டவாறு குருத்வம் பெற்ற சிவாசாரியரிடம் தீட்சை பெற விரும்பும் சிஷ்யனை அவர் சோதித்து அவனுக்குப் பக்குவம் ஏற்பட்டிருப்பின் தீட்சை செய்து வைப்பார்.

பக்குவப்பட்ட சீடன் குருவை தனக்கு உயிராகக் கொண்டு ஒழுகுவான். குருவை விஸ்வரூபியாகவும் தன்னை அவரது உடலாகவும் கொள்கின்றான்.

குரு, மாணவனுக்குத் தீட்சையில் உபதேசிக்கும் மந்திரம் 'பிரணவம்' என்பது உணர்க. இவ்வாறு மேலே கூறியபடி பிரணவார்த்தம் ஆறு விதம் என்பதை கயிலாசசம்ஹிதை மிகவும் தெளிவாக விளக்குகிறது.

ஹரன், விஷ்ணு, பகவான், ஓம் எனும் திருநாமங்கள் விசனுக்கு உரியன.

எல்லாவற்றையும் மஹாப்பிரளய காலத்தில் சம்ஹாரம் செய்வதால் "ஹரன்" எனவும், எங்கும் வியாபித்து இருப்பதால் "விஷ்ணு" எனவும் எல்லாமுணர்ந்தவர் ஆகையால் "பகவான்" எனவும் உலகமனைத்தையும் காப்பவர் ஆதலால் "ஓம்" எனவும் சிவபிரானுக்கு பல பெயர்கள் அமைந்தனவென்று கூர்மபுராணம் கூறுகிறது.

காயத்ரி மந்திரம் சிவபிரானேயாவான்

சைவாகமக் கொள்கைப்படி சூரியன் சிவபெருமானே ஆகிறான். 'சவிதா' என்றால் சிவபிரானைக் குறிக்கும். சூரியனையும் குறிக்கும். மேலும் சூரியனைக் சைவாகமங்கள் "சஹசிவ சூர்ய மூர்த்தி" என்று கூறுகின்றன. சூரியவட்டத்துக்குள் நின்று ஒளியை உலகுக்கு அளிப்பவன் 'பர்க்கன்' எனப்படுகின்றான். 'பர்க்கன்' என்ற பெயர் சிவபிரானுக்கு உரிய நாமங்களில் ஒன்று "ஓம் ஹாம் பர்க்காயநம:" என்கிறது சிவாஷ்டோத்திரம்.

"எவன் எங்களுக்குள் இருந்து எங்களை இயங்கச் செய் கின்றானோ அவனை நாங்கள் உபாசிக்கின்றோம்" என்பது காயத்ரி மந்திரத்தின் பொருளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம். பூ: ஓம் புவ: ஓம் சுவ: தத்சவிது: வரேண்யம் பர்கோ தேவஸ்ய

தீமஹி, தியோயோந: ப்ரசோதயாத்

ய: எவர், ந: நம்முடைய, திய: புத்தியை, ப்ரசோதயாத் தூண்டு கின்றாரோ, தத் அப்படிப்பட்ட, தேவஸ்ய பிரகாசமுடைய உலகை உண்டாக்கி எங்களைச் செயல்படச் செய்கின்ற சூரியனுடைய வரேண்யம்: மிக உந்நதமான, பர்க்க : ஒளியை, தீமஹி த்யானம் செய்கின்றோம்.

இங்கு சூரியனுடைய "பர்க்க' என்ற சொல்லால் குறிக்கப்படுகிற ஒளிரூபம் சிவபிரானே என்பது அறிக.

ஆகவே, "காயத்ரி மந்திரத்தில் வழிபடக்கூடிய பரம்பொருள் சூரியனுக்குள் இருந்து அவனுக்கு ஒளிதந்து உலகை இயங்கச் செய்கின்ற சிவபிரானே" என்பது மேல்வரும் ஸ்லோகத்தால் விளக்கப்படுவது காண்க.

சிவார்க்க : சக்தி தீதித்யா

ஸமர்த்தீ க்ருத சித்ரசா!

சிவம் சக்த்யாதிபிஸ் ஸார்த்தம்

பச்யத்யாத்மா கதா விருதி:

இதன் பொருள் : சிவசூரியனுடைய பராசக்தி ஒளியினால் படைக்கப்பட்ட ஆன்மாக்கள் தங்கள் உபாசானையில் சக்தியோடு சிவனையும் உணர்கின்றான். அதனால் அந்த உபாசகரின் பாசம் நீங்குகிறது என்பதாகும். இது சிவாகம வசனமாகும்.

பஞ்சாட்சர மந்திரப் பொருள் சிவபிரானே

"நம: சிவாயச, சிவதராயச" என்பது ஸ்ரீருத்ரம், "சிவாயநம:" என்பது தைத்ரீய ஆரணியம். மேலே சொன்ன "நம: சிவாய" என்பது ஸ்தூலபஞ்சாஷரம். இரண்டாவது சூக்ஷ்ம பஞ்சாட்சரம் எனப்படும்.

ருக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம் ஆக இந்த மூன்றையும் 'த்ரயீ' என்பார்கள். இந்த மூன்று வேதங்களின் நடுவில் இருப்பது யஜுர் வேதம்.

யஜுர் வேதத்தில் உள்ள காண்டங்கள் ஏழு. அந்த ஏழு காண்டங் களின் நடுவில் உள்ள நான்காவது காண்டத்தின் ஐந்தாம் பிரஸ்னம் ஸ்ரீருத்ரமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீருத்ரத்தின், "நம: ஸோமாயசருத்ராயச" எனும் அநுவாகத்தின் நடுவில் உள்ளது. சிவபெருமானின் திருப்பெயராகிய 'சிவ' என்பதாகும். இது ஈரெழுத்துச்சொல். ஆதலால், வேதநாயகனான ருத்ரனுக்குக் கண் போன்றது ஸ்ரீருத்ரம். கண்மணி போன்றது பஞ்சாட்சரம். கண் பாவைகள் போன்றது 'சிவ' எனும் ஈரெழுத்துத் தாரகம். மேற்கண்டபடி சிவமந்திரப் பொருளைச் சிவபுராணமும் கூறுகிறது. மேலும் அச்சிவபுராணம், 'ந'கர, 'ம'கரத்தை முதலில் கொண்ட சிவபஞ்சாட்சரத்தைச் சண்டாளனேயானாலும் பண்டிதராயினும், மூடனாயினும், தமது நாவில் உருப்போடுவானே யானால் அவன் சகல பாவங்களிலிருந்தும் விடுபடுவான். ஜென்ம சாபல்யம் பெறுவான்" என்றும் கூறுவதால் பஞ்சாட்சரப் பொருளும் சிவனே! அதை உபாசிப்பார்க்கு அருள் புரிபவனும் சிவனே என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

சிகாரம் சிவரூபந்து
வகாரம் சக்தி ருத்யதே!
யகராம் ஆத்மரூபஞ்ச
நகராம் க்ருந்தி ரூபிணம்!!
மகாரம் மலரூபஞ்ச இத்யர்த:
பஞ்சவர்ணக:!!

- சிவபுராணம்

இதன் பொருள்:
சிகாரம் (சி) சிவரூபம்
வகாரம் (வ) சக்திரூபம்
யகாரம் (ய) உயிர்க்கூட்டம்
நகராம் (ந) முடிச்சு (பாசம்)
மகாரம் (ம) அழுக்கு (மாயாமலம்)

கருத்து:

சிவசக்தி ரூபமான 'சிவ' எனும் மந்திரத்தை உயிர்கள் உச்சரிக்கும் போது அவை பாசத்தினின்று விடுபட்டு மாயாமலம் நீங்கிச் சிவபிரானின் அருளைப் பெற்று உய்யலாம் என்பதாகும்.

சிவபிரானுக்கு நிகர் சிவபிரானே

நதத், சமம், ந.தத், அதிகம் ந.த்ருச்யதே! ந தத்சமம் அபி அதிகம் சத்ருச் யதே!! என்பது ஸ்வேதாசுவதர உபநிஷத் கூற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்சமோ நாஸ்தி லோகேஷு
நவரோ, நாபர: க்வசித்!!

உலகில் அவருக்கு ஒப்பார் இல்லை. அவருக்கு மிக்காருமில்லை என்று ஸ்காந்த மஹாபுராணம் கூறுகிறது.

வானத்திளந்திங்கள் கண்ணி தன்னை
வளர்சடைமேல் வைத்து உகந்தமைந்தார் போலும்
ஊனொத்த வேலொன்று உடையார் போலும்
ஒளி நீறு பூசும் ஒருவர் போலும்
தானத்தின் முப்பொழுதுந்தாமே போலும்
தம்மிற்பிறர் பெரியரில்லை போலும்
மேனத் தெயில் இறங்கப்பூண்டார் போலும்
மின்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே

என்று திருநாவுக்கரசர் போற்றியதும் காண்க.

எந்த உருவில் வணங்கினாலும் அந்த உருவாவன்.

எவர் எந்த உருவில் வணங்குகிறாரோ அவருக்கு அந்த ரூபத்தில் சிவபிரான் தோன்றுவான் என்பதை "ஏநஏநஹி ரூபேண ஸாதக: ஸஸ்மரேத்சதா! தஸ்ய தன்மயதாம் யாதி சிந்தாமணிரிவ ஈஸ்வர:!!" எவர் எவர் எந்த ரூபத்தை மனதிற்கொண்டு இறைவனை நினைந்துப் போற்றுகின்றார்களோ அவர்கள் கருத்துப்படி சிந்தித்தவற்றை யெல்லாம் தரும் சிந்தாமணியைப் போல இறைவன் தோன்றுவான் என்பது இதன் பொருளாகும்.

இதை நாவுக்கரசரும்,

"ஆருருவவுள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற வருளும் தோன்றும்"

என்று கூறிப்போந்தமை காண்க.

சிவபிரானே, பவானி, காளி, துர்கை, விஷ்ணு ஆகிய நான்கு வித உருவம் கொண்டவராவார்.

போகம் தரும்போது "பவானி" எனும் சக்தியாகவும், கோபத்திற் "காளி"யாகவும், யுத்தத்தில் "துர்கை"யாகவும், புருஷவடிவில் புருஷோத்தமனான "விஷ்ணு" வடிவாகவும் தோன்றுவார் என்பது சிவாகம முடிவாகும். இதை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகைவ சக்தி : பரமேஸ்வரஸ்ய பின்னா சதுர்த்தா விநியோக காலே! போகே பவானி, புருஷே ஷு விஷ்ணு: கோபேதுகாளி ஸமரேது துர்கா!!” எனும் ஆகமவசனம் மூலமாக அறியலாம்.

இதனால் விஷ்ணு முதல் எல்லா ரூபங்களாகவும் விளங்கும் பரம்பொருள் சிவபிரானே என்பது தெளிவாகின்றது.

சிவபிரான் வசிக்குமிடம் (உள்ளக்கோயில்)

தாமரை மொட்டு போன்ற இதயத்தின் மத்தியில் “அக்னிசிகா” உள்ளது அந்த அக்னி சிகாவின் மத்தியிலே பரமாத்வான சிவபிரான் இருக்கிறார் என்பதை பத்ம கோசப் ப்ரதீ காசம் தஸ்யமத்யே வந்ஹிசிகா தஸ்யாஆ சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:!!” என்பதனால்

தாமரை மொட்டு இதயம், காயைச் சுற்றியுள்ள புல்லிதழ்கள் அக்னி சிகை, அதன்காய் (விதைகள் நிரம்பிய காய்) பரம் பொருள், இந்த நிலையினை உள்ளத்தில் எண்ணிச் சிவபிரானைத் துதிப் போர்க்கு சிவபிரான், அவர்களுடைய உள்ளத்தின் கண் வந்து தங்கு வார் என்பது உணர்க.

எட்டுக்குணங்களும் நிரம்பப் பெற்றவர் அஷ்டமூர்த்தியான சிவபிரான்

பஞ்சபூதங்களாகவும் (5) சூரியன், சந்திரன் உயிர்கள் (மூன்று) ஆக எட்டு வித வடிவில் விளங்குகின்ற சிவபிரான் ஒருவரே. இவர் சர்வஞ்ஞதா (முற்றறிவு) திருப்தி (வரம்பில் இன்பமுடைமை) அநாதி போதம் (இயல்பாகவே பாகங்கள் நீங்கி நிற்றல்) சுவதந்திரத்துவம் (தன்வயமுடைமை) அலுப்தசக்தி (பேரருள் உடைமை) அனந்தசக்தி (முடிவில்லா ஆற்றலுடைமை) நிராமயன்மா (இயற்கை உணர்வின நாதல்) விசுத்ததேகம் (தூயஉடம்பினனாதல்) எனும் எட்டு குணங்களும் ஒருங்கே நிரம்பப் பெற்றவராவார்.

சர்வஜ்ஞதா திருப்தி ரனாதிபோத:

ஸ்வதந்த்ரதா நித்யமலுப்தசக்தி:!

அனந்த சக்திச்ச நிராமயாத்மா

விசுத்த தேஹஸ் ஸசிவத்வமேதி!!

என்பது சுப்ரபேதாகமம் ஆகும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்டமூர்த்தியின் பெயர்கள்:

பூம்யம் போக்நி மருத்வ்யோம பாஸ்கரா தீக்ஷிதச்சசீ!!

பூமி (பிருதிவி) பலதேவர்

தண்ணீர் (அப்பு) சர்வதேவர்

தீ (தேயு) ஈசாநதேவர்

காற்று (வாயு) பசுபதிதேவர்

ஆகாயம் (ஆகாசம்) ருத்ரதேவர்

சூரியன் (சூரியன்) உக்ரதேவர்

சந்திரன் (சந்திரன்) பீமதேவர்

ஆன்மா (உயிர்கள்) மஹதே தேவர்

என்பனவாம்.

நீலகண்டர் சிவபெருமான்

மந்தரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது காளகூட விஷம் தோன்றியது. அது பூமியைச் சூழ்ந்து சகல உயிர்க்கும் துன்பம் விளைவித்தது. ஆகையால் செய்வதறியாது திகைத்த பிரம்மன் முதலானோர் சிவபிரானை நாடி உலகைக் காக்கும்படி வேண்டினர். பிரம்மனின் வேண்டுகோளுக்கு இணங்க மந்திரமூர்த்தியும், மகேசுவரனுமாகிய சிவபிரான் அந்த நஞ்சை எடுத்துத் தானுண்டு உலகைக் காத்தார். அருகிலிருந்த பார்வதி தம் கையால் இறைவனின் கழுத்தை தொட சிவபிரான் உண்ட விஷம் அவரது கழுத்தில் நின்று விட்டது. அதனால் அவருடைய கழுத்து கருத்துவிட்டது. அன்று முதல் அவருக்கு "நீலகண்டர்" எனும் திருநாமம் தோன்றியது. இந்தச் செய்தி மகாபாரதம் முதல் பல புராணங்களிலும் கூறப்படுகிறது.

சிவபிரான் அருளைப் பெற வழி யாது?

"தர்சனேன, ச்ரவணேன, மத்யா விக்ஞானேன இதம் ஸர்வம் விதிதம்" (ப்ருஹதாரண்ய உபநிடத்) அவனைக் காண்பதால், அவன் புகழ் கேட்டலால், அவன் திறன் உணர்தலால் அவன் பெருமையை அறிதலால் அவன் அருளைப் பெற முடியும்.

சுரோதவ்ய : சததம் சம்பு: மந்தவ்யச்ச உபபத்திபி:

ஞாத்வாச ஸததம் த்யேய: வேதாந்தேரிதி சங்கர:"

என்பது உபதேசதாண்டம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''சிவபிரான் காதால் கேட்கப்படும் பெருமையுடையவர். சிவபெருமான் மனதால் நினைந்து சிந்திக்கத் தக்கவர். வேதாகமங்கள் உபநிடதங்களால் எப்போதும் துதிக்கப்படும் பெருமையுடையவர் சிவபிரான்'' என்பது இதன் பொருள்.

"சுரோதவ்ய: சுருதிவாக்யேப்ய' மந்தவ்ய: ச உபபத்திபி:

மத்வாச சததம் த்யேய : ஏதே தர்சன ஹேதவ:!!

சுருதிகளால் சொல்லப்படுகின்ற சிவப் பெருமைகளைக் கேட்க வேண்டும். மனதிற்கு உகந்தபடி மனதில் சிந்தித்து வழிபட வேண்டும். அதன்பின் அவனை இடைவிடாது மனதில் நினைந்து தியானிக்க வேண்டும். அப்போது அவன் அருள் தானாகவே நமக்குக் கிட்டும் என்பது இதன் பொருள்.

எனவே காதால் அவன்புகழ் கேட்டல், கண்ணால் அவன் திருக் காட்சி காணல், மனதால் அவன் திருநாமத்தைச் சிந்தித்தல், வாயால் வாழ்த்துதல் என்ற நான்கு வழிகளையும் ஒரு சேர நிலைநிறுத்தி அந்தக் கரண சுத்தியோடு' எவன் தினமும் வணங்குகிறானோ அவனுக்கு இறைவன் தன்னருளை வாரிவழங்குவான் என்பது சுருதிவாசங்கள். எனவே மேற்கண்டபடி வழிபாடு செய்து இறைவன் அருளைப் பெறுக.

யோகமார்க்க வழிபாடு

இன்று சிவன் கோயில்களில் இந்த யோகமார்க்க முறைப்படி தான் பூஜைகள் நடைபெறுகின்றன. சிவாசாரியார்கள் தன்னையே சிவனாக எண்ணிப் பாவனை செய்து கொண்டு பூஜை செய்கின்றனர். அதற்கு பூதசுத்தி. அந்தர்யாகம் சிவோஹம்மாவன சிவஹஸ்த பாவனை முதலிய அங்கங்களாக விளங்குகின்றன.

பூதசுத்தி முதல் மேற்கண்டவற்றைச் செய்யாமல் ஒரு சிவாசாரியார் பூஜை செய்வாரேயானால் அது பயன்தராது.

"யோகமார்க்கம்'' என்பது துவாதசாந்தத்தில் சிவனை வைத்து வழிபடுவதாகும். பிருதிவி தத்துவம் முதல் சிவதத்துவம் வரையான முப்பத்தியாறு தத்துவங்களுக்குமேல் ஐந்து அத்வாக்களின் முடிவில் உள்ள சிவபிரானுக்கு உரிய இடமே "துவாதசாந்தம்'' எனப்படும்.

அகாரம் எனும் எழுத்தை நாபியிலும் (பிரம்மஸ்தானம்) உகாரம் எனும் எழுத்தை இதயத்திலும் (விஷ்ணுஸ்தானம்) மகாரம் என்னும் எழுத்தை புருவமத்தியிலும் (ருத்ரஸ்தானம்) ஓங்காரப் பொருளை உலகநாயகனான சிவனை அதற்கு மேலும் த்வாதசாந்தித்திலும் தலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உச்சிக்குமேல் பன்னிரெண்டு அங்குலங்கள் கடந்த இடம் பூஜிக்க வேண்டும் என்பது யோகசாஸ்திரம்.

"அகாரம் பிரம்ஹாணம் நாபௌ, உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே உகாரம் ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம் ஸர்வேஸ்வரம் த்வாத சாந்தே ஸம்பூஜ்ய" என்பது நீலகண்ட சிவாசாரியார் கூறியதாகும்.

இந்த இடத்திற்கு (த்வாதசாந்தத்திற்குத்) துரீயம் என்றும் பெயர் வழங்கும்.

தான் வேறு சிவன் வேறு என்ற பாவனையின்றியும் (ஏகீபாவத் துடன்) ஹ்ருதய தாமரையில் எவன் மந்திரரூபமாக இறைவனை யோகமார்க்கத்தில் வழிபடுகிறானோ அவன் சிவபிரானோடு ஐக்யம் அடைவான் என்பதை நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபைதி" என்று முண்டகோபநிஷத் கூறுகிறது.

இவ்வாறு சிவபிரானின் பெருமைகளை அறிந்து அவரே பரம் பொருள், அவரே உலக உயிர்களின் ஆன்மா, அண்டசராசரம் அனைத்தும் அவரே! பஞ்ச பூதங்களும் அவரே! அசையும் பொருள் அசையாப் பொருள் அனைத்தும் அவரே, நால்வகைப் பிறப்பில் உண்டாகும் அனைத்து உயிர்களும் அவரே! ஐந்தொழில் வல்லவர் அவரே! இறப்பு, பிறப்பு இல்லாதவர் அவரே! அந்தமும் ஆதியும் அவரே! உலகத்தை உண்டாக்கியவரும் அவரே மஹா சம்ஹார காலத்தில் உலகனைத்தையும் அழித்துத் தான் மட்டும் நிலைத் திருப்பவர் அவர் ஒருவர் மட்டுமே! என்பதை உணர்ந்து வழிபடும் அன்பர்கள் இம்மையில் அவரருளால் எல்லா நலமும் பெற்று வாழ்ந்து மறுமையில் சிவபதவியையும் அடைவர் என்பது திண்ணம்.

சிவபூஜை செய்து மேன்மை பெற்றோர் வருமாறு:

காஞ்சியில் உமைபூசித்தார். விநாயகர் முருகன் காஞ்சிபுரம் திருச் செங்கோடு ஆகியவற்றில் பூசித்தனர். மேலும் கதகோடிருந்திரர்கள், நந்திதேவர், விஷ்ணு, பிரம்மன் காளி, இலக்குமி, சரசுவதி, மார்க் கண்டேயர், அகத்தியர், வசிஷ்டர், பதஞ்சலி, வியாக்ரபாதர் திக் பாலகர்கள், துருவன், நவக்கிரஹங்கள், தக்ஷன், பாணாசுரன், திருஞானசம்மந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், 63 நாயன்மார்கள், சேந்தனார், பட்டினத்தார் மற்றும் பலப்பல ரிஷிகளும் முனிவர்களும் அரசர்களும் பொதுமக்களும் வழிபட்டு மேன்மையடைந்தமையை விவரிக்கின் எண்ணிலடங்காவென்க.

சர்வம் - சிவமயம் ஜகத்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்படுகின்ற இறைவனின் திருவுருவத்தை ''லிங்கம்'' என்று கூறுவதேன்? லிங்கம் என்பதற்கு பொருள் யாது?

"லிங்கம்" என்றால் அடையாளம் அல்லது "குறி" என்று பொருள். இறைவனின் அடையாளமாகக் கோவில்களில் ''மூலஸ்தானம்'' எனப்படும் கருவறையில் லிங்க உருவில் சிவபிரான் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் காட்சி தருகிறார்.

லிம்+கம் லிங்கம். 'லிம்' என்றால் அண்டசராசரங்கள் அனைத்தும் ஒடுங்கும் இடம் என்றும் 'கம்' என்றால் ஒடுங்கிய அவ்வண்ட சராசரங்கள் அனைத்தும் மீண்டும் தோன்றுவதற்கு இடம் என்றும் பொருள்படும்.

எங்கும் காணமுடியாத இறைவனைக் கண்களால் காண வேண்டும் என்பதற்கு அடையாளமாக ஞானிகளும் முனிவர்களும் கண்ட உருவமே "சிவலிங்க வடிவம்" என்பது நூல்களால் உணரப் படும் செய்தியாகும்.

6. நம் நாட்டில் லிங்கப் பிரதிஷ்டையில் எத்தனை வகைகள் உள்ளன? அவை அப்பெயர் பெறக் காரணமென்ன?

நம் நாட்டில் சுயம்பு, கணலிங்கம், தைவிகம், ஆர்ஷம், மானுடம், பாணலிங்கம் எனப்பலவகை லிங்கங்கள் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளன.

தானே தோன்றிய லிங்கங்களுக்குச் "சுயம்பு லிங்கம்" என்பது பெயர். தேவர்களாலும் தேவகணங்களாலும் பிரதிஷ்டிக்கப்பட்ட லிங்கங்களுக்கு "தைவிகம்" என்பது பெயர். இதையே "கணலிங்கம்" என்றும் வழங்குவர்.

ரிஷிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங்கள் 'ஆர்ஷ லிங்கம்' எனப்படும்.

மக்கள் விரும்பிப் பிரதிஷ்டை செய்த லிங்கங்களுக்கு "மானுடம்" (மானுடப் பிரதிஷ்டை) என்பது பெயராகும். அந்தந்தக் கோவில் ஸ்தல வரலாறுகள் மூலம் இதை உணரமுடியும்.

மேலும் இராட்சசர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங் களுக்கு "ராட்சசம்" என்பது பெயராகும்.

"பாணலிங்கம்" என்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இது "சதா சிவஸ்வரூபம்" என்று ஆகமங்கள் கூறுகின்றன. இதைப் பூஜை செய்ய பிரதிஷ்டைக் கிரியைகள் வேண்டாம். எப்போதும் இறைவன் பாண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிங்கத்தில் ப்ரயட்சமாக விளங்குவார். இது தண்ணீரில் (நர்மதை நதியில்) தோன்றுவதாகும். பாணாசுரனால் பூசிக்கப்பட்டதுமாகும்.

"பாணம்" என்றால் தண்ணீரைக் குறிக்கும். எனவே, தண்ணீரில் தோன்றியது என்ற பொருளில் "பாணலிங்கம்" என்று வழங்கப் படுகிறது. இதை ஒருவர் தினமும் பூசித்து வந்தால் அவர் போக மோட்சமங்களை நிச்சயமாக அடைவார்.

"பாணம்" என்பதற்குச் சதாசிவர், தண்ணீர், பாணாசுரன் பூஜித்த லிங்கம் ஆகிய பொருள்களும் உண்டு.

மேற்கண்ட பாணலிங்க பூஜையைப் பற்றிக் காரணாகமம்,

"பாணேந பூஜிதம் லிங்கம் பாணலிங்கம் இஹஉச்யதே!

பாணமேவ ஜலம் ப்ரோக்தம் தத்ஜாதம் பாணலிங்ககம்!!

போகமோக்ஷப் பரதம் சைவ பாணலிங்கஸ்யபூஜனம்!

பாண: சதாசிவோக்ஞேய: பாணோ பாணாந்த காசுர: பாண லிங்கம் இதிக்யாதம் தஸ்மாத் பாணம் ப்ரபூஜயேத்!

என்று கூறுகிறது.

7. இறைவனின் திருவுருவம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

இறைவனின் திருவுருவம், "அரூபம், ரூபம், அரூபாரூபம்" என்று மூவகைப்படும். இந்த மூன்று நிலைக்கும் லிங்கம் பொருந்தும். லிங்கம் பார்ப்பதற்கு ஒரு உருவமாகக் காட்சி தருகிறது. ஆனால் அவயங்கள் இல்லாமையால் அரூபமாக காட்சி தருகிறது. பார்ப்பதற்கு உருவ முள்ளதாயும், ஆனால் அவயங்கள் இல்லாமையால் அருவுருவமாக அதாவது ரூப அரூபமாகக் காட்சி தருகிறது. (ரூபம் : அரூபம் ரூபாரூபம்)

இதை ஆகமங்கள் நிஷ்களம், சகளம், சகளநிஷ்களம் என்று கூறுகின்றன.

8. ரூபியான (சகளம்) சிவபிரானின் உருவபேதங்கள் எத்தனை? அவற்றின் பெயர்கள் யாவை? விளக்குக.

ஐந்தொழில் புரியும் ஆற்றலுடைய சிவபிரானுக்கு, ஈசானம், தத் புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என ஐந்து முகங்கள் கூறப்படுகின்றன. இந்த நிலைக்குச் 'சதாசிவன்' என்பது பெயர்.

இவ்வைந்து முகங்கள் மூலம் 25 மூர்த்தங்கள் உண்டாயின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசான முகத்திலிருந்து 1. சோமாஸ்கந்தர் 2. நடராஜர் 3. விருஷபாரூடர் 4. கல்யாணசுந்தரர் 5. சந்திரசேகரர் என ஐந்து மூர்த்தங்களும்,

தத்புருஷமுகத்திலிருந்து 6. பிக்ஷாடனர் 7. காமாரி 8. காலசம்ஹாரர் 9. ஜலந்தராரி, 10 திரிபுராந்தகர் என ஐந்து மூர்த்தங்களும்,

அகோரமுகத்திலிருந்து 11. கஜசம்ஹாரர் 12. வீரபத்திரர் 13. தக்ஷிணாமூர்த்தி 14. கிராதமூர்த்தி 15. நீலகண்டர் என ஐந்து மூர்த்தங்களும்,

வாமதேவ முகத்திலிருந்து 16. கங்காளர் 17. சக்ரதானர் 18. கஜமுகாஅநுக்கிரஹர் 19. கண்டேஸ்வரானுக்கிரகர் 20. ஏகபாதர் என ஐந்து மூர்த்தங்களும்,

சத்யோஜாத முகத்திலிருந்து 21. லிங்கோத்பவர் 22. சுகாசனர் 23.உமா மஹேஸ்வரர் 24. ஹரிஹரர் 25. அர்த்தநாரீஸ்வரர் என ஐந்து மூர்த்தங்களும், ஆக இருபத்தி ஐந்து மூர்த்தங்கள் உண்டாயின.

இந்த இருபத்தி ஐந்து மூர்த்தங்களும் சகளத்திருமேனிகள் (உருவத்திருமேனிகள்) ஆகும். அதாவது அவயவங்ளோடு கூடிய உருவ அமைப்புடையனவாகும்.

இவற்றோடு கூட இன்னமும் நாற்பத்தி மூன்று சிவத்திரு உருவங்கள் பற்றிச் சிவபராக்கிரமம் என்னும் நூல் கூறுவதால் சிவபிரானின் திருவுருவங்கள் அறுபத்தி எட்டு (68) உண்டு என்று உணரமுடிகிறது.

8.1. சோமாஸ்கந்தர் : சத், சித், ஆனந்தம், 'சத்' சிவபிரான். 'சித்' பராசக்தி, 'ஆனந்தம்' முருகப் பெருமான், சச்சிதானந்த மூர்த்தியே சோமாஸ்கந்தர் ஆவார்.

இவர், ஜடாமகுடமணிந்தவர். மூன்று கண்களை உடையவர். வலக்காலைத் தொங்கவிட்டும் இடக்காலை மடித்தும் அமர்ந்த கோலம் கொண்டவர். நான்கு கைகளில் அபயம். வரதம், மான், மழு உடையவர். பூணல் அணிந்திருப்பார். தனக்கு இடப்பாகத்தில் உமா தேவியை உடையவர். உமையும் தனது இடக்காலைத் தொங்கவிட்டு வலக்காலை மடித்தவண்ணம் அமர்ந்திருப்பார். இரண்டு கைகள் மட்டுமே உண்டு. அபய, வரதமாக இரண்டு கைகளும் விளங்கும்.

இவ்விருவருக்கும் இடையில் முருகன் நின்றகோலத்தில் குழந்தை வடிவில் காணப்படுவார். இவருடைய இரண்டு கைகளிலும் தாமரை மொட்டுக்கள் இருக்கும் ஆடையணிந்திருக்கமாட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு உமையுடன் ஸ்கந்தரும் சேர்ந்துள்ளமையால் இவருக்குச் சஹ+உமா+ஸ்கந்த: "சோமாஸ்கந்தர்" என்ற பெயர் உண்டாயிற்று.

புத்திரப்பேறு கருதிய மஹாவிஷ்ணு சிவனைக் குறித்துத் தவம் செய்தார்.

சக்தியை நீக்கிச் சிவபிரானை மட்டுமே எண்ணித் தவம் செய்தமையால் மஹாவிஷ்ணு எண்ணியபடி சிவனருளைப் பெற முடியவில்லை.

எனவே அவர் சக்தியின் அருளையும் கூட்டிச் சிவனைப் பிள்ளை யோடும் (ஸ்கந்தரோடு) எண்ணிப் பிள்ளைப் பேற்றை அடைய மீண்டும் தவம் செய்தார். அவ்வாறு அவர் வழிபடுவதற்கு என தன் மனதில் அமைத்துக்கொண்ட உருவமே சோமாஸ்கந்த உருவம். பின்னர் மஹாவிஷ்ணு சிவ வழிபாடு இயற்ற விரும்பிய இந்திரனுக் காகத் தான் மனதில் எண்ணி வழிபட்டு பலனடைந்த சோமாஸ்கந்தர் உருவை வெளிப்படையாகச் சமைத்துக் கொடுத்தார்.

இந்திரனும் தனக்கு "வார்கலி" என்ற அசுரனால் ஏற்பட்ட துன்பம் தொலைய வேண்டுமென்று எண்ணி மேற்கண்ட சோமாஸ் கந்தர் உருவை வழிபட்டு வந்தான். இவ்வாறு மஹாவிஷ்ணுவிடம் பெற்றுச் சிவபூஜை செய்து வந்த உருவத்தை இந்திரனின் நண்பனும் திருவாரூரைத் தலைநகராக் கொண்டு ஆண்டுவந்த சக்ரவர்த்தியுமான முசுகுந்தன் அடைய ஆசை கொண்டு இந்திரனிடம் கேட்டான்.

இந்திரன் தான் விஷ்ணுவிடம் பெற்ற தான உருவத்தை முசுகுந்தனுக்கு அளிக்க விரும்பாமையால், முசுகுந்தனை நோக்கி அரசே! "இது எனக்கு மஹாவிஷ்ணுவால் அளிக்கப்பட்டதாகும். இதை நான் உங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதற்கான அனுமதியை விஷ்ணுவிடம் சென்று பெற்று வாருங்கள் தருகிறேன்" என்று கூறினான்.

முசுகுந்தரும் விஷ்ணுவை நோக்கித் தவம் செய்து அனுமதியைப் பெற்றுக்கொண்டு வந்து இந்திரனிடம் மீண்டும் சோமாஸ்கந்தர் பிம்பத்தைத் தனக்கு அளிக்க வேண்டுமென்று வேண்டி நின்றார்.

விஷ்ணுவின் அனுமதியை உண்மையிலேயே முசுகுந்தர் பெற்று வந்தமை கண்டு இந்திரன் செய்வதறியாமல் திகைத்து நின்றான். கொடுப்பதற்கு மனமில்லாத இந்திரன் தேவதச்சனை அழைத்துத் தன்னிடம் உள்ளதுபோலவே பிறிதொரு பிம்பத்தைச் செய்யச் சொன்னான். அதை முசுகுந்தனிடம் அளித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரும் அதைப் பெற்று வந்து திருவாரூரில் வைத்து வழிபட்டு வருங்கால் அது உண்மையானதன்று, போலியாக இந்திரனால் செய்து வழங்கப்பட்டதாகும் என்பதை இறைவன் அருளால் உணர்ந்து கொண்டார்.

மீண்டும் முசுகுந்தர் இந்திரனிடம் சென்று உண்மை உருவம் தனக்கு வேண்டும் என்று வேண்டினார். முன்போலவே இந்திரன் மீண்டும் போலியான ஒன்றை அவருக்குச் செய்தளித்துப் போக விட்டான்.

அதுவும் போலியானது என்பதை அறிந்த முசுகுந்தர் மீண்டும் இந்திரனிடம் முறையிட்டார். இவ்வாறு அவர் ஆறு முறைகள் இந்திரனிடம் முறையிட்டு ஆறு உருவங்களைப் பெற்று வந்து பூவுலகில் ஆறு கோவில்களில் பிரதிஷ்டை செய்தார்.

முடிவாக இந்திரன், விஷ்ணுவால் தனக்கு அளிக்கப்பட்ட உருவத்தை முசுகுந்தருக்குக் காட்டினான். அப்போது இறைவன் அசரீரியாக, ''நான் உன்னுடன் வந்துவிட்டேன்'' என்று முசுகுந்தருக்குக் கூறினார்.

கடைசியில் இந்திரனும், வேறு வழியின்றி அந்த உண்மை உருவத்தை முசுகுந்தனிடம் கொடுத்துவிட வேண்டியதாயிற்று.

அதனைப் பெற்று மனம் மகிழ்ந்த முசுகுந்தன் திருவாரூரில் அதைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தான்.

முன்னர் பெற்றுவந்த அறுவரோடு இவரும் சேர்ந்து ஏழு உருவங்கள் பூவுலகில் பிரதிஷ்டிக்கப்பட்டன.

விஷ்ணுவால் பூசிக்கப்பட்டு அவரிடம் இந்திரன் பெற்று, இந்திரனிடம் முசுகுந்தர் பெற்ற உண்மையான சோமாஸ்கந்தர் உருவம் திருவாரூரில் உள்ளதாகும்.

மற்ற ஆறும் முறையே, 1. திருக்காரோணம் 2. திருநள்ளாறு 3.திருக்காராயில் 4. திருக்கோளறியூர் 5. திருவான்மியூர் 6.வேதாரண்யம் எனும் ஆறு ஸ்தலங்களிலும் பிரதிஷ்டை செய்யப் பட்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இந்த ஏழு ஸ்தலங்களுக்கும் இன்று "சப்தவிடங்க ஸ்தலங்கள்" என்று பெயர் வழங்கப்படுகின்றன.

இந்த சோமாஸ்கந்தர் உருவத்தைப் பூஜிப்பவர்கள் புத்திரப் பேறு முதலான இகஉலக வாழ்விற்குத் தேவையான பதினாறு வகைப் பேறுகளையும் பெறுவார்கள் என்பது உறுதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8.2 நடராஜர்

இறைவனின் ஈசான முகத்திலிருந்து உண்டான இவருக்குத் "தாண்டவேசன்" என்ற பெயருமுண்டு. இவரை "ஆனந்ததாண்டவ மூர்த்தி" என்றும், "பரமவியோமவாசி" என்றும் "சித்சபா நாயகம்" என்றும், "ஆகாயத் தத்துவர்" என்றும் "தகராகாசமூர்த்தி" என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

இவருடைய நான்கு கைகளில் மேல் வலக்கையில் உடுக்கையும், இடக்கையில் தீச்சுடரும் இருக்கும்.

உடுக்கைக்கு "டமருகம்" என்று வடமொழிப் பெயர் வழங்கப் படுகிறது. 'துடி' என்று தமிழில் சொல்வோம். இது ஒலிக்கும் கருவி. ஒலியிலிருந்துதான் உலகம் தோன்றுகிறது. ஆகாயத்தின் தத்துவம் ஒலித்தல்.

ஆகாயத்திலிருந்து வாயுவும் (காற்று) வாயுவிலிருந்து நெருப்பும், நெருப்பில் இருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாயின. இவ்வாறு உலகத் தோற்றத்திற்கு முதற்காரணம் "ஒலி" என்பதை விளக்குவதற் காகவே இறைவன் கையில் உடுக்கையை வைத்துக் கொண்டுள்ளார் என்பது தத்துவம். ஆகையால் துடி சிருஷ்டித்தொழிலை உணர்த்தும் அடையாளமாகிறது.

வலக்கை அபயமுத்திரை காட்டி நிற்கும். இது காத்தல் தொழிலைக் குறிக்கும் அடையாளம் ஆகும்.

தீச்சுடர் சம்ஹாரத் தொழிலின் அடையாளமாக உள்ளது. சம்ஹாரம் என்பது உயிர்க்கொலை அன்று, அவைகட்குண்டான பாசங்களை - மாயைகளைப் போக்குவது என்பது பொருள்.

பாதத்தை நோக்கித் தொங்கும் திருக்கரம் 'லம்பஹஸ்தம்' எனப்படும். இது வீட்டுப் பேற்றை அளிக்கவல்ல திருப்பாதத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதாகக் கொள்க.

வலக்காலின் கீழ் முயல்கள் எனும் அபஸ்மாரம் மிதிபட்டு இருக்கும். இது "திரோபாவம்" எனும் மறைத்தல் தொழிலுக்கு அடையாளம் என்க. உயிர்கள் செய்த நல்வினைகள் தீவினைகளுக்குத் தகுந்தபடி திரோபாவம் செய்துப் பின் அருளுவார் என்பதை உணர்த்துவதாகக் கொள்க.

தூக்கிய திருவடி உயிர்களுக்கு இறைவன் முக்திப் பேற்றை அருள வல்லான் எனும் அருட்செயலை உணர்த்துவதாகக் கொள்க.

இந்த நடராஜர் திருக்கோலம் "உலகஸ்ருஷ்டி முதல் அனைத்தை யும் செய்கின்றவர் சிவபிரானே" என்பதை உணர்த்துகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழகத்தில் தில்லையில் நடராஜர் ஆனந்ததாண்டவத் திருக் கோலத்தில் காணப்படுகிறார்.

இவரது நடனத்தைத் திருமால், பதஞ்சலி, வியாக்ரபாதர், மாணிக்கவாசகர் போன்றவர்கள் கண்டு மகிழ்ந்தனர்.

மேலும் "கனகசபை" எனும் பொன்னம்பலத்தில் (சிதம்பரம்) இறைவன். ஆன்மாக்களுக்கு உண்டான மூன்று மலங்களையும் போக்கி உயிர்களுடன் தான் இரண்டறக் கலக்கும் காரணபூதனாக விளங்கும் தன்மையை உணர்த்த வேண்டுமென்பதற்காக பஞ்சாட்சரங்களையே தமது திருமேனியாகக் கொண்டும், இடப் பாகத்தில் சிவகாமி அம்மையாருடனும் விளங்கிப் பஞ்சகிருத்திய நடனத்தை இடைவிடாமல் ஆடிக் கொண்டு நீக்கமற உலகில் நிறைந்துள்ளார் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இவரது திருமேனியில் காணப்படும் துடி 'சி' ஆகும். வீசுகரம் 'வ' ஆகும். அபயகரம் 'ய' ஆகும். தீச்சுடர் 'ந' ஆகும். முயலகன் 'ம' ஆகும் என்பது உண்மை விளக்கப் பொருளாகும்.

இவ்வாறான இறைவனது திருநடனக் கோலம் பரந்து விரிந்து காணப்படுகிறது. அதாவது (108) நூற்றெட்டு தாண்டவங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை:

1. ஆனந்ததாண்டவம் 2. சந்தியாதாண்டவம் (பிரதோஷகால தாண்டவம்) 3. உமாதாண்டவம் 4. கௌரீ தாண்டவம் 5. காளி தாண்டவம் 6. திரிபுர தாண்டவம் 7. சம்ஹார தாண்டவம் 8.ஊரத்துவதாண்டவம் 9. சண்டேசானுக்கிரஹ தாண்டவம் 10.கால்மாறியாடிய தாண்டவம் எனப் பத்துமாகும்.

மேலும் இறைவன் நடனக்கோலத்துடன் விளங்கும் கோவில் களைச் "சபை" என்பார்கள். அவ்வாறான சபைகள் தமிழகத்தில் மொத்தம் ஐந்து உள்ளன. அவையாவன: 1. பொன்னம்பலம் (சிதம்பரம்) "கனகசபா" என்பது பெயர்.

2. வெள்ளியம்பலம் (மதுரை) "ரஜதசபா" என்பது பெயர். ராஜ சேகர பாண்டியனுக்காக இறைவன் கால்மாறி ஆடிய காட்சியை இங்கு காணலாம்.

3. திருநெல்வேலி "தாமிரசபா" என்பது பெயர். 4. சித்திரசபை (திருக்குற்றாலம்) "சித்ரசபா" என்பது பெயர். 5. இரத்னசபை (திருவாலங்காடு) "ரத்னசபா" என்பது பெயர். "சபா" என்பதைத் தமிழில் "அம்பலம்" என்போம். திருவாசி இல்லாமல் (பிரபை) நடராஜர் சிலை இருக்காது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஓங்காரமே நல்திருவாசியாகும்" என்பது "உண்மை விளக்கம்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

நடராஜர் திருவுருவம் பஞ்சாட்சரம் எனில் அதன் பிரபை ஓங்காரமாகும். 'ஓம்' எனும் பிரணவ மந்திரம் இன்றிப் பஞ்சாட்சர மந்திரத்தை ஜபம் செய்யக்கூடாது என்பதை விளக்கவே திருவாசியுடன் நடராஜர் சிலை அமையக் காரணமாக விளங்குகிறது என்பதையும் நாம் உணரவேண்டும். "பிரபா" என்பதற்கு "ஒளிச் சுடர்" என்பது பொருளாகும்.

8.3 விருஷபாரூடர் (விடை ஏறிய பெருமான்)

தரும தேவதை, விஷ்ணு, பிரமன், இந்திரன் ஆகியோர் ஒவ்வொரு காலகட்டத்தில் விருஷப (காளை) உருவங்கொண்டு சிவபிரானைத் தாங்கினார்கள். அதனால் சிவபெருமான் "விருஷ பாரூடர்" எனப்பட்டார் என்க.

தரும பரிபாலரும், ஞானமே உருவானவரும், விஷ்ணுவுக்கும் மேலானவரும் 'சிவன்' ஒருவரே என்பது இதனால் விளங்கும்.

தர்மச் செயல்களே உயிர்களை முக்தியடையச் செய்யும் என்பதை தருமதேவதையான "ரிஷபம்" மூலம் நாம் அறியலாம். (மஹாப் பிரளய காலத்தில் இறைவனைத் தாங்கி நிற்கும் ஒரே உயிர் தருமநந்தியாகும்.)

திரிபுரசம்ஹாரகாலத்தில் தேரின் அச்சு முறிந்தபோது மஹா விஷ்ணு காளை உருவங்கொண்டு சிவனைத் தாங்கினார். இதனால் "விஷ்ணுவிருஷபம்" வாகனமாயிற்று (இதை மால்விடை என்பர்)

விருஷபம் வெண்மையானது. மாசு மறு அற்றது. நான்கு வேதங்களையும், நான்கு கால்களாகவும், சூரிய சந்திரர்களைக் கண்களாகவும், அக்நியைக் கொம்புகளாகவும் கொண்டு தரும தேவனாக விளங்கும் தன்மையுடையது.

இவ்வாறான விடையின் மீது சிவபெருமான் உமாதேவி யாருடன் வீற்றிருக்குங்கோலமே "விருஷபாரூடர்" கோலமாகும்.

இவ்வாறு சிவபெருமான் விருஷப வாகனத்தின் மீது உலாவரும் திருவிழாவைக் காணும் பக்தர்கள் தங்கள் இகவாழ்வில் பல நன்மைகளைப் பெற்று வாழ்வார்கள். பின்னர் மோட்சமும் எளிதில் கூடும். எனவே விருஷபோத்ஸவத்தை அனைவரும் தவறாமல் கண்டுகளிக்க வேண்டுமென்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8.4 கல்யாண சுந்தரர்

தமக்குக் கணவனாகச் சிவபிரானை அடைய வேண்டுமென்று உமாதேவியார் தவம் இருந்தார்.

அம்மையார் தம்மீது கொண்ட அன்பையும், தான் அம்மையார் மீது கொண்ட அன்பையும், உலக உயிர்கட்கு உணர்த்தித் தன்னைப் போலவே உலக உயிர்களும் திருமணம் செய்து கொண்டு இல் வாழ்வை இனிது நடத்தி மகிழ்தல் வேண்டும் என்னும் நல்லுணர்வை ஊட்டவே இறைவன் உமாதேவியின் தவத்தினை ஏற்று அவரைத் திருமணம் செய்து கொண்டு "கல்யாணசுந்தரனாக" காட்சி தந்தார்.

தட்சனின் மகளான தாட்சாயணி தன் தந்தையாரால் அவமானப் பட்டு சிவபிரானை விட்டு பிரிந்து பூவுலகு வந்து பிறந்து இமவான் மகளாக வளர்ந்து வந்தார்.

இமவானும் அவன் மனைவி மேனகாவும் பார்வதியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர். உமைக்குத் திருமணப்பருவ காலம் வந்ததும் இறைவன் பூவுலகம் வந்து பார்வதியைத் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணக்கோலமே கலியாணசுந்தரர் கோலம் ஆகும். இந்த உருவில் சிவபிரானை வணங்கும் அடியார்கள் இவருடைய அருளால் நல்ல மணவாழ்வு பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்வார்கள்.

8.5 சந்திரசேகரர்

தன் மாமனாரான தக்கனின் சாபத்திற்கு ஆட்பட்டுச் சந்திரன் தனது அழகை இழந்து தினம் ஒரு கலையாகத் தேய்ந்து அழிந்து வரும் போது அவன் சிவபெருமானைச் சரணடைந்து தனக்கேற்பட்ட சாபத்தைப் போக்க வேண்டினான்.

அவனது வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான் அவனிடம் தேயாமல் மிகுந்திருந்த ஒரு கலையை எடுத்து தன் தலையில் சூடிக் கொண்டு அவனைக் காத்து ரட்சித்தார். அது முதல் சிவபெரு மானுக்குச் "சந்திரசேகரன்" என்னும் திருநாமம் தோன்றலாயிற்று.

எதையும் அழிவிலிருந்து ரட்சிக்குந்தன்மை (சர்வக்ஞத்துவம்) தனக்கே உண்டென்பதைச் சிவபிரான் விளக்கவே இந்த பிறை யணிந்த பெருமான் திருக்கோலம் கொண்டார் என்பதை அறிக. பிறவியால் உயிர்கள் அடையும் துன்பத்தைப் போக்கி அழிவிலிருந்து அவற்றைக் காத்து அருளும் பரம்பொருள் சிவபிரான் என்பதை சந்திரசேகரர் திருக்கோலம் உணர்த்துகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8.6 பிக்ஷாடனர்

'கௌதமர்' என்ற முனிவரின் சாபத்தினால் சிவபிரானிடம் பக்தி யின்றியும் அஞ்ஞானிகளாய்த் தாருகாவனத்து ரிஷிகள் தவவொழுக்கம் குன்றி நாத்திகர்கள் ஆயினர்.

அச்சமயத்தில் இறைவன் இந்த தாருகாவனத்து ரிஷிகளையே முன்னுதாரணமாகக் கொண்டு மற்ற உயிர்களெல்லாம் கெட்டுப் போகாவண்ணம் காத்தற்காகவும், பரமனின் திருவடிக்கு அன்பிலா தார் புண்ணியமும் பாவமாகும்" என்பதை உலகுக்கு உணர்த்தவும் தான் ஒரு பிச்சைக்காரனைப் போல் வேடங்கொண்டும், மோகினி உருவங்கொண்டு திருமாலைத் தன்னுடன் வருமாறு செய்தும் தாருகாவனம் புகுந்தார்.

அங்கு முனிவர்கள் பக்கம் மோகினியை அனுப்பி விட்டுத் தான் முனிபத்னிகள் வசிக்கும் பகுதிக்குச் சென்று பிச்சை வேண்டி நின்றார்.

அதுசமயம் மோகினி வடிவங்கண்டு முனிவர்கள் மிக்க காமுகர் களாகித் தம்மை இழந்த நிலையில் மோகினியின் பின் சென்றனர்.

அதுபோலவே, பிச்சை ஏற்று நின்ற சிவபிரானின் எழில் திருவுருவு கண்டு முனிபத்னிகள் தன்னையும் தன்னிலையையும் இழந்துச் சிவபிரானின் பார்வை மாத்திரத்திலேயே கருவுற்றனர். (புருஷர்கள் சேர்க்கையின்றி சிவதரிசனத்தாலேயே கற்பங்கொண்டுப் பிறக்க வேண்டும் என்று விருப்பங்கொண்டிருந்த 48000 முனிவர்களும் ரிஷி பத்னிகள் மூலம் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டு பிறப்படைந்து தவஞ்செய்யச் சென்றனர்)

முனிபத்னிகள் சிவபிரானின் பின்செல்லவும் மோகினியின் பின்னால் ரிஷிகள் வரவும் சிவனும் மோகினியும் ஓரிடத்தில் சந்தித்தனர்.

சிவபிரானான பிச்சைக்காரனின் பின்னால், "தங்கள் பத்தினிகள் கற்பிழந்த நிலையில் வருகின்றனரே'' என்றும், ''அவர்கள் கற்பொழுக்கங்கெட்டுப் போனதே'' என்றும் செய்வதறியாது வருந்திய முனிவர்கள் கோபங்கொண்டு பிச்சாடனையும் மோகினை யும் கொன்றுவிட எண்ணங்கொண்டனர்.

உடனே ஒரு ஆபிசாரவேள்வியை (கெடுதல் உண்டுபண்ணும் யாகம்) மேற்கொண்டு செய்யத் தொடங்கினர்.

அந்த யாக குண்டத்திலிருந்து முதலில் 'புலி' வந்தது. அதை பிச்சாடனர் மீது ஏவினர். அவர் அதை உரித்து ஆடையாக அணிந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டார். பின்னர் 'மழு' எனும் ஆயுதம் தோன்றியது. அதையும் சிவபிரான் மீது ஏவினர். அதை அவர் தம் கையில் ஏற்றுக்கொண்டு செயலிழக்கச் செய்தார். அடுத்து யாக குண்டத்தில் ஒரு மான் வெளிப் பட்டு துள்ளிக்குதித்து இறைவனை முட்டச் சென்றது. அதையும் சிவபிரான் தனது மற்றொரு கையில் தாங்கி பிடித்துக் கொண்டார். அதன்பின்னர் பாம்புகள் வெளிப்பட்டன. அவைகளை முனிவர்கள் சிவன் மீது ஏவினர். அவர் அவைகளைத் தமக்கு அணிகலன்களாகச் சூடிக் கொண்டார்.

பூதகணங்கள் யாக குண்டத்தில் வெளிப்பட்டன. அவற்றைச் சிவன் மீது ஏவினர். அவைகளைச் சிவபிரான் மயக்கித் தனக்குச் சேனைகளாக ஆக்கிக் கொண்டார். அதன்பின் 'முயலகன்' என்னும் ஆணவமே உருவமான அபஸ்மாரம் தோன்றியது. அவனையும் அவர்கள் சிவபிரான் மீது ஏவினார்கள்.

முயலகனைச் சிவபிரான் தம் காலால் மிதித்து அவன் மீது ஏறி நின்று காட்சி தந்தார். அடுத்து தீச்சுடர் தோன்றியது. அதை அவர்கள் ஏவ சிவபிரான் அதைத்தம் மற்றொரு கையில் ஏந்திக் கொண்டார்.

முடிவாக முனிவர்கள் ஆபிசாரமந்திரங்களை ஜபித்து ஒரு உடுக்கையாகச் செய்து அதைச் சிவன் மீது ஏவிக் கொல்லக் கருதினர். சிவபிரான் அதைத் தனது மற்றொரு கையில் ஏந்திக் கொண்டார்.

முடிவில் தோல்விகண்ட முனிவர்கள் செய்வதறியாமல் திகைத்து நின்றபோது இறைவன் அவர்கள் பால் தமது அருளைப் பொழிவித்து அவர்களின் ஆணவ மலத்தைப் போக்கி முயலகன் மீது ஏறிநின்று பஞ்சகிருத்திய நடனத்தை ஆடிக்காட்டினான். அதனைக் கண்ட முனிவர்கள் தெளிவு பெற்றுச் சிவஞானம் வாய்க்கப் பெற்றனர்.

பின்பு அவர்கள் விபூதி, ருத்ராக்ஷம், தரித்துக் கொண்டு முன் போலவே சிவ வழிபாடு செய்து மேன்மையடைந்தனர் என்பது புராண வரலாறு ஆகும்.

இதன் உட்கருத்து யாதெனின்,

மாயாசக்தியாகிய திருமாலை மோகினியாக்கி ரிஷிகளை மயங்கச் செய்தார். தான் பிக்ஷாடனர் உருவங்கொண்டு ரிஷி பத்தினிகளை மயக்கினார். அதாவது வேதரூபமான கௌபீனமும் (கோவணம்) சிவஞானமாகிய சூலமும், பராசக்தி வடிவான பிட்சா பாத்திரமும் நாதரூபமாய் உலகைச் சிருஷ்டிக்குக் காரணமானதும், ஞானத்தைக் கொடுப்பதும், லயத்துடன் லயிக்கச் செய்வதுமான உடுக்கையையும் உயிர்களின் மூல மலங்களைப் போக்கும் திரோதான சக்திரூபமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதுகைகளையும் (காலணிகள்) சிவஞான வடிவமான விபூதி தாரணமும் செய்து கொண்ட சிவபிரான் தாருகாவனம் சென்று ரிஷி பத்தினிகளை மயக்கினார். இந்தத் திருக்கோலமே பிட்சாடனர் கோலமாகும்.

சிவபிரான் பிட்சாடனர் கோலங்கொண்டதால் நிலஉலக மக்களும் வானுலக தேவரும் சிவபிரானே "ஞானநாயகன்" என்பதை உணர்ந்து வழிபடத் தொடங்கினர். இனியும் பிக்ஷாடனர் உருவை வழிபடும் பக்தர்கள் சிறந்த ஞானமும் அறிவும் பெறுவார்கள் என்பது திண்ணம்.

8.7 காமாரி (மதனாரி)

புத்திரப்பேறு இன்மையால் வருந்திய மஹாவிஷ்ணு சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தார். தவத்தின் பயனை அளிப்பதற்காகச் சிவபெருமான் உமாதேவியோடு விடை ஏறிவந்து விஷ்ணுவுக்கு வரம் ஈந்தார். ஆனால் விஷ்ணுவானவர் உமாதேவியைக் கண்டு கொள்ளவே இல்லை.

சிவனை மட்டுமே வணங்கிவரம் பெற்றார். வரத்தின் படி விஷ்ணுவுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. ஆனால் சிவசக்தியாகிய உமையின் அருள் இன்மையால் அக்குழந்தை அற்ப ஆயுள் உடையதாக ஆயிற்று. அக்குழந்தையே மன்மதன்.

மன்மதன் தந்தையின் கட்டளைப்படி காசி க்ஷேத்ரம் சென்று அங்கு சிவபிரானைப் பிரதிஷ்டை செய்து அவருக்கு "சித்தேசர்" என்னும் பெயர் சூட்டி வழிபட்டு வந்தான்.

மன்மதனின் பூசைக்கு மகிழ்ந்த சிவபிரான் உமாதேவியுடன் அவன் முன் தோன்றி அவனுக்குக் கரும்புவில் பஞ்சபுஷ்பபாணம் ஆகியவற்றைத் தந்து அருளினார்.

அவனும் அவைகளைப் பெற்றுச் சிவபிரானின் கட்டளைப்படி உலக உயிர்களுக்குக் காம இச்சையை உண்டுபண்ணிக் கொண்டு இருந்தான்.

தட்சயாகத்திற்குப் பிறகு தனித்திருந்த சிவனையும் சக்தியையும் மீண்டும் ஒன்றுசேர்த்து அதன் மூலம் நன்மை பெற விரும்பிய தேவர்கள் யோக நிலையில் இருந்த சிவபிரான் மீது புஷ்ப பாணத்தைச் செலுத்தி அவருக்குக் காம இச்சையை உண்டாக்க வேண்டுமென்று மன்மதனை வேண்டிக் கொண்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சனகாதி முனிவர்கட்கு யோக ஞானமார்க்கங்களை மௌனமாக இருந்து உபதேசித்து வந்த தட்சிணாமூர்த்தி மீது தேவர்களின் தூண்டுதலால் மன்மதன் புஷ்பபாணத்தைச் செலுத்தினான்.

அதனால் கோபம் கொண்ட சிவபிரான் மன்மதனைத் தனது நெற்றிக் கண்ணால் சுட்டெரித்துவிட்டார்.

இதனால் சிவபிரானுக்குக் "காமாரி" என்ற பெயர் உண்டாயிற்று. (காமன் + அரி காமனுக்கு எதிரி) என்பது இதன் பொருள் ஆகும்.

மன்மதன் சிவபிரானை முழுமுதற்பரம்பொருள் என்றெண்ணாமல் தேவர்களில் ஒருவனாக எண்ணி அவர்மீது பாணம் செலுத்தி அவரால் அழிந்துபோனான். எனவே அவனைப் போலவே எவரேனும் சிவபிரானை முழு முதற்பொருள் என்று எண்ணாமல் தேவர்களில் ஒருவன் என்றெண்ணுவராயின் அவர்களும் நெருப்பின் வாய் வீழ்ந்து அழிவார்கள் என்பது இதன் மூலம் விளக்கப்படுகிறது.

மேலும் தட்சிணாமூர்த்தியான காமாரியைத் தொழுபவர்கட்குக் காமத்தீ அண்டாது. ஞானமும் யோகமும் உண்டாகும்.

முடிவில் மன்மதனின் மனைவியான ரதிதேவியின் வேண்டுகோளை ஏற்று சிவபிரான் அவனை உயிர்ப்பித்து அருளினார். ஆனால் அவன் உருவம் ரதிக்கு மட்டுமே தெரியும். மற்றவர் கண்களுக்கு தெரியாது. இது சிவன் ரதிக்களித்த வரமாகும்.

இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டியது யாதெனின், சிவபிரான் மன்மதனின் உடலை அழித்தாரேயன்றி அவன் உயிரை மாய்க்கவில்லை. உயிருக்கு மரணம் கிடையாது என்பதை உணரவேண்டும். மன்மதனின் அறியாமையை மாய்த்தார். பின் அவனைத் தெளிவுபடுத்தி வாழவைத்தார் என்பதை உணரவேண்டும்.

8.8 காலாரி, காலசம்ஹார மூர்த்தி, யமபயம் இன்றி வாழ விரும்புகின்றவர்கள் இந்த காலாரியை வணங்க வேண்டும்.

உண்மை அன்போடு சிவபிரானை அர்ச்சித்து வந்த மார்க்கண்டேயருக்கு (மிருகண்டு முனிவரின் மகன்) என ஒரு முறையும், சுவேதகேது என்னும் திருவெண்காட்டு அந்தணருக்காக என ஒரு முறையும் தம்மை இடைவிடாமல் பூசித்து வந்த சுவேதராஜனுக்கு என் ஒரு முறையும் இன்னமும் இதுபோன்ற பலநேரங்களில் சிவபிரான் தம் அடியார்கள் முன்தோன்றி அவர்களின் யமபயம் நீக்கியருளினார்.

அவர்கட்கு மரணமிலாப் பெருவாழ்வையும் அளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கண்ட இந்த வரலாறுகளை உள்ளடக்கியது காலாரி கோலம் என்க.

ஆகையால் காலாரி கோலத்தில் சிவபிரானை வழிபட்டு வந்தால் ஆன்மநாயகனான சிவபிரான் எமபயத்தைப் போக்கியருள்வார் என்பதாம்.

எமனைக் காலால் உதைப்பதைப்போன்ற உருவமே காலாரி உருவமாகும்.

8.9 ஜலந்தராரி

'ஜலந்தரன்' என்னும் ஓர் அசுரன் சிவபிரானிடம் வரம் பெற்று ஜலாந்தரம் என்னும் நகரை உண்டாக்கி அதில் இருந்து கொண்டு ஆட்சி புரிந்து வந்தான்.

அவன் முதலில் இந்திராதி தேவர்களையும், பிறகு பிரமன், விஷ்ணு என்று எல்லாரையும் தமது பெரும் பலத்தால் வென்று இறுமாப்பு கொண்டு விளங்கினான்.

அவனுக்குப் பயந்து இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் கயிலாய மலையை அடைந்து மறைந்து வாழ்ந்து வந்தனர்.

தேவர்கள் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு ஜலந்தரன் அங்கு வந்து அவர்களைத் துறத்தினான்.

அவர்கள் நந்திதேவரின் உத்தரவு பெற்றுக் கயிலாக வாசனான சிவனைக்கண்டு வணங்கித் தம் குறைகளைக் கூறி நின்றனர்.

தேவர்களுக்கு உண்டான துன்பத்தை விலக்கவேண்டுமென்றெண்ணிய சிவபிரான் தான் ஒரு கிழ அந்தணர் வடிவு கொண்டு சலந்தரன்முன் தோன்றி அவனை, "நீ யார்?" என்று வினவினார்.

அதற்கு அவன், "தேவர்கள் அனைவரையும் வெற்றிகொண்டு அவரை துறத்திவிட்ட ஜலந்தரன் நான், இப்போது நான் இக் கயிலாசபதியான சிவனை வெல்லவே இங்கு வந்துள்ளேன்" என்றான்.

அதற்கு அந்தணர், "அசுரா! நானும் கயிலாசபதிக்குச் சமீபத்தில் இருப்பவன்தான். நீ அவர் பராக்கிரமம் அறியாமல் அவருடன் போர் செய்தால் இறந்துவிடுவாய். ஆகையால் நான் சொல்வதைக் கேட்டு இங்கிருந்து ஓடிப்போய்விடு" என்று பதில் கூறினார்.

அதைக்கேட்ட ஜலந்தரன், "ஏ அந்தணனே! கணப்பொழுதில் என் வல்லமை என்னவென்பதைப் பாரும்" என்று ஏளனமாகக் கூறினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"யாமும் அதைக் காணவே வந்துள்ளோம்" என ஏளனமாகவே கிழவேதியளான சிவபிரானும் கூறினார். உடன் அவர் தன்காலின் கட்டை விரலால் பூமியில் ஒரு சக்கரவடிவம் கீறினார். அது சக்ராயுத மாக மாறிச் சிவபிரான் கையில் வந்து சேர்ந்தது. அதை ஜலந்தர னுக்குக் காட்டி "ஜலந்தரா! இதோ இந்த சக்கரத்தை உன் தலைமீது வைத்து எனக்குக் காட்டமுடியுமா?" என்றார்.

"இதைத் தாங்குவது எனக்கு ஒரு அரிய செயலா?" என்று கூறி ஜலந்தரன் அந்தச் சக்ராயுதத்தை மிகவும் சிரமப்பட்டுத் தன் உடல் வலிமை அனைத்தையும் கூட்டித் தூக்கமுடியாமல் பெருமூச்சுவிட்டு சிறிது சிறிதாகத் தூக்கித் துடையிலும் மார்பிலும் தாங்கிப் பிடித்துத் தோள் மீது ஏற்றிக் கடைசியில் தன் தலைமீது வைத்துக்கொண்டான்.

உடனே அச்சக்கரம் அவனது உடலில் பாய்ந்து இரண்டு கூறாக அவன் உடலைப் பிளந்தது. பின் சக்கரம் முன்போல் சிவபிரான் கைக்கு வந்து தங்கியது. பின் சிவபிரான் தன் நெற்றிக்கண்ணால் அவனுடன் வந்திருந்த அவனது சேனைகள் முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கினார்.

தேவர் முதலானவர்கட்குத் தன் உண்மை உருவத்தைக் காட்டினார். தேவர்கள் மகிழ்ந்து வணங்கினர். தங்கள் துன்பம் நீங்கப் பெற்று அவரவர் இருப்பிடம் சேர்ந்தனர்.

இந்த வரலாற்றின் அடிப்படையில் உண்டானதே "ஜலந்தராரி" என்னும் திருவுருவம் ஜலந்தரன் முன்னமே சிவபிரானிடம் வரம் பெற்றவனாகையால் அவர் மூலம் அகந்தை அழியப்பெற்று மீண்டும் அவர் அருளால் மோட்சம் பெற்றான்.

ஜலந்தராசுரன் காஞ்சியம்பதியில் முன்னமே இறைவனுக்குக் கோவில் கட்டி வழிபட்டு அதன்மூலம் வெற்றி, பெருமை, அரசுரிமை பகைவெல்லும் ஆற்றல் முதலியன பெற்றவன். அத்துடன் அவன், "யாரேனும் காஞ்சியம்பதியில் இறப்பாரேயானால் அவர்கள் முக்திப் பேறு அடையவேண்டும்" என்ற வரத்தையும் இறைவனிடம் வேண்டிப் பெற்றவன். சக்கரப்படைதாக்கி அகந்தை அழியப்பெற்ற ஜலந்தரன் ஓர் ஜோதிவடிவு பெற்று மீண்டும் காஞ்சியம்பதியை அடைந்து அவன் எழுப்பித்த சிவாலயத்தில் உள்ள சிவனுடன் ஐக்யமானான் (இரண்டறக்கலந்தான்) என்பது வரலாறு.

8.10 திரிபுராந்தகர்

முப்புரம் எரித்த முழுமுதற்கடவுள்

தேவர்களை விரட்டித் துன்புறுத்தி வாழ்ந்தவன் தாருகன் என்னும் அசுரன். அவனுக்கு 1. வித்யுன்மாலி 2. தாரகாக்ஷன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.கமலாட்சன் என மூன்று பிள்ளைகள். இம்மூவரும் பிரமனைக் குறித்துக் கடுந்தவம் இருந்து விண்ணில் பறந்து செல்லும் சக்தி வாய்ந்த மூன்று நகரங்களையும் எண்ணற்ற ஆயுளையும் விஷ்ணு உட்பட தேவர்கள் எவராலும் மரணம் நேரக்கூடாதென்பதான மூன்று வரங்களைப்பெற்று வாழ்ந்தனர்.

தாரகாட்சன், பொன்மயமான கோட்டையுடன் கூடிய நகரத்தையும், கமலாட்சன், வெள்ளிமயமான கோட்டையுடன் கூடிய நகரத்தையும், வித்யுன்மாலி இரும்புமயமான கோட்டை யுடன் கூடிய நகரத்தையும் அமைத்துக் கொண்டு தாங்கள் நினைக்கும்போதெல்லாம் வானில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றவர்களாக வாழ்ந்து வந்தனர்.

அமராவதி முதலான தேவ நகரங்களின் மீது கோட்டையுடன் இறங்கி இந்திராதி தேவர்களை எல்லாம் மிகவும் துன்புறுத்தி வாழ்ந்தனர்.

இவர்களுடைய ஆற்றலுக்கு எதிர்நிற்க முடியாத இந்திராதி தேவர்கள் திருமாலை அடைந்து நிகழ்ந்தனவற்றைக் கூறி வருந்தி நின்றனர்.

விஷ்ணுவோ, "தேவர்களே! நீங்கள் இந்த மூவரையும் வெற்றி காண்பதென்பது முடியாத செயல். அவர்கள் பெற்றுள்ள வரத்தினால் நான் அவர்களை ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் கயிலாயம் சென்று சிவபிரானிடம் முறையிடுங்கள்" என்று கூறினான்.

பிறகு விஷ்ணுவே தலைமையேற்று தேவர்களைச் சிவபிரானிடம் அழைத்துச் சென்று அவர்கள் குறைகளை எடுத்துக் கூறி வழிபட்டு நின்றனர்.

அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சிவபிரான் அவர்களை அழிக்கும் பொருட்டு விஷ்ணுவினால் நிர்மாணம் செய்யப்பட்ட தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டார்.

மேருபர்வதத்தை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் பிரம்மனைச் சாரதியாகவும் நியமித்துக் கொண்டு மூன்று அசுரர்களையும் ஒருசேர அழிக்கத்திட்டமிட்டு இந்திரன் முதலானவர்கள் தங்கள் வாகனங்களில் ஏறிப்புடை சூழ்ந்து வர முப்பத்து முக்கோடி தேவர்களும் அணிவகுத்து வர சிவபிரான் தேரின்மீது அமர்ந்து போர் செய்யப் புறப்பட்டார்.

அப்போது பிரமன் சிவபிரானிடம், "பிரபோ! இவர்கள் ஆயிரம் ஆண்டிற்கு ஒருமுறையே ஒன்று கூடி இருப்பார்கள். அந்த நாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்று வந்தது. ஆகவே இன்று அவர்களைத் தாங்கள் ஒருசேர அழிக்க முடியுமாதலால் அவர்கள் மீது ஆயுதத்தைச் செலுத்துங்கள்'' என்று கூறினார்.

பிரம்மன் கூறியபடி சிவபெருமான், வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகிய மூவரையும் நோக்கி மெல்ல நகைபுரிந்தார்.

அந்த சிரிப்பிலிருந்து பெரும் தீக்கொழுந்து புறப்பட்டுச் சென்று அந்த மூவரையும் அவர்களின் கோட்டை நகரம் மற்றும் படை களையும் எரித்துச் சாம்பல் ஆக்கிவிட்டது.

அந்த நிலையில் சிவபிரான் தன் கை வில்லினால் அவர்கள் மீது அம்பை எய்தினார். திருமாலாகிய அவ்வம்பு அவர்கள் மீது பட்டதும் அவர்கள் மயங்கி வீழ்ந்தனர். (அம்பு பட்டதால் அவர்கள் மாயை நீங்கியது)

இதன் குறிப்புப் பொருள் யாதெனின், பொன், வெள்ளி, இரும்பு போன்றவை மூன்று மலங்கள், ஆணவம், கன்மம், மாயை. அவை மூன்றும் நம்மைச் சூழ்ந்து கொண்ட நன்மைதீமைகளை அறிய வொட்டாமல் நமக்குப் பிறவித் துன்பங்களைத் தருகின்றன. அதனால் உயிர்கள் இறைவனைக் காணமுடிவதில்லை.

இறைவன் கருணையால் இந்த மும்மலமும் நீக்கப்பட்டால் உயிர்கள் பேரின்பம் அடையும். அதாவது இறைவனின் திருவடி நிழலைச் சென்று அடையமுடியும் என்பதாக இதன் தத்துவப் பொருளைக் கொள்ள வேண்டும்.

இந்த அரிய உண்மையை உலக மக்கள் அறிந்துகொள்ள வேண்டு மென்பதற்காகவே சிவன் கோவில்களில் திருவிழாவின்போது 'தேர்த் திருவிழா' நடத்தப்படுகின்றது. தேர்த்திருவிழாவினைக் காணும் பக்தர்கள் அனைவரும் மும்மலநீக்கம் பெற்று இறைவனின் அருட் கடாசத்தைப் பெற்று உய்ய வாய்ப்பாக அமைந்ததே திருத் தேரோட்டம் என்பதுணர்க.

இவ்வாறு இறைவன் மூன்று புரங்களையும் எரியச்செய்ததால் (திரி+புரம்=அரி) திரிபுராரி எனப்பட்டார். (திரி மூன்று புரம் நகரம் அரி எதிரி)

8.11 கஜசம்ஹாரர் (யானைத்தோல் உரித்தவர்)

யானை முகம் கொண்ட (கஜாசுரன்) அசுரன் ஒருவன் பிரம்மனைக் குறித்துத் தவங்கள் பல செய்து நிரம்ப வரங்களைப் பெற்று வாழ்ந்து வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் பெற்றவரங்களில் "சிவபிரானைத் தவிர மற்றவர்களால் தனக்கு மரணம் நேரக்கூடாது" என்பதும் ஒன்று. இந்த வரத்தின் பலத்தால் அவன் விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள், ரிஷிகள் முனிவர்கள் என்று எல்லாரையும் துன்புறுத்தி வந்தான்.

பலகாலமாக இவனின் தொல்லைகளைத் தாங்கமுடியாமல் வருந்திய அவர்கள் முடிவில் தங்கள் நாடு நகரங்களை எல்லாம் விட்டு விட்டு காசி மாநகரம் சென்று விசுவநாதரை வழிபட்டு வந்தனர்.

இந்திராதி தேவர்கள் காசிமாநகர் சென்று மறைந்து வாழ்வதைத் தெரிந்து கொண்ட கஜாசுரன் அங்கு சென்று அவர்களை மேலும் கொடுமைகள் செய்து வருத்தினான்.

அவன் செய்த கொடுமைகளைத் தாங்கமாட்டாமல் தேவர்கள் முனிவர் எல்லாரும் விசுவநாதர் ஆலயத்தினுள் புகுந்து தங்களைக் காத்துக் கொண்டனர்.

அதனைக்கண்டு கோபித்து கஜாசுரன் மணிகர்ணிகைக்கரை சென்று அவர்கள் வருகைக்காகக் காத்திருந்தான். தேவர்கள் வரவில்லை. மாறாக தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற சிவபிரான் அசுரனை அழிக்க விரும்பி உக்ரவடிவம் கொண்டு உடுக்கையைக் கையில் ஏந்தி ஒலித்துக் கொண்டும் சூலத்தை தரித்தும் மணி கர்ணிகைக்கரைக்குச் சென்று கஜாசுரனைத் தன் காலால் உதைத்துத் தள்ளினார்.

அசுரன் பூமியில் வீழ்ந்துவிட்டான். உடன் இறைவன் தமது திருக்கரங்களின் நகங்களால் கஜாசுரனின் தோலை உரித்து தன் மீது போர்த்திக்கொண்டான்.

இதுவே கஜசம்ஹாரமூர்த்தியின் கோலமாகும்.

இன்றும் இவர் காசியில் "காளபைரவர்" என்ற பெயரில் கோவில் கொண்டுள்ளதை பக்தர்கள் கண்டுகளிக்கலாம்.

தோலை உரித்தல் என்பது, "மாயையை நீக்குதல்" என்ற பொருளில் புரிந்துகொள்ள வேண்டும்.

8.12 வீரபத்திரர்

தட்ச யாகத்தை அழித்த கோலமே வீரபத்திரர் திருக் கோலமாகும்.

பிரம்மதேவனின் மகனான தட்சன் சிவபிரானைக் குறித்துத் தவமிருந்தான். அவரும் அவன் முன் தோன்றி அவன் கேட்ட வரங்கள் அனைத்தையும் அளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலப்பல வரங்களைப் பெற்றமையால் தனக்கு நிகர் இனி யாருமில்லை என்ற அகங்காரம் (கர்வம்) தட்சனுக்கு உண்டாயிற்று. தலைக்கர்வம் மேலோங்கவே அவன் சிவபிரானைக் கூட மதிக்க வில்லை. அவர் மகிமைகளையும் மறந்தான். யாகாதிபதியான அவரை நீக்கிவிட்டுத்தான் ஒரு யாகம் செய்யவும் முற்பட்டான்.

விஷ்ணுவை யாகத்தலைவராக்கிச் செய்வதென்று முடிவு செய்தான். அச்சமயம் அங்கு ''தசீதி' என்ற முனிவரும் மற்றும் அவருடன் இருந்த மற்ற முனிவர்களும் தட்சனுக்குப் பலவாறு அறிவுரைகளைக் கூறினார்கள்.

அகந்தை காரணமாக அறிவுரைகளைத் தட்சன் ஏற்க மறுத்துவிட்டான்.

யாகம் தொடங்கி நடைபெற்றது. இந்நிலையில் சிவபிரான் தட்சனின் கர்வத்தை அடக்கி அவனை ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டு அவன் செய்யும் வேள்வியைச் சிதைத்து அவனது அறியாமையைப் போக்கி அறிவு புகட்ட எண்ணினார்.

சக்திபத்ரகாளியாக மாற்றங்கொண்டுத் தன்னுடன் வர இவர் வீரபத்திரர் கோலம் கொண்டு தட்சனின் யாகசாலையில் புகுந்தார்.

யாகத்தில் தனக்குண்டான ஹவிர்பாகத்தைத் தருமாறு கேட்டார். (ஹவிர்பாகம் என்பது ஹோமத்தில் இடப்படும் உணவுப் பொருட்களில் இவருக்குண்டான பங்கு ஆகும்)

தட்சன் தர மறுத்தான். அத்துடன் நில்லாமல் அவரை, மேலும் ஏளனம் செய்தான். அவரது வேஷம் கண்டு எள்ளி நகை செய்தான்.

''சிவதூஷணம் (சிவநிந்தனை) செய்த உனக்கு இதுவே தண்டனை'' என்று சிவபிரான் தமது கையிலிருந்த வாளினால் அவன் தலையை வெட்டி எறிந்தார். ஒரு ஆட்டின் தலையை (அஞ்ஞானமே உருவான ஆட்டின் தலையை) அவனுக்குப் பொருத்தினார். அவனுக்கு உயிர்பிச்சை அளித்து அவனை உயிர்ப்பித்தார்.

உயிர்பெற்று எழுந்த தட்சன் அஞ்ஞானம் நீங்கப் பெற்றவனாய்ச் சிவஞ்ஞானம் கூடப் பெற்று சிவபிரானை நோக்கி நமஸ்கரித்துப் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினான்.

பின்னர் அவன் காசி முதலான பல திருத்தலங்களுக்குச் சென்று சிவவழிபாடு செய்து வந்தான். அதன் பலனாக அவன் சிவ கணங்களுக்குத் தலைவனாகும் தகுதியும் பெற்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் தத்துவப் பொருள் யாதெனின், "அஞ்ஞானமிகுதியால் உயிர்கள் சிவனைத் தூஷனை செய்தாலும் அவர் தானே இறங்கிவந்து உயிர்கட்கு அஞ்ஞானம் போக்கி மெய்ஞானம் அருளி உயர் பதவிகளையும் அடையச் செய்வார்" என்பதாகும்.

8.13 தட்சிணாமூர்த்தி (ஆலமர் செல்வர்)

பிரம்மனின் பிள்ளைகளான சனகர், சனந்தனர், சனாதனர், சனத் குமாரர் எனும் நால்வரும் நான்கு வேதங்களைக் கற்றுணர்ந்துப் பலப்பல தவங்களைச் செய்து முடித்தபின்னரும் தங்களுக்கு மனத் தெளிவு ஏற்படாமையால் கயிலை மலையடைந்து சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து தங்களுக்கு மனத்தெளிவை அருளுமாறு வேண்டி நின்றனர்.

இவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இறைவன், பளிங்கு நிறத் திருமேனிதாங்கி மூன்று கண்கள் விளங்கவும், வலக்கையில் சின் முத்திரைகாட்டியும் வலப்பக்க மேல் கையில் உடுக்கை ஏந்தியும், இடப்பக்க மேல் கையில் தீஜ்வாலையைத் தரித்தும் இடப்பக்க கையில் புஸ்தகம் ஏந்தியும், வலக்காலைத் தொங்கவிட்டு முயலகன் மீது பொருந்தியும், இடக்காலை மடித்தும் கல்லால மரத்தடியில் தென்முகமாக வீற்றிருந்து குருமூர்த்திவடிவில் அம்முனிவர் நால்வருக்கும் மெய்ஞ்ஞான நூலாகிய ஆகமங்களின் சரியை, கிரியை ஞானம் ஆகிய மூன்று பகுதிகளையும் உணர்த்தினார்.

நான்காவது பாதமாகிய யோகபாதத்தை உணர்த்துவதற்காகத் தம்முடைய வலத்திருக்கரத்தை மார்பில் வைத்து ஞானமுத்திரை காட்டி ஒரு கணப்பொழுது யோகநித்திரையில் இருந்து முனிவர் கட்கு அம்மார்க்கத்தையும் உணர்த்தியருளினார்.

முனிவர்களும் யோகநிலையை உணர்ந்து மனத்தெளிவு பெற்றனர்.

இக்கருத்தை விளக்குவதே தட்சிணாமூர்த்தித் திருக்கோல வடிவம் ஆகும்.

தென்முகக்கடவுள், ஆலமர்செல்வன் என்பன இவரைக் குறிக்கும் பெயர்களேயாம்.

உலகமக்கள் குருவின் மூலம் உபதேசம் பெற்று யோக மார்க்கத்தை அறிய வேண்டும் (அறியமுடியும்) என்பதை உணர்த்து வதே இம்மூர்த்தியின் தத்துவம் என்க. உலகத்திற்கு ஆதி (முதல்) குருவும் இவரே ஆவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8.14 கிராதமூர்த்தி (அர்ச்சுனன் பாசுபதம் பெறுதல்)

துரியோதனனைப் போரில் வெல்ல வேண்டுமென்று பெரு விருப்பம் கொண்ட அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற வேண்டு மென்று சிவபிரானைக் குறித்துத் தவமிருந்தான்.

இதை அறிந்த துரியோதனன் அர்ச்சுனனைக் கொல்ல மூகாசுரன் எனும் அசுரனை ஏவினான். அவன் ஒரு பன்றி உருவில் அர்ச்சுனன் தவமியற்றும் காட்டிற்கு வந்து அவனைக் கொல்லப் பாய்ந்தான்.

அது தருணம் அர்ச்சுனனின் தவமுதிர்ச்சிகண்டு அவனுக்குப் பாசுபதம் வழங்க விருப்பங்கொண்ட சிவபிரானும் தான் ஒரு வேடனாகவும், பார்வதியை ஒரு வேடுவச்சியாகவும் வரச்செய்து அர்ச்சுனன் தவமியற்றும் இடத்திற்கு வந்தார்.

இவர் வரும் நேரமும் பன்றியாக வந்த அசுரன் அர்ச்சுனனைத் தாக்க வரும் நேரமும் ஒன்றாக இருந்தது.

அசுரனின் செயல் திட்டத்தை உணர்ந்த சிவபிரான் தம் கையிலிருந்த "பினாகபாணி" என்னும் வில்லால் அசுரனை மாய்த்து விட்டார்.

அர்ச்சுனனைக் காப்பாற்றி அவன் முன் தோன்றி அவன் விரும்பியபடி அவனுக்கு பாசுபதாஸ்திரம் வழங்கினார் என்பது புராண வரலாறு. இந்த நிகழ்ச்சியின் பிரதிபலிப்பே கிராதமூர்த்தி கோலம் ஆகும்.

"இறைவனைச் சரணடைந்து எதை வேண்டினாலும் அவர் அதை நமக்கு அளிக்குமுன் நமக்கு ஏற்படும் அத்தனைத் துன்பங்களையும் போக்கிவிட்டு முடிவில் நாம் விரும்பியதை நிறைவேற்றுவார்" என்பதே இதன் தத்துவமாகக் கொள்க.

8.15 நீலகண்டர் (ஹாலாஸ்யநாதர்)

துர்வாசமுனிவர் தான் பூஜித்த சிவபூஜை நிர்மால்யபுஷ்பத்தை இந்திரனுக்குப் பிரசாதமாகத் தந்தார். (நிர்மால்யம் என்பது சிவபூஜை செய்த புஷ்பம் நிவேதனம் முதலியன ஆகும்)

"ஐராவதம்" என்னும் தனது யானை மீது சென்ற இந்திரன் சற்றும் பணிவு இன்றி அதை வாங்கி அதற்குத் தரவேண்டிய மரியாதையைத் தராமல் தனது யானையின் மத்தகத்தின் மீது வைத்துவிட்டான். அவ் வானை அதைக் கீழே தள்ளித் தன் காலால் மிதித்து நாசமாக்கியது.

இதைக் கண்ட முனிவர் கோபமுற்று தேவலோகத்திலிருக்கும் தேவதாரு, கற்பக விருட்சம் போன்ற மரங்களும், தேவகங்கை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போன்ற நதிகளும், காமதேனு முதலான பசுக்களும் மற்றுமுள்ள இந்திரபோகச் செல்வங்கள் அனைத்தும் அவனைவிட்டு நீங்குமாறு சபித்துவிட்டார்.

உடன் அவை அனைத்தும் பூவுலகு வந்து கடலில் மூழ்கி மறைந்து விட்டன. சிறப்பிழந்த இந்திரன் மீது அசுரர்கள் படை எடுத்துவந்து அவனைத் துன்புறுத்தினர். அவனைக் கொல்லவும் துணிந்தனர். சாவுக்கு அஞ்சிய தேவர்கள் சாவாமை வேண்டி வரம்பெற மஹா விஷ்ணுவை நாடினார். அவரும் இந்திரனை அழைத்துக் கொண்டு பிரம்மனிடம் வந்தார். வந்து அனைவரும் பிரம்மனை வழிபட்டுத் துன்பம் தொலையவும் சாவமை வேண்டியும் வரங்கேட்டு நின்றனர்.

அதற்குப் பிரம்மன், விஷ்ணு முதலான தேவர்களைப் பார்த்து, "பாற்கடலைக் கடைந்து அதில் கிடைக்கும் அமிர்தத்தை உண்டால் உண்டவர் உயிர்போகாது. எனவே நீங்கள் பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

அதைக்கேட்ட தேவர்கள் அவுணர்களிடம் சென்று நட்பு பேசி அவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து திருப்பாற்கடலைக் கடைந்தனர்.

மேருவை மத்தாக்கி வாசுகியை நாணாக்கித் தலைப்பக்கம் அவுணர்களும் வால்பக்கம் தேவர்களும் நின்று திருப்பாற்கடலைக் கடைந்தபோது முதலில் ஆலகால விஷம் வெளிப்பட்டது. ஒருகணம் அதைப் பார்த்த விஷ்ணுவின் உருவம் கருத்துவிட்டது. உடன் அவர் அவ்விஷத்திற்கு ஆற்றாமல் சென்றுவிட்டார்.

மேற்கொண்டு செய்வதறியாது நின்ற தேவர்கள் கயிலை நாதனிடம் சென்று முறையிட்டு நிற்க, "இறைவன் அவர்களைப் பார்த்து, தேவர்களே அஞ்சாதீர்கள் நான் உங்களை ஆலகால விஷத்தில் இருந்து காப்பாற்றுவேன்" என்று கூறியருளினார்.

தனக்குத் தினமும் தொண்டு செய்யும் தன் அணுக்கத் தொண்டனான சுந்தரனை அழைத்துச் "சுந்தர நீ சென்று அவ்விஷத்தை அள்ளிக்கொண்டு வா" என்று பணித்தார்.

அவர் கட்டளைப்படிச் சுந்தரர் பாற்கடல் சென்று அங்கு உருண்டு திரண்டிருந்த விஷத்தைக் கையில் ஏந்திக் கொண்டு கயிலை நாதனை அடைந்து அவரிடம் அளித்தார்.

அதைக் கையில் பெற்ற இறைவன் தேவர்களைப் பார்த்து, "தேவர்களே! இதை நான் யாதுசெய்ய வேண்டும் கூறுங்கள்" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்குத் தேவர்கள், "பிரபோ முதல் பாகம் எதுவாயினும் அது உங்களுக்கே உரித்தானதல்லவா?" எனவே தாங்கள் உண்டு எம்மை வாழ்விக்க வேண்டும் என்று கூறினர்.

சகல உயிர்களையும் காத்து ரட்சிக்கும் இயல்புடைய சிவ பெருமான் உடனே, சுந்தரனின் கையிலிருந்த ஆலகால விஷத்தை வாங்கித் தம் வாயில் போட்டுக் கொண்டார்.

அருகில் இருந்த உமையம்மை இறைவனின் கண்டத்தில் (கழுத்தில்) மெல்லத் தம் கையால் அழுத்திப் பிடித்தார். உமையம்மை யின் இந்தச் செயலால் இறைவனின் கழுத்தில் அவர் உண்ட விஷம் நிலைத்துநின்றுவிட்டது. அவர் கழுத்து மட்டும் கருத்துவிட்டது.

அன்றுமுதல் சிவபிரானுக்கு "நீலகண்டன்" என்ற திருநாமம் தோன்றி நிலைத்துவிட்டது.

நீலகண்டர், மணிகண்டர், ஸ்ரீகண்டர், ஆலமுண்ட கண்டர் முதலான பெயர்களும் தோன்றின.

தன் அடியார்களின் பொருட்டு இறைவன் எந்த தியாகத்தையும் செய்யத் தயங்காதவர் என்பதை இந்த புராணக்கதை மூலம் அறியலாம். சிவபிரான் அடியார்கட்கு எளிவந்த பிரான் என்பதையும் உணர்க.

8.16 கங்காளர் (எலும்பை தரித்தவர்)

முன்னொரு காலத்தில் வேதாரண்யம் எனும் திருமறைக்காட்டில் மறைகட்கு ஈசனான சிவன் சந்நிதியில் எரிந்து கொண்டிருந்த விளக்கொன்று அணையும் தருவாயை அடைந்திருந்தது.

அப்போது எதேச்சையாக ஒரு எலி அங்கு வந்து அந்த விளக்கினைப் பற்ற அவ்விளக்கு அணையாமல் ஒளிவிட்டெறிந்தது.

விளக்கின் நெய்யைப் பருகவந்த எலியின் செயலால் விளக்கு ஒளிபெற்றதாயினும், தீபத்தைத் தூண்டிவிட்டுப் பிரகாசிக்கச் செய்த புண்ணியச் செயலால் (எலி அறிவுப்பூர்வமாக செய்யாமல், எதேச்சையாக மேற்கண்ட செயலைச் செய்தாலும்) அவ்வெலி அடுத்த பிறவியில் அவுணனாகிய விரோசனனுக்குப் புத்திரனாகப் பிறந்தது.

அவ்வாறு பிறந்த மகன்தான் மஹாபலிச் சக்ரவர்த்தி எனப் பட்டான் மஹா+வலி=மாவலி. இதுவே பின்னர் "மஹாபலி" என்றாயிற்று என்க. மஹாபலி என்றால் பெரும் பலசாலி என்பது பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவன் தனது பெரும் பலத்தினால் தேவர்களை வருத்த, அவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டனர். அவரும் தக்க தருணம் வரும்போது தான் அவதாரம் செய்து அசுரனான மாவலியைக் கொல்வதாக வாக்களித்தார்.

அதன்படி தருணம் நேர்ந்தபோது திருமால் காசியபமுனிவருக்கு மகனாகத் தோன்றி குட்டையான உருவமுடன் விளங்கினார். (வாமனர்) வாமனன் என்ற பெயருடன் அவர் விளங்கிக் காலம் வாய்த்தபோது மகாபலியிடம் சென்றார்.

சொன்னசொல் தவறாத மாவலியிடம் தனக்கு மூன்றடி மண் (அதுவும் தன் காலால் மூன்றடி மண்) வேண்டும் என்று தானமாகக் கேட்டார்.

"இவர் வாமனர்தானே (குட்டை) இவர் காலால் மூன்றடி என்ன முப்பது அடி வேண்டுமானாலும் தருகிறேன்" என்று பெருமை கொண்டான் மாவலி.

இவர் குட்டையான காலால் எவ்வளவு மண்ணைப் பெற்று விடப் போகிறார் என்ற இறுமாப்பினால் அவன் முன் பின் யோசிக்காமலும் தன் குருநாதனான சுக்கிராச்சாரியார் சொல்லியும் கேட்காமல் அவர் காலால் மூன்றடி மண்ணைத் தருவதாகச் சத்தியம் செய்து கொடுத்துவிட்டான்.

அவ்வாமனரும் உடனே தன் குட்டையான உருவத்தை விடுவித்து தன்னுடைய விஸ்வரூபத்தை (உலகளாவிய திருமேனியை) எடுத்துக்கொண்டு ஒரு கால் அடியினால் இவ்வுலமனைத்தையும் அளந்துக்கொண்டார். இரண்டாம் அடியால் வானுலகம் முழுவதை யும் அளந்துகொண்டார். "மூன்றாமடிக்கு மண் எங்கே?" என்று வினவி நின்றார்.

கொடுத்த வாக்கைப் பொய்யாக்க எண்ணாத மாவலி, "மூன்றாவது அடியைத் தன் தலைமீது கொள்க" என்று தன் தலையைத் தாழ்த்தி நின்றான். விஷ்ணுவும் தன் காலை அவனின் தலைமீது ஊன்றி அவனை பூமியில் அழுந்துமாறு செய்துவிட்டார்.

அதன்பின், 'திரிவிக்கிரமன்' என்ற பெயருடன் வாமனன் மேற்கண்ட செயல் காரணமாகக் கர்வம் கொண்டு உயிர்கட்குத் துன்பம் தரத் தொடங்கினான்.

வாமனனின் கர்வத்தை அடக்கி அவனை நல்வழிப்படுத்த இறைவன் திருவுளம் கொண்டு நான்கு கைகளில் சூலம், கபாலம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாசம், டமருகம் ஏந்தியும், நெருப்பு போன்ற நிறமுடைய ஜடா மகுடத்தையும் அதில் பிறைச் சந்திரனையும் தரித்துக் கொண்டு புறப்பட்டார்.

நாய்வாகனமேறி ''பைரவர்'' கோலம் கொண்டு புறப்பட்ட சிவபிரான், வாமனனிடம் சென்று நற்புத்தி கூறினார். வாமனன் அதைக்கேட்க மறுத்தான். ஆகையால் சிவபிரான் கோபங்கொண்டு வாமனனின் மார்பில் அடிக்க அவன் கீழே விழுந்துவிட்டான்.

பைரவர் கோலத்திலிருந்த சிவபிரான் அவர் மார்பைப் பிளந்துத் தோலை உரித்துச் சட்டையாக அணிந்துகொண்டார்.

முதுகு எலும்பைத் தண்டாயுதம் போல கையில் கொண்டு காட்சி தந்தார். இந்தக் கோலமே கங்காளர் கோலமாகும்.

இதைச் சீர்காழியில் நடந்ததாகக் கூறுவர்.

வாமனரின் ஆணவமலம் போக்கி அவரை நல்வழிப்படுத்திய கோலமே கங்காளர் என்பதை உணர்க. (கையில் வாமனனின் முதுகுத் தண்டைத் தாங்கி இருப்பார்)

8.17 சக்ரதானர் (மாலுக்குச் சக்கரம் ஈந்த பிரான்)

முன்பு ஜலந்தராசுரனைக் கொல்ல வேண்டுமென்று சிவபிரான் உண்டாக்கிய, ''சுதர்சனம்'' எனும் சக்ராயுதத்தைத் தான் பெற வேண்டுமென்று விரும்பிய திருமால் கச்சியம்பதியை அடைந்து சிவ பிரதிஷ்டை செய்து சிவனை வழிபட்டு வந்தார்.

அவர் தினமும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு சஹஸ்ர நாம பூஜை செய்து வந்தார். ஒருநாள் திருமால் ஆயிரம் தாமரை மலர்களைச் சேகரித்துக் கொண்டு அர்ச்சனையைத் தொடங்கினார்.

அவரைச் சோதித்து அருள்புரிய விருப்பம் கொண்ட சிவபிரான் திருமால் வைத்திருந்த ஆயிரம் மலர்களில் ஒன்றை மறையுமாறு செய்துவிட்டார்.

அர்ச்சனை முடிவில் ஒரு மலர் குறையக் கண்ட திருமால் பூஜையைப் பாதியில் நிறுத்தினால் ஏற்படும் குற்றத்தை உணர்ந்து பூஜையைத் தடங்கலின்றி முடித்துவிடக் கருதித் தனது கண்களில் ஒன்றைப் பிடுங்கி அருச்சித்து அர்ச்சனையைக் குறைவின்றி முடித்து விட்டார்.

திருமாலின் இவ்வாறான செயலைக் கண்டு மகிழ்ந்துபோன இறைவன் அவர்முன் தோன்றி நடந்தனவற்றைக் கூறி அவருக்குச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சக்ராயுதம்" ஈந்து அத்துடன் அவருடைய கண்ணையும் கொடுத்து அருளினார். (அன்று முதல் திருமாலுக்குத் தாமரைக்கண்ணன், புண்டரீகாக்ஷன் என்று பெயர் உண்டாயிற்று என்க).

திருமாலும் சக்ராயுதத்தை மகிழ்வுடன் பெற்றுக்கொண்டு வைகுண்டம் சேர்ந்தார். சிவனைத் தினமும் அன்புடன் பூசித்து வரலானார். சிவனும் அன்று முதல் சக்ரதானமூர்த்தி என்ற திருநாமம் கொண்டு விளங்கினார்.

இக்கதையின் தத்துவம் யாதெனின்

எவர் உண்மை அன்புடன் தினமும் தன்னை வழிபடுகின்றார் களோ அவர்கள் எதை விரும்பிக் கேட்டாலும் அதைத் தடங்கலின்றி சிவபிரான் மகிழ்ந்தளிப்பார். அவர் பரம கருணாமூர்த்தி என்பதாகும்.

8.18 கஜமுகாநுக்கிரகர் (விக்னேஸாநுக்கிரஹர்)

உலக உயிர்கட்கு உண்டாகியிருக்கும் அஞ்ஞானத்தையும், இடையூறுகளையும் நீக்குவதற்காகவே, பரப்பிரணவம் எனும் 'அ' சிவபிரானிடத்தும், அபரப்பிரணவம் எனும் 'உ' உமாதேவியிடத்தும் 'ஓம்' (அ+உ+ம்=ஓம்) எனும் பிரணவாகாரமான யானை முகத்துடன் (கஜமுகம்) தோன்றியவர் விநாயகர், அவர் தமது தாய்தந்தையரை வணங்கி நின்றார். அப்போது பரமனும் பார்வதியும் அவரைத் தம் திருக்கரங்களால் எடுத்து உச்சி முகர்ந்து தம் மடிமீது வைத்துக் கொண்டனர்.

அவரை மடிமீது வைத்துக்கொண்டு, "மகனே உலகில் எவராயினும் தங்கள் காரியங்களைத் தொடங்குமுன் அவை தடங்கலின்றி முடிய வேண்டுமென்று உனை நினைந்து வேண்டிக் கொண்டு செய்வார்களேயானால் நீ அவர்களின் காரியங்களை தடையின்றி முடித்துக் கொடுப்பாயாக" என்றும்

"பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் ரிஷிகள் முனிவர்கள், மக்கள் ஆக எல்லா கூட்டங்களுக்கும் (கணங்கள்) நீயே முதல்வனாக (தலைவனாக) விளங்குவாயாக" என்றும் அவருக்கு வரமளித்தனர்.

அன்று முதல் விநாயகருக்கு, விக்னங்களைப் போக்கும் ஈஸ்வரன் என்ற பொருளில், 'விக்னேஸ்வரன்" என்றும் தனக்கு மேலான தலைவன் இல்லை என்ற பொருளில், "விநாயகன்" என்றும் எல்லா கூட்டத் திற்கும் (கணங்களுக்கும்) தலைவன் என்ற பொருளில் "கணபதி" என்றும் யானை முகமுடைய காரணத்தால் "கஜமுகன்" என்றும் பெயர்கள் உண்டாயின. பிரணவாகாரமான யானை முகமுடையவர் என்ற காரணத்தால் யானைமுகன் என்ற பெயர் தோன்றியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வரலாற்றை விளக்கும் கோலமே கஜமுகானுக்கிரஹர் என்பதறிக.

இவரை வழிபடாமல் செய்யும் எந்த சுப அசுப நிகழ்ச்சி களாயினும் தடைபடும். எனவே, தடையின்றி செயல்கள் நடைபெற வேண்டுமானால் முதலில் விநாயகர் பூஜை செய்ய வேண்டு மென்றுணர்க.

8.19 சண்டேசானுக்கிரஹர்

தென்தமிழ் நாட்டில் திருச்சேய்ஞ்ஞலூரில் 'எச்சதத்தன்' என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் விசாரசர்மா.

இவன் சிவனருளால் தானாகவே வேதாகமங்களைக் கற்று உணர்ந்தவன். சிவனைத்தவிர வேறு தெய்வங்களை வணங்காதவன். சிறந்த சிவபக்தன்.

இவன் ஒருநாள் பசுக்கூட்டங்கள் மேய்ந்து கொண்டிருந்த மேய்ச்சல்நிலப் பகுதிக்குச் சென்றான்.

அப்போது பசுக்களை மேய்க்கும் சிறுவன் பசுக்களைத் தம் கைத் தடியால் அடித்து மேய்த்துக் கொண்டிருந்தான். மாடு மேய்ப்பவன் பசுக்களைத் துன்புறுத்துவதைக் கண்ணுற்ற விசாரசர்மா, "ஐயோ இவன் இப்பசுக்களைத் தெய்வமென்று எண்ணாமல் இப்படி அடித்துத் துன்புறுத்துகின்றானே" என்று மிகவும் மனம் நொந்து போனான்.

பின் மாடு மேய்க்கும் சிறுவனை விரட்டிவிட்டு மறுநாள் முதல் பசுக்களை மேய்க்கும் தொழிலை இவனே மேற்கொண்டு தினமும் அவ்வூர்ப்பசுக்களை மேய்த்து வந்தான்.

இவ்வாறு மேய்த்து வரும் நாளில் திருவருள் கூட்டுவித்தபடி ஓர் நாள் இவனுடைய மனதில், "இந்த பசுக்களின் பாலை இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் புண்ணியமுண்டாகும்" என்ற எண்ணம் மேலெழுந்தது.

உடன் மண்ணியாற்றங்கரையில் மணலால் ஒரு சிவலிங்கம் செய்து அதற்குத் தினமும் பசுக்களின் பாலைக் கறந்து அபிஷேகம் செய்து வரலானான்.

இவ்வாறு அவன் செய்துவரும் நாளில் அவனது செயலைக் கண்ணுற்ற ஒருவன் ஊரினுள் சென்று விசாரசர்மாவின் செயலைக் கூறிப்போனான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசாரசர்மனின் செயலைக் கேட்டு மக்கள் அதுபற்றி விசாரிக்குமாறு அவன் தந்தையிடம் சென்று முறையிட்டனர்.

ஊர் மக்கள் சொன்னதைக் கேட்ட எச்சதத்தனுக்குத் தன் மகன் மீது கோபம் உண்டாயிற்று. "அவன் அவ்வாறு அபிஷேகம் செய்வது உண்மைதானா?" என்பதைக் கண்டறிவதற்காக அன்றைய பகலில் மேய்ச்சல் பகுதிக்குச் சென்று மறைந்திருந்து தன் மகனின் செயலை நோட்டம் விட்டார்.

''ஊரார் சொல்வது உண்மை என்பதை'' நேரில் கண்டு கொண்டார். அவர்கள் சொல்லியபடி விசாரசர்மா பசுக்களின் பாலைக் கறந்து, அவனால் செய்யப்பட்டிருந்த மணல் லிங்கத்திற்குக் குடம் குடமாகப் பாலாபிஷேகம் செய்து கொண்டிருந்தான்.

இச்செயலைக் கண்டு மிகுந்த கோபம் கொண்ட அவனது தந்தை வேகமாக விசாரசர்மாவிடம் வந்து அவனை அடித்துத் துன்புறுத்தினார்.

மிகுந்த பக்தியுடன் தன்னை மறந்த நிலையில் சிவபூஜை செய்து கொண்டிருந்த விசாரசர்மாவிற்கு எதிரே வந்து தன்னை தண்டிப்பவர் தன் தந்தையராவார் என்பது கூட புலப்படவில்லை.

வேகமாகத் தன் அருகில் இருந்த ஒரு மூங்கில் கழியை எடுத்து எச்சதத்தரை நோக்கி வீசி எறிந்து தாக்கினான். அதனால் அவர் கால் முறிந்துவிட அவர் கீழே சாய்ந்துவிட்டார்.

தன்னை மறந்த நிலையில் நம்மை எண்ணிப்பூசித்து வந்த தனது பக்தனான விசாரசர்மாவுக்கு அருள்பாலிக்க எண்ணிய சிவபெருமான் அவன் முன் தோன்றி, "அன்பனே திரிகரணசுத்தியுடன் நீ செய்த பூசையை நாம் ஏற்றோம். நம் பூசையின் பொருட்டுத் தந்தை என்றும் பாராமல் நீ உன் தகப்பனாரைத் தண்டித்துவிட்டாய். இனி உனக்கு நானே தந்தை! உமையே தாயாவார். நீ இன்று முதல் எமது நிர்மால்யப் பொருள்களையெல்லாம் ஏற்று, எமது அடியார்களுக் கெல்லாம் தலைவனாக இருப்பாயாக" என்று வரமருளினார்.

அத்துடன் தான் அணிந்திருந்த கொன்றை மாலையை எடுத்து விசாரசர்மாவின் தலைமீது சூட்டினார். அவருக்குச் சண்டேசர் பதவியும் வழங்கினார். விசாரசர்மா அன்று முதல் சிவபிரானின் அருகில் இருந்து அவரது நிர்மால்யப் பொருட்களை ஏற்று மகிழ்ந்து தவமியற்றிக் கொண்டிருந்தார் (இன்றும் இருக்கிறார்) என்பது வரலாறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனால் சிவபிரானுக்குச் சண்டேசானுக்ரகர் என்ற பெயர் உண்டாயிற்றென்க. சிவனருளால் எச்சதத்தரும் மூர்ச்சை தெளிந்து எழுந்து சிவதரிசனம் பெற்றுச் சிவசாயுஜ்ய பதவியை அடைந்தார்.

"எவன் ஒருவன் தான் என்றும் தன் சுற்றம் என்றும் பற்றுக் கொள்ளாமல் சிவபிரானையே முழுமுதற் பொருளாக எண்ணித் திரிகரண சுத்தியுடன் பால் அபிஷேகம் செய்து பூஜிக்கின்றானோ அவனுக்கு மிகச்சிறந்த புண்யலோகமான சிவலோக பதவி கிடைக்கும் என்பது சண்டேசபுராணத்தால் விளங்கும் தத்துவம் ஆகும்.

8.20 ஏகபாதர்

மஹாசம்ஹார காலத்தில் உயிர்கள் அனைத்தும் சக்தியில் ஒடுங்குவதாகவும், சக்தி சிவத்தில் ஒடுங்குவதாகவும், சிவபிரான் ஒருவர் மட்டுமே அழியாமல் இருப்பார் என்பதை விளக்கும் தத்துவமே "ஏகபாதமூர்த்தி" கோலம் என்க.

உலகமும், உலக உயிர்களும் தோன்றுவதற்கும், பின் அவை ஒடுங்குவதற்கும் இடமானவன் சிவபிரான் மட்டுமே என்பதையும், இவர் உலக உயிர்கள் உய்யும்பொருட்டு பஞ்சகிருத்யம் எனும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் எனும் ஐந்து தொழில்களையும் செய்கிறார் என்பதையும் உணர்த்துவது இக்கோலம்.

"ஆணவமலத்தில் அழுந்தியுள்ள உயிர்கள் தங்களின் மேலான நிலையை அறியாமல் உள்ளனவே" என்று வருந்தி உயிர்களின் ஆணவ மலத்தைப் போக்க உயிர்கள் மீது சிவசக்தியைப் பதித்து அவை ஞானம் பெற உதவி, அந்த ஞானத்தால் உயிர்கள் ஆணவ மலம் நீங்கித் திகழ வேண்டுமென்ற நோக்கத்தில் சிவபிரான் தன் திருவடியைத் தந்து உதவுகின்றார்" என்பது இவ்வுருவத்தினால் விளக்கப்படும் தத்துவக் கருத்தாகும். இவரை வழிப்பட்டால் ஞானநிஷ்டை கைகூடும் என ஆகம நூல்கள் கூறுகின்றன.

8.21 லிங்கோத்பவர்

தாமே படைக்குங்கடவுள் என்று பிரம்மனும், தாமே காக்கும் கடவுள் என்று விஷ்ணுவும் ஒருவருக்கொருவர் மிக்க கர்வம் கொண்டு விளங்கினர்.

தனக்கு விஷ்ணு தந்தையாவர் என்பதைக் கூட பிரம்மன் தனது ஆணவமலத்தால் மறந்து அவருடன் நேருக்குநேர் நின்று யுத்தம் செய்யத் தொடங்கினார்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்களின் யுத்தம் பலகாலம் நீண்டது. அதனால் உலக உயிர்கள் படைப்பு, காப்பின்றி வருந்தின. இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் பிரம்ம விஷ்ணுக்களின் ஆணவத்தை அடக்கி அவர்களின் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எண்ணினார். உலக உயிர்களின் வருத்தத்தை நீக்கவும் திருவுளம்கொண்டார்.

மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி நாளில் தாம் ஓர் ஒளிப் பிழம்பாய்த் தோன்றி பிரம்மவிஷ்ணுக்களின் எதிரில் வந்து நின்றார்.

"இதுவரை காணாத இவ்வொளிப் பிழம்பு இப்போது இங்கு எப்படி வந்து தோன்றியது" என்று வியப்படைந்த பிரம்மனும், திருமாலும் தங்கள் பகைமறந்து ஒரு கணம் திகைப்படைந்து நின்றனர்.

அப்போது ஒளிப்பிழம்பாய்த் தோன்றிய சிவபெருமான் அசரீரியாக (வானொலி) "ஹே பிரம்ம விஷ்ணுக்களே! உங்களில் யார் உயர்ந்தவர் என்பதை நீங்கள் அறிய வேண்டுமானால் உங்கள் முன் நிற்கும் இந்த ஒளிப்பிழம்பின் முடிவை ஒருவரும், தொடக்கத்தை ஒருவரும் கண்டு வாருங்கள். யார் முதலில் கண்டு வந்து சொல்கிறீர்களோ அவரே உயர்ந்தவராவார்" என்று கூறியருளினார்.

உடன் பிரம்மன் அன்னப்பறவை வடிவு கொண்டு ஜோதியின் முடியைக் காணச் சென்றார். திருமால் வராக அவதாரம் (பன்றி) கொண்டு அடியைக் காணச் சென்றார். பல்லாயிரம் ஆண்டுகள் தேடியும் அவர்களால் அடிமுடியைக் காணமுடியவில்லை. இருவரும் தோல்வி கண்டுத் துவண்டுத் திரும்பி வந்து நின்றனர்.

வேதங்களிலும், ஆகமங்களிலும் சொல்லப்பட்டுள்ள உண்மைகள் யாவும் விளங்க பிரம்மவிஷ்ணுக்களின் முன்பு சிவன் ஜோதிவடிவில் தோன்றியருளினார். அதைக் கண்ட அவர்கள் மாயை நீங்கப்பெற்றனர். அதுமட்டுமின்றி அவர்கள் அந்த ஜோதியின் மூலம் உலகம் தோன்றி ஒடுங்கும் தன்மை, தாங்கள் தோன்றியவிதம், ஷடத்துவாக்கள், மேன்மையான பதவிகள் மேலோரால் (ஞானி களால்) அறிவுப்பூர்வமாக உணரப்படுகின்ற சிவன், உமாதேவி ஆக எல்லாவற்றையும் அந்த ஜோதிவடிவில் கண்டு அதிசயித்து வணங்கி நின்றனர்.

மேற்கண்ட காட்சியைக் கண்டதால் பிரம்ம விஷ்ணுக்களின் மாயை நீங்கியது. அதனால் அவர்கள், "பெருமானே! நாங்கள் அகந்தை மேலிட அனேகம் பிழைகளைச் செய்துவிட்டோம். அவை கள் அனைத்தையும் தாங்கள் பொறுத்துக்கொண்டு எங்களுக்கு அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டி வணங்கி கைகூப்பி நின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபிரான் புன்முருவல் பூத்து, "நீங்கள் மாயையில் கட்டுண்டு அதனால் செருக்குமேலிட சண்டையிட்டு நின்றீர்கள். உங்கள் ஆணவத்தை நீக்கி அருள் செய்யவே யாம் உங்கள் முன்பு ஒளிப் பிழம்பாய்த் தோன்றினோம்" என்று திருவாய் மலர்ந்தருளி, "இனி நீங்கள் உங்களுக்கு அதிகாரமான உங்கள் படைத்தல், காத்தல் தொழில்களை முன்போல் மீண்டும் தடையின்றி இயற்றுவீராக" என்று கட்டளை பிறப்பித்து மறைந்தருளினார்.

சிவனருள் பெற்ற பிரம்ம விஷ்ணுக்கள் மகிழ்வுகொண்டு மீண்டும் தம் தொழிலை மேற்கொள்வராயினர்.

இக்கதை மூலம் உணர்த்தப்படுகின்ற தத்துவம் யாதெனின்,

பிரம்மா புருஷதத்துவம், விஷ்ணு வித்யா தத்துவம்.

உடம்பைப் பெற்ற உயிர்கள் தாம் கற்ற கல்வி கேள்விகளால் ஆணவம் கொண்டு விளங்கும்போது அவற்றின் மீது இறைவன் கருணை கொண்டு தாமாகவே வலிய அவைமுன் தோன்றி அவ்வுயிர்களின் மலமாயைகளை நீக்கித் தம் அருளை வாரி வழங்குவார் என்பதேயாகும்.

தமது ஞானம் பிழம்பாகிய ஒளியை மறைத்துச் சுருங்கி உயிர்கள் கண்டு தொழும்வண்ணமாக ஒரு லிங்கவடிவில் சிவபிரான் தோன்றிக் காட்சி தந்தமையே, "லிங்கோத்பவ மூர்த்தமாகும்" இந்த நிகழ்ச்சி நடைபெற்ற ஊர் திருவண்ணாமலையாகும். அங்குள்ள அருணாசலம் எனும் மலையே சிபிரான் ஒளிப்பிழம்பாகத் தோன்றிய இடம் என்றும் அப்பிழம்பு, லிங்க வடிவம் கொண்ட கோலமே இன்றுள்ள அண்ணாமலை என்பதும் புராணவரலாறு ஆகும்.

8.22 சுகாசனர்

சுகாசனராகத் தான் அமர்ந்து கொண்டு வேதசிவாகமங்களின் பொருளை உமாதேவியாருக்கு உபதேசித்து அருளிய சிவனின் திருக்கோலமே சுகாசனமூர்த்தி கோலமாகும்.

சிவபிரானை உமாதேவி வணங்கிநின்று, "பிரபோ! தாங்கள் எனக்கு வேதசிவாகமங்களின் உண்மைப் பொருளை உணர்த்தியருள வேண்டும்" என்று வேண்டினார்.

உடன் சிவபிரான் உமாதேவியைத் தன் இடப்பாகத்தில் அமர்த்திக் கொண்டுத் தனது வலக்காலைத் தொங்கவிட்டு இடக் காலை மடித்து வைத்து ஓர் ஆசனத்தின் மீது சுகமாக (சுகாசனராக)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமர்ந்துகொண்டு, "சக்தியே நீ வேதசிவாகமப் பொருட்களை உணர வேண்டுமென்பதற்காக இப்படி என்னிடம் கேட்கவில்லை என்பதும் - அவைகளை

- உலக உயிர்கள் உணர்ந்து உய்ய வேண்டுமென்ற அருள் நோக்குடனே இதை என்னிடம் நீ கேட்கின்றாய் என்பதும் எனக்குத் தெரியும். நன்று. கேட்பாயாக" என்று சொல்லி வேதாகமப் பொருளைத் தேவிக்கு உணர்த்தத் தொடங்கினர்.

உயிர்களைக் கட்டுப்படுத்தும் ஆணவம், கன்மம், மாயா மலங்களின் லட்சணங்கள் பற்றியும் அவை உயிர்களிடமிருந்து எப்போது எதனால் நீங்கும் என்பதும், அம்மலங்கள் நீங்கப்பெற்ற உயிர்கள் அடையும் பெரும்பேறுகள் பற்றியும், வேதங்களின் தோற்றம், ஆகமங்களின் தோற்றம் பற்றியும், பராபஸ்யந்தி மத்யமா, வைகரீ முதலிய வாக்குகளினால் உண்டாகும் சுத்தமாயா லட்சணத்தையும், உமாதேவியார் தமக்கு வாமபாகத்தில் அமர்ந்துள்ள தத்துவ வரலாற்றையும் தெளிவாக உமாதேவியாருக்கு உபதேசித்து அருளினார்.

இந்த மூர்தத்தை வழிபடுபவர்கள் நல்ல ஞானமும் கல்வியும் பெற்று மாயைகள் நீங்கப்பெற்றுச் சிவஞான சித்தியை அடைவார்கள் என்க.

8.23 உமாமஹேசர்

உலக உயிர்களின் சிருஷ்டிக்குக் காரணமான ஆண் பெண் தத்துவத்தை உணர்த்தும் கோலமே இறைவனது உமா மகேஸ்வரர் கோலம் என்க.

மஹாப்பிரளயத்தின் பின் உலகைப் படைக்க எண்ணிய இறைவன் தமது திருவருட்சக்தியினாலே தம்மிடமிருந்து சக்திக்குத் தனி உருவம் தந்து (பெண் உருவம்) அவரைத் தம் வாம (இட பாகத்தில்) பாகத்தில் அமர்த்திக் கொண்டுச் சிவசக்தி வடிவமாக உமா மகேசர் காட்சி தந்தார்.

இவருடைய இந்த உருவத்தைக் கண்டு உலக உயிர்கள் போக சக்தியை உணர்ந்து படைப்புத் தன்மையைப் பெற்றன. அது இன்றளவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வரக் காண்கின்றோம்.

இந்த உமாமகேசர் உருவைப் பிரதிஷ்டை செய்து வழிபடும் மக்கள் நல்லபிள்ளைப் பேற்றை அடையலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8.24 ஹரிஹரர் (சங்கரநாராயணர்)

விஷ்ணு சிவபிரானின் உடலில் பாதியை வேண்டித் தவமிருந்தார். அதற்கிணங்கிய சிவபெருமான் தனது இடப்பாகத்தைத் திருமாலுக்கு உகந்தளித்தார். இனி உன் பெயர் 'மாயன்' என்பதாக விளங்கும் என்றார்.

அன்று முதல் வலப்பக்கம் கொன்றை மாலையும், இடப்பக்கம் துளசி மாலையையும் அணிந்தவராகியும், வலப்பக்கம் புலித்தோல், இடப்பக்கம் பீதாம்பரத்தையும் ஆடையாக உடுத்தியும், வலக் கரத்தில் மானும், இடக்கரத்தில் சுதர்சனச்சக்கரமும் விளங்கவும் வலப் பக்கம் செந்நிறம் இடப்பக்கம் கருநிறம் உடைய மேனியராகவும் திருவுருவம் அமையச் சிவபிரான் ஹரிஹரனாக (சங்கர நாராயணனாக) அடியார்க்குக் காட்சி நல்கி வருகிறார்.

இதனால் "அரியும் சிவனும் ஒன்றே வேறல்ல" என்ற உணர்வைப் பெற்று உயிர்கள் மேன்மை அடையவேண்டும். "அரியும் சிவனும் ஒன்று (ஒண்ணு) அறியாதவர் வாயில் மண்ணு" என்பது பழமொழியாகும்.

இந்த உருவத்தை வழிபடுபவர்கள் மாயைகள் நீங்கப்பெற்றுச் சிறந்த சிவஞானம் பெற்று ஒற்றுமையுணர்வுடன் வாழலாம். சிவன் திருமால் இருவருடைய அருளையும் ஒருங்கே அடையலாம். இந்தத் திருக்கோலத்தை சங்கரநாராயணர் கோவில் எனும் ஊரில் காணலாம்.

8.25 அர்த்தநாரீஸ்வரர் (மாதொருபாகன்)

சிவபிரானின் சிவக்திஸ்வரூபமே அர்த்தநாரி வடிவம்.

விஷ்ணுவைப் போலவே சக்தியும் இறைவனிடம் பாதி உடலைக் கேட்க, சிவபிரான் பார்வதிக்குத் தம் உடலில் பாதியைத் தந்து சிவசக்தி (ஆண், பெண் இணைந்த) ரூபமாகக் காட்சி தந்தார்.

ஆண்பெண் கூட்டு முயற்சியாலேயே உலக உயிர்கள் இன்ப துன்பங்களைப் பெறுகின்றன என்பதை உணர்த்தவே இந்த அர்த்த நாரீஸர் கோலத்தை இறைவன் கொண்டார் என்க.

வலப்பக்கம் ஆணாகவும், இடப்பக்கம் பெண்ணாகவும் விளங்கும் இவ்வுருவமே மாதொருபாகன் திருமேனிக்கோலம் என்க.

வலப்பக்கம்	-	புலித்தோலாடை
இடப்பக்கம்	-	பச்சைப் பட்டாடை
வலச்செவி	-	குண்டலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடச்செவி	-	குழை (தோடு)
வலப்பக்க மேனி	-	விபூதி பூசிய பால்வண்ணம்
இடப்பக்கமேனி	-	பசுமைநிறம்
இடக்கையில்	-	கிளிப்பிள்ளை
வலக்கையில்	-	சூலம்
வலப்பக்கம்	-	சிவரூபம் (ஆண்)
இடப்பக்கம்	-	சக்திரூபம் (பெண்)

வாகனம் இருவருக்கும் பொதுவாக ஒரு விருஷபம் இந்த திருக் கோலம் கண்டு வணங்கி வருபவர்கள் ஐஸ்வர்யம் பெறலாம். இந்தத் திருக்கோலத்தை திருச்செங்கோட்டில் காணலாம்.

9. லிங்க வடிவத் தத்துவம் யாது? தத்துவம் எத்தனை? விளக்கு.

லிங்கம் உலக ஸ்ருஷ்டியின் தத்துவத்தை விளக்குவதாகும்.

லிங்க உருவமானது தண்டுபோன்றது. ஆவுடையார் யோனி போன்றது. இந்த அமைப்பினால் லிங்கம் உலக ஸ்ருஷ்டியின் அடையாளம் எனப்படுகிறது.

ஒரு லிங்கத்தில் மூன்று பகுதிகள் (பிரிவுகள்) உள்ளன. ஒன்பது தத்துவங்கள் கூறப்படுகின்றன.

மேலே காணப்படும் லிங்கம் (கூம்பு வடிவம்) போன்ற பகுதி ஆவுடையாருக்குங் கீழே சென்று முடியவேண்டும். அந்த கீழ்ப் பகுதிக்கு "ஆதாரசக்தி" என்று பெயர். அதன் மேல் பூமியின் வெளியே தெரியும் வட்டப்பகுதிக்கு அல்லது சதுரப்பகுதிக்கு "பிரம்ம பாகம்" என்று பெயர். மேல் உள்ள ஆவுடையார் "விஷ்ணுபாகம்" எனப்படும். அதன் மீது விளங்கும் லிங்கம் "ருத்ரபாகம்" எனப்படும்.

ஆக மூன்று தத்துவத்தையும் மூன்று பாகங்களாகக் கூறுவர்.

1. பிரம்ம தத்துவம் 2. விஷ்ணுதத்துவம் 3. ருத்ரதத்துவம் மேலுள்ள இந்த ருத்ர தத்துவத்தில் மேலே முறையே கீழிருந்து மேலாக *4. மகேஸ்வரதத்துவம் 5. சதாசிவதத்துவம் 6. பரபிந்து தத்துவம் 7. நாத (பரநாத) தத்துவம் 8. பராசக்தி (சக்தி) தத்துவம், அதற்குமேல் 9. பர சிவதத்துவம்* கூறப்படுகிறது.

இவ்வாறு லிங்கதத்துவம் ஒன்பது வகையாகும் என்பதை உணர்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. சகல உருவங்களுக்குப் பல கைகளும், பலவகையான ஆயுதங்களும் கூறப்படுகின்றனவே? ஏன்?

லிங்க உருவமாக இறைவனை வணங்கும்போது கை கால்கள், முகம் ஆகியன இல்லை. ஆனால் உருவத்திருமேனியாக இறைவனை வணங்கும்போது இரண்டும், இரண்டுக்கும் மேலாகப் பல கைகளும் அவற்றில் ஆயுதங்களும் கூறப்படுகின்றன.

அந்தந்த திருமேனிக்கு உரிய இறைவனின் ஆற்றலை உலகமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற காரணத்தினாலேயே பல கைகளும், பல முகங்களும், பல வகையான ஆயுதங்களும் தத்துவப் பொருளை உணர்த்தும் வண்ணம் திகழ்கின்றன என்று ஆகமங்கள் கூறுகின்றன.

11. சிவபிரானுக்கு உரித்தான ஆயுதங்களையும் அவற்றின் தத்துவப் பொருளையும் கூறுக.

சாதாரணமாகச் சிவபெருமானுக்கு ஒன்று முதல் ஐந்து முகங்கள் வரையான உருவங்களை நாம் கோவில்களில் காணமுடியும். அவற்றின் கைகளில், மான், மழு, மணி, டங்கம் (துடி) பாசம் போன்ற இன்னும் பல ஆயுதங்களும் விளங்கக் காணலாம்.

1. மான் தாம் வேதப்பொருளாக விளங்குபவர் என்பதை உணர்த்தவே மானைத் தாங்கி உள்ளார். மானின் நான்கு கால்களும் நான்கு வேதங்களாகும்.

2. மழு தான்லயஸ்வரூபி (வசியமானவர்) என்பதையும், 'பரா' எனும் சக்திக்கும் தான் மேலானவர் என்பதையும் உணர்த்தவே பராசக்தி வடிவமானதும் லயஸ்தானமானதுமான 'மழு' என்னும் ஆயுதம் கொண்டார்.

3. சூலம் இதைத் 'திரிசூலம்' என்பர். சிவபிரான் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்று தொழில்களுக்கும் அதிபதி என்பதையும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் நீக்குபவர் அவரே என்பதையும் குறிப்பதாக சூலாயுதத்தின் தத்துவத்தை உணரவேண்டும்.

மேலும் ஆரணி, ஜெனனி, ரோதாயினி என்னும் மூன்று சக்தி வடிவமான மூன்று பிரிவுகளை உடையதாகச் சூலம் அமைந்துள்ளது. ஆன்மாக்களின் மும்மலங்களையும் அழித்து அவற்றிற்கு முக்தி யருள்பவர் சிவபெருமான் என்பதற்கு அடையாளமே சூலம் என்றும் பொருள் கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. வாள் (கத்தி) 'கட்கம்' எனப்படும் கத்தி ஞானவடிவமாகும். எல்லா உயிர்களையும், தமது ஞானத்தால் அடக்கி ஆளும் திறமுடையவர் சிவபெருமான் என்பதையும், உயிர்களின் பிறப்பிற்கு மூல காரணமான வினையாகிய வேறினையறுப்பவர் சிவபெருமான் என்பதையும் உணர்த்தும் கருவியாக வாளைக் கைக்கொண்டார் என்று கொள்ள வேண்டும்.

5. கோடாலி 'குலிசம்' என்பர். துஷ்டர்களை பேதிக்கின்ற (கூறுபடுத்துகின்ற) தன்மையை உடையவர் என்பதை உணர்த்தவே கோடாலியைக் கைக்கொண்டார் என்க.

6. அக்னி (நெருப்பு) உயிர்களின் பாசங்களை எரித்துச் சாம்பலாக்குபவர் சிவபெருமான் என்பதை உணர்த்தவே தீச்சுடர் அடையாளம் என்க. அக்நி சம்ஹாரவடிவம் ஆகும். காமிகாகமம் அக்னியைச் சம்ஹார சக்தி என்கின்றது.

7. அங்குசம் பிரம்மாதி மூவர்க்கும் இயலாத "திரோபாவம்" எனும் மறைத்தல் தொழிலைச் செய்யும் ஆற்றல் உடையவர் சிவபெருமானேயாவார். அதை உணர்த்தவே அவர் அங்குசம் கைக் கொண்டார் என்க.

யானையை அடக்க யானைப்பாகர் "அங்குசம்" எனும் ஆயுதத்தை வைத்திருப்பார்கள். அந்த அங்குசத்தின்மேற் பகுதியில் கூர் இருக்கும். அந்த கூரானது முழுவதும் யானையின் உடலுக்குள் செல்லாதவாறு தடுத்து அளவோடு யானையைக் குத்துமாறு அதற்குத் தடுப்பு இருக்கும்.

யானைப்பாகர் யானையை அடக்கி ஆள அங்குசத்தைப் பயன்படுத்தும்போது அது யானையைத் துரிதப்படுத்திச் செயலாற்றவைக்கும்.

அதுபோல "கூர்" திரோபாவமாகவும் அது செயல்படும்போது உயிர்களின் மந்தப்போக்கு நீங்கப்பட்டு துரிதமாக அவை செயல்படும் என்பதையும் அதனால் உயிர்கள் மறைப்பு நீங்கி உண்மையை உணரும் என்பதையும் அங்குசம் உணர்த்துகினறது.

8. மணி மணியின் ஒலி, நாத ஒலி என்க. ஒலி மயமான நாத தத்துவத்திற்குத் தலைவன் சிவபிரான் என்பதை உணர்த்தவே மணியைக் கைக்கொண்டார் என்றும் -

- மணி ஓசையைக் கேட்டு உயிர்கள் விழிப்புற்று ஆணவம் நீங்கி உய்வு பெறவேண்டும் எனும் உயர்ந்த நோக்கத்துடன் மணியைச் சிவபிரான் கைக்கொண்டு ஒலிக்கின்றார் என்பதையும் உணர்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. டங்கம் (துடி) இறைவனின் வலக்கரத்தில் துடி இருக்கும். "துடி" படைத்தல் தொழிலுக்கு அடையாளம் ஆகும். ஒலியிலிருந்துதான் உலகம் தோன்றியது என்பதை உணர்த்தவே இறைவனுக்குத் துடியும் ஒரு ஆயுதமாகக் கற்பிக்கப்பட்டது.

''உயிர்களின் தோற்றத்திற்கு நாததத்துவமே முதலாகும்'' என்பதை ஆகமங்கள் கூறக்காணலாம்.

10. பாசம் (கயிறு) மாயாரூபத்தின் வடிவம் கயிறு. (பாசக்கயிறு என்பர்) உயிர்களுக்குப் பாசமலத்தையூட்டுபவர்தாமே. அதைப் போக்குபவரும் தாமே (அறுப்பவர்) என்பதை உணர்த்தவே கயிறு ஒரு ஆயுதமாக விளங்குகிறது என்க.

11. வில் (பினாகம்) ''பினாக பாணி'' என்பது சிவனின் பெயர்களுள் ஒன்று. பினாகம் எனும் வில்லைக் கையில் கொண்டவர் என்பது இதன் பொருள்.

மனதை வில் என்று உபனிதடதங்கள் கூறுகின்றன.

மனதை வளைக்கும் ஆற்றல் சிவபிரானுக்கே உண்டு. அதாவது உயிர்களின் மனதைத் தன்வயப்படுத்தி அவைகளை உய்விக்கும் ஆற்றல் சிவபெருமானுக்கே உண்டு என்பதற்காக வில் அவருக்கு ஒரு ஆயுதமாக கற்பிக்கப்பட்டதென்க.

12. அபயம் : காத்தல் அனுக்கிரஹத்தின் அடையாளம். உயிர்களுக்குண்டாகும் பயத்தைப் போக்கி (இங்கு பயம் என்பதை பிறவித்துன்பம் என்று கொள்ளவும்) காக்கும் கருணைவள்ளல் சிவபிரான் என்பதற்கு அடையாளம் அபயமுத்திரை காட்டும் கை என்க.

13. வரதம்: கொடுத்தல் (ஈதல்) உயிர்கள் செய்கின்ற நன்மை தீமை களுக்கு ஏற்ப அவைகட்குத் தக்கபடி, சாலோக, சாமீப, சாயுஜ்ய, சாரூப பதவிகளை அளிப்பவர் சிவபிரான் என்பதை உணர்த்தவே வரதமுத்திரை காட்டும் கையின் தத்துவம் என்றுணர்க.

12. சிவபெருமான், கங்கை, பிறைச்சந்திரன், பாம்பு, விபூதி, ஊமத்தம்பூ, கபாலம், பூணல், தோடு, குழை, கழல் போன்ற வற்றை அணிகளாகக் கொள்ளக் காரணம் யாது?

1. கங்கை : சிவபிரானின் விரிந்த சடையில் கங்கை கூப்பிய கரத்துடன் உள்ளதைக் காணலாம். இடைவிடாமல் பெரும் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடும் பேராற்றல் பெற்ற கங்கையையுத் தன் சடைகளில் கட்டியடக்கி வைக்கும் ஆற்றல் இறைவனுக்கே உண்டு என்பதைக் குறிக்க கங்கை விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. பிறை (சந்திரன்) சிவபிரானின் அளவற்ற ஞானத்துக்கு அடையாளம் 'பிறை' என்று காமிகாகமம் கூறுகிறது. பிறை வளர்ந்து கொண்டேபோய் முழுமை பெறும். அதுபோலவே ஞானமும் வளர்ந்து கொண்டே போய் முற்றறிவாக விளங்கும் என்பதை உணர்த்தவே பிறை என்க. (அதாவது இறைவன் உயிர்களின் ஞானத்தை வளரச் செய்யும் ஆற்றலுடையவன் எனும் குறிப்பை உணர்த்தவே பிறை என்க) பிறை சூடியபெருமான் சந்திரசேகரன் ஆவான்.

3. பாம்பு : குண்டலினி எனும் சக்தியே பாம்பு என்க.

'குண்டலினி' என்னும் மூலாதாரசக்தி, வயிறு, மார்பு, கழுத்து, தலைவரை சென்று ஆக்ஞா சக்கரத்தினைச் செயல்படுத்தும் என்பதை உணர்த்தவே சிவபிரானின் கால்கள், வயிறு, மார்பு, மணிக்கட்டுகள் சடை ஆகிய இடங்களில் பாம்பணி காணப்படுகிறது. மேலும் இறைவன் உலக உயிர்களின் உடலில் குண்டலினி சக்தியைப் போன்று இயங்கும் தன்மையுடையவன் என்பதையும் உணர்த்து வதாகவும் பாம்பணி விளங்குகிறது.

4. விபூதி (திருநீறு) 'நீறு' என்றால் சாம்பல் என்று பொருள். எந்த ஒரு பொருளையும் தீயிட்டுக் கொளுத்தினால் விஞ்சி இருப்பது சாம்பலேயாகும். அதுவே நித்யம் (அழியாதது) ஆகையால் இறைவன் திருநீற்றைத் தம் உடம்பு முழுவதும் பூசியிருக்கின்றார். அதற்குக் காரணம் தானும்தன்னைச் சார்ந்த உயிர்களும் நித்யமானவை (ஆதி அந்தமின்றி நிலைத்திருப்பவை) என்பதை விளக்குவதற்காகவே என்று தத்துவப்பொருள் கொள்ள வேண்டும்.

5. ஊமத்தைப்பூ : யாராலும் விரும்பப்படாத பூ ஊமத்தைப் பூ. தனக்கு விருப்பு வெறுப்பு கிடையாதென்பதை உணர்த்தவே இறைவன் ஊமத்தம்பூவைச் சூடிக்காட்டினார் என்க. அதுபோலவே வெள்ளெருக்கம்பூவையும் சூடியிருப்பார்.

அறிவின் நுணுக்கத்தன்மைக்கு வெள்ளெருக்கம்பூவும், அறிவின் விளக்கத்திற்கு ஊமத்தம்பூவும் அடையாளமென்க. வெள்ளெருக்கம் பூ குவிந்து சிறியதாக இருக்கும். ஊமத்தம்பூ நீண்டு விரிந்து காணப்படும்.

6. கபாலம் : பிரம்மகபாலம் என்பர் (கபாலம் மண்டை ஓடு) (கபாலீசன்) ஒரு சமயம் பிரமனைச் சனகர் முதலான ரிஷிகள் பணிந்து நின்று, சகல உலகங்களுக்கும் தலைவன் யார்?'' எனக் கூறுமாறு கேட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சகல உலகங்களையும், படைத்தும், காத்தும், சம்ஹரித்தும் வரும் ஒரே பிரமம் நானே''. ''எனக்கு இணை யாருமில்லை'', ''நானே அனைத்துக்கும் முதல்வன்" என்று கூறியருளினார்.

இவ்வாறு செருக்கு கொண்ட பிரம்மனைத் திருத்தி நல்லறிவு புகட்ட திருமால் அங்கு வந்து புத்தி சொன்னார்.

பிரம்மனே, "நீ என் நாபிக்கமலத்தில் தோன்றியவன். அப்படி இருக்க நீ எப்படி முதல்வனாக முடியும்?" மேலும் அவர், ருக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் எல்லாம், "சிவபிரானே உயர்ந்தவன் என்கின்றன. அவனையன்றி நீ எப்படி முதல்வனாக முடியும், ஆலகாலவிஷத்தை உண்டவர் சிவபிரான். புரம் மூன்றையும் ஒருங்கே எரித்தவன் சிவபிரான். இறப்பு பிறப்புகளில் உழலும் உயிர்களைக் கடைத்தேற்றி அவற்றை துன்பம் அடையாவண்ணம் காக்கும் பரம்பொருள் சிவபிரான்.

ஒன்றாகவும், பலவாகவும், உயிருக்கு உயிராகவும் உலக மனைத்தும் உள்ளதான உயிர்களின் இதய கமலத்தில் வீற்றிருப்பவனு மான பெருமையுடையவன் சிவபிரான். அவ்வாறு அவர் இருக்கும் போது நீ எப்படி முழுமுதற் கடவுளாக முடியும்" என்று எடுத்துக் கூறினார்.

திருமாலின் திருவாக்கையும் பொருட்படுத்தாத பிரம்மன் சிவபிரானை ஏளனமாகப் பேசினான். பிரணவம் பிரம்மனின் செய்கை கண்டு நகைத்தது. மேலும் அது, பிரம்மனே! நீ, "சிவபிரானை உடலில் பாதியைப் பெண்ணுக்கு அளித்தவன்" என்றும், "சுடலையில் பூதங்களுக்கு நடுவில் நடனமாடுபவன்'' என்றும், ''காளை மீது ஏறுபவன் அவன். அவன் எனக்கு மகனாவான்" என்றும் கூறுவது உன் அறியாமையைக் காட்டுகிறது என்று விளக்கிக்கூறியது. மேலும் அப்பிரணவம், "சிவன் தன் உடலில் பாதியை தேவிக்கு அளித்தது. சக்தியும் சிவனும் ஒன்று என்பதை விளக்கவன்றோ? மஹாப்பிரளய காலத்தில் சகல உயிர்களையும் ஈசன் தன்னுடன் ஒடுக்கிக் கொள்ளும்போது அவன் மகிழ்ந்து ஆடும் இடம்தானே சுடலை! அவன் காளைமீதேறுபவன் என்றாயே தருமம்தானே காளையாக வந்து அவனைச் சுமக்கிறது? அவன் தர்மதேவன் என்பதை உணராயோ?'' என்று பலவாறு விளக்கியும் பிரம்மனின் அகந்தை அடங்கவில்லை.

சிவனைப்போல் தனக்கும் - ஐந்து தலைகள் இருக்கவே பிரமன் தன்னைச் சிவனுக்கும் மேலானவன் என்று எண்ணி கர்வப்பட்டு வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் கர்வத்தை அடக்கச் சிவபிரான் அவன்முன் தோன்றினார். அவரைக் கண்ட பிரமனின் ஐந்தாவது முகம், "ருத்திரனே முன்னர் ஒரு சமயம் நீயும் என்னுடைய புருவங்களின் நடுவில் உண்டானவன் தானே! நீ எப்படி அகில உலகுக்கும் முதல்வனாக விளங்கமுடியும்? நானே அகில உலகங்களுக்கும் முதல்வன்'' என்று ஆணவத்தோடு பேசியது.

சிவபிரான், பிரம்மனின் அகந்தையைப் போக்கத் தன் இடக் கையினால் அவனின் ஐந்தாவது தலையைக் கிள்ளி எடுத்துவிட்டார். பிரமனின் ஆணவம் நீங்கியது. பிரமன் அகந்தை நீங்கியது. மனம் தெளிந்து ஈசனை வழிபட்டு தவறு நேர்ந்தமைக்கு மன்னிப்பும் கோரினார்.

ஈசன் அவருக்கு அருள்புரிந்தார். ஆனால் பிரம்மனைக் கொன்ற "பிரம்மஹத்தி" எனும் பெரும்பாவம் ஈசனைப்பற்றியது. பிரம்மனின் கபாலம் அவருடைய கையில் ஒட்டிக்கொண்டது.

''ஒரு தவறு செய்தால், தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும் அதற்குண்டான தண்டனையை அனுபவித்துதான் ஆகவேண்டும். அப்போதுதான் அதற்கு கழுவாய் நேரும்'' என்பதை உலகுக்கு உணர்த்தவே சிவபிரான், "அந்த பிரமஹத்தி தோஷம் என்னைப் பின் தொடரட்டும். பன்னிரெண்டு ஆண்டுகள் நான் அந்த பாவத்தை அனுபவித்துப் பின் காசியில் வந்து அதைப் போக்கிக் கொள்கின்றேன்'' என்று கூறியருளி அங்கிருந்து மறைந்து சென்றார்.

பிரமஹத்தி எனும் பாவம் தொடர சிவபிரான் சகல லோகங் களிலும் சென்று பிச்சை எடுத்துவந்தார். முடிவில் பைரவர் கோலத்துடன் ஒரு நாள் காசிமாநகர் வந்து எல்லையில் கால் வைத்தார். கையில் அதுவரை ஒட்டிக்கொண்டிருந்த கபாலம் விழுந்து விட்டது. பிரம்ஹத்தி தோஷமும் நீங்கியது.

காசியில் இறைவனை பிரமாதி தேவர்கள் வந்து வணங்கிப் போற்றி வழிபட்டனர். பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய இடத்திற்குக் ''கபால மோசன தீர்த்தம்'' என்று இன்றும் பெயர் வழங்குகிறது. *(காசியில்)*

சிவபிரான் சர்வ வல்லமை படைத்தவரானாலும், தர்ம மார்க்கம் என்பது அனைவருக்கும் பொது. அதிலிருந்து தாம் விலகுவது சரியாகாது என்று அவரே தருமவழியில் நடந்து காட்டி மக்களுக்கு உணர்த்தினார் என்க.

இவ்வாறு பிரம்ம கபாலத்தைக் கைக்கொண்டதால் இறை வனுக்குக் கபாலீசன் (கபாலம் + ஈசன்) என்ற பெயரும் உண்டாயிற்று என்பதுணர்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. **பூணல் :** இறைவனின் இடப்பக்கத்துத் தோளில் இருந்து வலப்பக்க இடுப்புவரை மார்பின் குறுக்காக பூணல் விளங்கும்.

"மூலாதாரத்தில் இருந்து குண்டலினி சக்தி எழுந்து நாபிக்கு மேலாகச் செல்கின்றது" என்பதை பூணல் உணர்த்துகின்றது. "நூலது வேதாந்தம்" என்றபடியால் பூணல் "இறைவன் வேதாந்த முடிவு" என்பதை உணர்த்தும் அடையாளம் என்றும் கொள்ளலாம்.

8. **தோடும் குழையும் :** இறைவன் ஆணுமானவன், பெண்ணு மானவன் என்றும் ஆணும் பெண்ணுமாய் இவ்வுலகம் அவன் உருவாய் அமைகிறது என்பதைக் காட்டவும், வலக்காதில் குழையும் இடக்காதில் தோடும் அணிந்து காணப்படுகிறார் என்பதறிக.

9. **கழல் (வீரக்கழல்)** போரில் பெருவெற்றி பெற்ற வீரர்கள் வலப்பக்க முழங்காலில் அணியும் அணிகலன் 'கழல்' எனப்படும்.

உயிர்களின் வினைகளை அழித்து வீடுபேற்றைத் தரவல்லது அவன் திருவடியாகும். அதாவது உயிர்களின் வெற்றிக்கு அடையாளம் வீரக்கழல் என்பது உணர்க.

10. **சிலம்பு:** சிலம்பு காலில் அணியாக விளங்குமாயின் வேதங்களே சிலம்பங்களாகி அவனது திருவடியில் தங்கி அவன் புகழ்பாடுகின்றன என்று உணர்க.

13. சிவன்கோயில்களில் உள்ளேயும், வெளியேயும் பல நந்திகள் இருக்கக் காரணமென்ன? எல்லாம் ஒன்றுதானா? வேறுபாடு உண்டா?

பெரும்பாலும் பெரிய சிவன் கோவில்களில் ஏழு நந்திகளும், சாதாரணக் கோவில்களில் இரண்டு முதல் மூன்று நந்திகளும் இருக்கும். பிற சிறிய கோவில்களில் ஒரு நந்தி மட்டுமே இருக்கும். இவற்றிற்கு வேறுபாடு உண்டு.

ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவர் அதாவது, இந்திரன், பிரம்மா, விஷ்ணு, தரும தேவர் முதலானவர் நந்தி வடிவம் கொண்டு சிவபிரானுக்கு வாகனமாயினர். அதன் காரணமாக இறைவனின் கோவில்களில் ஏழு நந்திகள் சொல்லப்படுகின்றன.

1. இந்திர நந்தி *2.* பிரம்மநந்தி *3.* மால்விடை (விஷ்ணுநந்தி) *4.*தருமநந்தி *5.* ஆத்மநந்தி. இவை தவிர *6.* அதிகாரநந்தி *7.* விருஷப நந்தி ஆக ஏழு நந்திகள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திர நந்தி

"போக நந்தி" என்றும் இதற்குப் பெயர் உண்டு. போகங்களுக்கு அதிபதி இந்திரன். அதனால் அவனுக்கு 'போகி' என்ற பெயருமுண்டு. (இவனை வழிபட உண்டானதே போகிப்பண்டிகை) போகம் என்பதைச் சிவனைக் கொண்டால் அவரை மனதில் போற்றும் இந்திரன் 'போகி' என்று பெயர் பெற்றான். ஆதலால் போக நந்திக்கு "இந்திர நந்தி" என்று பெயர் உண்டாயிற்று என்க. (இந்திரன் ஒரு சமயம் விருஷப உருவங்கொண்டு இறைவனுக்கு வாகனமானான் என்பது புராண வரலாறாகும்)

பிரம்ம நந்தி

இதற்கு 'வேதநந்தி', 'மகாநந்தி' என்ற பெயர்களுமுண்டு. வேதங்களின் அதிபதி பிரம்மா. வேதப் பொருள் சிவபிரான். வேதம் ரிஷபமானால் அதன் மீது அமர்பவர் வேதப்பொருளான சிவபிரான் என்பதால் வேதம் நந்தி எனப்பட்டது.

"வேதவெள்ளிடை' என்று இதைத் தமிழ் வேதம் கூறும். அளவிட முடியாத பெருமைகளையுடையது பிரமம். ஆகையால் பிரம்ம நந்தியை மிகப்பெரிய உருவில் அமைப்பார்கள். எனவே இதற்கு "மஹாநந்தி" என்ற பெயரும் உண்டாயிற்று. இதைச் சுதையாலும் அமைப்பார்கள் (தஞ்சைப் பெரிய கோவில் வெளிப்பிரகாரத்தில் காணலாம்) பிரம்மன் விடையாகி இறைவனைத் தாங்கியதால் பிரம்மநந்தி உண்டாயிற்று என்பது தத்துவ விளக்கமாகக் கொள்க.

விஷ்ணு நந்தி (மால்விடை)

திரிபுர சம்ஹார காலத்தில் தேரின் அச்சு முறிந்தபோது சிவபிரானை விருஷப உருவங்கொண்டு திருமால் தாங்கியதால் விஷ்ணு நந்தி கூறப்பட்டது. "விஷ்ணு" என்பது மாயை. மாயையை நீக்கும் நாயகன் சிவபிரான். எனவே மாயையை வீழ்த்தி அதன் மீது அமர்ந்த திருக்கோலமே மால்விடை என்று தத்துவப்பொருள் கொள்ள வேண்டும்.

தருமநந்தி

மஹாப்பிரளய காலத்தில் உலகமனைத்தும் அழிந்துவிட்டது. தரும் மட்டும் அழியவில்லை. அது ஒரு காளை வடிவுகொண்டு சிவபிரானிடம் சென்று வரம் பெற்று அவரைத் தாங்கி நின்றது. அதுவே தருமநந்தி என்பது புராணவரலாறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவன் கோயில் திருவிழாக்களில் 4ஆம் நாள் அல்லது 5ஆம் நாள் திருவிழாவில் விருஷாபாரூடராய்ச் சிவபிரான் எழுந்தருளுவது இந்த தருமநந்தி மீதேயாகும் என்பதுணர்க.

சமம், விசாலம், சந்தோஷம், சாது சங்கமம் எனும் நான்கு குணங்களும் தரும தேவதையின் நான்கு கால்கள். நிறம் வெண்மை என ஆகமங்கள் கூறுகின்றன.

இறப்பு பிறப்பு இல்லாத முழு முதற் பொருளான சிவபிரானைத் தவிர மஹாபிரளய காலத்தில் அழியாமல் நிலைத்திருப்பது தருமம் மட்டுமே என்று கூறியதால் - தருமத்திற்கு மட்டும் அழிவென்பது கிடையாது என்பதை உணர்த்தவே திருவிழாக்களில் ரிஷபோத்ஸவம் நடைபெறுகிறது என்பதுணர்க.

ஆத்ம நந்தி

உயிர்கள் அதாவது பசுக்கள் (பசு என்பது உயிர்க்கூட்டங்களைக் குறிக்கும்) உயிர்க்கூட்டங்களின் உயிர்கள் (ஆத்மாக்கள்) சிவ பிரானைச் சார்ந்து நின்று, அவன் நினைப்பில் நிலைபெறவேண்டும். அப்போதுதான் அவை பதியைச் சென்று அடைய முடியும் எனம் தத்துவ விளக்கமே ஆத்மநந்திஸ்வரூபம் என்க. "நந்தி" என்பதற்கு எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பது என்பது பொருள். உயிர்கள் எப்போதும் சிவனை நினைந்து மகிழவேண்டும் என்றுணர்த்தவே ஆத்ம நந்தி கோவில்களில் காணப்படுகின்றது.

மேற்கண்ட ஐந்து நந்திகளில் முதன்மையானது "ஆத்மநந்தி". இது கோவில் பிரகாரத்தில் கொடிமரத்துக்கு முன்பு காணப்படும். இது இறைவன் சந்நிதியை நோக்கியபடி இருக்கும். பிரதோஷ பூஜையை இந்த நந்திக்கே செய்ய வேண்டும். போகநந்தி கோவிலுக்கு உள்ளே அர்த்தமண்டபத்தில் கருவறையை நோக்கியபடி அமைந்திருக்கும்.

"மால்விடை" எனும் விஷ்ணு நந்தி மூன்று பிரகாரம் உள்ள கோவில்களில் இரண்டாம் பிரகாரத்தில் கருவறையில் உள்ள சிவபிரானை நோக்கிவண்ணம் அமர்ந்திருக்கும். சாதாரணக் கோவில்களில் மஹா மண்டபத்தில் விளங்கும். பிரம்மநந்தியை மிகப்பெரிய உருவில் கோவில் பிரகாரத்தில் சிவசந்நிதானத்தை நோக்கியபடி கல்லினாலோ, சுதையாலோ அமைக்கலாம் என்பர்.

தரும நந்தி : மஹாமண்டபத்தில் அல்லது முதல் பிரகாரத்தின் முன்னே சிவபிரானை நோக்கியபடி அமைந்திருக்கும். இவை தவிர இன்னும் இரண்டு நந்திகள் உள்ளன. அவை 1. அதிகார நந்தி 2.விருஷப நந்தி என்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிகார நந்தி

சிவாபராதம் செய்பவரைத் தண்டிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. எனவே, இவருக்கு "அதிகார நந்தி" என்பது பெயராகும். அந்த அதிகாரத்தை இவருக்கு வழங்கியவர் சிவபிரானாவார்.

இவருக்கு நெற்றிக்கண் உண்டு. நான்கு கைகள் உண்டு. நான்கு கைகளிலும் மான், மழு, உடை, வாள், பிரம்பு ஆகியவை இருக்கும். மஹா சம்ஹார காலத்தில் எல்லா உலகங்களையும் அழிக்கும் அதிகாரமும் இவருக்கே உண்டு. (அதாவது உலக உயிர்களைச் சிவனிடம் ஐக்யமடையச் செய்யும் (சேர்த்துவைக்கும்) அதிகாரம் இவருக்கே உண்டு என்று கூறப்படுகிறது.

இவர், சிவசந்நிதானத்தைக் காவல் செய்பவர். சிவதரிசனம் செய்ய விரும்பும் எவரும் இவருடைய அனுமதி பெற்றே சிவதரிசனம் செய்ய முடியும்.

தட்சயாகத்தில் சிவனைப் பழித்துப் பேசிய தட்சனையும், அவனுக்காட்பட்டிருந்த தேவர் முனிவர் ஆகியோரையும் சபித்துச் சாபமிட்டவர் இவரேயாவர். ஆதிசிவனிடம் ஆதியில் உபதேசம் பெற்றவரும் இவரே. "நந்தி பரம்பரை" என்பது இவரிடமிருந்தே தொடங்குகிறது. இதைச் "செம்பொருள் ஆகமத்திறம் தெரிந்து நம்பவம் அறுத்த நம்நந்தி" என்னும் திருமந்திரப்பாடலால் உணரலாம்.

விருஷபநந்தி : சிவன்கோவில்களில் உள்கோபுரவாசலில் வடக்கு நோக்கி இவரை அமைத்திருப்பார்கள். சில கோவில்களில் உட்பிரகாரத்தின் பின்புறம் சிவ சந்திதானத்திற்கு நேரே கருவறையை நோக்கியபடி அமைத்திருப்பார்கள். இதற்கு "விருஷப நந்தி" என்று பெயர் விளங்கும்.

மேற்கண்ட நந்திகளினால் உணர்த்தப்படும் தத்துவங்கள் யாவை எனின், "வேதங்களால் தாங்கப்படுபவன் சிவன். "அவனே வேதமூர்த்தி" என்பது பிரம்ம நந்தியாலும்,

போகியான உயிர்களின் போகமாக விளங்கும் போகமூர்த்தி சிவபிரானே" என்பது இந்திரநந்தியாலும், ஆத்மாவின் இருப்பிடம் சிவபிரான். எனவே அவன் ஆத்மநாதன் என்பது ஆத்மநந்தியாலும், தருமத்தின் தலைவன் சிவபிரான். எனவே அவன் தருமமூர்த்தி தரும நந்தியாலும்,

மயக்கம் போக்கி மனதில் தெளிவை உண்டு பண்ணுபவன் சிவபிரான் எனவே அவன் நிர்மலன் என்பது மால்விடையாலும், விளக்கப்பட்டனவாகக் கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. கொடிமரம் : துவஜஸ்தம்பம் ஏன்? விளக்குக. கொடிமரம் (துவஜஸ்தம்பம்) கட்டாயமாகக் கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமா?

நந்தி, பலிபீடம், கொடிமரம் என்ற வரிசையில் சில கோவில்களில் இருக்கும். சில கோவில்களில் நந்தி, துவஜஸ்தம்பம், பலிபீடம் என்ற வரிசையில் அமைந்திருக்கும்.

கொடிமரத்தின் அதிதேவதை சிவபெருமானாவார். கொடி மரத்தின் கொடிமரம் - சிவன் - கயிறு - சக்தியாகும். அடிப்பகுதி பிரம்மபாகம் என்றும் (இது பூமியில் மறைந்திருக்கும்) மேல் வேதிகை போன்ற மேடை விஷ்ணு பாகம் என்றும் மேலே தோன்றும் கொடிமரம் ருத்ரபாகம் என்றும் அமையும்.

கொடிமரத்தின் உச்சியில் இறைவனின் சந்நிதியை நோக்கியபடி உள்ள மூன்று அடுக்குப் பலகைகட்கு "இஷ்டிப்பலகை" என்று பெயர். இது இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்திகளைக் குறிக்கும்.

இந்த மூன்று பலகைகளை இணைக்கும் வகையில் குறுக்காக இரண்டு தண்டுகள் இருக்கும். அவைகட்கு "உபதண்டம்" என்று பெயர். அவை சூரியனையும், சந்திரனையும் குறிக்கும்.

விழாக்காலங்களில் கொடி ஏற்றும்போது பயன்படுத்தப்படும் கொடிக்கயிறு அனுக்கிரஹத்தைக் குறிக்கும். கொடித்துணி வாயுவைக் குறிக்கும்.

கொடி ஏற்றும்போது, கொடிமரத்தில் சதாசிவனையும் மேலுள்ள இஷ்டி பலகைகளில் இச்சாசக்தி, சிரியாசக்தி, ஞானசக்திகளையும் உபதண்டங்களில் சூரிய சந்திரர்களையும் கயிற்றில் தட்சகனையும், கொடியில் விருஷபரையும் பூஜிப்பார்கள்.

பசு, பதி, பாசம் என்பனவற்றைக் குறிப்பது கொடிமரம். 'பசு எப்படிப் பாசம் நீங்கிப் பதியாகிய சிவபிரானை அடையமுடியும்' என்பதை விளக்கவே கொடி ஏற்றப்படுவதாக ஆகமங்கள் கூறுகின்றன.

ஆலயத்தைக் காக்கவும், அசுரர்களை விரட்டவும், சிவ கணங்களையும், தேவகணங்களையும் அழைக்கவும், பக்தர்கள் சிவன் அருள்பெறவும் எனக் கொடி மரம் கோவில்களில் நடப்படுகின்றன. சிவபிரானுக்குச் செய்யப்படும் பூசைகள் அனைத்தையும் கொடி மரத்துக்கும் செய்ய வேண்டும்.

கொடி மரத்தின் உச்சியில் மணிகள் பூட்டப்பட்டு இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த மணியோசையைக் கேட்டதும், அசுரர்கள் (தீயசக்திகள்) விலகும் என்றும் (நன்மைகள்) அதாவது தேவர்கள் கூடுவார்கள் என்றும் கொடிமர மணியோசைக்கான பயன் கூறப்படுகிறது.

மேலும் உடம்பு போன்றது கொடிமரம். உடம்பினுள் செல்லும் இடா, பிங்களா எனும் இரண்டு நாடிகளும் கொடிமரத்தில் சுற்றப்பட்டிருக்கும் தர்பைக் கயிறும் துணியும் ஆகும்.

இடா, பிங்களா எனும் நாடிகளின் வழியே மூச்சுக்காற்றை மேல் நோக்கி எழுப்பி 'ஷுும்நா' எனும் நாடியில் நிலைநிறுத்த வேண்டும். அப்போது பிராணசக்தி அடங்கி பஞ்சேந்திரயங்கள் ஒடுங்கும். மனம் சிவன்பால் கூடி ஒருநிலைப்படும். சிவனும் அந்த ஜீவனுக்குக் காட்சி தருவான் என்ற யோக மார்க்கத் தத்துவத்தை உணர்த்துவதாகவும் கொடிமரத்தைக் கூறுவார்கள். இவ்வாறு யோகியின் நிலைக்குக் கொடிமரத்தை ஒப்பிடுவதும் உண்டு.

அதாவது யோகியின் முதுகுத்தண்டு கொடிமரம். அவரது உடம்பில் அமைந்துள்ள மூலதாரம் முதலான ஆறு ஆதாரங்களையும் கடந்து "குண்டலினி" எனும் சக்தியை மேலெழுப்பி சஹஸ்ராரத்தை அவனது உயிர் அடைகிறது. அப்போது அங்கு அந்த அவரது உயிர் அமிர்ததாரையில் நனைந்து மகிழும் என்பதாகவும் கூறுவர்.

கொடிமரம் இன்றித் திருவிழாக்கள் செய்ய இயலாதாகையால் கொடிமரம் கட்டாயம் அமைக்கப்படவேண்டும்.

15. ஆகம முறைப்படியான உத்தம, மத்யம, அதமமான பூஜை களைக் கூறுக.

ஆக விதிகளின்படி கோவில்களில் 9 காலம் பூஜை செய்வது உத்தமம் ஆகும். அதுபோல் சக்தி கோவில்களில் 7 கால பூஜை உத்தமம்.

6, 5, 4 காலங்கள் செய்வது மத்யமம் 3, 2 கால பூஜை செய்வது அதமம். ஒருவேளை பூஜை என்பது அதமாதமம் ஆகும். ஒருகால பூஜையாவது கட்டாயம் கோவில்களில் செய்யவேண்டும்.

16. யோகபேரம், போகபேரம் என்பன யாவை?

சிவபிரான் சக்தியோடு கூடி விளங்கும் பேரம் போக பேரம் எனப்படும்.

சக்தியின்றி (தட்சிணாமூர்த்தி) இருக்கும் பேரம் யோகபேரம் எனப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. பூஜைக்கு என்று ஏதாவது கால அளவுகள் உள்ளனவா?

ஒரு கால பூஜைக்கு ஏழு நாழிகைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அபிஷேகம் 2 நாழிகை பூஜை செய்ய 2 நாழிகை. நிவேதனம் செய்ய 1 நாழிகை. நித்யாக்நிகார்யம் 0.5 நாழிகை. நித்யோத்சவம் 0.5 நாழிகை. தீபாராதனை நிருத்தம். கீதம் இவைகட்கு 1 நாழிகை. ஆக ஏழு நாழிகைகள் கணக்கிட்டு பூஜையை வகுத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு ஏழு நாழிகைகளை பூஜைக்கு உத்தமமான கால அளவாக ஆகமங்கள் கூறுகின்றன. (சுமார் 2 மணி நேரம்)

18. கோவில்களில் பலிபீடங்கள் உள்ளனவே ஏன்?

கோவில்களில் பிரகாரத்தில் கிழக்கு திசையில் சிவ சந்நிதானத்தை நோக்கி நந்தி, பலிபீடம், கொடிமரம் இருக்கும். சில கோவில்களில் நந்தி, கொடிமரம், பலிபீடம் என்ற வரிசையில் இருக்கும்.

உயிர்களின் (பசு) பாசநீக்கத்திற்காகப் பலிபீடம் அமைந்திருக்கிறது.

உயிர்கள் தமக்குண்டான பாசங்களை (ஆசைகளை) அங்கு உள்ள அந்த பலிபீடத்தில் முதலில் தொலைத்துவிட்டு (உலகப்பற்றை நீக்கிவிட்டு) பின்பதியாகிய இறைவனைக் காணச் செல்ல வேண்டும் என்ற குறிப்பினை உணர்த்தவே கோவில்களில் பலிபீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பலிபீடத்தைப் 'பத்ரலிங்கம்' என்றும் கூறுவர். பலிபீடத்தை பத்ரலிங்கம் எனக் கொண்டு பூஜை செய்ய வேண்டும்.

ஒரே மாதிரியான ஐந்து தலைகள் (முகங்கள்) கண்கள் பத்து, சூலம் பத்து, காதுகள் பத்து, பத்து திசைகள் கலந்து விளங்கும் பத்ரலிங்க மூர்த்திக்கு இதயம் மட்டும் ஒன்று. மிகவும் செந்நிற முடையவர். கால்கள் இரண்டு என்று எண்ணி த்யானம் செய்ய வேண்டும்.

பலிபீடத்திற்கு எட்டு இதழ்களும் இடையில் நடுவில் கர்ணிகை யும் இருக்கும் (ஒரு தாமரை மலரின் 8 இதழ் விரித்தால் போன்று விளங்கும்) எட்டு தளங்களிலும் முதலில் வாமாதி சக்திகளைப் பூஜிக்க வேண்டும். இந்திராதிகளையும் பூஜிக்க வேண்டும். பட்டிகையில் பத்து சூரியர்களைப் பூஜிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து கர்ணிகையில் கிழக்கே ஆமோதன், தெற்கில் பிரமோதன், மேற்கில் சுமுகன், வடக்கில் துர்முகன் இவர்களையும் வடகிழக்கில் அவிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நனன் என்பவனையும் அதைத் தொடர்ந்து பக்கத்தில் விக்நகர்த்ரு என்பவனையும் பூஜிக்க வேண்டும். நடுவில் சம்வர்த்தபூதா என்பவனைப் பூஜிக்க வேண்டும். மேற்கண்ட முறைப்படி பலியும் இட வேண்டும்.

பலி உணவு, மயில் முட்டை அளவு அல்லது தேங்காய் அளவு உயர்ந்தது. விளாம்பழம் அளவு மத்யமம், நெல்லிக்காய் அளவு அதமம் என்க.

கோவிலின் மற்றும் திருவீதிகளின் நவசந்திகளிலும், இந்திராதி தேவர்கட்காகப் பலிபீடங்கள் இருக்கும். உத்சவ காலங்களில் பூஜிக்கப்பட்டு பலிநிவேதனம் அவைகளில் அளிக்கப்படும்.

நித்யோத்சவம் நடக்கும் கோவில்களில் தினமும் கோவிலின் நவசந்திகளில் உள்ள பலிபீடங்களில் பூஜையும், பலியும் உண்டு என்க.

19. திக்பாலகர்கள் என்பவர் யாவர்? அவர்களின் பெயர்கள் திசைகள் ஆயுதங்கள், சக்திகள் ஆகியனவற்றைக் கூறுக.

எட்டு திசைக்கு எட்டு பாலகர்கள் (காப்பாளர்) உள்ளனர். அவர்கட்குத் திக் பாலகர்கள் என்பது பெயர்.

பெயர்	திசை	வாஹனம்	ஆயுதம்	மனைவி	பட்டினம்
1.இந்திரன்	கிழக்கு	வெள்ளை யானை	வஜ்ரம்	சசீதேவி	அமராவதி
2. அக்நி	தென் கிழக்கு	ஆடு	சக்திவேல்	ஸ்வாஹா தேவி	தேஜோவதி
3. எமன்	தெற்கு	எருமை	தடி (தண்டம்)	ஸ்வர்காதேவி	சம்யமநீ
4.நீருருதி	தென்மேற்கு	ப்ரேதம் (உடல்)	கத்தி	வர்காதேவி	கிருஷ்ணவதி
5.வருணன்	மேற்கு	முதலை	பாசம் (கயிறு)	காளகண்டீ தேவி	சரஸ்வதிபுரம்
6.வாயு	வடமேற்கு	மான்	கொடி	நிர்மணிதேவி	கந்தர்வத்திரிபுரி
7.குபேரன்	வடக்கு	மனிதன்	தடி(கதை)	நாரிணீதேவி	அளகாபுரி
8.ஈசானன்	வடகிழக்கு	வ்ருஷபம்	சூலம்	சுசிகேதினி	யசோவதிபுரம்

20. திக்பாலகர் பூஜையில் சொல்லப்பட்ட பிரம்மன், விஷ்ணு ஆகியோருக்குப் பூஜையிடம் எங்கே?

பிரம்மனுக்கு வடகிழக்கில் அதாவது ஈசானருக்குத் தெற்கில் பூஜை செய்ய வேண்டும். பிரம்மனின் மனைவி, சாவித்ரி, காயத்ரி, (சாவித்ரி : சரசுவதி) வாஹனம் : ஹம்சம், உலகம் : சத்யலோகம், பட்டினம் : பிரம்மபுரி, ஆசனம் : தாமரை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹாவிஷ்ணுவுக்கு நிருருதிதிசையில் (தென்மேற்கில்) நிருருதிக்கு வடக்கு பாகத்தில் பூஜையிடமாகும். இவருக்கு வாஹனம் கருடன், மனைவி லட்சுமி, ஆயுதம் சக்ரம் சங்கு, உலகம் விஷ்ணுலோகம், நகரம் வைகுந்தம் படுக்கை ஆதிசேஷன்.

21. சிவபிரானின் ஐந்து பிள்ளைகளாகச் சொல்லப்படுபவர் யாவர்?

1. விநாயகன் 2. முருகன் 3. வீரபத்திரன் 4. சாஸ்தா 5. பைரவர் எனும் ஐவரும் சிவபிரானின் பிள்ளைகள் எனப்படுபவர்.

22. சிவன் கோவில்களில் சில இடங்களில் சண்டேஸ்வரருக்கு நான்கு கைகள் உள்ளன. சில இடங்களில் இரண்ட கைகள் உள்ளனவே ஏன்? அதற்கு யாதேனும் காரணமுண்டா?

யுகங்கள் தோறும் சண்டேஸ்வரருக்கு வேறுபாடுகள் சொல்லப் படுகின்றன. அதன்படி க்ருதயுகத்தில் எட்டு கைகளும், த்ரேதா யுகத்தில் ஆறு கைகளும், துவாரபரயுகத்தில் நான்கு கைகளும் கலியுகத்தில் இரண்டு கைகளும் சொல்லப்படுகின்றன.

ஆகவே, நாம் காணும் நான்கு கைகளையுடைய சண்டேஸ்வரர் த்வாபரயுகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டவர். (சுமார் 5000 ஆண்டு களுக்கு முற்பட்டவர் என்பதையும்) இரண்டு கைகளையுடைய சண்டேஸ்வரர் கலியுகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டவர் என்பதை யும் அறியலாம். இவரை வைத்தே அந்தக் கோவிலின் பழைமையை யும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

இவர் சிவகணங்களுக்குத் தலைவர் (சேனாதிபதி) ஆவார். இப்பதவியை இவருக்குச் சிவபிரான் அளித்தார். இவர் ருத்ராம்சம் பொருந்தியவர். சிவபிரானுடைய ஈசான முகத்திலிருந்து பிரசண்டர் என்பவரும் தத்புரஷ முகத்திலிருந்து பிரசண்டசண்டர் என்பவரும் அகோரமுகத்தில் இருந்து விக்ராந்தசண்டர் என்பவரும் வாமதேவ முகத்திலிருந்து விபுசண்டர் என்பவரும் சத்யோஜாத முகத்திலிருந்து வீரசண்டர் என்பவரும் தோன்றினார்கள் என்று சுப்ரபேதாகமத்தின் மூலம் அறியலாம். மேலும் பிரசண்டசண்டர் முதல் வீரசண்டர் வரை நால்வரும் நான்கு யுகங்களில் சிவசேனாதிபதியாக விளங்குகின்றனர்.

இவருக்குச் சிவன் கோவிலின் உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் அல்லது இரண்டு பிரகாரங்களிலுமோ சிவசந்நிதானத்திற்கு வடபால் (சற்று வடகிழக்கைச் சார்ந்தாற்போல்) தனிக்கோவில் இருக்கும் தென்முகமாக யோகநிலையில் வீற்றிருப்பார்.

பிரசண்ட சண்டரானால், அவருக்குக் வாகனம் யானையாக அமைந்திருக்கும். விக்ராந்த சண்டருக்கு வாகனம் குதிரை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரசண்டருக்கு வாகனம் விருஷபம். இவர்கட்கு மூன்று கண்கள் உண்டு. நான்கு அல்லது இரண்டு கைகள் உள்ள நிலையில் இப்போது சிவன் கோவில்களில் இவரைக் காணலாம். ஜடா மகுட மணிந்திருப்பார். நான்கு கைகளாயின், கீழ்கைகளில் அபயம் வரதமும், மேலிரண்டு கைகளில் மழுவும், பாசமும் இருக்கும்.

இரண்டு கைகளாயின் வலக்கையில் மழுவும், இடக்கையில் வரத முத்திரையுடனும் காணப்படுவார்.

இவர் சிவபிரானிடம் வரம்பெற்றுச் சண்டேசர் பதவியை அடைந்தார். சிவகணங்களுக்குத் தலைவரானார். சிவநிர்மால் யத்துக்கு உரிமை பெற்றார். இன்றைக்குங்கூட பூஜா காலங்களில் சிவன்மீது இருந்து நீக்கப்படுகின்ற நிர்மால்ய மலர்களை இவருக்குச் சூட்டிய பின்னரே அடுத்த கால பூஜையைத் தொடங்கிச் செய்வார்கள். எனவே, நாமும் கூட சிவன் கோவிலுக்குச் சென்றால் அங்கு தரப்படுகின்ற விபூதி புஷ்பம் முதலானவற்றைச் சண்டேஸ் வரரிடம் அர்ப்பணிக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளோம். இது எதை உணர்த்துகிறதென்றால், ''சிவநிர்மால்யத்துக்கு உரியவர் சண்டேசர் மட்டுமே அதை நாம் எடுத்துச் செல்லலாகாது'' என்பதை உணர்த்தவே என்றுணர வேண்டும். அதற்காகத்தான் அவரிடம் அருகில் சென்று கையைத் துடைத்துக் காட்டும் பழக்கம் முதலில் தோன்றி அது மாறி இன்று கைதட்டும் பழக்கமாக விளங்குவதோடு அவரைச் ''செவிட்டுச்சாமி'' என்றும் கூற வைத்துவிட்ட அவல நிலையைக் காண்கின்றோம்.

பஞ்சமூர்த்திகள் புறப்பட்டால் இவருக்கு இடமுண்டு. இவர் கடைசியில் விருஷப வாகனத்தில் வருவார். பிரம்மோத்சவ முடிவில் இவருக்கு தனி உத்ஸவம் உண்டு.

அதாவது உத்ஸவம் முடிந்த உடன் உத்ஸவத்திற்காக வந்துள்ள தேவாதி கணங்கள் அனைவருக்கும் விடை கொடுத்து அனுப்பவே இவருக்குத் தனி உத்ஸவம் நடத்தப்படுகிறது.

சிவபிரானின் அருட்கடாட்சத்தைப் பெற விரும்பும் அனைவரும் இவருடைய அனுக்கிரஹத்தையும் அவசியம் பெறவேண்டு மென்பதை உணர்வார்களாக.

23. சூரியனுக்குத் தனிக்கோயில் உண்டா? சூரியர்களில் எத்தனைச் சூரியர்கள் உள்ளனர்? சூரியரின் சக்திகட்குப் பெயரென்ன? சூரியபூஜையை ஏன் செய்யவேண்டும்?

கோவில்களில் நவக்கிரஹங்களைப் பிரதிஷ்டை செய்யும் பழக்கம் பண்டை நாட்களில் கிடையாது. சூரியர், சந்திரன், சனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகியவர்கட்கு மட்டுமே சிவன் கோவில்களில் குறிப்பிட்ட திசைகளில் சிறுகோவில் அல்லது மாடம் அமைத்து அதில் பிரதிஷ்டை செய்து பூஜை செய்து வந்தனர்.

ஆத்மார்த்த பூஜை செய்யும்போது, பரார்த்த பூஜை செய்யும் போதும் யாகசாலை பூஜைகளிலும் (உத்ஸவம், குடமுழுக்கு போன்ற நேரங்களில்) இரவானாலும், பகலானாலும் கட்டாயம் சூரியனுக்கு முதலில் பூஜை செய்துவிட்டுப் பின் பிற பூஜைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆகமங்களில் சூரியனுக்குப் பன்னிரெண்டு பெயர்கள் கூறப் படுகின்றன. ஒரே சூரியனுக்குப் பன்னிரெண்டு மாதங்களில் பன்னி ரெண்டு பெயர்களை ஆகமங்கள் கூறுகின்றன. சித்திரையில் ''வைகர்த்தனன்'' என்றும், வைகாசியில் ''விவஸ்வதன்'' என்றும், ஆனியில் ''மார்த்தாண்டன்'' என்றும், ஆடியில் ''பாஸ்கரன்'' என்றும், ஆவணியில் ''ரவி'' என்றும், புரட்டாசியில் ''லோகப்பிரகாசகன்'' என்றும், ஐப்பசியில் ''லோகசாட்சி'' என்றும், கார்த்திகையில் ''திரி விக்ரமன்'' என்றும், மார்கழியில் ''ஆதித்யன்'' என்றும், தை மாதத்தில் ''சூர்யன்'' என்றும், மாசியில் ''அம்சுமாலி'' என்றும், பங்குனியில் ''திவாகரன்'' என்றும் முறையே பன்னிரெண்டு பெயர்களால் அழைக்கப்படுகிறார் என்பதை அறிக.

இவருடைய சக்திகளுக்கு ''உஷா'' என்றும், ''பிரத்யுஷா'' என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன. சில ஆகமங்களில் ''சாயா'' ''சம்ஞகா'' என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

இவர் காஸ்யபரின் புத்திரர் எனவே காஸ்யபகோத்திர முடையவர். இவருக்கு உரிய ராசி சிம்மம். நவக்கிரகங்களில் நடு நாயகமானவர். கிழக்கு நோக்கி இருப்பார். இவருடைய நிறம் சிவப்பு.

சிவாலயங்களில் பரிவார தேவதையாகப் பூஜை செய்யப்படும் போது தென்கிழக்கு திசையில் இவருக்கு மேற்கு நோக்கிய தனிக் கோவில் இருக்கும். அதில் இவர் மேற்கு நோக்கியவாறு இரண்டு கைகளிலும் தாமரை மலரை ஏந்தியபடி நின்றகோலத்தில் விளங்குவார்.

ஏழு குதிரைகள் பூட்டி தேர் இவரது வாகனம். இவருடைய தேருக்கு ஒரு சக்கரம் மட்டுமே உண்டு. இவருடைய தேரோட்டி இரண்டு கால்களுமில்லாத ''அருணன்'' என்பவனாவான். (ஏழு குதிரைகள் என்பது இவரது ஏழு கிரகணங்களில் தோன்று ஏழு நிறங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களைக் குறிக்கும். ஒரே சக்கரம் என்பது இவர் எப்போதும் இயங்கிக் கொண்டே இருப்பார். ஓய்வு கொள்ள மாட்டார் என்பதைக் குறிக்கும்)

இவருடைய ஆசனம் ''வெண்டாமரை'' மலர். இவருக்கு வெள்ளெருக்கம் பூ விருப்பமானது. வெள்ளெருக்கம்பூக் கொண்டு பூஜித்தாலும், வெள்ளெருக்குச் சமித்துகொண்டு ஹோமம் செய்தாலும் ப்ரீதியடைந்து நலம் தருவார். தானியம் கோதுமை, நவரத்தினங்களில் இவருக்கு உரியது மாணிக்கம். இவருக்கு உரிய கிழமை ஞாயிறு. எனவே இவருடைய பெயராலேயே இந்தக்கிழமை கூறப்பட்டது. இவருக்குத் தனியாக தென்னாட்டில் சூரியனார் கோவிலும், வடநாட்டில் கோனர்க்கில் ஒரு தனிக்கோயிலும் சிறப்புடன் விளங்குகின்றன.

இவருடைய துவாரபாலகர்கள் தண்டி, பிங்களன். இவருடைய சண்டேஸ்வரருக்கு "தேஜஸ்சண்டர்" என்பது பெயர்.

மேலும், ஆகாயம், காற்று, தீ, தண்ணீர் மண் மற்றும் சூரியன், சந்திரன், யஜமானன் என்ற அஷ்டமூர்த்தியாக எங்கும் எதிலும் வியாபித்து உள்ளவர் சிவபிரானேயாவார். எனவே, சிவபூஜையில் சிவபிரான் "பலப்பிரமதனி" என்னும் சக்தியுடன் ருத்ரமூர்த்தியாகக் கலந்து நின்று, உயிர்கள் தம் கர்ம வினைகளினால் அடையும் ரோகங்களைப் போக்கிச் சிவபதவியைத் தருவார் எனும் தத்துவார்த்த மாகச் சூரிய பூஜையை அவசியம் செய்தாக வேண்டுமென்பது ஆகமங்கள் கண்ட நெறியாகும் என்பதுணர்க.

24. சிவன் கோவில்களில் சந்திரனுக்குத் தனிக்கோவில் உண்டா? சந்திரனின் மனைவியர் யாவர்? சூரியனைப் போல் இவருக்கும் வேறு பெயர்கள் உண்டா? இவர் ஏன் பூஜிக்கப் படவேண்டும் கூறுக?

சிவன் கோவில்களில் சந்திரனுக்கும் பரிவாரக் கோவில் உண்டு. வடகிழக்கில் (சற்றுத் தென்பாகமாக) இவர் கோவில் மேற்கு நோக்கி இருக்கும். இவரும் சூரியனைப் போலவே இரண்டு கைகளிலும் 'குமுதமலர்" ஏந்தி மேற்குமுகமாக நின்ற கோலத்தில் இருப்பார்.

இவருக்குச் சிவாகமங்களில் ''சந்திரன்'' என்ற பெயரோடு "அமிர்தேசன்" "சோமன்" போன்ற பெயர்களுமுண்டு.

வெண்ணிறமானவர் இவருக்கும் ஆசனம் வெண்டாமரை மலரேயாகும். வெண்மையான பட்டாடையை அணிந்திருப்பார். இவருக்கு மனைவியர் 27 பேர்கள் (27 நட்சத்திரங்களும் இவருடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனைவிகளே என்பர்) அவர்களில் மிகவும் முக்யமானவர்கள் கிருத்திகா, ரோகிணி எனும் இருவர் ஆவர்.

இவர் பாற்கடலில் தோன்றியவர். தன் மாமனரான தட்சனால் சாபம் பெற்றுச் சிவபிரானால் சாபநீக்கம் பெற்றவர். இவருக்குச் சாபம் நேர்ந்தபோது இவர் தேய்ந்துகொண்டே போனார். முடிவில் சிவபிரானால் தேயும் தன்னிலையில் மாறி வளர்ந்து முழுமை பெற்றார். வளர்ந்து முழுநிலை பெறும் வரை இவருக்கு ஒவ்வொரு கலைக்கு (ஒவ்வொரு நாள் வளர்ச்சிக்கும்) ஒவ்வொரு பெயர் வழங்குகிறது. அது வருமாறு:

1. பிரதமை	-	அமிருதா	-	முதல் நாள்
2. த்விதியை	-	மானதா	-	இரண்டாம் நாள்
3. த்ரீதீயை	-	பூஷா	-	மூன்றாம் நாள்
4. சதுர்த்தி	-	துஷ்டி	-	நான்காம் நாள்
5. பஞ்சமி	-	புஷ்டி	-	ஐந்தாம் நாள்
6. சஷ்டி	-	ரதி	-	ஆறாம் நாள்
7. சப்தமி	-	த்ருதி	-	ஏழாம் நாள்
8. அஷ்டமி	-	சசிநீ	-	எட்டாம் நாள்
9. நவமி	-	சந்திரிகா	-	ஒன்பதாம் நாள்
10. தசமி	-	காந்தி	-	பத்தாம் நாள்
11. ஏகாதசி	-	ஜ்யோத்ஸ்நா	-	பதினோராம் நாள்
12. தவாதசி	-	ஸ்ரீ	-	பன்னிரெண்டாம் நாள்
13. தரயோதசி	-	ப்ரீதி	-	பதிமூன்றாம் நாள்
14. சதுர்தசி	-	அங்கதா	-	பதினான்காம் நாள்
15. பூர்ணிமை	-	பூர்ணா	-	பௌர்ணமி
16. அமாவாசை	-	மிருதா	-	அமாவாசை

இவரைத் தலையில் சூடிக்கொண்டு இவர் சாபத்தை நீக்கியதால் சிவபிரானுக்குச் "சந்திரசேகரன்" என்ற பெயர் உண்டாயிற்று என்று முன்பு கூறியுள்ளோம். இவருடைய தலம் தமிழகத்தில் திங்களூர் மற்றும் வடக்கே திருப்பதியுமாகும்.

இவரது நிறம் வெண்மை. வாகனம் வெண்குதிரை. இவருக்கு உரிய தானியம் நெல். இவருக்கு உரிய ரத்தினம் வெண்முத்து. இவரது ராசி கடகம். திசை தென்கிழக்கு. நவக்கிரஹங்களில் இவருக்கு இரண்டாமிடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவருடைய கிரணங்கள் பூமியில் விழவில்லையானால் பூமியில் போட்ட எந்தவிதையும் முளைக்காது. (இவரது கதிரால் முளைக்கும், சூரியன் கதிரால் வளரும் என்க) பூமியில் இட்ட தானியங்களை முளைக்கச் செய்யும் சக்தி இவருக்கே உண்டு. ஆதலால் இவரை வழிபட வேண்டியது மிகவும் முக்கியமாகும். இவருக்குரிய கிழமை திங்கட்கிழமையாகும்.

கோவில் திருவிழாக்களிலும், கும்பாபிஷேகங்களிலும் மற்றும் நம் வீட்டில் நடத்தப்படுகின்ற சுபநிகழ்வுகளிலும் முளையிடுதல் வழக்கமாகும். முளையிடுதல் (அங்குரார்ப்பணம்) இன்றியும் சூரிய பூஜையின்றியும் கோவில்களில் விழாக்கள் நடைபெறா. எனவே, விதைகள் முளைத்ததற்கு சந்திரனின் அமுதகிரணம் (வெண்ணிலவு) தேவை என்பதையும், முளைத்த செடி கொடிகள் வளர்வதற்குச் சூரியனின் செங்கதிர் (அருணகிரணம்) தேவை என்பதையும் கருத்தில் கொண்டே இவ்விருவருக்கும் முக்யமாகப் பூஜைகள் செய்யப்படுகின்றனவென்பதை அறிந்துகொள்க.

25. சிவன்கோவில்களில் சனிபகவானுக்குத் தனிக் கோவில் உண்டா? விளக்குக.

சனி பகவான் சூரியனுக்கு மகனாவார். பெரும்பாலும் சிவன் கோவில்களில் சூரியர், சந்திரன், சனி பகவான் ஆகியோருக்குத் தனிக் கோயில்கள் இருக்கும். இவருக்கு "மந்தன்" என்ற பெயருமுண்டு. இவருக்கு வாஹனம் காக்கை. இவர் நிறம் நீலம். நவரத்தினங்களில் இவருக்கு உரியது நீலக்கல். அதாவது நீலமணி. இவருக்கு உரிய தானியம் எள்ளு ஆகும். இவரது சொந்த ராசி மகரம். வன்னிப் பத்திரமும், கருங்குவளை மலரும் இவருக்குப் பிடித்தமானவை. பூஜைக்கு வன்னிப்பத்திரத்தையும், ஓமத்திற்கு வன்னிசமித்தையும் பயன்படுத்தினால் நன்மை உண்டாகும்.

இவருடைய அருளைப்பெற பக்தர்கள் எள்ளினைத் துணியில் சிறு மூட்டையாகக் கட்டி நல்லெண்ணெய் கொண்டு தீபமாக ஏற்றி வழிபடுவர். இவர் ஒரு ராசியைக் கடந்து செல்ல சுமார் இரண்டரை வருடங்கள் பிடிக்கும். மற்ற கிரகங்கள் நாள் கணக்கிலும், மாதக் கணக்கிலும் ஒரு ராசியைக் கடந்துவிடும். குருபகவான் ஆண்டிற்கு ஒருமுறை ராசியைக் கடப்பார். சனிபகவான் ஒருவர் மட்டுமே ஒரு ராசியைக் கடக்க இரண்டரை வருடங்களை மேற்கொள்ளுகிறார். எனவேதான் இவருக்கு மந்தன் (நிதாமானவன்) என்ற பெயர் உண்டாயிற்று. இதனை வடமொழியில் சனை+சரன் "சனைச்சரன்" என்பார்கள். சனைச்சரன் என்றால் மெல்ல சஞ்சரிப்பவன் என்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளாகும். இவரைப் பலரும் ''சனீஸ்வரன்'' என்பார்கள். அவ்வாறு கூறுவது பிழை ''சனைச்சரன்'' என்பதையே அவர்கள் அறியாமல் ''சனீஸ்வரன்'' என்று கூறுகின்றான். ஈஸ்வரபட்டம் இவருக்குக் கிடையாது. இவருக்கு உரிய திசை மேற்கு. இவர் ஒரு ராசியில் இருக்கும்போது முன்னும் பின்னுமுள்ள ராசிகளையும் சேர்த்து இவருடைய சஞ்சாரகாலம் 7.5 ஆண்டுகள் ஆகும். எனவே இவரை ஏழரை நாட்டுச் சனி என்பார்கள். மனித வாழ்வில் இவரது சுற்று மூன்று முறைகள் வரும். முதல் சுற்றில் இவர் தரும் பலனைவிட இரண்டாம் சுற்று வருங்காலத்தில் மிகுந்த பயனைத் தருவார். அப்போது இவரைப் ''பொங்குசனி'' என்று போற்றுவார்கள். மூன்றாம் சுற்றில் இவருக்கு "மங்குசனி" என்ற பெயருண்டு.

கோவில்களில் நவக்கிரஹங்களில் இவர் மேற்கு நோக்கி இருப்பார். தனிக்கோவிலாக இருக்குமானால் வடகிழக்கு திசையில் மேற்கு நோக்கியவாறு இவர் நின்ற கோலத்தில் காக்கை வாகனத்துடன் காணப்படுவார். இவரது கோத்திரம் காஸ்யபம். சனிக்கிழமை இவருக்கு உரிய நாள். இவரது திருத்தலம் ''திருநள்ளாறு'' எனும் தலமாகும். சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் விளக்கேற்றி எள்ளன்னம் நிவேதனம் செய்து ஏழைகளுக்கு அளித்தால் இவர் அருளைப் பெறலாம்.

26. பஞ்சசுத்திகள் யாவை? ஏன் செய்ய வேண்டும்?

பஞ்சசுத்திகள் என்பதைத் தமிழில் ஐந்து வகைப் பரிசுத்தங்கள் என்று கூறலாம்.

1. ஆத்ம சுத்தி 2. ஸ்தானசுத்தி 3. த்ரவ்யசுத்தி 4.மந்திரசுத்தி 5. லிங்கசுத்தி.

ஆத்மசுத்திக்காகப் பூதசுத்தி, அந்தர்யாகம் போன்றவற்றைச் செய்ய வேண்டும். பூஜை செய்வதற்கான இடத்தைச் சுத்தியாக்குவது ஸ்தானசுத்தியாகும். பூஜாத்ரவ்யங்களின் குற்றம் நீங்க அவற்றை விசேஷார்க்யம் கொண்டு சுத்தம் செய்வது திரவ்விய சுத்தி எனப்படும். மந்திரங்களை உச்சரிக்கும்போது ஏற்படும் குற்றங்கள் ஏற்படாவண்ணம் காத்தல் மந்திரசுத்தியாகும். எந்த மூர்த்திக்குப் பூஜை செய்ய விழைகின்றோமோ அந்த மூர்த்திக்குப் பஞ்ச கவ்யத்தால் அபிஷேகம் செய்தல் போன்றவை "லிங்கசுத்தி" எனப்படும்.

27. க்ஷேத்ரபூஜை, பத்ரபூஜை என்பன யாவை? விளக்குக.

தன்னுடைய பாபங்களைப் போக்கிக் கொள்ளவும். தன்னுடைய பிள்ளைகள், பேரன்கள் முதலான சந்ததிகள் நலமுடன் வாழ வேண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மென்றும் இறைவனைக் குறித்து செய்யப்படுகின்ற பூஜைகட்கு (ஆத்மார்த்த பூஜை உட்பட) "க்ஷுத்ரபூஜை" என்று பெயர்.

உலக உயிர்கள் அனைத்தும் நன்மை பெறவும், அவை தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்து (உணவு முதலான) வளங்களை யும் பெற வேண்டியும் இறைவனைக் கோவில்களில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்கின்ற பொது வழிபாடே ''பத்ரபூஜை'' எனப்படும்.

அதாவது தன்னலம் கருதிச் செய்வது க்ஷுத்ரபூஜை என்றும், பொதுநலம் கருதிச் செய்வது பத்ரபூஜை என்றும் கூறப்படுகின்றன. இதையே ஆத்மார்த்த பூஜை என்றும் பரார்த்தபூஜை என்றும் ஆகமங்கள் பிரித்துக் கூறுகின்றன.

28. லோகபாலகர்கள் என்பவர் யாவர்? அவர்கள் எத்தனை பேர்?

உலகைச் சமநிலையில் காப்பவர்கள் மொத்தம் பத்துப் பேராவர். அவர்களையே லோகபாலகர் என்பார்கள்.

அவர்கள், 1. மஹாதேவன் 2. ஹரன் 3. ருத்ரன் 4. சங்கரன் 5. நீலலோஹிதன் 6. ஈசானன் 7. விஜயன் 8. பர்கன் 9. தேவதேவன் 10. பவோத்பவன் என்பவராவர்.

இவர்களில் மஹாதேவர் என்பவர் விண்ணைக் காப்பவர் ஹரர் என்பவர். மண்ணுலகைக் காப்பவர் ஆவார். மற்றவர்கள் முறையாக எட்டு திசைகளையும் காப்பவர் ஆவர்.

29. சிவன் கோவில்களிலும் மற்றச் சைவக் கோவில்களிலும் பூஜை செய்பவர்கள் யார்? அவர்களுக்கு வேண்டிய தகுதிகள் யாவை? மற்றவர்கள் பூஜை செய்தால் தவறு நேருமா? விளக்குக.

பொதுவாகத் தென்னாட்டுச் சிவன் கோவில்களில் பூஜை செய்பவர்கள் "ஆதிசைவர்" எனும் மரபைச் சார்ந்தவர் ஆவர். இவர் ''சிவப்பிராம்மணர்'', ''சிவாசாரியர்'', ''தேசிகர்'', ''குருக்கள்'' என்றெல்லாம் அழைக்கப்படுவார்கள். இவர்கள் சிவபிரானின் அணுக்கத் தொண்டராவர்.

கயிலைமலையில் சிவபிரானுக்கு அணுக்கத்தொண்டனாக விளங்கியவர் சுந்தரமூர்த்தி நாயனார் எனப்படுகின்ற ஆலாலசுந்தரர். அவர் பூவுலகில் இறைவன் ஆணைப்படி அவதரித்தபோது ஆதிசைவர் குலத்தில் தோன்றினார்.

இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் சொல்லும்போது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்துள் தோன்றி மேம்பட சடையனார்க்கு ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானியார்பால் தீதகன் றுலகம் உய்யத் திருஅவதாரம் செய்தார்'' என்று பாடி அவர் தோன்றிய குலம் "ஆதிசைவர்குலம்" என்பதை எடுத்துச் சொன்னார்.

பின்பு அவருடைய திருமண நிகழ்ச்சியில் சிவபிரான் கிழப்பிராமணராக வந்து தடுத்தாட்கொண்ட போது அவர் காட்டிய சான்றுச் சுவடியில்,

"அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால் வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை எழுத்து'' என்ற வாசகங்கள் எழுதப் பட்டிருந்தமை காட்டி, "நீயும் நின் குலமும் எனக்கு அடிமைகள் என்பதை உணர்வாயாக'' என்று கூறிச் சுந்தரர்க்கு உணர்வு புகட்டினார் சிவபிரான் என்பதை உணரலாம்.

எனவே ஆதிசைவர்குலம் அநாதிகாலமாகவே சிவனுக்கு அடிமை செய்யத் தோன்றியகுலம் என்பதை உணரலாம்.

மேலும் சைவர்களில் 1. அநாதி சைவர் 2. ஆதிசைவர் 3. மஹா சைவர் 4. அநுசைவர் 5. அவாந்தரசைவர் என ஐந்து பிரிவுகள் சொல்லப்பட்டுள்ளன. இவர்களில் அநாதிசைவர் என்பவர் சிவபெருமானாவார். இரண்டாவதாக ஆதி சைவர்களே இன்றைய சிவாசாரிய மரபினர் என்பது தெளிவாகிறது. இவர்கட்கு "குரு'' அவரது தந்தையே ஆவார். இவ்வாறு வழிவழியாக குருத்துவம் இவருக்கு உண்டு. மற்ற அந்தணர் சமூகத்திற்கு உள்ளதுபோல தனியாக ஒரு குரு இவர்கட்குக் கிடையாது. எனவே இவர்களைச் "ஸ்வயமாசாரிய புருஷர்கள்" என்பார்கள். உலக வாழ்வில் இவர்கட்கு தந்தையே குருவாவார் என்றாலும் பரம்பரை குருத்துவம் கூறும்போது இவர்கட்கு சதாசிவகுரு, அனந்தகுரு, ஸ்ரீகண்டகுரு, அம்பிகா குரு, குஹகுரு, விஷ்ணு குரு, தாத்ரு (பிரம்ம) குரு என ஏழு குருக்கள் கூறப்படுகின்றனர்.

இவர்கள் தங்கள் தந்தையரிடமே தீட்டை பெறவேண்டும். அதுவே உத்தமம் தந்தையரில்லாவிட்டால் தங்கள் கோத்திர முடையாரிடம் தீட்சை பெறலாம். இது மத்யமம்.

"சிவப்பிராமணன்" என்றால் சிவவழிபாடு செய்யும். அல்லது சிவனை அர்ச்சிக்கும் பிராமணன் என்று பொருள் கொள்ளலாம். சிவாசாரியன் என்றால் சிவன்+ஆசாரியன். சிவனிடம் மக்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இணையச் செய்யும் ஆசாரியன் என்று பொருள் கொள்ளலாம். ஏனெனில் மஹா சைவர் முதலான மற்றவர்கட்கு சிவதீட்சை செய்துவைக்கும் உரிமை இவர்களுக்கே உண்டு என்பதால் என்க. தேசிகன் குற்றமற்றவன், மேலானவன் என்பது பொருள்.

குருக்கள் என்றால், 'கு' அறியாமையாகிய இருள்'ரு' போக்கு பவன் "குரு" எனப்படுவான். சிவபிரானைப் பற்றியும், சைவத்தைப் பற்றியும் அறியாதவர்களுக்கு அறியாமையைப் போக்கி அவர்கட்குத் தீட்சை செய்வித்து அவர்களை சிவஞானம் பெற வைத்து வழிப் படுத்த வேண்டும் என்பது இவர்கட்கு விதிக்கப்பட்டது. ஆகையால் இவர்களை குருக்கள் (குரு+கள் குரு- ஆசாரியன், கள் பன்மை விகுதி) என்பார்கள்.

மஹா சைவர் முதலானவர்கள் சைவமார்க்க மேன்மையை அறிந்து சிவஞானம் பெற விரும்பினால் அவர்களிடம் எந்த பிரதி உபகாரமும் எதிர்பாராமல் தீட்சை செய்வித்து அவர்களை சைவ நெறியின் பால் உய்வித்து வழிப்படுத்த வேண்டிய முழுக்கடமை சிவாசாரியர்களுக்கே உண்டு என்பதுணர்க.

இவர்களிடம் தீட்சை பெறுபவர்கள் மந்திர உபதேசம் பெற்று ஆத்மார்த்த பூஜையைச் செய்யலாம். பஞ்சாட்சர மந்திர ஜபம் செய்து சித்தி பெறலாம்.

இவர்களைக் கேரளாவில் "போற்றிகள்" (போத்திகள்) என்றும், வடநாட்டில் "பண்டாக்கள்" என்றும் கூறுகின்றார்கள்.

இவர்கட்கு என்று தனித்தகுதிகள் ஆகமங்களில் கூறப் படுகின்றன. அவையாவன.

1. சிவ கிருஷ்டியில் தோன்றிய முனிவர்களின் வழிவந்தவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு சிவனின் ஐந்து முகங்களிலிருந்து தோன்றியவராவர் ஐவர் ஆவர். அவர்கள் வருமாறு:

1) கௌசிகர் 2) காஸ்யபர் 3) பாரத்வாஜர் 4) கௌதமர் 5)அகஸ்தியர் ஆகிய ஐவருமாவர். எனவே சிவாசாரியார்கள் மேற்கண்டவர்களின் பெயர்களால் அமைந்த கோத்திரமுடையவராக இருக்கவேண்டும்.

2. மேற்கண்ட ஐவரிடம் ஐந்து சந்தானங்கள் (புத்திரர்கள்) உண்டாயினர். அவர் வருமாறு:

(1) துர்வாசர் (2) ருரு (3) ததீசி (4) சுவேதர் (5) உபமன்யூ என்பவர் கள் ஆவார்கள். இவர்கள் மூலமாக "மந்தானகாளீசம்" எனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷேத்திரத்தில் "திருமடம்" ஒன்று தோன்றியது. அதைச் சுற்றிலும் நான்கு மடங்கள் உண்டாக்கப்பட்டன. அவை (1) ஆமர்த்தகீ (2) கோளகீ (3) புஷ்பகிரி (4) ரணபத்ரம் என்பனவாம்.

மேற்கண்ட மடங்களின் நிர்வாகிகளாக முறையே தூர்வாசர், ருரு, ததீசி, சுவேதர், உபமன்யூ என்பவர்கள் அதாவது மந்தான காளீசத்திற்குத் தூர்வாசரும், ஆமர்த்தகீ மடத்துக்கு ருருவும், கோளகி மடத்திற்கு ததீசியும் புஷ்பகிரி சந்தானமடத்துக்கு சுவேதரும் ரணபத்திர மடத்துக்கு உபமன்யுவும் மடாதிபதிகளாயினர்.

இவர்களின் வழிவந்தவர்களே இன்றைய ஆதிசைவர்கள் என்பது வரலாறு. இவர்களே ஆத்மார்த்த பூஜை செய்தபின்பு பரார்தபூஜை செய்யத் தகுதியுடையவர் ஆவர் என்பது ஆகமங்கள் கூறும் கருத்தாகும்.

இவர்கள் மிகவும் சமர்த்தகர்களாக இருக்கவேண்டும். சைவசாஸ்திரங்களையும், சைவாகமங்களையும் ஐயம் திரிபு அறக் கற்றவராக இருக்கவேண்டும். சைவ சித்தாந்த தத்துவங்களை முற்றும் உணர்ந்தவராக இருக்கவேண்டும். பற்பல கலைகளை அதாவது ஓவியம், சிற்பம், சங்கீதம், நாட்டியம், ஜோதிடம் போன்ற கலைகளில் நல்லறிவும் ஆராய்ச்சியும் பெற்றவராக இருக்கவேண்டும்.

இதிஹாச புராணங்களையும், தேவார திருவாசகங்களையும் கற்றவர்களாக விளங்கவேண்டும். நொண்டி முடம் அங்கஹீனம், குருடு, செவிடு, ஊமைகளாக இருக்கக்கூடாது. சிகை வைத்திருக்க வேண்டும். மொட்டைத் தலையுடன் இருக்கலாம். ஜடை முடிப்பது மிகவும் சிறந்தது.

திருமணமாகி மனைவியுடன் இருக்கவேண்டும். மனைவி இல்லாதவர் (மனைவியை இழந்தவர் பரார்த்த பூஜைகளைச் செய்ய லாகாது) பிரம்மசாரியாக இருக்கலாம்.

சிவாகமம் கற்றுக் கிரியைகளைச் செய்யும் விஷயத்தில் தெளிவு இருக்கவேண்டும். எடுத்த காரியத்தைத் தொடர்ந்து முடித்துக் காட்டும் திறமை இருக்கவேண்டும். நான்கு வேதங்களையும் கற்ற வராக இருப்பது நலம். (ருக்வேதிகள், ருக்வேதம் மட்டும் கற்கலாம், யஜுர் வேதிகள் யஜுர் வேதத்தை மட்டும் கற்கலாம், சாமவேதிகள் சாமவதம் மட்டும் கற்கலாம் என்பது விதி. ஆனால் சிவாசாரியார் நான்கு வேதமும் கற்கும் அதிகாரம் பெற்றவர் ஆவர். பூஜை விதிகளில் நான்கு வேதமும் தேவைப்படுவதால் இவர்கள் நான்கு வேதங் களிலும் பயிற்சியுடையவராக இருப்பது நலமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றிற்கும் மேலாகச் சிவாசாரியார்கள் தெய்வபக்தி உடையவராக இருக்கவேண்டும் என்பன போன்ற மேற்கண்ட கருத்துக்களை மகுடாகமம் தெளிவுபடக் கூறியுள்ளது.

மேலும் அவ்வாகமம், பிறரால் நிந்திக்கப்படுகின்றவர், மிகவும் உயரமானவர். மிகவும் குட்டையானவர். வாய்நிறைய பற்களை உடையவர். மிகவும் குண்டானவர். கோணற்பற்களை உடையவர்கள். தெய்வபக்தி இல்லாதவர். அறிவற்றவர், நடத்தை கெட்டவர். அயோக்கியர், சந்நியாசி, மிகவும் மெலிந்த உடலை உடையவர். தனக்குண்டான நித்யகர்மாக்களில் தவறுபவர், மிகக் கடுமையான ஆசாரமுடையவர். ஆசாரமே சிறிதுமில்லாதவர் போன்ற மேற்கண்டவர்கள் சிவாசாரியாக இருக்கத் தகுதி இல்லாதவராவர்கள் என்றும் கூறுகிறது.

சிவாசாரியார்கள் போதாயன சூத்ரத்தை அனுஷ்டிப்பவராக இருக்கவேண்டும். கோவிலுக்கு வரும் பக்தர்களைச் சம நோக்குடன் நடத்துபவராகவும், பொறுமையுடன் அவர்கள் கேட்கும் வினாக்களுக்குத் தெளிவான விடைகளைக் கூறுபவர்களாகவும் பக்தர்களிடம் மிகவும் அன்புடையவர்களாகவும் இருக்கவேண்டும்.

எப்போதும் எல்லாரிடமும் சுமூகமாகப் பழகவேண்டும். எல்லாரும் நலமுடன் வாழவேண்டும் “சர்வேஜநா: சுகினோபவந்து” என்று எப்போதும் இறைவனிடம் பிரார்த்தனை செய்பவராகவும் இருக்கவேண்டும்.

மேற்கண்ட தகுதிகளை உடைய சிவாசாரியர்களே பரார்த்த பூஜை செய்யத் தகுதியுடையவராவர். இவர்களிடம் தீட்சை பெற்று மற்றவர்கள் ஆத்மார்த்த பூஜை மட்டுமே செய்யலாம். பரார்த்த பூஜையைச் செய்யக்கூடாது. செய்தால் நாட்டுக்குக் கேடு விளையும் என்பது ஆகமங்கள் கூறும் செய்திகளாகும்.

சிவாசாரியார்களும், பூஜாகாலங்களில் மட்டுமே கருவறை சென்று சிவஹஸ்தம் செய்து கொண்டு சிவபூஜையைச் செய்ய வேண்டும். சிவலிங்கத்தைக் கண்ட கண்ட நேரங்களில் தொடுதல் கூடாது. “முப்போதும் திருமேனி தீண்டுவார்” என்று தான் பாடினார்களேயன்றி “எப்போதும் திருமேனி தீண்டுவார்” என்று பாடவில்லை என்பதை கவனிக்கவும். ஆகமங்களும் அதற்கு இடம் தரவில்லை.

பொதுவாக, சிவாசாரியார்கள், ஒரு சமூகத் தொண்டரைப் போல பணியாற்ற வேண்டும். எல்லாரிடமும் நட்பு பாராட்ட வேண்டும். சர்வ சமயக்கருத்துக்களையும் மதிக்க வேண்டும். சமுதாய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்களிடையே ஒரு பாலமாக அமைந்து இறைவனுக்கும் மக்களுக்கும் தொடர்பை உண்டாக்க வேண்டும். இவர்கள் கோவில்களின் மீது கொள்ளும் ஈடுபாட்டாலும் இவர்கள் செய்யும் மந்திரோச் சாடனத்தாலும் பூஜா பலத்தாலும் இன்றும் பல கோவில்கள் பிரசித்தமாக விளங்குகின்றன. அவை மக்களை ஈர்த்து அவர்களின் குறைகளைப் போக்குவதையும் காணலாம். அவர்களைப் போலவே, மற்ற கோவில் சிவாசாரியார்களும் முழு சிரத்தையுடன் கோவில் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவார்களேயானால் பிற கோவில்களும் மேன்மையடையமுடியும். அதற்கு இன்றைய அறநிலையத் துறையும், அந்தந்த கோவில் நிர்வாகிகளும் பொதுமக்களும் சிவாசாரியாருக்குத் தக்க துணையாக இருப்பது மிகவும் அவசியமாகும். அவ்வாறு முயன்று செயல்பட்டால் தமிழகத்தின் அனைத்துக் கோவில்களும் பண்டைய காலங்களைப்போல மீண்டும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.

மேலும் சிவப்பிரசாதமான திருநீற்றை மற்றவர்க்கு அளிக்கும் தகுதி சிவாசாரியார்களுக்கு மட்டுமே உண்டு. மற்றவர்களுக்கு விபூதியை அளிக்கும் உரிமை வழங்கப்படவில்லை. எனவே இன்றும் சில மடங்களிலும் அட்சதையும், சில மடங்களில் குங்குமமும், சில மடங்களில் கரிச்சாந்தும் வழங்குகின்றனர் என்பதை யாவரும் உணரவேண்டும்.

சிவாசாரியாரிடம் தவிர மற்றவர் கையால் விபூதியைப் பெற்று அணிவதால் பலன் உண்டாகாது. தானாகவும் விபூதியைக் கோவில் களில் எடுத்து அணியக்கூடாது. ஆனால் வீட்டில் நம் இஷ்டப்படி முறைப்படி அணியலாம்.

சிவசாரியார்களும் விபூதியைப் பிறருக்கு அளிக்கும்போதும், அணிவிக்கும் போதும் தனியாகக் கட்டைவிரலைப் பயன்படுத்தக் கூடாது. சுட்டு விரலையும் பயன்படுத்தக்கூடாது.

நடுவிரல், சுட்டுவிரல், சுண்டுவிரல் தவிர மற்ற இரண்டு அதாவது கட்டைவிரல், மோதிரவிரல் இரண்டையும் சேர்த்து திய்வ முத்துரையாகக் கொண்டு விபூதியை பக்தர்களுக்கு வழங்கவேண்டும்.

இவ்வாறு திவ்யமுத்திரையால் அளிக்கப்படும் விபூதியைப் பெறும் பக்தர்கள் அனைவரும் எல்லாச் செல்வங்களையும் பெறுவார் கள். சிவாநுபூதிச் செல்வம் பெற்று இகபரசுகங்கள் அனைத்தையும் சிவபிரான் அருளால் அடைவார்கள் என்பது ஆகமங்கள் கண்ட நெறியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

30. சிவாகமங்கள் என்பவை எவை? அவை எத்தனை? அவை எதைப் பற்றிக் கூறுகின்றன?

ஆன்மாக்கள் செய்த புண்ணியப் பேற்றினால் அவற்றின் நன்மை கருதி சிவபெருமான் வேதசிவாகமங்களை அருளிச் செய்தார். அவைகளின் மூலமாக உலக உண்மைகளை, உயிர்களாகிய நமக்கு உணர்த்தியருளினார். தேவம் உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் சிவாகமமோ, "சக்தி நிபாதர்கள்" எனப்படும் சைவர்களாகிய நமக்காகவே சிறப்பாகக் கூறப்பட்டதாகும்.

சிவபெருமானின் தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் நான்கு திருமுகங்களிலிருந்து முறையே, ருக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் தோன்றின. ஈசானமுகத்திலிருந்து ஆகமங்கள் தோன்றின. அந்த ஆகமங்கள் மொத்தம் இருபத்தெட்டாகும். அவைகளுள் 1.காமிகம் 2. யோகஜம் 3. சிந்தியம் 4.காரணம் 5. அஜிதம் எனும் ஐந்து ஆகமங்களும் ஈசானத்தின் சத்யோஜாத முகத்தில் தோன்றின.

6. தீப்தம் 7. சூக்ஷ்மம் 8. சஹஸ்ரம் 9. அம்சுமான் 10. சுப்ரபேதம் எனும் ஐந்து ஆகமங்களும் ஈசானத்தின் வாமதேவ முகத்திலிருந்து தோன்றின.

11. விஜயம் 12. நிஸ்வாசம் 13. ஸ்வாயம் புவம் 14. ஆக்னேயம் 15.வீரம் எனும் ஐந்து ஆகமங்களும் ஈசானத்தின் அகோர முகத்திலிருந்து தோன்றின.

16. ரௌரவம் 17. மகுடம் 18. விமலம் 19. சந்திரஞானம் 20. முக பிம்பம் எனும் ஐந்து ஆகமங்களும் ஈசானத்தின் தத்புருஷ முகத்திலிருந்து தோன்றின.

21. புரோத் கீதம் 22. லலிதம் 23. சித்தம் 24. சந்தானம் 25.சர்வோக்தம் 26. பாரமேஸ்வரம் 27. கிரணம் 28. வாதுளம் ஆகிய எட்டு ஆகமங்களும் ஈசானத்தின் ஈசான முகத்திலிருந்தும் தோன்றின.

இவை இருபத்தெட்டும் "மூலாகமங்கள்" எனப்படும். இவற்றிற்குத் துணையாகவும் வழிநூலாகவும் உபாகமங்கள் என்ற பெயரில் 207 (இருநூற்று ஏழு) ஆகமங்கள் இருந்தனவென்று அறியமுடிகிறது.

"ஆகமம்" என்பதற்கு பல வழிகளில் பொருள் கூறப்படுகின்றன.

1. 'ஆ' என்பது 'ஞானம்' என்றும்,

'க' என்பது 'மோட்சம்' என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ம' என்பது 'மலநீக்கம்' என்றும் கூறப்படுகின்றன.

அதாவது உயிர்களின் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களையும் போக்கிச் சிவஞானத்தை உண்டாக்கி அவை வீடுபேறடையும் வழியைக் கூறும் நூல் "ஆகமம்" எனப்படுகிறது என்றும்,

2. 'ஆ' என்பது 'பாசம்' என்றும்,

'க' என்பது 'பசு' என்றும்,

'ம' என்பது 'பதி' என்றும் கூறப்படுகின்றன.

அதாவது பதி, பசு, பாசம் எனும் மூன்று பொருள்களின் இயல்பு களை விளக்கும் நூல் ஆகமம் எனப்படுகிறது என்றும்,

3. 'ஆ' என்பது ஆண்டவன். "கமம்" என்பது அழைத்தல் என்று கூறுவர்.

அதாவது எங்கும் விரிந்து பரந்துள்ள இறைவனை ஓரிடத்தில் ஓர் உருவில் தங்குமாறு அழைப்பதற்கான வழிமுறைகளாகக் கூறுவது "ஆகமம்" எனப்படுகிறது என்றும் பலவாறாகப் பொருள் விளக்கம் தரப்படுகிறது.

மேற்கண்ட மூன்று வகையான பொருள்களுமே ஆகமதின் வேறுபட்டதல்ல, இவை அனைத்தும் ஆகம நூல்களில் விரிவாக விளக்கப்படுகின்றன.

மேற்கண்ட இருபத்தியெட்டு ஆகமங்களும் ஒவ்வொன்றும் நன்னான்கு பிரிவுகளை உடையனவாகக் கூறப்படுகின்றன. அந்த நான்கு பிரிவுகட்கும் "பாதம்" என்பது பெயராகும்.

அவை 1. ஞானபாதம் 2. யோகபாதம் 3. கிரியாபாதம் 4. சரியாபாதம் என்பனவாம்.

ஞானபாதத்தில், சிவஸ்வரூபம், விஞ்ஞானகலர், ப்ரளயகலர் எனும் ஆன்மஸ்வரூபம், ஆணவம், கர்மம், மாயேயம், பைந்தவம், திரோதனம் எனும் ஐவகைப் பாசங்களின் ஸ்வரூபம், சக்தியின் வடிவம் ஆகியனவும், சிவதத்துவம் முதல் பிரிதிவி தத்துவம் வரை யான முப்பத்தாறு தத்துவங்களின் தோற்றமும், இத்தத்துவங்கள் ஆன்மாக்களின் இன்பதுன்ப போகங்களுக்குக் கருவியாய் அமை வதையும், புவனம், புவனேசர் ரூபங்களும், புவனங்களின் வ்யாப்தி யளவும், அதமப் பிரளயம், மத்யப்பிரளயம், மஹாப்பிரளயம் எனும் மூன்று வகைப் பிரளயங்களைப் பற்றியும், மஹாப்பிரளயத்தின் பின் மீண்டும் உலகத் தோற்றத்தின் முறையும் கூறப்படுகின்றன. அத்துடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமதங்களான பாசுபதம், மாவிரதம், காபாலிகம் முதலான மதங்களின் தத்துவஸ்வரூபங்களும் விரிவாகக் கூறப்படுகின்றன.

. கிரியாபாதத்தில் சிவபூஜைக்கான மந்திரங்களின் உத்பத்தி, சிவபூஜை, ஜெபம், ஹோமம் முதலியவைகளின் விதிமுறைகள், சிவபூஜை செய்ய விரும்புவோர் செய்துகொள்ள வேண்டிய சமய, விசேஷ, நிர்வாண தீஷாவிதிகள், ஆசாரியாபிஷேக விதி போன்றவை விவரிக்கப்படுகின்றன.

சரியாபாதத்தில் தவறு நேர்ந்தால் அதைப் போக்கிக் கொள்ளும் “ப்ராயச்சித்தம்” எனும் கழுவாய் விதிகள் பவித்ரோத்சவம் மற்றும் பவித்திரம் தயாரிக்கும் விதிமுறைகள்.

லிங்க இலக்கணம், சகளஸ்வரூபமான சிவபிரானின் இருபத்தைந்து மூர்த்தங்களின் பாகுபாடுகள், நந்திகேசர் முதலான கணங்களின் இலக்கணம், யோகபட்டம், தண்டம், கமண்டலம் ஆகியவற்றின் இலக்கணம் சைவர்களுக்கான “அந்தியேஷ்டி” எனும் அபரக்கியாவிதிகள், சிரார்த்த கர்மவிதிகள் ஆகியன விளக்கப்படுகின்றன.

யோகபாதத்தில் முப்பத்தாறு தத்துவங்கள், அவற்றின் காரணேஸ்வர்கள் பற்றியும், ஆன்மாக்கள் பற்றியும், சிவனும் சக்தியும் உலக உயிர்களின் இன்பதுன்பங்களுக்குக் காரணமான மாயை, மகாமாயை என்பவற்றைக் கண்டுகொள்ளும் வல்லமை பெற்றமையம் 1. இமயம் 2. நியமம் 3. ஆசனம் 4. பிராணாயாமம் 5. பிரத்யாகாரம் 6. தியானம் 7. தாரணம் 8. சமாதி எனும் அஷ்டமாசித்திகள் பற்றியும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனும் ஆறு ஆதாரங்களின் முறைகளையும் விரிவாகக் கூறுகின்றது.

முன்னர் கூறியதுபோல் ஆகமங்கள் இருபத்தெட்டு என்றாலும் இப்போது அவை அனைத்தும் கிடைக்கவில்லை. எஞ்சியனவாக நமக்கு முழுவதும் கிடைத்துள்ள ஆகமமம் காமிகாகமம், காரணாகமம் போன்ற சிலவேயாம். பெரும்பாலும் இன்றைய வழிபாட்டு நிலையில் காமிகம், காரணம் எனும் ஆகமங்களின்படியே நித்ய நைமித்திக பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

சிவாகமங்கள் பூஜையை இரண்டு விதமாகப் பிரித்துக் கூறுகின்றன. 1. ஆத்மார்த்த பூஜை 2. பார்த்தபூஜை. ஆத்மார்த்த பூஜையை சிவதீட்சை பெற்று அனைவரும் தன்னுடைய நலனுக்காகவும், தன் குடும்ப நலனுக்காகவும், தனக்கு முக்திபேறு கருதியும் செய்யலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரார்த்த பூஜையைச் சிவபிரானிடமிருந்து தோன்றிய சிவ சம்மந்தமான ரிஷிகளின் வழிவந்த சிவபிராம்மணர்களே தீட்சை பெற்று ஆசாரியாபிஷேகம் செய்துகொண்டு உலக நன்மைகளுக்காக வேண்டி அனைவரின் பொருட்டாகக் கோவில்களில் செய்யத் தகுதி உடையவர்கள் ஆவர்.

யோக, ஞானங்களின் மூலமாகச் சிவனை நினைந்துப் போற்றி வழிபடப் பக்குவப்படாத ஆன்மாக்கள் உய்ய வேண்டுமானால் அவை ''சரியை, கிரியை'' எனும் இரண்டு மார்க்கங்களில் சிவ வழிபாடு இயற்றி அவற்றின் மூலம் முக்திப் பேற்றினை அடையலாம். "சரியை" என்பது நன்னடத்தை முதலானவை அதாவது "ஒழுக்கநெறி" என்று கொள்ளலாம்.

'கிரியை' என்பது மந்திரங்களை அறிந்து சிவலிங்க வழிபாடு செய்வதும், ஜபம், ஹோமம் முதலியவற்றின் மூலமும் நற் செயல்களைச் செய்து சிவபுண்ணியப் பேற்றினை அடைவதுமாகும். இக்கிரியாபாதம், "மந்திரம்", "க்ரியா", "பாவனை" என்ற மூன்று பிரிவு களையுடையதாகும்.

31. ஞானபாத தத்துவத்திரயம் என்பதென்ன?

1. பதி *2.* பசு *3* பாசம் என்பனவாம்.

பதி : இறைவன் ஈண்டு சிவபிரான்

பசு : உயிர்கள் (ஆன்மாக்கள்)

பாசம் : கட்டு (தளை) இறைவனை நோக்கிச் செயல்பட முடியாமல் உயிர்களைத் தடுக்கும் மாயாமலங்கள் என்பனவாம்.

32. சிவாகமம் கற்க வாய்ப்பின்மையால் ஞான பாதத்தைக் கற்க முடியாதவர்கள் வேறு வழியில் ஞானபாத உண்மைகளை உணர வழியுண்டா?

சிவாகமம் மூலம் ஞானபாதரகசியங்களைக் கற்க முடியாத வர்கள், சந்தான குரவர்கள் இயற்றியுள்ள சைவசித்தாந்த சாத்திர நூல்கள் மூலம் கற்றுய்யலாம்.

சந்தானகுரவர் மூலம் நமக்குக் கிடைத்த சாத்திர நூல்கள் மொத்தம் பதினான்காகும். அவை தடையின்றி இக்காலத்தும் கிடைக்கும். தமிழகத்தில் பல சைவ சமய மடங்கள் அவற்றை வெளி யிட்டு உபகாரம் செய்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தானகுரவர் வருமாறு:

1. மெய்கண்டதேவர் 2. அருணந்தி சிவாசாரியார் 3. மறைஞான சம்மந்தர் 4. உமாபதிசிவாசாரியார் எனும் நால்வராவார்.

1. மெய்கண்டார்

இவர் பிறந்த ஊர் பொண்ணாடகம். இவர் தம் தந்தையான அச்சுதகளப்பாளர் என்பவர் தம் குருவான அருணந்திசிவாசாரியாரின் ஆணைப்படி திருவெண்காடு அடைந்து திருவெண்காட்டீஸ்வரரை வணங்கி அவனருளால் மெய்கண்டாரை மகனாகப் பெற்றார். மெய் கண்டாருக்குத் தந்தை சூட்டிய பெயர் "சுவேதவனம்" என்பதாகும்.

பொதிய மலையில் திகழ்ந்த அகத்தியரைக் காண விரும்பிய திருக் கயிலாய மலையிலிருந்து புறப்பட்டு ஆகாயமார்க்கமாகச் சென்று கொண்டிருந்த பரஞ்சோதி முனிவர். திருவெண்ணெய்நல்லூரின் வீதியில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு குழந்தையைக் கண்டார். அக்குழந்தை "ஞானக்குழந்தை" என்பதுணர்ந்து அக்குழந்தைக்கு நந்தி மரபிலேதான் கற்ற சிவஞானபோதத்தை (சிவனைப் பற்றிய உண்மை அறிவை) உபதேசித்தருளினார். அக்குழந்தைக்கு "மெய்கண்டார்" எனும் பெயரையும் சூட்டிச் சென்றார். அன்று முதல் மெய்கணடார் தெளிந்த சிந்தை கொண்டவராய்த் திகழ்ந்தார்.

பின் தனக்க உண்டான ஐயப்பாடுகளை எல்லாம் பொல்லாப் பிள்ளையார் மூலம் நீக்கிக் கொண்டு சிவானந்த நிஷ்டை செய்து தெளிந்து சிவஞானம் பெற்றுத் திகழ்ந்தார். தாம் அறிந்த சிவஞான போத உண்மைகளை உலக உயிர்கள் உணர்ந்து மகிழ வேண்டு மென்ற பேரெண்ணத்தால் "சிவஞானபோதம்" எனும் நூலை இயற்றினார். இவருக்குச் "சிவஞானாசாரி" என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

இவர்தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரான அருள்நந்தி சிவாசாரியாரே இவருக்க மாணவராக விளங்கிய பெருமையும் இவருக்குண்டு.

2. அருணந்தி சிவாசாரியார்

நடுநாட்டிலுள்ள "திருத்துறையூர்" எனும் ஊரில் ஆதிசைவ மரபில் தோன்றியவர். வேதாகமங்களை முறையாகவும், தெளிவாக வும் கற்றுப் பண்டிதரானார். அதனால் இவரைச் "சகலாகமபண்டிதர்" என்று போற்றுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்கண்டதேவர் மூலம் சிவஞானபோத உண்மைகளைக் கற்றார். இவர் தம் ஆசிரியரிடம் கற்ற சிவஞானபோத உண்மை களைத் தெளிவுபடுத்த வேண்டி "சிவஞான சித்தியார்" எனும் நூலை இயற்றி அருளினார். அடுத்து "இருபா இருபஃது" எனும் நூலையும், சைவ உலகுக்குத் தந்தருளினார்.

3. மறைஞான சம்பந்தர்

இவர் 'மருதூர்' எனும் ஊரில் பிறந்தவராவார். பெண்ணாடகத்தில் வசித்தவர். இருந்தும் பெரும்பாலும் இவர் சிதம்பரத்திலேயே தங்கிவிடுவார். இவர் சிதம்பரத்தில் மேலைக் கோபுரவாசலில் தென்புறத்தில் உள்ள கற்பக விநாயகர் கோவிலின் பால் அமைந்துள்ள குகையில் தங்கித் தவமிருந்து சிவயோகசமாதி கூடினார் என்பார்கள். இவர் "சஹஸ்ரநாமபாஷ்யம்" ஒன்று எழுதியதாகக் கூறுவர். ஆனால் காணக்கிடைக்கவில்லை.

இவர் உமாபதி சிவாசாரியாரின் குருவாவார்.

4. உமாபதி சிவாசாரியார்

இவர் சிதம்பரத்தில் ஆதிசைவர் குலத்தில் பிறந்தவர். ஸ்ரீநடராஜப் பெருமானைப் பூஜித்து வந்த பெருமையுடையவர். இவர் ஒருநாள் பூஜையை முடித்துக்கொண்டு அக்கால வழக்கப்படி பல்லக்கில் அமர்ந்து தன் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். இவர் பல்லக்கில் ஏறிச் செல்வதை மறைஞான சம்பந்தர் கண்டு, "பட்ட கட்டையில் பகல் குருடு செல்வது காணீர்" எனக் கூறினார். இது சிவாசாரியாரின் காதில் விழுந்தது. அதுவே அவருக்கு உபதேச மொழியாயிற்று. சிவிகையை விட்டுக் குதித்து மறைஞானசம்பந்தர் பால் ஓடி அவரடி வணங்கி அவர் கையில் ஒட்டிக் கொண்டிருந்த எச்சில் உணவைத் தான் தன் கையால் வழித்து எடுத்து ஆசாரியாரின் சேஷம் (ஆசிரியர் உண்ட எஞ்சிய உணவு) என்று சிறப்பித்துக் கூறி அதைத் தாம் உண்டு பக்குவநிலையை அடைந்தார்.

மறைஞான சம்மந்தரும் உமாபதியாருக்குத் தனது சிவானுபூதி ஞான அனுபவத்தை உபதேசித்தார்.

உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தில் உமாபதியார் மிகப்பெரும் சிவஞான குருவாக விளங்கினார். அற்புதச் செயல்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டினார். கொற்றவன்குடி என்ற ஊரில் ஒரு மடத்தை நிறுவினார். சிதம்பரம் தீட்சிதர்களால் ஒதுக்கப்பட்ட இவர் தனியாக வாழ்ந்து வந்தார். தாழ்குலத்தவனான "பெற்றான்சாம்பன்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பவனுக்கும், முள்ளிச் செடிக்கும் முக்தியளித்தவர். இவர் பாடியது ''கொடிக்கவி'' எனும் நூல். இவர் இக்கவிதையைப் பாடித்தம் பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்திருந்தார். அவ்வேளையில் சிதம்பரம் நடராஜர் கோவிலில் கொடி ஏற்றம் நடைபெற்றது. எத்தனை முயன்றும் கொடி மேலே ஏறவில்லை.

செய்வதறியாது அனைவரும் திகைத்து நின்றபோது அசரீரியாகச் சிவபிரான், "தான் உமாபதியாரின் பெட்டியில் அடைபட்டிருப்பதாக உணர்த்தினார்."

அனைவரும் உமாபதியாரை நாடிச்சென்று வேண்டி நிற்க அவர் தாம் பாடிய கொடிக்கவியைக் கொணர்ந்து சந்நிதானத்தில் பாடவும் உடனே கொடி தங்குதடையின்றி ஏறியதாகக் கூறுவர். இவர் வடமொழியில் நல்ல பாண்டியத்யம் பெற்றவராவார்.

இவர் இயற்றிய வேறு நூல்கள், 1. சிவப்பிரகாசம் 2. திருவருட் பயன் 3. நெஞ்சுவிடுதூது 4. போற்றிப் பஃறொடைவெண்பா 5.உண்மை நெறிவிளக்கம் 6. வினாவெண்பா 7. சங்கற்பநிராகரணம் என்பனவாம்.

இவர் இயற்றிய மேற்கண்ட எட்டு நூல்களையும் சைவசமயிகள் "சித்தாந்தாஷ்டகம்" (சித்தாந்தவிளக்கம் தரும் எட்டு நூல்கள்) என்று போற்றக் காணலாம்.

வடமொழியில் ''மந்த்ரஸ்தவம்'', ''குஞ்சிதாங்கிரிஸ்தவம்'', "பௌஷ்கரபாஷ்யம்" எனும் மூன்று நூல்களை இயற்றியுள்ளார்.

தமிழில் சித்தாந்தாஷ்டகம் தவிர,

1. கோயிற்புராணம் (தில்லைபுராணம்) 2. திருப்பதிக்கோவை 3.சேக்கிழார் புராணம் 4. திருமுறை கண்டபுராணம் 5. திருத் தொண்டர் புராண சாரம் 6. தேவார அருள்முறைத்திரட்டு 7. ஞான ஆசார சாஸ்திரபஞ்சகம் எனும் நூல்களையும் இயற்றியருளினார்.

சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள் பதினான்கு வருமாறு :

1. சிவஞானபோதம் (மெய்கண்டார்) 2. சிவஞானசித்தியார் 3.இருபாஇருபக்து (அருணந்திசிவாசாரியார்) 4. சிவப்பிரகாசம் 5.திருவருட்பயன் 6. வினாவெண்பா 7. போற்றிப்பஃறொடை 8.கொடிக்கவி 9. நெஞ்சுவிடுதூது 10. உண்மை நெறிவிளக்கம் 11.சங்கற்ப நிராகரணம் (உமாபதி சிவாசாரியார்) 12. திருவுந்தியார் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்) 13. திருக்களிற்றுப்படியார் (திருக்கடவூர் உய்ய வந்த தேவனார்) 14. உண்மை விளக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(திருவதிகை மனவாசகங்கடந்தார்) ஆக 14 நூல்களாம். இவை மூலம் ஞானபாத உண்மைகளை யாவரும் உணரலாம்.

33. பிராணாயாமம் என்றாலென்ன? விளக்கம் தருக?

பிராணாயாமம் செய்பவர்கள் பூரகம், கும்பகம், ரேசகம் எனும் மூன்று நிலைகளையும் 10 மாத்திரை கால அளவு செய்ய வேண்டும். (கண்ணிமைத்தல், அல்லது கை நொடித்தல் ஒரு மாத்திரையாகும்)

உள்ளிருக்கும் அசுத்தமான காற்றை முதலில் வெளியேற்ற வேண்டும். பின்பு உயிர்க்காற்றை உள்ளிழுக்க வேண்டும். இழுத்த காற்றை உள்ளே தடுத்து நிறுத்தவேண்டும். பின் முன்போல் வெளியிடல் வேண்டும்.

வெளியேற்றல், உள்ளிழுத்தல், நிறுத்துதல் ஆக இந்த மூன்றும் சேர்ந்தது ஒரு பிராணாயாமம் ஆகும். இதையே ரேசகம், பூரகம், கும்கம் என்பார்கள். ரேசகம் அசுத்தக்காற்றை வெளியேற்றுவது பூரகம். உயிர்க்காற்றை உள்ளிழுத்து உள்ளே நிரப்புவது. கும்பகம் நிரப்பிய காற்றைச் சற்று நேரம் உள்ளேயே நிலைபெறச் செய்வ தாகும். இவற்றை குருமுகமாக கால அளவோடு கற்றுக் கொண்டு செய்ய வேண்டும்.

மூன்றையும் பிரணவ மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு செய்தல் வேண்டும்.

அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து ஆகிய ஐந்தும் சேர்ந்தது பிரணவம் (ஓம்) ஆகும்.

ரேசகத்தின் அதிதேவதை : பிரம்மன்.

பூரகத்தின் அதிதேவதை : விஷ்ணு.

கும்பகத்தின் அதிதேவதை : ருத்ரன் என்பதறிக.

உகாரம் சந்திரஸ்வரூபம் பூரகம் செய்யும்போது 12 மாத்திரை அளவு செய்ய வேண்டுமென்க.

மகாரம் சூர்யரூபம், கும்பகம் செய்யும்போது 16 மாத்திரை அளவு செய்ய வேண்டுமென்பர். அகாரம் அக்னிஸ்வரூபம் ரேசகம் செய்யும்போது 10 மாத்திரை அளவு விடவேண்டும் என்பர்.

இழுத்தல் 12 மாத்திரை நிறுத்தல் 16 மாத்திரை விடுதல் 10 மாத்திரை இப்படி ஒரு முறை செய்வது ஒரு பிராணாயமம் ஆகும். எந்தக்காரியம் தொடங்கும்போதும் இதுபோல் மூன்று முறை செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34. சகளீகரணம் என்பதென்ன? ஏன் செய்யவேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்?

மனிதனிடம் இயல்பாக உண்டாகி இருக்கும் அசத் தன்மையைப் போக்கவும், சத் தன்மையை உண்டாக்கவும் "சகளீகரணம்" எனும் செயலைச் செய்ய வேண்டுவது அவசியமாகும்.

சகளீகரணம் செய்து கொள்ளாமல் செய்யப்படும் சிவகாரியங்கள் எதுவும் பயனின்றிப் போகும். ஆதலால் இதை உணர்ந்து ஆசாரியர்கள் கட்டாயம் "சளீகரணத்தை" முறை அறிந்து செய்தல் அவசியமாகிறது.

அங்கன்யாசம், கரன்யாசம் இரண்டும் சேர்ந்தது சகளீகரணம் எனப்படும்.

ஆத்மா - பசுரூபம் (ஆகையால் கைகளும் பசுத் தன்மையுடையன வாகின்றன) மேலும், ஆத்மா : சதசத் ரூபம் சிவபிரான் சத்ரூபம். எனவே சத்ரூபமான சிவபெருமானுக்கு சதசத் ரூபமான உயிர்கள் பொருத்தமானதாகாது. (அதாவது இரண்டும் வேறுபட்டவையாகும்) ஆதலால் உயிருக்கும் சிவனுக்கும் ஐக்ய பாவம் ஏற்பட வாய்ப்பின்றிப் போய்விடும். ஐக்யபாவம் ஏற்படவேண்டுமானால் இரண்டையும் ஒற்றுமைப்படுத்தப்படவேண்டும். அதற்காகச் சத்ரூபமான சிவனுக்குச் சதசத்ரூபமான உயிர்கள் பொருந்தும் வகையில் சதசத் ரூபமான ஆன்மாவைச் சத்ரூப சிவனாக மாற்றவேண்டும். அதற்காகச் செய்வதே 'சகளீகரணம்' எனப்படும். கரன்யாசம், அங்கன்யாசம் இரண்டும் சேர்ந்த கிரியையே சகளீகரணமாகும்.

மேலும் பொதுவாக எல்லா கிரியைகளுக்கும் 1. நிமித்தம் 2.உபாதானம் 3. சமவாயம் என்று மூன்று உண்டு.

சிவகைங்கர்யம் எனும் செயல்களுக்கு ஆத்மா (உயிர்கள்) நிமித்த மாகும். (உயிர்களின்) உடல் (சரீரம்) உபாதானமாகும். கைகள் - சமவாயமாகும்.

மேற்கண்ட இந்த மூன்று பேதங்களையும் ஒன்றாக்கி (உயிர்கள்) தங்கள் உடலை சிவாகாரமாய்ச் (சிவனின் உடம்பாக) செய்து கொள்வது சகளீகரணத்தின் நோக்கமாகும்.

மேற்கண்டவாறு உயிர்கள் தங்கள் உடலை சிவாகாரமாக ஆக்கிக் கொண்டு (சகரீகரணம் செய்யாமல் செய்கின்ற) செய்யப் படாத செயல்கள் பயனற்றுப் போகும். ஆகையால்,

பூத சுத்தியால் ஆத்மாவையும், அங்கன்யாசத்தால் சரீரத்தையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரன்யாசத்தால் கைகளையும் தூய்மையாக்கித் தன்னைச் சிவாகாரமாகப் பாவித்துக் கொண்டு செயல்படவேண்டும்.

மேற்கண்ட பூதசுத்தி, அங்கன்யாசம், கரன்யாசம் எனும் மூன்றினாலும் உயிர்கட்கு சதசத் ரூபம் நீங்கி சத்ரூபம் உண்டாகும். உண்டாகவே உடல், உயிர், கை அனைத்தும் சிவத்துவம் அடைந்ததாகிறது.

இவ்வாறு, "தன் உடல், உயிர், உறுப்புகள் எல்லாம் சிவத்துவம் அடைந்தது" எனும் பாவனையோடு சிவபெருமானைப் பூஜை செய்தால் எல்லா நன்மைகளையும் அவனருளால் அடைய முடியும். எனவே, 'சகளீகரணம்' எனப்படுகின்ற செயல் கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்று ஆகமங்கள் தெளிவுபடுத்துகின்றன.

35. கடவுள் என்பதற்குப் பொருள் யாது?

கட+உள் என்று பிரிக்க வேண்டும். 'கட' என்பதற்கு கடந்து நிற்பவர் அல்லது 'கடத்தலை உடையவர்' என்று பொருள். 'கட' என்பது பகுதி 'உள்' என்பது விகுதி. (தொழிற்பெயர் விகுதியாகும்) எல்லாத் தத்துவங்களையும் கடந்தவர் கடவுள் எனப் படுவார் என்க. அதாவ்து "தத்துவாதீதரே" கடவுள் ஆவார் என்க.

36. கடவுளின் இயல்புகள் யாவை?

1. பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுக்கும் மேலானவர்.

2. உருவமோ, அருவமோ, அருவுருமோ இல்லாதவராயும், உள்ளவராயும் விளங்கும் இயல்பினர்.

3. நித்யர் (அழிவில்லாதவர்)

4. ஏகர் தான் ஒருவரேயாவார்

5. ஒப்பற்றவர்

6. பரிபூரணமானவர் (எல்லாம் நிறைந்து இருப்பவர்)

7. அசைவற்றவர்

8. சாந்ஸ்வரூபி

9. நிர்குணர் (குணமென்று ஒன்று இல்லாதவர்)

10. தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசநீக்கம் உடையவன். பேரருள் உடையவன். முடிவிலா ஆற்றல் உடையவன். வரம்பில்லா இன்பமுடையவன் எனும் எண்குணமும் உடையவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப்படாதவன்.

12. பதிஞானம் என்னும் ஞானத்தால் மட்டுமே அறியமுடியும் படியான ஞானசூரிய வடிவினன் என்பவை இறைவனின் இயல்புகளில் சிலவாகும்.

37. இறைவனுக்குச் சக்தி உண்டென்பது உண்மையா?

உண்மையே. நெருப்புக்குச் சூடும், பூவிற்கு மணமும், சூரியனுக்கு ஒளிக்கதிர்களும் எங்ஙனம் இயற்கையாகவே இணைந்து தோன்றுகின்றனவோ, அதுபோல கடவுளுக்கும் சக்தி இயற்கை யாகவே உண்டாகிவிளங்குதல் உண்மையே.

''சக்தி'' என்பதை ''வல்லமை'' என்ற பொருளில் கொள்ள வேண்டும். அந்த சக்திக்குப் 'பராசக்தி' என்பது பெயராகும். (மேலான சக்தி என்பது இதன் பொருளாகும்).

38. கடவுட் சக்திகளின் செயல்பாடுகள் யாவை? அவை யாவை?

இறைவன் தன்னிலிருந்து பிரிக்கமுடியாத சக்தியான பரா சக்தியுடன் கலந்து நின்று, ஆதிமுதல் ஆணவமலத்தால் அறிவற்று மூடமாக விளங்கும் ஆன்மாக்களை ரட்சிக்க விரும்பிப் பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூற்றின் நின்று ஆதி சக்தியையும், ஆதி சக்தியின் ஆயிரத்தில் ஒரு கூற்றின் நின்று இச்சாசக்தியையும், இச்சா சக்தியின் ஆயிரத்தில் ஒரு கூற்றின் நின்று ஞான சக்தியையும், ஞான சக்தியின் ஆயிரத்தில் ஒரு கூற்றின் நின்று கிரியா சக்தியையும் உண்டாக்கினர்.

இவர்களில் பராசக்தி உயிர்கட்கு அனுக்கிரகம் புரிபவளாவாள். அறிந்தும் அறிவித்தும் நிற்பதனா 'ஞானம்' என்ற ஒன்றே சிவசக்தியின் ரூபம் ஆகும். இதையே சைவ உலகம் "பராசக்தி" என்று போற்றுகிறது.

ஆதிசக்தி

இச்சக்தி "திரோதான சக்தி" எனப்படும். இதற்கு "அருட்சக்தி" என்றும் பெயருண்டு. இச்சக்தியே மற்ற நான்கு கிருத்யங்களுக்கும் அதாவது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், அனுக்கிரகம் எனும் நான்கு தொழில்களுக்கும் காரணமாகிறது. இச்சக்தியே உயிர்களுக்கு மலத்தையுண்டாக்கிப் பக்குவப்படுத்துகிறது என்பதை உணரவும்.

இச்சாசக்தி

சிவபிரான் ஆன்மாக்களை ரட்சிக்க எண்ணம் கொண்டபோது அவரிடம் உண்டான அந்த விருப்பத்திற்கு 'இச்சாசக்தி' என்பது பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசக்தி

ஆன்மாக்களை ரட்சிக்கத் திருவுள்ளம் கொண்ட சிவபிரான் அந்தந்த உயிர்கட்கு உண்டான வினைப்பயன்களை அளிக்க வேண்டு மென்று எண்ணியபோது உண்டான எண்ணமே ''ஞானசக்தி'' எனப்படும். (ஞானம் : அறிவு)

கிரியாசக்தி

ஆன்மாக்களுக்கு வினைப்பயன்களை உண்டாக்கும் காரணமாக அவைகள் தங்குதற்குப் பிரபஞ்சங்களை உண்டாக்கும் எண்ண நிலையில் சிவபிரானிடம் உண்டானதே கிரியாசக்தி எனப்படும். (கிரியை : செயல்)

குறிப்பு : இறைவனிடம் உண்டாகி இருக்கும் பேராற்றல் மிக்க ஒரு சக்தியே இவ்வாறான செயல்களை ஆற்றும்போது வெவ்வேறான பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதை உணரவேண்டும். இது எவ்வாறு நிகழும் என்ற ஐயமுண்டாயின் கீழ்க்காணும் எடுத்துக் காட்டால் தெளிவுபெறுக.

நெருப்பில் உஷ்ணசக்தி உண்டு. நெருப்பின் உஷ்ணசக்தி ஒன்று தான். ஆனால் அந்த உஷ்ணத்தில் உலோகங்கள் உருகுகின்றன. கட்டைகள் எரிகின்றன. உப்பு வெடிக்கின்றது. உணவுகள் சமை கின்றன. இப்படிப்பட்ட செயற்பாடுகளில் அந்த உஷ்ணம் உருகுதல், எரிதல், வெடித்தல், சமைத்தல் என்று பெயர் மாற்றம் பெறுவது போல மேற்கண்ட சக்திகளும் தன் தொழிலுக்கு ஏற்ப வெவ்வேறு பெயர்களைப் பெற்றனவென்க.

39. சிவனை அதிஷ்டித்த சக்தி வெவ்வேறு பெயர்களைப் பெற்றதைப் போல சக்தியோடு கலந்த சிவனுக்கும் பெயர் வேறுபாடுகள் உண்டா?

உண்டு. சிவன் பராசக்தியை அதிஷ்டித்த காலத்தில் ''பரசிவம்'' என்றும்,

திரோதான சக்தியெனும் ஆதிசக்தியைக் கூடிநின்ற போது "திரோ பவன்'' என்றும், இச்சாசக்தியைக் கலந்து நின்றபோது ''இச்சிதா'' என்றும், ஞானசக்தியைக் கூடி நின்றபோது ''ஞாநதா''வென்றும், கிரியாசக்தியை அதிஷ்டித்து நின்றபோது "கர்த்தா"வென்றும் பெயர் பெறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

40. சாதாக்கியம் என்பது என்ன? விளக்குக. சாதாக்கியம் எத்தனை வகையாகும்?

கண்ணாடியில் பிரதிபிம்பம் போலவும், வானத்தில் இந்திரதனுசு போலவும், நிஷ்கள சிவனிடத்தில் இருந்து சகளம் தோன்றும், இவ்வாறு தோன்றுவதையே "சாதாக்கியம்" என்று வழங்குவர்.

இது சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கரும சாதாக்கியம் என ஐந்து வகையாகும்.

1. பராசக்தியின் பத்தில் ஒரு பங்கு "சிவசாதாக்கியம்" இதையே "பராபரம்" என்பார்கள்.

2. ஆதிசக்தியின் பத்தில் ஒரு கூறு "அமூர்த்தி சாதாக்கியம்" எனப் படும். இதற்குப் "பரம்" என்பது பெயர். இதையே நாம் பரம்பொருள் என்கின்றோம்.

3. இச்சாசக்தியின் பத்தில் ஒரு பங்கு "மூர்த்தி சாதாக்கியம்" இதற்குச் "சூக்ஷ்மாசூக்ஷ்மம்" என்பது பெயர்.

4. ஞானசக்தியின் பத்தில் ஒரு பங்கு "கர்த்திரு சாதாக்கியம்" எனப்படும். இதற்கு ஸ்தூலசூக்ஷ்மம் என்று பெயர்.

5. கிரியா சக்தியின் பத்தில் ஒரு பங்கு "கரும சாதாக்கியம்" எனப்படும். இதற்கு "ஸ்தூலம்" என்பது பெயர். இவையே "பஞ்ச சாதாக்கியங்கள்" எனப்படுகின்றன.

மேலும் இந்த பஞ்ச சாதாக்கியங்களுக்கும் முறையே சதாசிவர், ஈசர், பிரம்மா, ஈஸ்வரர், ஈசானர் எனும் ஐவரும் அதிபதிகள் ஆவர். இவர்கட்கு "பஞ்ச சாதாக்கிய மூர்த்திகள்" என்பது பெயர்.

மேற்கண்ட பஞ்ச சாதாக்கியங்களுக்குத் "தத்துவம்" என்ற பெயருமுண்டு.

மேற்கண்ட பஞ்ச சாதாக்கியங்களில் மேலே சொல்லப்பட்ட அதிபதிகள் ஐக்யமாகும்போது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்று ஐந்து பிரம்மங்கள் உண்டாயின என்பர்.

1. சிவசாதாக்கிய தத்துவம் சதாசிவமூர்த்தியுடன் ஐக்கியமான போது "ஈசானம்" எனப்படும்.

2. கர்த்திரு சாதாக்கியமும் "ஈஸ்வரன்" எனும் மூர்த்தியும் ஐக்கிய மாகும் போது "தத்புருஷம்" எனப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. கர்மசாதாக்கியமும் "ஈசானன்" எனும் மூர்த்தியும் ஐக்கிய மாகும்போது "அகோரம்" எனப்படும்.

4. அமூர்த்தி சாதாக்கியமும் "ஈசன்" எனப்படும் மூர்த்தியும் ஐக்கியமாகும்போது "வாமதேவம்" எனப்படும்.

5. மூர்த்தி சாதாக்கியமும் "பிரம்மன்" எனும் மூர்த்தியும் ஐக்கியமாகும்போது "சத்யோஜாதம்" எனப்படும்.

குறிப்பு : மேற்கண்ட ஐந்து தத்துவங்களும் அல்லது ஐந்து சாதாக்கியங்களும் நிஷ்களம் எனப்படும். சதாசிவாதி பஞ்சமூர்த்திகள் "சகளம்" எனப்படுவர். ஈசானாதிகளுக்குப் பிரபாவம் என்ற பெயருமுண்டு.

மேற்கண்ட ஈசனாதி பஞ்சப் பிரபாவங்களும் "சகள நிஷ்களம்" எனப்படும். இந்தப் பஞ்சப் பிரபாவங்களையே நாம் "பஞ்சப் பிரம்மம்" என்று வழங்குகின்றோம்.

மேற்கண்ட இந்த பஞ்சப் பிரம்மங்களுக்கு ஈசானர், தத்புருஷர், அகோரர், வாமதேவர், சத்யோஜாதர் என்பது பெயராகும்.

1. ஈசானன்

உலகங்களுக்கெல்லாம் ஈசனாகவும், சர்வ லோகத்திற்கும் மேலாகவும், தன் பதத்தை (திருவடிகளை) உயிர்கட்கு அருளும் அருட்குணத்தாலும் இவர், "ஈசானார்" என்ற பெயரைப் பெற்றார். இவரின் சக்திக்குச் சைவ சித்தாந்தத்தில் "ஈசானி" என்று பெயர் கூறப் படுகிறது. சிவாகமத்தில் "உமா" என்று கூறப்படுகிறது. இந்த ஈசான சக்திக்கு மேலும் சசினி, அங்கதா, இஷ்டா, மரீசி, ஜ்வாலினி என ஐந்து கூறுகள் மேற்கண்ட ஐந்து பெயர்களால் வழங்கப்படுகின்றன.

2. தத்புருஷர்

உயிர்களின் உள்ளே கண்ணுக்குத் தெரியாதபடி உறைவதால் "தத்புருஷர்" என்ற பெயர் உண்டாயிற்று. இவருக்குச் சக்தி சைவ சித்தாந்தத்தில் "பூரணி" எனப்படுகின்றாள்.

சிவாகமத்தில் "கௌரி" எனப்படுகின்றாள். பூரணிக்கும், சாந்தி, வித்யா, பிரதிஷ்டா, நிவிர்த்தி என்ற நான்கு கூறுகள் கூறப்படுகின்றன. இவற்றிற்கு சாந்தி, வித்யா, பிரதிஷ்டா, நிவிர்த்தி என்ற பெயர்களே வழங்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. அகோரம்

அஞ்ஞானத்திற்கு ''கோரம்'' என்று பெயர். அஞ்ஞானத்தின் விரோதி சிவபிரான் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தையளிப் பதால் அகோரர் எனப்பட்டார். (ந கோரம் : அகோரம்) அதாவது அஞ்ஞானம் இல்லாதது ஞானம் எனப்படுகிறது என்பதுணர்க. இவரின் சக்தி வைசசித்தாந்தப்படி "ஆர்த்தி" எனப்படுகின்றாள்.

சிவகாமப்படி ''கங்கா'' என்பது பெயர் ஆர்த்திக்கும், தமா, மோகா, ஐயா, நிஷ்டா, மிருத்யு, மாயா, பயா, சரா என்று எட்டு கூறுகள் மேற்கண்ட எட்டுப் பெயர்களால் வழங்கப்படுகின்றன.

4. வாமதேவம் :

உலக உயிர்களை அறம், பொருள், இன்பம் ஆகியவற்றில் அழுத்தி அதோ மாயா சக்தியால் கவிழ்ப்பதாலும், இயல்பாகவே பிரகாசத்தன்மை கொண்டவராதலாலும், ''வாமதேவர்'' எனப் பட்டார். இவரின் சக்தி சித்தாந்தத்தில் "வாமை" எனப்படுகின்றாள். சிவாகமத்தில் "அம்பிகா'' என்று கூறப்படுகின்றாள்.

வாமைக்கும் ரஜா, இரட்சா, ரதி, பாலி, காமா, சம்யமனி, கிரியா, புத்தி, காரி, தாத்ரி, பிராம்மணி, மோகினி, பவா எனும் பதிமூன்று கூறுகள் மேற்கண்ட பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன.

5. சத்யோஜாதர்

சத்யோஜாதர் என்பவர் உயிர்களுக்கு விஞ்ஞானானந்த மயமான காரண சரீரம் உண்டாகவும், அச்சரீரத்தினுள் ஏற்படுகின்ற மனோ மயாதிகளான மூன்று கோசங்களாலும் தேகம், ஸ்தூலதேகம் எனும் இரண்டையும் நினைத்த உடனேயே மந்திரேஸ்வர மந்திரங்களைக் கூட்டிய உடனே உண்டாகும் (அப்போதே உண்டாகும்) சத்ய : அப்போதே - ஜாத: உண்டாகும்) தன்மையால் ''சத்யோஜாதர்'' என்று பெயர் பெற்றார்.

இவரின் சக்திக்கு சித்தாந்தத்தில் ''மூர்த்தி'' என்று பெயர் வழங்குகிறது.

சிவாகாமத்தில் "கணாம்பிகை" என்பது பெயராகும்.

மேற்கண்ட இந்த மூர்த்தி தேவிக்கும், சித்தி, ருத்தி, த்யுதி, லக்ஷ்மி, மேதா, காந்தி, ஸ்வதா, த்ருதி எனும் எட்டுக் கூறுகள் கூறப் படுகின்றன. மேற்கண்ட பெயர்களாலேயே அவை எட்டும் வழங்கப் படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு,

ஈசானத்தில் சசின்யாதி ஐந்தும்	5
தத்புருஷத்தில் சாந்தியாதி நான்கும்	4
அகோரத்தில் தாமாமுதல் எட்டும்	8
வாமதேவத்தில் ரசா முதல் பதிமூன்றும்	13
சத்யோஜாதத்தில் சித்தி முதல் எட்டும்	8 ஆக

38 (முப்பத்தெட்டு) கலைகளையும் ஆகமத்திலும், சைவ சித்தாந்தத்திலும் "அஷ்டத்ரிம்சத்" கலைகள் என்பர். (முப்பத்தி எட்டு கலைகள்)

இவ்வாறு பிரமாதி காரணேஸ்வரர்களாலேயே உலக உயிர்கள் ஐந்தொழிலுக்கு ஆட்படுத்தப்படுகின்றன. இறைவனின் மேற்கண்ட ஐந்து தொழில்களுக்கும் காரணகர்த்தாவாக விளங்கி உலகை ஆளுகின்றான். எனவே, சிவபூஜைகளில் மேற்கண்ட அஷ்டக்கிரிம்சத் கலான்யாசம் மிக முக்கியமானது.

41. ஆத்மார்த்த பூஜையில் சுத்தம், கேவலம், மிஸ்ரம் எனும் மூன்று வகைப் பூஜைகள் சொல்லப்படுகின்றனவே அவை யாவை?

ஆத்மார்த்த பூஜை செய்பவர்கள் "சிவலிங்கம்" ஒன்றை மட்டுமே பூஜிப்பது 'சுத்தபூஜை' எனப்படும். உமாதேவி, சிவபிரான் இருவரையும் சேர்த்துப் பூஜிப்பதும், மேலும் இவர்களுடன் விநாயகர், முருகன், நந்தி ஆகியோரையும் சேர்த்துப் பூஜிப்பதும் "கேவல பூஜை" என்று கூறுவர். மகேஸ்வரர், நடராஜர், தக்ஷிணாமூர்த்தி இவர்களையும் சேர்த்துப் பூஜிப்பது மிஸ்ரபூஜை எனப்படும்.

மேலும் சூரிய பூஜை முதல் தொடங்கி சிவன், சக்தி, விநாயகர், முருகன், நந்தி, சண்டேசர் இவர்களுடன் மகாகாளர் முதல் சதாசிவாதி சப்தகுருக்களையும் சேர்த்தது வித்யாபீடம். ஸ்வகுரு வரையான விரிவான ஆத்மாத்தர பூஜைக்கு "மிஸ்ரபூஜை" என்று பெயர் வழங்குகிறது.

துறவிகள் சுத்த பூஜையைச் செய்ய வேண்டும். இல்லறத்தோர் கேவல பூஜையைச் செய்ய வேண்டும். சிவாசாரியார்கள் சுத்தம் தவிர்த்து கேவலம் மிச்ரம் ஆகிய இரண்டு வகைப் பூஜைகளையும் செய்யலாம்.

சிவாசாரியார்கள் ஆத்மார்த்தபூஜை செய்யாமல் பரார்த்த பூஜை செய்வார்களேயானால் அந்த பரார்த்த பூஜையால் ஏதும் பயன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளையாது என்று ஆகமங்கள் கூறுகின்றன. எனவே அவசியம் ஆத்மார்த்த பூஜையைத் தீட்சை பெற்ற சிவாசாரியார்கள் தினமும் கட்டாயம் செய்ய வேண்டியது அவர்களின் கடமைகளில் தலையாய கடமையாகும் என்பதுணர்க.

42. பஞ்சப்பிரம்மத்தின் பஞ்சகிருத்யம் யாவை?

1. சத்யோஜாதம் - பிரம்மா - சிருஷ்டி. 2. வாமதேவர் - விஷ்ணு - காத்தல். 3. அகோரம் - உருத்திரர் - அழித்தல் (சம்ஹாரம்) 4. தத்புருஷம் - மஹேஸ்வரர் - மறைப்பு - (திரோதானம்) 5. ஈசானம் - சதாசிவர் - அருளல் (அநுக்கிரஹம்)

43. சிவபூஜையைச் செய்து அதனால் பயனடைந்தவர் எவரேனும் உளரா? சான்றுடன் விளக்கம் தருக?

சிவபூஜை செய்து பயனடைந்தவர்கள் அனேகம் பேர் உளர். சிவ பூஜையின் பயனை உலகுக்கு உணர்த்தவும், தான் மேன்மை பெறவு மென விநாயகர், முருகன், பார்வதி ஆகியோர் பூவுலகு வந்து பூசித்துப் பயன்பெற்ற தலங்கள் தமிழகத்தில் பல உள்ளன. காஞ்சிபுரத்தில் பார்வதி சிவ வழிபாடு செய்து இறைவனைத் தம் கணவனாக அடைந்தார். திருச்செங்கோட்டில் விநாயகர் வழிபட்டார். (இதை இன்று கணபதீச்சரம் என்பார்கள்) திருத்தணிகையில் முருகன் சிவ வழிபாடு செய்தார் என்பதும் அதனால் அவர் தாம் வேண்டிய தனைத்தையும் அடைந்தார் என்றும் கந்தபுராணம் கூறுகிறது.

இவர்களைத் தவிர, நந்திதேவர், பிரமன், விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி, காளி, மார்க்கண்டேயர், அகஸ்தியர், வசிஷ்டர், பதஞ்சலி, வியாக்ரபாதர், இந்திராதி தேவர்கள், நவக்கிரகங்கள், தக்ஷன் பாணாசுரன், அஷ்டவசுக்கள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், மணிவாசகப் பெருமான் ஆகியோரும், சந்தானக்குரவர்களான மெய்கண்டார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார், அருணந்தி சிவாசாரியார் மற்றும் பட்டினத்தார், சேந்தனார், காரைக்காலம்மையார், திலகவதியார் முதலான பற்பல அடியார்களும் சிவார்ச்சனை புரிந்து மேன்மையடைந்தனர்.

மேலும் உயர்திணை, உயிர்களேயன்றி அஃறிணை உயிர்களான சிலந்தி, யானை, நாகம், நாரை, குருவி போன்றனவும் சிவார்ச்சனை செய்து வீடடைந்த வரலாறுகள் பல உள்ளன.

குறிப்பு : மோட்சத்தை அடைய வேண்டுமென்று விரும்புப வர்கள் சிவாகம விதிப்படியான சிவபூஜைகளைச் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் ஆகமத்திற்கு வேறுபடாத வேத மந்திரங்களையும் சேர்த்துப் பூஜை செய்யலாம். ஆனால் வேதமந்திரங்களால் மட்டுமே பூஜை செய்பவர்கள் ஸ்வர்காதி பதவிகளை அடைய முடியுமேயன்றிச் "சிவ லோக பதவி" எனும் மோட்சத்தை அடைய முடியாது என்பதுணர்க.

44. ஆத்மார்த்த பூஜையை ஒருவர் செய்வதால் அடையும் பலன்கள் யாவை?

மனம் விரும்பி உறுதியுடன் ஒருவர் தீட்சை பெற்று ஆத்மார்த்த பூஜையைவிடாமல் தினமும் செய்துவந்தால் அவர் நிச்சயமாக சகல பாவங்களும் நீங்கப் பெறுவார். அதாவது பிரமஹத்தி பாவம் நீங்கும். பகைவர்களால் பயம் உண்டாகாது. எல்லா ஐஸ்வர்யங்களையும் பெறலாம். பற்பல யாகங்களாலும் தானங்களாலும் அடையமுடியாத பெரும்புண்ணியத்தை அடையலாம். வாழ்வில் வெற்றி பெற்று மகிழலாம். ஆணவம் முதலான மலங்கள் நீங்கும். இறுதியில் சிவபதவி கிட்டும்.

45. சிவதர்மங்கள் என்பவை யாவை? அவை எத்தனை அந்த தர்மங்களைப் புரிவதால் என்ன நன்மைகள் கிடைக்கும்?

சிவதர்மங்கள் என்பன மொத்தம் ஐந்தாகும். 1. விபூதி அணிதல் 2. ருத்ராக்ஷம் தரித்தல் 3. ருத்ர மந்திரஜபம் செய்தல் 4. வில்வார்ச்சனை புரிதல் 5. சிவநிவேதனப் பொருளை உண்ணுதல் என்பனவாகும். (ருத்ர மந்திர ஜபம் செய்யமுடியாதவர்கள் பஞ்சாட்சர மந்திர ஜபம் செய்ய வேண்டும்.)

"பூதி ருத்ராக்ஷோ, ருத்ரஜபோ, பில்வார்சனம், நைவேத்ய போஜனம்" என்று சிவரஹஸ்யம் எனும் நூல் கூறுகிறது.

மேற்கண்ட சிவதர்மங்களைச் செய்பவர்கள் சிவபோகம் அடைவார்கள்.

சிவதர்மங்களைப் பற்றிக் கேட்பவர் சிவதர்மத்தைக் கேட்க விரும்புவோர், சிவபூஜைக்கு உதவுவோர், சிவலோக பதவியடைந்து மீண்டும் பிறக்க நேரின் இவ்வுலகில் சக்ரவர்த்தியாகப் பிறப்பார்கள் என்பதைக் "கேட்டுள்ளார். மகிழச் சொல்வார், கிடைக்குமோ வெமக்கும் என்று வேட்டுளார். உபகாரங்கள் விளைத்துளார் இவரு மெய்ய நாட்டுளார், பிறக்கில் இம்மண்ணாயகராவ ராகித் தேட்டுளார் சிவதன்மங்கள் வாதனை திகழ்தலாலே" எனும் சிவ தருமோத்திரப் பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

46. பஞ்சகவ்யம் என்பதற்குப் பொருள் யாது? அதை எவை களைக் கொண்டு தயார் செய்தல் வேண்டும். அதனால் பலன் என்ன?

பஞ்சகவ்யம் என்பது பசுவிடமிருந்து நாம் பெறுகின்ற ஐந்து என்பது பொருள். அவை 1. கோமூத்திரம் 2. கோமயம் (பசுஞ்சாணம்) 3. பால் 4. தயிர் 5. நெய் என்பனவாம்.

இதற்குப் பொருள் : "ப" பாபநிவாரணம். "ச" ஆன்மசுத்தி. "க" பிறவி நீக்கம். "வியம்" மோட்சம் என்பவையாகக் கூறப்படுகின்றன. (அதாவது உயிர்களின் மலத்தைப் போக்கி அவற்றின் பிறவியை ஒழித்து அவைகட்கு மோட்சத்தைக் கொடுக்கும் பெருமை யுடையதாகும் என்பது பொருள்)

பஞ்சகவ்யமின்றி செய்யப்படுகின்ற எந்தக் கிரியையும் தெய்வங் கள் விரும்பி ஏற்றுக்கொள்ளாவென ஆகமங்கள் கூறுகின்றன.

பசுக்களின் தோற்றம் வருமாறு :

கயிலாயத்தில் சிவசந்நிதானத்தில் திகழும் விருஷப தேவரைச் சூழ்ந்து நிற்கும் சிவப்பு நிறமுடைய 'சுரபி', கபில (காவி) நிறமுடைய 'நந்தா' புகை நிறமுள்ள 'சுசீலா' கருமை நிறமுள்ள 'சுபத்ரா' எனும் ஐந்து பசுக்களையும் உலக உயிர்கள் உய்ய பயன்படுமாறு பூமியில் பிறக்க சிவபெருமான் அருள் செய்தார்.

அதன்படி அவை பூவுலகில் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றின. அவை மூலம் மக்கள் பால், தயிர், நெய் முதலியன பெற்று அவற்றின் மூலமாகத் தங்கள் பாபங்களைப் போக்கிக் கொள் கின்றனர் என்பதுணர்க.

47. பஞ்சகவ்யம் தயாரிக்க வேண்டிய முறை வருமாறு:

அரிசியைப் பரப்பி ஒன்பது கோஷ்டங்கள் அமைக்க வேண்டும்.

நடுக்கோஷ்டத்தில் சிவதத்துவம் நிறைந்ததாக எண்ணி அதைச் 'சிவதத்வகோஷ்டம்' என்று கொள்ள வேண்டும்.

அதில் பசும்பாலை ஈசான மந்திரம் கூறி நிரப்பி ஈசான மந்திரத்தை ஒரு முறை ஜபிக்க வேண்டும். அதில் ஈசான மூர்த்தியின் திருவருள் சக்தி பதிந்ததாக பாவனை செய்ய வேண்டும்.

இதற்கு அதிபதி சுக்ரன் ஆவார். இவ்வாறு பாலைப் பூஜிப்பதால் சத்துரு பயம் நீங்கும் என்பர்.

இரண்டாவதாக கிழக்கு கட்டத்தில் சதாசிவதத்துவம் அமைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாக எண்ண வேண்டும். 'சுசாந்தபாத்திரம்' என்று பாத்திரத்தைக் கொள்ள வேண்டும். அதில் பசுந்தயிரை நிரப்பவேண்டும். தத்புருஷ மந்திரம் கூறி நிரப்பிப் பின் தத்புருஷ மந்திரத்தால் இரண்டுமுறை ஜபிக்க வேண்டும். இதனால் தத்புருஷரின் குணம் அதில் பதிந்ததாகப் பாவனை செய்ய வேண்டும்.

இதற்கு அதிதேவதை 'சந்திரன்' ஆவார். இதனால் புத்திரப்பேறு கிட்டும் என்பார்கள்.

மூன்றாவதாக தென்பகுதி கட்டத்தில் வித்யாதத்துவம் பதிந்த தாக எண்ண வேண்டும். 'தேஜோவத்' எனும் பாத்திரம் அமைந்த தாகப் பாத்திரத்தை வைக்க வேண்டும். அதில் பசு நெய்யை நிரப்ப வேண்டும். அகோர மந்திரம் சொல்லி நிரப்பிப் பின் அகோர மந்திரம் கூறி மூன்று முறை ஜபிக்க வேண்டும். அதில் அகோரமூர்த்தியின் குணம் பதிந்ததாக பாவனை செய்ய வேண்டும்.

இதற்கு அதிபதி 'ருத்ரன்' ஆவார். இதனால் மோட்சம் கிட்டும் என்பார்கள்.

நான்காவதாக வடக்கு கோஷ்டத்தில் புருஷதத்துவம் பதிந்த தாகப் பாவித்து அதன்மீது 'ரத்னோதகபாத்திரம்' எனும் பெயருடைய தாக எண்ணி பாத்திரம் அமைத்து அதில் வாமதேவமந்திஞ்சொல்லி கோஜலத்தை இட்டுப் பின் வாமதேவ மந்திரத்தை நான்கு முறைகள் ஜபிக்க வேண்டும். இதனால் அதில் வாமதேவரின் குணம் பதிந்ததாக எண்ண வேண்டும். இதற்கு அதிபதி: 'கங்காதேவி'. இதனால் சகல செல்வங்களையும் அடையலாம் என்று கூறுவார்கள்.

ஐந்தாவதாக மேற்கில் உள்ள கோஷ்டத்தில் காலதத்துவம் பதிந்ததாக எண்ணிக்கொண்டு 'அமிர்தமய' பாத்திரம் என்று சொல்லி அமிர்தமயமான பாத்திரம் என்பதாக எண்ணி வைத்து அதில் சத்யோஜாத மந்திரம் சொல்லி கோமயத்தை இடவேண்டும். பின்பு சத்யோஜாத மந்திரம் சொல்லி ஐந்து முறை ஜபிக்க வேண்டும்.

இதனால் சத்யோஜாதரின் குணம் அதில் பதிந்ததாகப் பாவிக்க வேண்டும். இதற்கு அதிபதி 'சூரியன்' ஆவார். இதனால் வியாதிகள் நீங்கும் என்பார்கள்.

ஆறாவதாக வடகிழக்கு கட்டத்தில் ப்ரகிருதி தத்துவம் பதிந்ததாக எண்ணி அதில் 'அவ்யக்தபாத்திரம்' எனும் பாத்திரத்தை வைத்து அதில் தர்பையுடன் கூடிய தண்ணீரை நிரப்ப வேண்டும். அதில் சிவமூல மந்திரம் சொல்லி தண்ணீரை நிரப்பிப் பின் சிவமூல மந்திரத்தை ஆறு முறைகள் கூறி அபிமந்திரிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனால் சிவபிரானின் அருட்சக்தி அதில் பதிந்ததாக பாவனை செய்க. இதனால் சகல பாவங்களும் நீங்கும்.

48. பஞ்சகவ்யங்களைக் கூட்டும் முறைகள்

தயிரை நெய்யிலும், தயிரும் நெய்யும் கலந்த அதை கோஜலத்திலும், தயிரும் நெய்யும் கோஜலமும் கூடிய அதைக் கோமயத்திலும் சேர்த்துக் கலந்து முடிவில் அவைகளைப் பாலில் கொண்டு சேர்ப்பது கிருஷ்டிக்கிரம சேர்க்கை என்பர்.

கோவில் பிரதிஷ்டாகாலங்களில் இவ்வாறு பஞ்சகவ்யம் நிர்மாணம் செய்ய வேண்டும்.

நெய் + கோஜலம் + கோமயம் + தயிர் + பால் என்ற முறையில் கலப்பது சம்ஹாரக்கிரமம் எனப்படும். இதை அந்தியேஷ்டிக் காலங்களில் பயன்படுத்தவேண்டும்.

கோஜலம் + கோமயம் + நெய் + தயிர் + பால் என்ற வகையில் கலப்பது திரோதானம் எனப்படும். இதை தீட்சை, பிராயச்சித்தம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தவேண்டும்.

இவை அனைத்திற்கும் முடிவில் குசோதகத்தைச் சேர்க்க வேண்டும். அதில் பிரம்மனைப் பூஜிக்க வேண்டும். அதன் பிறகு பஞ்சகவ்யத்தை சம்ஹிதா மந்திரங்களால் பூஜை செய்து தர்பையால் கலக்கி ஒன்றாக்கி சிவமூலமந்திரத்தை பதினாறு முறை ஜபம் செய்து திக்பந்தனம் அவகுண்டனம் செய்து தேனுமுத்திரை காட்டி சிவாசன, மூர்த்தி சம்ஹிதா மந்திரங்களால் மீண்டும் அர்ச்சனை செய்து தூப தீப நைவேத்யம் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பின் யாகக்கிருஹம், பூஜாஸ்தானம் போன்ற இடங்களில் தர்பை நுனியால் பஞ்சகவ்யத்தை உரிய மந்திரத்தோடு ப்ரோக்ஷணை செய்ய வேண்டும்.

குறிப்பு : பசுவின் பால் சூலை நோய், புண்கள் பலமின்மை ஜுரம் இவைகளைப் போக்கும்.

பசுவின் தயிர் காசம் நீக்கும். ஆயாசம் போக்கும், எரிச்சல் நீக்கும்.

பசுவின் நெய் பித்தம், மூலநோய், விஷம் இவைகளைப் போக்கும்.

கோஜலம் காமாலை போக்கும், பாண்டு நோயைக் குணமாக்கம், விஷம் நீக்கும்.

கோமயம் உடற்சுத்தியை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லும், நோய்களை நீக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குசோதகம் கபம் நீக்கும், விஷ ஜுரம் போக்கும், தாகம் தீர்க்கும். நமச்சல் போக்கும்.

எனவே பஞ்சகவ்யம் என்பது சுத்திக்காக மட்டுமின்றி மேற்கண்ட நோய்களைப் போக்கும் என்பதாலும் செய்யப்பட வேண்டுமென்பது தெளிவு.

49. சப்தகோடி மகா மந்திரங்கள் என்பவை யாவை? விளக்குக.

நம: ஸ்வாஹா, ஸ்வதா, வௌஷட், வஷட், பட், ஹூம் என்பவையே சப்தகோடி மகாமந்திரங்கள் எனப்படும். கோடி என்பது கடைசி என்ற பொருளுடையதாகும். (கோடி என்பதை எண்ணிக்கை யாகக் கொள்ளலாகாது).

நம: என்ற முடிவுடைய மந்திரம் புருஷரூபமாகவும், 'ஸ்வாகா', 'ஸ்வாதா' என்னும் முடிவுடைய மந்திரங்கள் பெண்ரூபமாகவும், 'பட்', 'வௌடிட்', 'வஷட்', 'ஹூம்' என்று முடியும் மந்திரங்கள் நபும்ஸகரூபமாகவும் கொள்ள வேண்டும்.

நம: என்பது இருஷிகளுக்கும், ஸ்வாஹா என்பது தேவர் களுக்கும் ஸ்வாதா என்பது பிதிர்களுக்கும் வௌஷட் என்பது பூதாதி களுக்கும், வஷட் என்பது மனிதனுக்கும் பட் என்பது உக்ரமான தெய்வங்களுக்கும் ஹூம் என்பது கட்டளையாகவும் அமையும் என்க.

'நம:' என்பதின் அதிதேவதை 'பிருகுணி' என்றும்,

'ஸ்வாஹா' என்பதின் அதிதேவதை 'பிரம்மவேதாளி' என்றும்,

'ஸ்வதா' என்பதின் அதிதேவதை 'தாணுமதி' என்றும்,

'வௌஷட்' என்பதின் அதிதேவதை 'அம்பிகா' என்றும்,

'வஷட்' என்பதின் அதிதேவதை 'ரூபிணி' என்றும்,

'பட்' என்பதின் அதிதேவதை 'நந்தினி' என்றும்,

'ஹூம்' என்பதின் அதிதேவதை 'ஜ்வாலா' என்றும்

மேற்கண்ட மந்திரங்களின் ஈஸ்வரிகள் வழங்கப்படுகின்றனர்.

50. ஆறு ஆசனங்கள் யாவை? அவற்றை வரிசைப்படுத்தி விளக்குக. அல்லது சிவாசன உறுப்புக்கள் யாவை? விளக்குக.

1. கூர்மாசனம் 2. அனந்தாசனம் 3. சிம்ஹாசனம் 4. யோகாசனம் 5. பத்மாசனம் 6. விமலாசனம் என்பன ஆறு ஆசனங்களின் பெயர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகும். அவை கூர்மாசனம் அதன்மேல் அனந்தாசனம். அதன்மேல் பத்மாசனம், அதன்மேல் விமலாசனம் என முறையே கீழிருந்து மேலாகக் கற்பிக்க வேண்டும். இவற்றின்மீது சிவாசனம் அமையும் என்க. மேற்கண்ட ஆறும் சிவாசன உறுப்புக்கள் எனப்படும்.

51. கலை ஐந்து என்பவை எவை? அவை எவ்வாறு உலகில் அல்லது உடம்பில் கலந்து காணப்படுகின்றது என்பதையும் கூறுக.

கலை, சாந்திய தீதகலை, சாந்திகலை, வித்யாகலை, பிரதிஷ்டா கலை, நிவிருத்திகலை என ஐந்தாகும்.

அவை உலக அளவில் (அண்டம்) காணும் பொது அண்டத்தை ஒரு சிவலிங்க வடிவமாக எண்ண வேண்டும். அந்த சிவலிங்கத்தின் ருத்ரபாகமெனும் லிங்கத்தின் (கூம்பு) அளவு வரை மேலிருந்து கீழாக சாந்தியதீத கலையும், சாந்தி கலையும் அமையும். லிங்கத்தின் நடுப் பாகமான விஷ்ணு பாகத்தில் (ஆவுடையரெனும் அதன் கீழ் நிலையும்) வித்யாகலையும், லிங்கத்தின் பிரம்மபாகமான கீழ்தளத்தில் பிரதிஷ்டா கலையும், லிங்கபீடத்தின் பாகமான கீழ்தளத்தில் பிரதிஷ்டா கலையும், லிங்கபீடத்தின் கீழே (பூமியில் மறைந்துள்ள பகுதியில்) (ஆதார சிலையில்) நிவிருத்தி கலையும் வியாபித்ததாகக் கொள்ள வேண்டும்.

சாதாரண மனித உடலில் தலைக்குமேல் சாந்தியதீத கலையும், சாந்தி கலையை முகத்திலும் கழுத்து முதல் நாபிவரை வித்யா கலையையும் நாபிக்குக் கீழ் முழங்கால் வரை பிரதிஷ்டா கலையை யும், முழங்காலுக்குக் கீழ் பாதம்வரையாக நிவிருத்தி கலையையும் முறையே நியாசம் செய்ய வேண்டும்.

52. ஷடத்துவா என்பதென்ன?

கலாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, மந்திராத்வா, பதாத்வா, தத்துவாத்வா என அத்துவாக்கள் ஆறு ஆகும். அத்துவா என்றால் 'வழி' என்பது பொருளாகும்.

அதாவது மாயையானது உயிர்களைத் தன் வயப்படுத்தி அவற்றில் பதிந்து நிற்கும் மார்க்கம் (வழி) என்பது அத்துவா என்பதற்குப் பொருளாகும்.

அந்த அத்துவாக்கள் 1. சுத்தாத்வா என்றும் 2. மிஸ்ராத்வா என்றும், 3. அசுத்தாத்வா என்றும் மூவகைப்படும்.

பொதுவாக அத்துவா ஆறு என்றாலும் கூட, சுத்தாத்வா என்பது சுத்த மாயையில் உள்ள கலாத்வா தத்துவாத்வா புவனாத்துவா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வர்ணாத்வா பதாத்துவா மந்திராத்வா என்பவற்றையும் கொள்ள வேண்டும்.

அசுத்த மாயையில் 'மிச்ராத்வா' என்றும், ப்ருகிருதி மாயையில் 'அசுத்தாத்வா' என்றும் அழைக்கப்படுகின்றன.

இவற்றுள் தத்துவம், கலை, புவனம் எனும் மூன்று அத்வாக்களும் த்ரவ்யவடிவம் உடையவை என்றும், வர்ணம், பதம், மந்திரம் எனும் மூன்று அத்வாக்களும் ஒலி வடிவம் உடையனவென்றும் அறிதல் வேண்டும்.

புவனம் தத்துவத்தையும் தத்துவம் கலையையும், பற்றி நின்று செயல்படும் என்றும், வர்ணம் உலகில் தோன்றிய உயிரோடு கூடிய உடல்களைப் பற்றி நின்று செயல்படும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

53. கலாத்வா விளக்குக.

1. சாந்தியதீதகலை 2. சாந்தி கலை 3. வித்யா கலை 4. பிரதிஷ்டா கலை 5. நிவிர்த்தி கலை என்பன கலாத்வா எனப்படும்.

54. புவனாத்வா என்பதை விளக்குக. புவனங்கள் மொத்தம் எத்தனை? அவற்றின் வியாபகம் எப்படி என்பதையும் கூறுக.

எண்ணற்ற புவனங்கள் அண்டகோளத்தில் வியாபித்து இருந் தாலும் குறிப்பாகச் சைவ சாஸ்திர நூல்கள் 224 புவனங்கள் பற்றிக் கூறுகின்றன. அவையே ஈண்டு புவனாத்துவா எனப்படுகின்றன. அவை முப்பத்தாறு தத்துவங்களிலும் வியாபித்து நிற்கின்றன. அவை வருமாறு:

பிருதிவி தத்துவத்தில் 108 புவனங்களும், அப்புதத்துவத்தில் 8 புவனங்களும், தேயுதத்துவத்தில் 8 புவனங்களும், வாயு தத்துவத்தில் 8 புவனங்களும், ஆகாய தத்துவத்தில் 8 புவனங்களும், அகங்கார தத்து வத்தில் 8 புவனங்களும், புத்தித் தத்துவத்தில் 8 புவனங்களும், மனஸ் தத்துவத்தில் 8 புவனங்களும், புருஷத் தத்துவத்தில் 6 புவனங்களும், ராக தத்துவத்தில் 5 புவனங்களும், வித்யா தத்துவத்தில் 2 புவனங்களும், கலாதத்துவத்தில் 2 புவனங்களும் நியதி தத்துவத்தில் 2 புவனங்களும், கால தத்துவத்தில் 2 புவனங்களும், மாயா தத்து வத்தில் 8 புவனங்களும், சுத்த வித்யா தத்துவத்தில் 9 புவனங்களும், ஈஸ்வர தத்துவத்தில் 8 புவனங்களும், சக்தி தத்துவத்தில் 1 புவனமும், விந்து தத்துவத்தில் 5 புவனங்களும் நாத தத்துவத்தில் 10 புவனங்களும் ஆக புவனங்கள் 224 என்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

55. தத்துவாத்வா என்பதை விளக்குக. அவை எத்தனை? அவற்றின் வியாபகம் எப்படி விளக்குக.

உலகப் பொருட்கள் அனைத்தும் (தேவர்கள் முதல் மனிதர் மற்றும் உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும்) அழியும் இயல்புடையதாகும்.

தத்துவம் என்பது அழியாததாகும். மஹாப்பிரளய காலம் வரை தத்துவங்கள் நிலைத்திருக்கும் என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும்.

அவை அகக்கருவி, புறக்கருவி என இருவகையாகும். அகக் கருவித் தத்துவங்கள் 36, புறக்கருவித் தத்துவங்கள் 60. ஆக தத்துவங் கள் 96 என்று அறிய வேண்டும். அகக்கருவித் தத்துவங்கள் 1. பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் ஐந்து பூதங்கள் (பூதம் : தோற்றம்)

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனும் ஐம்பூதங்களின் தன் மாத்திரைகள் ஐந்து.

வாக், பாதம், பாணி, பாயு, உபஸ்தம் எனும் கர்மேந்திரங்கள் ஐந்து.

சுரோத்திரம், தவக், சட்சு, ஜிஹ்வா ஆக்ராணம் எனும் ஞானேந்தியங்கள் ஐந்து.

மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் எனும் அந்தக்காரணம் (உள்ளுறுப்பு) நான்கு.

புருஷன், ராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை எனும் வித்யா தத்துவம் ஏழு.

சுத்தவித்யை, ஈஸ்வரம் எனும் இரண்டு சக்தி (சாதக்யம்) ஒன்று.

விந்து தத்துவம், நாததத்துவம் இரண்டு. ஆக 36 தத்துவங்களும் அகக்கருவித் தத்துவங்கள் எனப்படும். கடைசியில் கூறப்பட்ட சுத்தமாயை - ஈஸ்வரம் சாதாக்யம், நாதம், விந்து ஆகிய ஐந்து தத்துவங் களுக்குச் சிவதத்துவம் என்பது பெயராகும்.

புறக்கருவி தத்துவங்கள் அறுபது வருமாறு :

1. பிருதிவி தத்துவத்தின் கூறு. 1. மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஆக 5.

அப்புதத்துவத்தின் கூறு : 1. ஓடுநீர், உதிரம், சுக்லம், மூளை, மச்சை, ஆக 5.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேயு தத்துவத்தின் கூறு:

1. ஆகாசம் 2. நித்திரை 3. பயம் 4. மைதுனம் (உடற்சேர்க்கை) 5.சோம்பல் ஆக 5.

வாயுதத்துவத்தின் கூறு : 1. ஆடல் 2. இருத்தல் (அமர்தல்) 3.கிடத்தல் (படுத்தல்) 4. நடத்தல் 5. நிற்றல் ஆக 5.

ஆகாயதத்துவத்தின் கூறு : 1. காமம் 2. க்ரோதம் 3. லோபம் 4.மோகம் 5. மதம் ஆக 5.

தசவாயுக்கள் : 1. பிரணன் 2. அபானன் 3. வியானன் 4. உதானன் 5. சமானன் 6. நாகன் 7. கூர்மன் 8. கிரிகரன் 9. தேவதத்தன் 10. தனஞ் செயன் ஆக 10.

வசனாதிகள் : 1. வசனம் 2. கமனம் 3. தானம் 4. விசர்கம் 5.ஆனந்தம் ஆக 5.

நாடிகள் (தசநாடிகள்): 1. இடா 2. பிங்களா 3. சுஷு்ம்நா 4.காந்தாரி 5. அத்தி 6. சிஹ்வா 7. அலம்புடா 8. சங்கினி 9. வயிரவன் 10. குதன் ஆக 10.

வாக்கு நான்காவன : 1. சூக்ஷ்மா, பைசந்தி, மத்யமா, வைகரி என 4.

ஏஷணை மூன்றாவன: 1. அர்த்தவேஷணை (பணத்தாசை) 2.புத்திர வேஷணை (மக்கள் மீது பற்று) 3. லோகவேஷணை (உலகப்பற்று) இதைப் பணத்தாசை, பெண்ணாசை, மண்ணாசை என்றும் கூறுவர்.

குணம் மூன்றாவன: 1. ராஜசம் 2. தாமசம் 3. சாத்வீகம் ஆக 3.

ஆகமொத்தம் புறக்கருவிகள் 60 ஆகும். அகக்கருவிதத்துவங்கள் 36, புறக்கருவி தத்துவங்கள் 60. ஆக தத்துவங்கள் 96 ஆகும் என்பதுணர்க.

56. வர்ணாத்வா என்பதை விளக்குக.

வர்ணம் என்பதைத் தமிழில் வண்ணம் என்பர். வர்ணம் என்பதற்கு அட்சரம் (எழுத்து) என்பது பொருள். பிந்து சக்தியின் காரியமாக அட்சரங்கள் தோன்றினவென்று அறியவேண்டும்.

அவை உயிரெழுத்துக்காளன அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, ளு, ளூ, எ, ஐ, ஓ, ஔ, அம், அஹ ஆக 16.

க. க்க க (GA)க்க (GGA)ங 5.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ச, ச்ச, ஜ, ஜ்ஜ, ஞ 5. ட ட்ட, ட. (DA) ட்ட (DDA) ண 5.

த, த்த, த.(DHA)த்த (Ddha) ந 5.

ப. ப்ப ப்ப(BA) ப்ப (BBA)ம 5

ய, ர, ல, வ, ~> ஷ, ஸ, ஹ, ள, க்ஷ ஆக 10.

உயிர் 16 மெய் 35 ஆகமொத்தம் (16+35=51) 51 அக்ஷரங்கள் இதையே 'வர்ணாத்வா' என்று கூறுவார்.

57.பதாத்வா விளக்குக

எழுத்துக்களின் சேர்க்கையால் பதங்கள் உண்டாகின்றன. அவ்வாறு உண்டான பதங்கள் எண்பத்தொன்றைக் தன்னகத்தே கொண்ட 'வ்யோமவ்யாபி மந்திரத்தையே' பதாத்வா என்று வழங்குகின்றனர்.

வ்யோமவ்யாபி மந்திரமாவது:

1. ஓம் 2. வ்யோமவ்யாபினே 3. வ்யோமரூபாய 4. ஸர்வவ்யாபினே 5. சிவாய 6. அனந்தாய 7. அநாதாய 8. அநாஸ்ரிதாய 9. த்ருவாய 10. சாஸ்வதாய 11. யோகபீட சம்ஸ்திதாய 12. நித்யயோகினே 13.த்யானஹாராய 14. ஓம்நமச்சிவாய 15. ஸர்வப்பிரபவே 16. சிவாய 17. ஈசான மூர்த்தாய 18. தத்புருஷவக்த்ராய 19. அகோரஹிருதயாய 20. வாமதேவகுஹ்யாய 21. ஸத்யோஜாதமூர்த்தயே 22. ஓம் நமோ நம: 23. குஹ்யாதி குஹ்யாய 24. கோப்த்ரே 25. அநிதனாய 26.ஸர்வயோகாதிபதாய 27. ஸர்வவித்யாதிபாய 28. ஜ்யோதிரூபாய 29. பரமேஸ்வரபராய 30. அசேதன அசேதன 31. வ்யோமின் வ்யோமின் 32. வியாபின் வ்யாபின் 33. அரூபின் அரூபின் 34. ப்ரதமப் ப்ரதம 35. தேஜஸ்த்தேஜ 36. ஜ்யோதிர் ஜ்யோதி 37. அரூப 38.அனக்னே 39. அதூம 40. அபஸ்ம 41. அநாதே 42. நாநா, நாநா 43.தூதூ, தூதூ 44. ஓம் பூ: 45. ஓம் புவ: 46. ஓம் சுவ: 47. அநிதன 48.நிதன 49. நிதனோத்பவ 50. சிவ 51. சர்வ 52. பரமாத்மன் 53.மஹேஸ்வர 54. மகாதேவ 55. ஸத்பாவேஸ்வர 56. மஹாதேஜ: 57.யோகாதிபதே 58. முஞ்ச, முஞ்ச 59. ப்ரமத ப்ரமத 60. சர்வசர்வ 61. பவபவ 62. பவோத்பவ 63. ஸர்வபூதசுகப்ரத 64. சர்வ சாந்நித்யகர 65. ப்ரம்ம விஷ்ணுருத்ரபர 66. அநர்ச்சித அநர்ச்சித 67. அசம்ஸ்க்ருத அசம்ஸ்க்ருத 68. பூர்வஸ்தித பூர்வஸ்தித 69. சாக்ஷிசாக்ஷி 70. துருதுரு 71. பதங்க பதங்க 72. பிங்க பிங்க 73. ஞான ஞான 74. சப்த சப்த 75.சூக்ஷ்ம சூக்ஷ்ம 76. சிவ 77. சர்வ 78. ஸர்வத 79. ஓம் நமோ நம: 80.ஓம் சிவாய 81. ஓம் நமோ நம : இதையே வ்யோவியாபிபத மந்திரம் என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

58. மந்திரத்வா விளக்குக. மந்திரங்களின் அத்வா மந்திரத்வா எனப்படும். அவை வருமாறு:

சிவ, ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜதா மந்திரங்கள் 6 மற்றும்

ஹ்ருதயம், சிரஸ், சிகா, கவச, அஸ்தர மந்திரங்கள் 5 ஆக 11

சில பாடங்களில் சிவ மந்திரத்தைச் சேர்க்காமல் ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத மந்திரங்கள் (ஆக 5)

ஹ்ருதய, சிரஸ், சிகா, கவச, அஸ்தரம். அத்துடன் நேத்ரம் சேர்த்து ஆறாகவும் (ஆக 6+5=11) பதினோரு மந்திரங்களை மந்திரத்வாவில் வழங்குகின்றனர்.

முன்பு கூறியபடி ஆறு அத்வாக்களில் வர்ணாத்வா பதாத்வா, மந்திராத்வா மூன்றும் சொற்பிரபஞ்சம் அதாவது சொற்கூட்டம் என்றும், புவனாத்வா, தத்துவாத்துவா, கலாத்வா ஆகிய மூன்றும் பொருட் பிரபஞ்சம் பொருட்கூட்டம் என்றும் உணரவேண்டும்.

59. கலாத்வா, தத்வாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்திராத்வா எனும் ஆறு அத்வாக்களும் இறைவனின் உடலாகும். (அதாவது இறைவனுக்கு உடலாகக் கற்பிக்கப் படுகிறது என்கின்றார்களே) எப்படி? விளக்குக.

சிவாகமங்கள் மூலம் சிவனை அர்ச்சனை செய்ய முன்னோர்கள் பத்ததி (வழிமுறை) என்ற பெயரில் பல வழி நூல்களை இயற்றி உள்ளனர். அவைகளில் எல்லாம் பொதுவாகச் சிவனை வழிபட அவர்கள் கூறும் வழி ஒன்றுதான்.

அதாவது இதயத்தை தாமரை மலருடன் ஒப்பிட்டு அதில் சிவனைச் சேர்ப்பித்து வழிபடுவது அல்லது வெளியே ஆசனங்கள் அமைத்து அதாவது கூர்மாசனம் முதல் விமலாசனம் வரையான ஆறு ஆசனங்களையும் முறையே அமைத்து அதன் மீது சிவனை ஆவா ஹித்து வழிபாடு இயற்றுவது என்பதாகும். அதை நாம் இப்போது விரிவாகக் காண்போம்.

பிருதிவி தத்துவம் மாணிக்க நிறத்தில் கிழங்கு போன்று நாபியில் (தொப்புளில்) நிலைத்திருக்கும். (அக்கிழங்கிலிருந்து) அப்புதத்துவம் முதல் காலதத்துவம் முடிய 29 தத்துவங்களும் நீலநிறமுடைய கொடியாக விளங்கும். அக்கொடி எட்டு அங்குல நீளமும் ஒன்பது துவாரங்களும் பொருந்தியதாக இருக்கும். புத்தியின் காரியமாகிய ஐம்பது வகை பாவங்களும் அத்தாமரைத் தண்டின் நூல்கள் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாயா தத்துவம் அந்தக் கொடியின் முடிவில் பூவின் கீழ் விளங்கும் முடிச்சு போன்ற பகுதியாகும். காலாக்னி புவனம் முதல் புவனேசபுவனம் முடிய உள்ள 191 புவனங்களும் தாமரைத் தண்டின் முட்கள் ஆகும்.

சுத்தவித்யா தத்துவம் (வெண்) தாமரைப்பூ ஆகும். அதன் எட்டு இதழ்களும் நாலங்குல நீளமிருக்கும். அந்த எட்டு இதழ்களும் ஓம், ஹாம், ஹீம், ஹூம், ஹேம், ஹைம், ஹோம், ஹௌம் எனும் எட்டு அட்சரங்களாக விளங்கிநிற்கும் என்றும், அல்லது அஷ்டதிக் பாலகர்களின் பீஜாட்சரங்களான யரலவ ~> ஷ, ஸ, ஹ எனும் எட்டு அட்சரங்களாக விளங்கும் என்றும் கூறுவர். இந்த எட்டு இதழ்களிலும் அஷ்டவித்யேஸ்வரர் எனும் அனந்தர் சூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், த்ரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி எனும் எண்மரும் முறையே கிழக்கு இதழிலிருந்து வடகிழக்கு (ஈசானம்) இதழ்வரை சூழ்ந்திருப்பார்கள். இம்மலர் மலர்ந்த நிலையில் பன்னிரெண்டு அங்குலம் விரிந்து இருக்கும். இம்மலரில் உள் இதழ்கள் எனும் (உபதளங்கள்) பல இருக்கும். அந்த இதழ்களில் முடிவில் காயைச் சுற்றி கேசரங்கள் இருக்கும். அது பொன்போன்ற நிற முடையது. அதுவே ஈஸ்வரதத்துவமாகும். அந்தக் கேசரங்கள் முத்துப் போன்ற நுனிகளுடன் 64 இருக்கும்.

பூவிற்கும் கேசரங்களுக்கும் இடையில் காய் இருக்கும். அதற்குக் 'கர்ணிகை' என்பது பெயராகும். அது சுமாராக ஒரு அங்குல உயரமிருக்கும். இதுவும் பொன் போன்ற நிறம் உடையது. இதுவே 'சாதாக்யதத்துவம்' ஆகும்.

அடுத்து அந்தக்காயில் காணப்படும் 51 விதைகளே உயிர் எழுத்து மெய்யெழுத்துக்களின் கூட்டமாகிய 51 ஆக்ஷரங்களாகும். இது பிந்து தத்துவமாகும்.

நாததத்துவம் என்பது பூவின் மணமும், அதன் காய் விதைகளில் உள்ள முளைகளும் (பருப்புகள்) ஆகும்.

பூவின் இதழ் முனைகளின் வட்ட வடிவம் சூரிய மண்டலமாகும். கேசர முனையின் வட்ட வடிவம் சந்திர மண்டலமாகும். காயின் வட்ட முனை அக்னி மண்டலமாகும்.

இவ்வாறாகிய ஹ்ருதய பத்மம் (ஹ்ருதயகமலம்) முதலில் கீழ்நோக்கி (அதோ முகமாக) நாலங்குலம் தாழ்ந்து நிற்கும் என்றும், அதனை உயர்வான பீஜமந்திரங்களால் மேல்நோக்கி மலர்ந்தெழச் செய்து அதன் நடுவில் மேற்கூறிய ஆறு வழிகளில் (ஷடத்துவ முறையில்) சிவஸ்ரூபத்தைக் கற்பித்து (லிங்கா காரமான மூர்த்தியாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கற்பித்து) ஈஸ்வரனை பூஜை செய்ய வேண்டும் என்பது சைவர்களின் தலையாய கடமையாகும் என்பதறிக.

60. மேற்கண்ட ஆறு அத்வாக்களின் வழியாக சிவலிங்கத்தை அதாவது லிங்காகாரமான சிவமூர்த்தியின் வியாபகத்தை எவ்வாறு கற்பிப்பது என்பதைத் தெளிவுபடுத்துக?

மேற்கண்ட ஆறு அத்வாக்களும் (ஷடத்துவாக்கள்) சிவலிங்க உருவில் நிற்கும் முறை வருமாறு:

சிவலிங்கத்தின் அடிப்பாகமான பிரம்ம பாகத்தில் நிவிர்த்தி கலை, பிரதிஷ்டா கலை ஆக இரண்டு கலைகளையும் விஷ்ணு பாகமான நடுப்பகுதியில் வித்யா கலையையும் சாந்தி கலை சாந்யதீத கலை ஆகிய இரண்டையும் ருத்ரபாகமான லிங்கத்திலும் நியாசம் செய்ய வேண்டும்.

'நியாசம்' என்பது அந்தந்த பகுதியில் விதிக்கப்பட்ட அந்தந்த தத்துவங்களை நிலைக்குமாறு பதியச் செய்வதாகும்.

இவ்வாறு செய்வதைக் கலாந்யாசம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

அடுத்ததாக புவனநியாசம் அதாவது முன்கூறிய 224 புவனங் களையும் முறையே சிவலிங்க உருவினில் நியாசம் செய்வதாகும்.

அதாவது 36 தத்துவங்களில் அடங்கிய ஒரு உருண்டை (உலக வடிவில்)யில் நிவர்த்திகலை முதல் சாந்திய தீத கலை வரையான ஐந்து கலைகளும் முறையே கீழிருந்து மேலாக வியாபகம் உள்ளவையாகும். நிவிருத்திகலை முதல் சாந்தியதீதகலை வரை அக்கோளம் பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றுள் நிவிர்த்திகலையில் பிருதிவி தத்துவம் ஒன்றை மட்டும் நியாசம் செய்ய வேண்டும். பொன்னிறமான இக்கலைக்கு அதிதேவதை பிரம்மா, நிவர்த்தி கலையில் இவரைச் சுற்றி ஹிரண்யகர்பர், விராட்புருஷர், காலர் என நான்கு பேர் உள்ளனர். இந்தப் பிரம்மனுக்கு நிவர்த்திகலையில் பஞ்சகிருத்தியம் உண்டெனினும் இவரது ஐந்தொழில்களில் மிகவும் முக்கியமானது சிருஷ்டியேயாகும். இந்தப் பிருதிவிதத்தத்துவத்தைப் பிருத்வி மண்டலம் என்றும் கூறுவர். இப்பிருத்வியில் உள்ள புவனங்கள் 108 ஆகும். அவை 1 காலக்னி புவனம் முதல் 108 பத்ரகாளி புவனம் வரை யாகும். அவற்றை நிவர்த்திகலையில் ஆகமங்களில் கூறப்பட்டுள்ள படி நியாசம் செய்ய வேண்டும். இதுபோலவே மற்ற கலைகளிலும் அடங்கும் புவனங்களை சிவலிங்கத்தில் நியாசம் செய்வது புசன நியாசம் எனப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்து அப்புதத்துவம் முதல் குணதத்துவம் வரையான 23 தத்துவங்களைத் தன்னகத்தே கொண்டது பிரதிஷ்டாகலையாகும். இதன் நிறம் ஸ்படிகம் ஆகும். (நீலநிறமும் கூறப்படுகிறது) இதன் அதிபதி விஷ்ணு ஆவார். இவரைச் சுற்றி வாசுதேவர், அநிருத்தர், பிரத்யும்நர், சங்கர்ஷணர் என்னும் நால்வரும் விளங்குவார்கள். இவருக்குப் பிரதிஷ்டா கலையில் ஐந்தொழில் உரிமை உண்டானாலும் முக்யமாக இவர் தொழில் ஸ்திதி (காத்தல்) எனும் தொழிலாகும்.

இதை அப்புமண்டலம் என்றும் கூறுவார்கள். இந்தப் பிரதிஷ்டா கலையில் 109வது புவனமான அமரேசபுவனம் முதல் 164வது புவனமான ஸ்ரீகண்டபுவனம் வரை 56 புவனங்களை நியாசம் செய்ய வேண்டும்.

அதன்பின் வித்யாகலையாகும். புருஷதத்துவம் முதல் காரிய மாயாதத்துவம் வரையான வித்யா தத்துவங்கள் ஏழும் கொண்டது வித்யாகலையாகும். இதன் நிறம் நெருப்பு போன்றதாகும். இதன் அதிபதி ருத்ரன். இவரைச் சுற்றிலும் சிவன், அரர் (ஹரர்) மிருடர், பவர் என நால்வர் விளங்குவார்கள். இவருக்கு வித்யாகலையில் பஞ்ச கிருத்தியம் உண்டானாலும் முக்யமாக இவரது தொழில் சம்ஹாரம் (அழித்தல்) ஆகும். இதற்கு அக்நிமண்டலம் என்ற பெயரும் உண்டு. இதில் 165வது புவனமான வாமபுவனம் முதல் 191வது புவனமான புவனேசபுவனம் வரையான புவனங்களை நியாசம் செய்ய வேண்டும்.

சாந்தி கலையில், சுத்தவித்யாதத்துவம், ஈஸ்வரதத்துவம், சாதாக்கிய தத்துவம் எனும் மூன்று தத்துவங்களும் அடங்கும். இதன் நிறம் புகை நிறமாகும். (வெண்மை கலந்த கருப்பாக விளங்கும் என்க)

இதன் அதிபதி மஹேஸ்வரன் ஆவார். இவரைச் சுற்றி ஈசர், விசுவேசர், பரமேஸ்வரர், சர்வேஸ்வரர் என்ற நால்வர் விளங்கு வார்கள். இவருக்குச் சாந்திகலையில் ஐந்தொழில் உண்டானாலும் முக்கியமான தொழில் திரோதானம் ஆகும். (மறைத்தல்) இதற்கு 192வது புவனமான வாமாபுவனம் முதல் 209வதாகிய சதாசிவ புவனம் வரை 18 புவனங்களாகும். எனவே சாந்திகலையில் மேற்கண்ட பதினெட்டு புவனங்களையும் நியாசம் செய்ய வேண்டும்.

பிந்து (சக்திதத்துவம்) நாதம் (சிவதத்துவம்) இரண்டுங் கொண்டது சாந்திதீதகலை எனப்படும். இதன் நிறம் சுத்த ஸ்படிக நிறமாகும். இதற்கு அதிபதி சதாசிவன் ஆவார். இவரைச் சற்றி இதற்கு முன் கூறிய நிவர்த்தி, பிரதிஷ்டா, வித்யா சாந்தி கலைகளின் அதிபர் களான பிரம்மன் முதலான நால்வரும் வியூகமாக நிற்பார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவருக்கு சாந்திய தீதகலையின் ஐந்தொழில் உரிமை உண்டெனினும் அனுக்கிரஹமே முக்கியமான தொழிலாகும். (அருளல் தொழில்)

இந்தத் சாந்திய தீதகலையில் பிந்துத்துவத்தில் 210வதான நிவர்த்தி கால புவனம் முதல் 214வதாகிய சாந்தியதீதகலாபுவனம் வரையில் 5 புவனங்களையும், நாதத்தத்துவத்தில் 215வதாகிய இந்திகாபுவனம் முதல் 224வதாகிய அநாஸ்ரித புவனம் வரை 10 புவனங்களையும் ஆக 15 புவனங்களையும் நியாசம் செய்ய வேண்டும். (சாந்தியதீத கலை என்பது பிரபஞ்சத்தின் முடிவான எல்லையாகும்).

மேற்கண்ட புவனங்களையும் தத்துவங்கள் என்றே கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன் கூறியபடி சிவலிங்கத்தில் பிரிக்கப்பட்ட ஐந்து கலைகளிலும் 224 புவனங்களையும் முறையறிந்து நியாசம் செய்வது புவனநியாசம் எனப்படும்.

61. வர்ணநியாசம்

அடுத்தது வர்ணநியாசம் (வர்ணம் வருமாறு: வர்ணம் என்பது அஷரங்களே. அவை 'அ' முதல் 'அ:' வரை உயிர் எழுத்துக்கள் பதினாறும், 'க' முதல் க்ஷ வரையான மெய்யெழுத்துக்கள் முப்பத்தி ஐந்தும் ஆக உள்ள 51 எழுத்துக்களுமே... ஈண்டு வர்ணம் என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன.

'அ' முதல் 'அ:' வரையான உயிர் எழுத்துக்கள் 16 வரையும் சாந்திய தீதகலையில் நியாசம் செய்யவேண்டும்.

க, க்க, க (GA) என்ற மூன்று எழுத்துக்களையும் சாந்திகலையில் நியாசம் செய்யவேண்டும். க்க (GGA) முதல் ங வரை ஏழு எழுத்துக் களையும் வித்யா கலையில் நியாசம் செய்ய வேண்டும். 'ட' முதல் 'ள' வரையான இருபத்திநான்கு எழுத்துக்களையும் பிரதிஷ்டா கலையில் நியாசம் செய்ய வேண்டும். 'க்ஷ' ஒன்றை மட்டும் நிவர்த்தி கலையில் நியாசம் செய்யவேண்டும். இதை ஆகமத்தில் வர்ணாத்வன்னியாசம் என்பர்.

குறிப்பு : மேற்கண்ட அட்சரங்களுக்கு அதிபதிகள் கூறப்படு கின்றனர். அதை அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

அது வருமாறு: உயிர் எழுத்துக்கள் 16க்கும் அதிபதி சிவபிரானும், 'க'காரம் முதலிய மெய் எழுத்துக்களுக்கு அதிபதி சக்தியுமாவர் என்பது பொது தத்துவம். மேலும் இவை எட்டு வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் 'அ' காரம் முதல் 'அ:' காரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரை 16 எழுத்துக்கும் அதிதேவதை விநாயகர் என்றும், 'க' என்ற எழுத்து முதல் 'க்ஷ' என்று முடியும் எழுத்துக்கள் வரையான 35க்கும் ஏழு வர்க்கங்களுக்கும் (1. கவர்கம் 2. சவர்க்கம் 3. டவர்க்கம் 4. தவர்க்கம் 5. பவர்க்கம் 6. யவர்க்கம் 7. சவர்க்கம் ஆக ஏழு வர்க்கங்கள் என்க) இவைகளின் அதிதேவதைகளாகப் பிராம்மி, மஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, சாமுண்டி, இந்திராணி ஆகிய சப்தமாதாக்களும் கூறப்படுகின்றனர்.

மேலும் அகராதியான 16 உயிர் எழுத்துகளும் பராசக்தியான லோகமாதாவின் 'சூக்ஷ்மரூபம்' என்பார்கள். 35 மெய் எழுத்துக்களும் "ஸ்தூலரூபம்" என்பார்கள்.

62. அடுத்து வருவது பதன்யாசமாகும். இதை ஆகமத்தில் 'பதாத்வன்னியாசம்' என்பார்கள்.

அது வருமாறு: 'வ்யோமவ்யாபி' பதமந்திரத்தின் 81 பதங்களையும் முறையே சிரசு முதல் பாதம் வரை சிவலிங்கத்தின் தலை முதல் பிரம்ம பீடம் வரை யாகநியாசம் செய்ய வேண்டும். இதற்கு பதவின் நியாசம் என்றும் பெயருண்டு.

மேலும் இம்மந்திரத்தின் 'ஓம்' என்ற பதம் ஒன்றை மட்டும் சாந்திய தீத கலையில் நியாசம் செய்யப்படவேண்டும்.

'வ்யோமவ்யாபினே' என்பது முதலாக 'நித்யயோகினே' என்ற பதம் வரை (ஆக 11 பதம்) சாந்தி கலையில் நியாசம் செய்யப்பட வேண்டும்.

'த்யானாஹராய' என்ற பதம் முதல் 'வியாபின் வ்யாபின்' என்ற பதம் ஈறாக உள்ள பதம் இருபதையும் வித்யா கலையில் நியாசம் செய்யப்படவேண்டும். 'அரூபின் அரூபின்' என்ற பதம் தொடங்கி 'மஹேஸ்வர என்ற பதம் வரையான இருபத்தோரு (21) பதங்களையும் பிரதிஷ்டா கலையில் நியாசம் செய்ய வேண்டும். "மஹாதேவ' பதம் முதல் ஓம் என்று முடியும் பதம் வரை உள்ள (28) இருபத்தி எட்டு பதங்களையும் நிவர்த்தி கலையில் நியாசம் செய்ய வேண்டும் என்பதுணர்க.

63. ஆறாவதாக மந்திராத்வா கூறப்படுகிறது.

மந்திராத்வாவின் மந்திரங்கள் வருமாறு:

'சிவாய நம:' ஈசானாய நம, தத்புருஷாய நம, அகோராய நம: வாமதேவாய நம: சத்யோஜாதாய நம: அஸ்திராய நம: நேத்ரேப்யோ நம:, கவசாய நம: சிகாயநம : சிரசே நம: ஹ்ருதயாய நம: எனும் 11

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகும். இந்த பதினொன்றில் சிவாய நம: என்பது மூலமந்திரம் எனப்படும். ஈசானம் முதல் சத்யோஜாதம் வரை பஞ்ச பிரம்ம மந்திரங்கள் எனப்படும்.

அஸ்த்ராய நம: முதல் ஹ்ருதய மந்திரம் வரை அங்க மந்திரங்கள் எனப்படும். ஆக இந்த பதினோரு மந்திரங்கட்கும் சம்ஹிதா மந்திரங்கள் என்பது ஆகமங்கள் கூறும் பெயராகும்.

இவற்றுள் சாந்திய தீதகலையில் சிவமந்திரம் ஈசான மந்திரம், அஸ்த்திர மந்திரம் ஆகிய மூன்றையும் நியாசம் செய்ய வேண்டும். சாந்தி கலையில் தத்புருஷ மந்திரம், கவச மந்திரம் இரண்டையும் நியாசம் செய்ய வேண்டும். வித்யா கலையில், அகோர மந்திரம், சிகா மந்திரம் இரண்டையும் நியாசம் செய்ய வேண்டும். பிரதிஷ்டா கலையில் வாமதேவ, சிரோ மந்திரங்களையும் நிவர்த்தி கலையில் சத்யோஜாத ஹிருதய மந்திரங்களையும் நியாசம் செய்ய வேண்டும்.

இவ்வாறு ஆறு அத்வாக்களின் மூலம் சிவபிரானை லிங்கத்தில் நியாசம் செய்து பூஜிப்பதே சிறந்த வழிபாடாகும். இந்த வழிபாட்டை ஹிருதய கமலத்தில் செய்தால் அந்தர் பூஜை என்றும், (உட்பூஜை) வெளியில் உருவங்களில் நியாசம் செய்து பூஜித்தால் பகிர் பூஜை (வெளிப்பூஜை) என்றும் வழங்கப்படுகிறது.

குறிப்பு : முன்னர் கூறியபடி இந்த ஆறு அத்வாக்களில் வர்ணாத்வா, பதாத்வா, மந்திரத்வா ஆகிய மூன்றும் சொற்பிரபஞ்சம் என்றும் புவனாத்வா, தத்துவாத்வா, கலாத்வா ஆகிய மூன்றும் பொருட்பிரபஞ்சம் என்றும் உணர்தல் வேண்டும்.

64. 224 புவனங்களின் பெயர்களும் அவை வியாபித்து நிற்கும் கலை, தத்துவம் ஆகியவும் யாவை? விளக்குக.

224 புவனங்களின் பெயர்களும் அவற்றின் வியாபகமும் வருமாறு: மேற்கண்ட 224 புவனங்களும் 36 தத்துவத்தில் கலந்து நிற்கும். எவ்வாறெனின் பிருதிவி தத்துவத்தில் 108ம் அப்புவில் 8ம் தேயுவில் 8ம், வாயுவில் 8ம், ஆகாயத்தில் 8ம், அகங்காரத்தில் 8ம், புத்தியில் 8ம், சித்தத்தில் 8ம், புருடனில் 6ம், ராகத்தில் 5ம், வித்தையில் 2ம், கலையில் 2ம், நியதியில் 2ம், காலத்தில் 2ம், மாயையில் 8ம், சுத்த வித்தையில் 9ம் ஈஸ்வரதத்துவத்தில் 8ம், சாதாக்ய தத்துவத்தில் 1ம், விந்துவில் 5ம், நாதத்தில் 10ம் ஆக 224 புவனங்கள் வியாபித்து நிற்கும்.

பிருத்விதத்துவத்தின் கீழ் பாலில் நிவர்த்தி கலையில் 1. காலாக்னி புவனம் 2. கூஷ்மாண்ட புவனம் 3. ஆடகேஸ்வர புவனம் 4. பிரம்ம புவனம் 5. வைணவ புவனம் 6. ருத்திரபுவனம் ஆகிய ஆறு புவனங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களும் விளங்கும். கீழ்பால் உள்ள காலாக்னியில் இவை இருக்கும். இவற்றின் அதிபர்களாக முறையே, காலாக்கினி ருத்ரர், கூஷ் மாண்டர், ஆடகேஸ்வரர் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் எனும் அறுவர் ஆவர்.

பிருத்வியின் கீழே விஷ்ணு திசையில் (மேற்கில்) 7. விருஷப புவனம் 8. விருஷபதரபுவனம் 9. அனந்தபுவனம் 10. குரோதன புவனம் 11. மாருதாசபுவனம் 12. கிருச்னபுவனம் 13. உதும்பரீச புவனம் 14. பணீந்திரபுவனம் 15. வச்சிரபுவனம் 16. தமுஷ்டீசபுவனம் ஆக பத்து புவனங்கள் விளங்கும். முறையே இவற்றின் அதிபர்களாக வ்ருஷபர், விருஷதரர், அனந்தர், குரோதனர், மாருதாசனர், க்ருசனர், உதும்பரீசர், பணீந்திர், வஜ்ரர், தமுஷ்டிரி எனும் பதின்மர் ஆவர். இவர்கள் விஷ்ணு நாயகர்களாகவார்கள்.

ப்ருதிவியின் ஈசான பாகத்தில் (வடகிழக்குப்பகுதியில்) 17.வித்யாதிபபுவனம் 18.ஈசானபுவனம் 19. சர்வக்ஞபுவனம் 20. ஞான புக்புவனம் 21. வேதபாரகபுவனம் 22. சுரேசபுவனம் 23. சர்வபுவனம் 24. ஜேஷ்டபுவனம் 25. பூதபாலபுவனம் 26. பலிப்பிரியபுவனம் என பத்து புவனங்கள் விளங்கம். மேற்கண்ட இந்த பத்து புவனங்களின் அதிபர்களாக முறையே ஞானபுஜர், வேதபாரகர், சுரேசர், சருவர், ஜேஷ்டர், பூதபாலகர், பலிப்பிரியர் எனும் பதின்மராவர் இவர்கள். ஈசானநாயகர்களாவர்.

ப்ருத்வியின் வடக்குதிசையில் 27. நிதீசபுவனம் 28. ரூபவத் புவனம் 29. தன்யபுவனம் 30. சௌம்யதேகபுவனம் 31. ஜடாதர புவனம் 32. லட்சுமீதரபுவனம் 33. ரத்னதரபுவனம் 34. ஸ்ரீதரபுவனம் 35. பிரசாதகபுவனம் 36. பிரகாமதபுவனம் என பத்து புவனங்கள் வியாபித்து நிற்கும். இவற்றின் அதிபர்களாக முறையே நிதீசர், ரூபவதர், தன்யர், சௌம்யதேஹர், ஜடாதரர், லட்சுமீதரர், ரத்னதரர், ஸ்ரீதரர், ப்ரசாதகர், ப்ரகாமதர் என்பவர் விளங்குவார்கள். இவர்கள் குபேர நாயகர்கள் அல்லது சோம குபேர நாயக்கர்கள் எனப்படுவார்.

பிருத்திவியின் வடமேற்கில் (வாயு திசையில்)) 37. சீக்ரபுவனம் 37. லகுபுவனம் 39. வாயுவேகபுவனம் 40. சூஷ்மபுவனம் 41. தீக்ஷ்ண புவனம் 42. க்ஷயாந்தக புவனம் 43. பஞ்சாந்தகபுவனம் 44. பஞ்சசிகா புவனம் 45. கபர்த்திபுவனம் 46. மேகவாகன புவனம் என பத்து புவனங்களாகும். இவற்றின் அதிபர்களாக சீக்ரர், லகு வாயுவேகர் சூக்ஷ்மர், தீஷ்ணர், க்ஷயாந்தகர், பஞ்சாந்தகர் பஞ்சிகர், கபர்த்தி மேகவாகனர் எனும் பதின்மர் ஆவார். இவர்கள் வாயுநாயகர்கள் ஆவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிருத்திவியின் மேற்கில் 47. பல புவனம் 48. அதிபலபுவனம் 49.பாசஹஸ்தபுவனம் 50. மஹாபலபுவனம் 51. சுவேதபுவனம் 52.ஜெயபத்ரபுவனம் 53. தீர்கபாகுபுவனம் 54. ஜலாந்தகபுவனம் 55.மேகநாதபுவனம் 56. சுநாதபுவனம் என்று பத்து புவனங்கள் இருக்கும். இவற்றின் அதிபதிகளாக முறையே பலர், அதிபலர், பாசஹஸ்தர், மஹாபலர், ஸ்வேதர், ஜயபத்ரர்,தீர்க்கபாஹு, ஜலாந்தகர், மேகநாதர், சுநாதர் எனும் பதின்மர் விளங்குவார்கள். இவர்கள் வருண நாயகர்கள் ஆவர்.

57. நிருருதிபுவனம் 58. மாரணபுவனம் 59. ஹந்தரபுவனம் 60.க்ரூரதிருஷ்டிபுவனம் 61. பயாநகபுவனம் 62. ஊர்த்வசேபபுவனம் 63. விரூபாக்ஷபுவனம் 64. தூம்பரபுவனம் 65. லோஹிதபுவனம் 66.தம்ஷ்டிரிபுவனம் என பத்து புவனங்கள் விளங்கும்.

இவற்றின் அதிபர்களாக முறையே நிருருதி, மாரணர், ஹந்த்ரு, க்ரூரதம், ஷ்டிரர், பயாநகர், ஊர்த்வ சேபர், விரூபாக்ஷர், தூம்ரர், லோகிதர் தம்ஷ்டிரி எனும் பதின்மர் விளங்குவர். இவர்கள் நிருருதி நாயகர்கள் ஆவார். பிருதிவியின் தெற்கில் 67. யாம்யபுவனம் 68.மிருத்யுபுவனம் 69. ஹரபுவனம் 70. தாத்ருபுவனம் 71. விதாத்ரு புவனம் 72. கர்த்திருபுவனம் 73. சம்யோக்த்ருபுவனம் 74. வியோக்த்ரு புவனம் 75. தர்மபுவனம் 76. தர்மபதிபுவனம் எனும் பத்து புவனங்கள் விளங்கும்.

இவற்றின் அதிபர்களாக முறையே மிருத்யு, ஹரர், தாத்ரு, விதாத்ரு, கர்த்ரு, சம்யோக்த்ரு, வியோக்த்ரு, தர்மா, தர்மபதி எனப் பதின்மர் விளங்குவார்கள். இவர்கள் யமநாயகர்கள் ஆவார்.

பிருத்வியின் தென்கிழக்கில் 77. அக்னிருத்திரபுவனம் 78.ஹுதாசனபபுவனம் 79. பிங்கலபுவனம் 80. காதகபுவனம் 81. ஹர புவனம் 82. ஜ்வலனபுவனம் 83. தகனபுவனம் 84. பப்ருபுவனம் 85.பஸ்மாந்தகபுவனம் 86. க்ஷயாந்தகபுவனம் என பத்து புவனங்கள் விளங்கும். இவற்றின் அதிபர்களாக முறையே அக்னிருத்திரர் ஹுதாசனர், பிங்களர், காதகர், ஹரர், ஜ்வலனர், தஹனர், பப்ருவர், பஸ்மாந்தகர், க்ஷயாந்தகர் என்னும் பதின்மர் விளங்குவார்கள். இவர்கள் அக்னிநாயகர்கள் ஆவர்.

பிருத்வியின் கிழக்கில் 87. கபாலீபுவனம் 88. அஜபுவனம் 89. புத்த புவனம் 90. வஜ்ரதேஹபுவனம் 91. பிரமர்த்தநபுவனம் 92. விபூத புவனம் 93. அவ்யயபுவனம் 94. சாஸ்திருபுவனம் 95. பினாகிபுவனம் 96. திரிதசாதிபபுவனம் என பத்து புவனங்கள் விளங்கும். இவற்றின் அதிபர்களாக முறையே கபாலீசர், அஜர், புத்தர், வஜ்ரதேஹர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரமர்த்தனர், விபூதி, அவ்யயர், சாஸ்தா, பினாகி, திரதசாதிபர் எனும் பதின்மர் விளங்குவார்கள். இவர்கள் இந்திரநாயகர்களாவார்கள்.

இனி பிருத்வியின் மேலே பிரமதிசையில் 97 சம்புபுவனம் 98. விபு புவனம் 99. கணாத்யக்ஷபுவனம் 100. திரயக்ஷபுவனம் 101. திரதசேச புவனம் 102. சம்வாகபுவனம் 103. விவாகபுவனம் 104. நபசபுவனம் 105. லிப்சுவேதனபுவனம் 106. திரிலோசனபுவனம் எனும் பத்து புவனங்கள் விளங்கும்.

இவற்றின் அதிபர்களாக முறையே சம்பு, விபவர், கணாத்யக்ஷர், த்ரயக்ஷர், த்ருதசேஸ்வரர், ஸம்வாஹர், விவாஹர், நபஸர், லிப்ச வேதனர், திரிலோசனர் எனும் பதின்மராவர். இவர்கள் பிரம்ம நாயகர்கள் எனப்படுவர்.

மேற்கண்ட 106 புவனங்களுக்கும் மேலாக பிரமாண்ட வாசலில் 107. வீரபத்திரபுவனம், 108. பத்ரகாளிபுவனம் என இரண்டு புவனங் கள் உள்ளன. இவை அனைத்தும் பிரதிவிதத்துவத்தின் வட்டத்திற் குள் நிற்கும். இவை இரண்டு புவனங்களின் அதிபர்களாக, வீர பத்திரமும் பத்ரகாளியும் விளங்குவார்கள். இது பிரம்மாண்டத்தின் மேலான பாகமாக விளங்கும்.

நிவிர்த்திகலையில் அடங்கும் புவனங்களைப் பற்றி பார்த்தோம். இந்த புவனங்களின் அதிபர்கட்கு 'ருத்திரர்கள்' என்பது பெயராக வழங்குமென்க.

இனிப் பிரதிஷ்டா கலையினுள் அடங்கும் புவனங்களைப் பற்றி பார்ப்போம். அவை வருமாறு:

பிரதிஷ்டாகலையில் புவனங்கள் 56 உள்ளன. அவை பிரதிஷ்டா கலையில் அடங்கும். அப்பு தத்துவம் முதல் பிரக்ருதி, குணதத்துவம் வரை வியாபித்தவையாகும். எங்ஙனமெனின், அப்பு தத்துவத்தில் 109.அமரேசபுவனம் 110. பிரபாசபுவனம் 111. நிமிசபுவனம் 112.புஷ்கரபுவனம் 113. ஆஷாடிபுவனம் 114. டிண்டிமுண்டிபுவனம் 115. பாரபூதபுவனம் 116. லகுளீசபுவனம் என எட்டாகும். இவற்றின் அதிபர்களாக அமரேசர், பிரபாசர், நைமிசர், புஷ்கரர், ஆஷாடர், டிண்டிமுண்டி, பாரபூதி, லகுளீசர் எனும் எண்மர் விளங்குவர்.

மேற்கண்ட இந்த எட்டு புவனங்களுக்கும் "குஹ்யாஷ்டக புவனம்" என்று பெயர் வழங்கும். மேற்கண்ட எண்மருக்கு குக்ஷ யாஷ்டகர் என்ற பெயருமுண்டு.

தேயு தத்துவத்தில் 117. அரிச்சந்திரபுவனம் 118. ஸ்ரீசயிலபுவனம் 119. ஜெல்பேசபுவனம் 120. ஆம்ராதிகேசபுவனம் 121. மத்யமேச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புவனம் 122. மகாகாளபுவனம் 123. கேதாரபுவனம் 124. பைரவ புவனம் என எட்டு புவனங்கள் விளங்கும்.

இவற்றின் அதிபர்களாக முறையே அரிச்சந்திரர், ஸ்ரீசைலர், ஜெல் பேசர், ஆத்ராதிகேசனர், மத்யமேசர், மகாகாளர், கேதாரர், பைரவர் எனும் எண்மராவர். இப்புவனங்கள் எட்டிற்கும் 'அதிகுஹ்யாஷ்டக புவனம்' என்று பெயர் வழங்கும். மேற்கண்ட எண்மரையும் 'அதிகுஹ்யாஷ்டகர்' என்று வழங்குவர்.

வாயு தத்துவத்தில் 125. கயாபுவனம் 126. குருக்ஷேத்திரபுவனம் 127. நாகலபுவனம் 128. நகலபுவனம் 129. விமலேஸ்வரபுவனம் 130.அட்டகாசபுவனம் 131. மாஹேந்திரபுவனம் 132. பீமேசபுவனம் எனும் எட்டு புவனங்கள் விளங்கும்.

இவைகளின் அதிபர்களாக முறையே கயா, (குறிப்பு இது மட்டும் பெண்பாலாக உள்ளது) குருஷேத்திரர், நாகலர், நகலர், விமலேஸ் வரர், அட்டகாசர், மாஹேந்திரர், பீமேஸ்வரர் எனும் எண்மராவர்.

ஆகாசதத்துவத்தில் 133. வஸ்த்ரபாதபுவனம் 134. ருத்ரகோடி புவனம் 135. அவிமுத்தபுவனம் 136. மஹாபலபுவனம் 137. கோகர்ண புவனம் 138. பத்திரகர்ணபுவனம் 139. சுவர்ணாக்ஷபுவனம் 140.ஸ்தாணுபுவனம் என எட்டு புவனங்கள் விளங்கும்.

இவற்றின் அதிபர்களாக முறையே வஸ்திரபாதர், ருத்ரகோடி, அவிமுக்தர், மஹாபலர், கோகர்ணர், பத்திரகர்ணர், சுவர்ணாக்ஷர், ஸ்தாணு எனும் எண்மராவர். இந்த புவனத்திற்குப் 'பவித்தராஷ்டக புவனம்' என்று பெயர். இந்த எண்மருக்கும் 'பவித்ராஷ்டகர்' என்பது பெயராகும்.

அஹங்காரத்துவத்தில் தன் மாத்திரைகள் ஐந்திற்கும் (சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்தம் எனும் ஐந்திற்கும்) முறையே 141. சகலாண்ட புவனம் 142. துவிரண்டபுவனம் 143. மாகோடபுவனம் 144. மண்டலேஸ்வரபுவனம் என்ற நான்கு புவனங்களும், கர்மேந்திர யங்கள் ஐந்திற்கும் (வாக், பாத, பாணி, பாயுரு, உபஸ்தரம் எனும் ஐந்திற்கும் 145. காலாஞ்சரபுவனம் எனும் ஒன்றும்,

ஞானேந்திரயங்கள் ஐந்திற்கும் (சுலோத்திரம், தவக், சட்சு, ஜிஹ்வா, ஆக்ராணம் எனும் ஐந்திற்கும்) 146. சங்குகர்ணபுவனம் எனும் ஒன்றும், மனஸ்தத்துவத்திற்கு 147. ஸ்தூலேஸ்வரபுவனம் எனும் ஒன்றும் அகங்காரதத்துவத்திற்கு 148. ஸ்தலேஸ்வரபுவனம் ஒன்றும் ஆக எட்டு புவனங்கள் விளங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றிற்கு முறையே சகலாண்டர், தவிரண்டர், மாகோடர், மண்டலேஸ்வரர், காலஞ்சரர், சங்குகர்ணர், ஸ்தூலேசர், ஸ்தலேஸ் வரர் எனும் எண்மர் அதிபர் ஆவர். இப்புவனத்திற்கு 'ஸ்தாணு வாஷ்டக புவனம்' என்று பெயர். இவற்றின் அதிபர்களை 'ஸ்தாணு அஷ்டகர்' என்றழைப்பார்கள்.

புத்தி தத்துவத்தில் 149. பைசாசபுவனம் 150. ராக்ஷஸபுவனம் 151.யக்ஷபுவனம் 152. கந்தருவபுவனம் 153. ஐந்திரபுவனம் 154.சௌம்யபுவனம் 155. ப்ராஜேசபுவனம் 156. பிராமபுவனம் என எட்டாகும்.

இவற்றின் அதிபர் முறையே பைசாசர், இராக்ஷஸர், யக்ஷர், கந்தர்வர், ஐந்திரர், சௌமியர், பிரேமேசர், பிரமர் எனும் எண்மராவர்.

இவை எட்டு புவனங்களும் 'தெய்வயோனிகளாகும்' இதைச் 'சூக்ஷ்மபுவனாஷ்டகம்' என்றும் கூறுவர். மேலும் இதை 'தேவாஷ்டக புவனம்' என்றும் வழங்குவர்.

இவ்வெண்மரும் தேவாஷ்டகபுவனேசர் என்றும் சூக்ஷ்ம புவனேசர்கள் என்றும் அழைக்கப்படுவர்.

பிரகிருதிகுணதத்துவத்தில் 157. அகிருதபுவனம் 158. க்ருதபுவனம் 159. பைரவபுவனம் 160. பிரமபுவனம் 161. வைணவபுவனம் 162.கௌமாரபுவனம் 163. ஔமயபுவனம் 164. ஸ்ரீகண்டபுவனம் என எட்டாகும்.

இவற்றின் அதிபர்கள் முறையே அகிருதர், க்ருதர், பைரவர், ப்ரம்ஹா, விஷ்ணு, கௌமாரர், அவுமர், ஸ்ரீகண்டர் எனும் எண்மராவர். இவர்களுடன் சேர்ந்து முறையே, க்ஷோபகர், உக்கிரர், மஹாதேஜர், ஸ்ரீகண்டர், அனந்தர், விக்ரமர், பிரபுத்தர் ப்ரமேசானர் எனும் எண்மரும் வசிப்பதாகக் கூறுவர்.

இவ்வாறு பிரதிஷ்டாகலையில் 56 புவனங்கள் விளங்கு கின்றனவென்பதனை அறிய வேண்டும்.

இனி வித்யாகலையில் வியாபித்துள்ள புவனங்களைப் பற்றிக் காண்போம்.

வித்யாகலையில் முதலில் வரும் புருஷதத்துவத்தில் முறையே 165. வாமபுவனம் 166. பீமபுவனம் 167. உக்ரபுவனம் 168. பவபுவனம் 169. ஈசானபுவனம் 170. ஏகவீரபுவனம் என ஆறு புவனங்கள் உள்ளன. அவற்றின் அதிபர்களாக முறையே வாமர், பீமர், உக்கிர், பவர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசானர், ஏகவீரர் எனும் அறுவர் உளர். மேலும் இப்புருஷதத்துவத்தில் அஷ்டஐஸ்வர்யங்களும் விளங்குமென்பதறிக. (அஷ்ட ஐஸ்வர்ய மான 1. அணிமா 2. மகிமா 3. லகிமா 4. கரிமா 5. ப்ராப்தி 6. ப்ரா காமியம் 7. ஈசதத்துவம் 8. வசித்துவம் என்பனவாம்) இதையே அஷ்டமாசித்தி என்றும் கூறுவர். இந்த எட்டனுள் அணிமா, லகிமா, மகிமா எனும் மூன்றும் தேகசித்தி ஐஸ்வர்யங்கள் என்றும், கரிமா, ஈசதத்துவம் வசித்துவம் ப்ராப்தி ப்ராகாமியம் எனும் ஐந்தும் அந்தக்கரணி ஐஸ்வர்யங்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. இவையே அஷ்டஐஸ்வர்யங்கள் என்பதையும் உணர்க.

ராக தத்துவத்தில் 171. பிரசண்டபுவனம் 172. உமாபதிபுவனம் 173. அஜபுவனம் 174. அனந்தபுவனம் 175. ஏகசிவபுவனம் என ஐந்து புவனங்கள் உள்ளன. இவைகளின் அதிபர்கள் முறையே பிரசண்டர், த்ருஷ்டி, உமாபதி, அஜேஸ்வரர், அனந்தர், ஏகசிவர் எனும் ஐவராவர். மேலும் இவர்களுடன் புருஷதத்துவ புவனத்தின் அதிபர்களான வாம தேவர் முதலிய அறுவரும் பிரகிருதி குணதத்துவத்தின் தலையில் (மேல் பகுதியில்) விளங்குவார்கள் என்பதறிக.

வித்யாதத்துவத்தில் 176. குரோதபுவனம் 177. சம்வர்தபுவனம் எனும் இரண்டு புவனங்கள் உள்ளன. இவற்றின் அதிபர்களாக க்ரோதனர், சம்வர்த்தர் எனும் இருவர் ஆவர். (மேலும் இந்த வித்யா தத்துவத்தில் மகாதேவர் முதலியோர் ஆத்மஞானத்தை நடத்து வார்கள் என்பதறிக.

கலாதத்துவத்தில் 178 ஜோதிபுவனம் 179. பிங்களபுவனம் என இரண்டு புவனங்கள் உள்ளன.

ஜ்யோதி, பிங்களர் என்பன இதன் அதிபர்களின் பெயர்களாகும்.

நியதி தத்துவத்தில் 180. சூரபுவனம் 181. பஞ்சாந்தகபுவனம் என்ற இரண்டு புவனம் உண்டு. அவைகளின் அதிபர் முறையே இவர் களுக்கு சூரர், பஞ்சாந்தகர் என்பது பெயராகும். கால தத்துவத்தில் 182. ஏகவீரபுவனம் 183. சிகேதனபுவனம் என இரண்டு புவனங்கள் உள. அவற்றின் அதிபர்களாக ஏகவீரர், சிகேதர் என்பவர் விளங்குவர்.

(176 முதல் 183 வரையான இவர்கள் எண்மரையும் பிரதானேஸ்வரர்கள் என்றும் வழங்குவார்கள்.)

மாயாதத்துவத்தில் 184. அங்குஷ்டமாத்ரபுவனம் 185. ஈசான புவனம் 186. ஏகேக்ஷணபுவனம் 187. ஏகபிங்களபுவனம் 188. உத்பவ புவனம் 189. பவபுவனம் 190. வாமதேவபுவனம் 191. மகாதேஜ புவனம் என்று எட்டு புவனங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றின் அதிபர்களாக அங்குஷ்டமாத்திரர், ஈசானர் ஏகேக்ஷணர், ஏகபிங்களர், உத்பவர், பவர், வாமதேவர், மகாதேவர் எனும் எண்மராவர். இதற்கு 'மாயாஷ்டகபுவனம்' என்பது பெயராகும் என்பதறிக. இங்ஙனம் வித்யாகலையில் 27 புவனங்கள் வியாபித்து விளங்குகின்றன என்பதை அறியவேண்டும். இனி சாந்திகலையில் விளங்கும் புவனங்களைப் பற்றிக் காண்போம்.

சாந்தி கலையில் முதலில் சுத்தவித்யா தத்துவத்தில் 192. வாமா புவனம் 193. ஜேஷ்டாபுவனம் 194. ரௌத்ரிபுவனம் 195. காளி புவனம் 196. கலவிகரணிபுவனம் 197. பலவிகரணிபுவனம் 198. பலப் பிரமதனிபுவனம் 199. சர்வபூததமனிபுவனம் 200. மனோன்மணி புவனம் என ஒன்பது புவனங்கள் உள்ளன.

இவற்றின் அதிபர்களாக வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி, மனோன் மணி எனும் 9 சக்திகளாவர்.

குறிப்பு : இந்த ஒன்பது பேரில் முதல் மூவர் சப்தகோடி மஹா மந்திரத்தின் முன்பாதியான மூன்றறைகோடிக்கு அதிபர் ஆவர். இவர்கள் அந்த மூன்றறைகோடி மந்திரங்களால் வழிபாடு பெறுவர் என்பது அறிக.

ஈஸ்வரதத்துவத்தில் 201. சிகண்டிபுவனம் 202. ஸ்ரீகண்டபுவனம் 203. த்ரிமூர்த்திபுவனம் 204. ஏகருத்ரர்புவனம் 205. ஏகநேரத்திரர் புவனம் 206. சிவோத்தமர்புவனம் 207. சூக்ஷ்மபுவனம் 208. அனந்தர் புவனம் எனும் எட்டுபுவனங்கள் உள்ளன. அவற்றின் அதிபர்களாக முறையே சிகண்டி, ஸ்ரீகண்டர், த்ரிமூர்த்தி, ஏகருத்திரர், ஏகநேத்திரர், சிவோத்தமர், சூக்ஷ்மர், அனந்தர் என்ற எண்மராவர். இவர்களுக்கு "அஷ்டவித்யேஸ்வரர்கள்" என்பது பெயராகும்.

சாதாக்கியதத்துவம் 209. சதாசிவபுவனம் ஒன்று மட்டுமே உண்டு. இதன் அதிபர் சதாசிவர் (இவர் பஞ்சப்பிரம்ம மந்திரம் ஷடங்கமந்திரம் இரண்டிற்கும் அதிபராவார். ஜ்வாலினி முதலான சகளநிஷ்களரான எட்டு ருத்திரர்களைப் பரிவாரமாக உடையவர்.

இவ்வாறு சாந்திகலையின் புவனங்கள் பதினெட்டு என்பதை உணர்க.

இனி சந்தியதீத கலையின் வியாப்தியான புவனங்களைப் பார்ப்போம்.

விந்து தத்துவத்தில் 210. நிவிர்த்திகலா புவனம் 211. பிரதிஷ்டா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலாபுவனம் 212. வித்யாகலாபுவனம் 213. சாந்திகலாபுவனம் 214.சாந்தியதீதகலாபுவனம் என ஐந்து புவனங்கள் உள்ளன.

இவைகட்கு அதிபர்கள் 1. நிவிருத்திமான். பிரதிஷ்டாவான், வித்யேசர், சாந்திமான், சாந்தியாதீதர் எனும் ஐவராவர்.

குறிப்பு : மேற்கண்ட ஐவரும் இவர்களுடைய சக்திகளான நவிருத்தி பிரதிஷ்டா, வித்யா, சாந்தி, சாந்தியதீதா ஆகியோர்களை வாமபாகத்தில் ஏற்று நிற்பர்.

நிவிருத்தி முதல் சாந்தி வரையான சக்திகள் தத்தம் மூர்த்தி களுடன் கூடி மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய திசைகளில் பதுமாசனத்தில் வீற்றிருந்து தோத்திரம் செய்வர் என்பதறிக. சாந்தியதீதர் தனது சக்தியான சாந்தியாதீதாவை வாமபாகத்தில் கொண்டு விளங்குவார். இவர் பத்மாசனத்தில் மேல் பாகத்தில் விளங்குவார் என்று அறிக.

நாததத்துவத்தில் 215. இந்திகைபுவனம் 216. தீபிகாபுவனம் 217.ரேசிகாபுவனம் 218. மோசிகாபுவனம் 219. ஊர்த்துவகாபுவனம் என ஐந்து புவனங்கள் விளங்கும்.

இவற்றின் அதிபர்களாக இந்திகாவான், தீபிகாவான், ரோகிசாவான், மோசிகாவான், ஊர்த்துவகேசவான் எனும் ஐவர் விளங்குவர். இவர்களின் சக்திகளாக முறையே இந்திரா, தீபிகா, ரோசிகா, மோசிகா, ஊர்த்வசிகா எனும் ஐவராவர்.

இந்த ஐந்து புவனங்களும் அபரநாதா கலாபுவனங்கள் எனப்படும்.

இவற்றின் மேலான பிந்து தத்துவத்தில் (பரபிந்து தத்துவம்) சக்தி எழுந்தருளி இருப்பாள். சக்தியைச் சுற்றி நின்று சூக்ஷ்மா, சசூக்ஷ்மா, அமிருதா, மிருதா, வியாபினி எனும் கலாசக்திகள் சேவித்து நிற்பார்கள்.

இந்த சக்திக்குப் 'பரவாகீஸ்வரி' என்பது திருநாமம் பிந்து தத்து வத்தில் 220. வியாபினி புவனம் 221. வியோமரூபபுவனம் 222.அனந்தாபுவனம் 223. அனாதாபுவனம் 224. அநாசிருதாபுவனம் என ஐந்து புவனங்கள் விளங்கும்.

இவைகளின் அதிபர்கள் முறையே வியாபகர், வியோமரூபர், அனந்தர், அநாதர், அநாசிருதர் எனும் ஐவராவர். இவர்களின் சக்திகள் முறையே வியாபினி, வ்யோமரூபா, அனந்தா, அநாதா, அநாசிருதா எனும் ஐவராவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்களுக்குக் 'காரணவியாபகர்கள்' என்பது பெயராகும். இங்கு சிலர் அநாசிருத சிவர் என்ற பெயருடன் விளங்குவார்கள் என்று கூறப்படுகிறது. இவர்களே "பரவாகீஸ்வரர்கள்" என்றழைக்கப் படுகிறார்கள்.

இவ்வாறு சாந்தியதீத கலைக்கு புவனம் பதினைந்து என்பதுணர்க.

65. சிவன் கோவில்களில் பஞ்சகோஷ்டம் என்பதென்ன?

சிவன் கோவில்களில் கருவறையைச் சுற்றி தென்பாகத்தில் விநாயகர், தக்ஷிணாமூர்த்தியும், மேற்கில் மஹாவிஷ்ணுவும், வடக்கில் பிரம்மா, துர்கா ஆகிய மூர்த்திகளும், கருவறைச் சுவற்றிலேயே மாடம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பார்கள். இவர் களையே பஞ்சகோஷ்ட மூர்த்தி என்பர். அந்த ஐந்து மாடங்களுக்கும் கோஷ்டம் என்று பெயர் வழங்கும். இதுபோலவே விநாயகர், முருகன், சக்தி கோவில்களுக்கும் பஞ்சகோஷ்டம் உண்டு.

66. பஞ்ச சுத்தி என்பவை யாவை?

1. பூதசுத்தி 2. ஸ்தானசுத்தி 3. திரவ்யசுத்தி 4. மந்திரசுத்தி 5. லிங்க சுத்தி என்பனவாம்.

67. பூதசுத்தி என்பதென்ன? ஏன் செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? விளக்குக.

பூதசுத்தி என்றால் உடல் தூய்மை என்பது பொருள். உடல் தூய்மை பெற வேண்டுமானால் உயிரும் தூய்மை அடைய வேண்டும். ஆகவே உடலும் உயிரும் தூய்மை ஆதற்பொருட்டுச் செய்யப்படுவதே பூதசுத்தி ஆகும்.

உயிருடன் கூடிய நம்முடைய உடல் உலகின் தோற்றத்திற்கும் உலகின் இயக்கத்திற்கும் காரணமாக விளங்கும் பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனும் ஐந்து பூதங்களின் ஐந்து பருப்பொருள்களான மண், புனல், அனல், காற்று விசும்பு எனும் ஐந்தின் சேர்க்கையால் உண்டானதாகும்.

பிருத்வீதத்துவம் முதல், ஆகாயதத்துவம் வரை ஐந்தும் ஜடப் பரிமாண ரூபமாகும். (அசையாத தன்மையுடையது) அதனால் ஆத்மா வானது சித்ஸ்வரூபத்தை அறியாமல் இருக்கின்றது. ஆன்மாவின் இந்த நிலை மாறி அவை சித்ஸ்வரூபதரிசனம் பெற வேண்டுமாயின் ஆத்மா விற்கு இயல்பாக உள்ள அசத் பாவம் நீங்கி அவை சத்பாவம் அடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். அதற்காக மந்திரரூபமாக இந்த உடலை சிவாக்னியால் எரித்துச் சாம்பலாக்கிவிட்டுச் சத்பாவம் பெற்று விளங்கச் செய்ய வேண்டும். இதனை 'தஹனாப்லாவனம்' என்பர்.

பின்பு அமிர்தத்தால் உடல் மீண்டும் உண்டானதாக எண்ணிச் சத்பாவரூபமாகக் கொண்டு சிவகாரியங்களைச் செய்யப்புக வேண்டும். இதற்குப் 'பூதசுத்தி' என்று பெயர். பூத சோதனம் என்றும் வழங்குவர்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனின் உயிர்கட்கு இயல்பாகவே உண்டாகி இருக்கும் அசத்பாவம் நீங்கி அவை சத்பாவம் பெறவும் ஆத்மாவிற்குச் சிவத்வம் உண்டாவதற்கும் பூதசுத்தியைச் செய்ய வேண்டுமென்க. பிருத்வி முதல் ஆகாயம் வரையான ஐந்து தத்துவங் களும் தானாகவே இயங்கமாட்டா என்பதை உணர்ந்து அவை களிலிருந்து விடுபடும் பாவனையே பூத சுத்தியாகும் என்பதும் உணர்க.

பூதசுத்தியானது 1. 'சூட்சுமதேகசுத்தி' என்றும் 2. 'ஸ்தூலதேக சுத்தி' என்றும் இருவகைப்படும்.

68. சூக்ஷ்மதேஹ சுத்தி

முதலில் சூக்ஷ்மதேஹசுத்திக்காகத் தத்துவங்களைப் பிந்துவில் ஒடுங்கச் செய்ய வேண்டும். அதற்காக ஆசாரியன், முதலில் கரன் யாசம் செய்து கொண்டுப் பின் தனது கால் கட்டை விரல் (பெருவிரல்) தொடங்கி இடுப்பளவு வரை இரண்டு ரூபமாகவும், அதற்குமேல் பிரம்மமந்திரம் வரை ஒரு ரூபமாகவும் ஓடுகின்ற சுஷூம்நா நாடி யானது இடை, பிங்கலை எனும் நாடிகளுடன் பின்னிப் பிணைந்து உள் துளைகளுடன் மின்னல் கொடி போன்று விளங்குகிறது.

அந்தச் சுஷூம்நா நாடியில், இருதயம், கழுத்து, அடிநாக்கு, புருவநடு, பிரம்மரந்திரம் எனும் ஐந்து இடங்களிலும் கீழ்நோக்கிய படி ஐந்து தாமரை மொட்டுக்கள் உள்ளன. மேலும் இந்நாடியின் உள்ளேயும் வெளியேயும் அமுதம் பொழியும் பரமவ்யோமரூபி எனும் குண்டலினி சக்தியும், அதில் தீபம் போல் ஒளிவிடும் ஹ்ரீம் எனும் பீஜாட்சரமும் விளங்குகின்றன.

மேற்கண்ட இதனைத் தெளிவாகச் சிந்தித்து "ஹூம்" எனும் பீஜத்தில் மனதை நிறுத்தி வெளிக்காற்றை இடப்பக்க நாசிவழியாக உள்ளே இழுத்து அதைச் சுஷூம்நா நாடி வழியாகத் துவாதசாந்தம் வரை மெதுவாகக் கொண்டு சென்று சோடிகா முத்திரை செய்து 'ஹூம்பட்' எனும் மந்திரத்தை உச்சரித்து முன்பு கீழ்நோக்கிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலையில் உள்ளதாக எண்ணிய ஐந்து தாமரை மொட்டுக்களும் மேல்நோக்கி நிமிர்ந்து மலர்ந்தனவாகச் சிந்தித்துப்பின் இடாநாடியின் வழியே த்வாத சாந்தம் வரைக் கொண்டு சென்ற வாயுவை வலப்பக்க நாசி (பிங்கலை) வழியாக மெல்ல வெளியே விடுக.

மறுபடியும் முன்போலவே இடப்பக்க நாசி வழியாக வெளிக் காற்றை உள்வாங்கி நிறுத்தி அதனால் ஹ்ருதயத்தில் மின்னொளி போன்று ஒளிரும் சாந்த பீஜமயமானதும், ஹ்ருதயசம் புடிதமானதுமாகி ஆன்மாவை "ஹூம்" எனும் அக்ஷரத்தின் மீது ஏற்றி பீஜவிக்ரஹனும் ஹூம்காரசிகாந்தஸ்தனும் புர்யஷ்டகரூபனுமாகத் தன்னை பாவித்துக் கொண்டு சூக்ஷ்மனும் பிந்து பூதனும் புர்யஷ்ட கத்திலிருந்து விடுபட்டவனும், ஏகாங்கிதனும், நிராமயனுமாகத் தன்னை நினைத்துக் கொண்டு முன்பு மேலெழுப்பிய காற்றை நிலை நிறுத்தி (கும்பகம் செய்து) சம்ஹார முத்திரையால் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் எனும் ஐந்து காரணேஸ்வரருடைய தியாகக் கிரமத்தினாலே ஒரே தன்மையுடன் "ஓம் ஹௌம் ஹாம், ஹம், ஹாம், ஹௌம், ஆத்மநே நம:" என்ற மந்திர உச்சாரண ஒளியுடன் கும்பகம் செய்த காற்றைச் சுஷூம்நா நாடிக்கு ஏற்றி ஆன்மா மீண்டும் தேகத்தினுள் வந்ததாகவும் அது போகத்தை அனுபவிக்கும் ஆற்றலுடன் விளங்குவதாகவும் பாவித்துக் கொண்டு ஆன்மாவைத் துவாதசாந்தத்தில் உள்ள பரமசிவனிடம் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு பூரக, கும்பக, ரேசகங்களை முறையாகச் செய்வதால் ஆத்மா சிவனிடம் ஒடுங்கும். ஒடுங்கவே சூக்ஷ்ம தேகசுத்தி ஏற்படும் என்க.

மற்றொரு முறையிலும் சூக்ஷ்மதேஹ சுத்தி சொல்லப்படுகிறது. அது வருமாறு :

ப்ருவி முதலான முப்பத்தாறு தத்துவங்களையும் அவ்வவற்றின் காரணங்களில் ஒடுங்கச் செய்வதற்காகப் பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களையும் முறையே கந்தம், ரசம், ரூபம், ஸ்பரிசம், சம்பதம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளிலும் ஒடுக்கிப் பின் அவற்றைத் தாமசாஹங்காரத்தில் சேர்க்க வேண்டும்.

அடுத்து வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆகிய ஐந்து கர்மேந்திரயங்களையும் ராஜஸாஹங்காரத்தில் சேர்க்க வேண்டும்.

சுரோத்ரம், தவக், சட்சு, ஜிஹ்வா, ஆக்ராணம் ஆகிய ஞானேந்திரயம் ஐந்தையும் அத்துடன் மனதையும் சேர்த்து ஆறையும் சாத்விகாஹங்கவத்தில் சேர்க்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் மேற்சொன்ன மூன்று அஹங்காரங்களையும் புத்தியிலும், புத்தியைக் குணத்திலும், குணத்தைப் பிரகிருதியிலும், பிரகிருதி, அராகம், வித்தை ஆகியவற்றைக் கலையிலும்,

புருஷன், கலை, நியதி, காலம் ஆகியவற்றை மாயையிலும், மாயையைச் சுத்தவித்தையிலும், சுத்தவித்தையை ஈஸ்வரனிடத்திலும், ஈஸ்வரத்தைச் சதாசிவத்திலும், சதாசிவத்தைச் சக்தியிலும், சக்தியைச் சிவத்திலும் சிவத்தை நிர்விகார குண்டலினி எனும் விந்து சக்தியிலும் ஒடுங்குவதாகச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு செய்வது இரண்டாம் வகை சூக்ஷ்மதேக சுத்தியாகும்.

அல்லது மூலமந்திரத்தை உச்சரித்து ஹ்ருதயம், கண்டம், நாவடி புருவநடு பிரம்ம ரந்திரம் எனும் இடங்களில் இருக்கும் பத்மங்களிலே சப்ததன்மாத்திரை ச்பரிசதன் மாத்திரை இரண்டையும் பிரமனிடத்திலும் ரசத்தைக் கேசவரிடத்திலும் (விஷ்ணு) ரூப கந்தங்களை ருத்ரனிடத்தும் புத்தி அகங்காரங்களை ஈஸ்வரனிடத்தும் மனதையும், வாக்கையும் (சப்தாதிகளுக்குக் காரணமான பைந்தவி எனும் வாக்கு) சதாசிவனிடத்திலும் சமர்ப்பிக்க வேண்டும். இதுவும் சூஷ்மதேச சுத்தியேயாகும் என்க.

குறிப்பு : பிரம்மா முதலிய பஞ்சகாரணேசர்களிடத்தில் சப்தாதிகளைச் சமர்ப்பித்தல் ஏன் எனில்,

சுரோத்திரம், தவக், சக்ஷு ஜிஹ்வா, ஆக்ராணம், புத்தி, அஹங்காரம் மனது ஆகிய இவைகளால் செய்யப்பட்ட செயல்களினால் தவறு நேர்ந்தால் ராக்ஷஸ ஜன்மம் உண்டாகும். அதைப் போக்கவே பிரம்மாதி காரணேஸ்வரர்களிடம் சப்தம் முதலானவைகளைச் சேர்க்க வேண்டும் என்பர்.

சுரோத்திரம், தவக் இவற்றால் தவறு நேர்ந்தால் பிரம்ம ராக்ஷசராயும், ரசத்தால் தவறு நேர்ந்தால் விஷ்ணு அம்சமான ராக்ஷஸ பிறவியும் ரூபகந்தங்களால் தவறு நேரின் ருத்ராம்சமான ராக்ஷஸப் பிறவியும், புத்தியஹங்காரம் இவைகளால் தவறு நேர்ந்தால் ஈஸ்வராம்சமான ராக்ஷஸப் பிறவியும் உண்டாகும்.

புர்யஷ்டக சரீரம் என்பது சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம், புத்தி, அகங்காரம், மனஸ் எனும் எட்டின் கூட்டு வடிவமாகும். இவை கூடியது சூக்ஷ்மதேகம் எனப்படும். மேற்கண்ட புர்யஷ்டக சரீரத்தைச் சோதிக்கும் காரணமாகச் சுரோத்திராதி இந்திரயங்களில் உண்டான தவறுகளால் ஏற்படும் சப்தாதிகளை பிரம்மா முதலான காரணேஸ்வரர்களிடம் ஒப்புவித்தல் வேண்டும்" என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

69. ஸ்தூலதேகசுத்தி

நம்முடைய சாதாரண உடலுக்கு மகிழ்ச்சி, துன்பம், வியர்வை, ஜல மலப்போக்கு, உடலுறவு போன்ற பலப்பலவான நிகழ்வுகளால் தூய்மை கெட்டுப்போகிறது.

தூய்மையற்ற நம்முடைய சாதாரண உடலைக் கொண்டு ஒலிமயமான வித்யாதேக (மந்திரவடிவமான) உருவமுடைய சிவ பெருமானைப் பூசிப்பது பொருந்தாது.

எனவே, மனிதனுக்குண்டான மேற்கண்ட குற்றங்களை நீக்கிப்பின் தன்னைச் சிவனாகவே எண்ணிக் கொண்டு (சிலமணி நேரமாவது) தன்னுடலைப் புனிதமாக்கிக் கொண்டு பூஜை ஹோமாதிகளைச் செய்வது சிறப்பாகும் என்ற நோக்கத்தில் யோகமார்க்கநெறிப் படியான இந்த பூதசுத்தியை சிவபூஜை செய்ய விரும்பும் அனைவரும் செய்ய வேண்டுவது கட்டாயமாகும்.

பூதசுத்தி செய்து கொள்ளாமல் செய்யும் ஆத்மார்த்தபூஜை, பரார்த்த பூஜை இரண்டுமே பயனற்றுப் போய்விடும். எனவே அவசியம் பூதசுத்தியைச் செய்ய வேண்டும் என்க.

அந்தராத்மாவைத் தஹித்துப் பின் தத்வான்மாவாகத் தன்னை பாவித்துக் கொண்டு அது அமிர்தத்தால் நனைந்து சுத்தான்மாவாக மாறியதாக எண்ணிக்கொண்டு அவ்வான்மாவைக் கொண்டு சென்று ஹூம் எனும் பீஜாட்சரம் மீது த்வாதசாந்தத்தில் உள்ள சிவனோடு ஒடுங்கச் செய்ய வேண்டும்.

சிவதத்துவத்தில் ஒடுக்கப்பட்ட அவ்வான்மா தூய்மையடையும் வரை அதன் பூத உடலை ஞானாக்கிக்கொண்டு எரிக்க வேண்டும். முக்கோணவடிவமான அக்னியோடு ஆன்மா சேர்ந்ததும் அது புனிதமாகிவிடும். முடிவில் அவ்வாண்மா தானும் ஞானக்கினியாகி விடும். அந்த ஞானக்கி உடலை இயங்கச் செய்யும் என்பதை பூதசுத்தி மூலம் உணரலாம்.

விளக்கம் வருமாறு:

70. நிவிர்த்திகலாசுத்தி (ப்ரித்வி மண்டலம்)

கடினத்தன்மையும், பொன்னிறமும், வஜ்ரரேகைபோன்ற அடையாளமும் 'ஹ்லாம்' எனும் பீஜாட்சரத்தையும், சத்யோஜாத மூர்த்தியைத் தனக்கு அதிதேவதையாகவும்,

பிரம்மனைக் காரணகர்த்தாவாகவும், நிவிர்த்திகலா ரூபமாய் நாற்கோண வடிவுடன் பாதம் முதல் சிரசுவரை நம் உடம்பில் (நிவர்த்திகலை) வியாபித்து இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஹ்லாம்' என்பது நிவர்த்திகலாபீஜம் எனப்படும். எனவே மேற்கண்ட 'ஹ்லாம்' எனும் பீஜாட்சரத்தை ஐந்துமுறை அதாவது "ஓம், ஹ்லாம், ஹ்லாம், ஹ்லாம், ஹ்லாம், ஹ்லாம் நிவிர்த்திகலாயை ஹ: ஹூம் பட்" என்று கூறிக்கொண்டே பிராணவாயுவை இடப்பக்க மூக்கு (இடநாடி) வழியாக பூரகம் செய்து சுஷூம்நா நாடி வழியாக உச்சிக்குமேல் பன்னிரெண்டு அங்குலம் வரைக் (த்வாதசாந்தம் வரை) கொண்டு சென்றுப்பின் வலப்பக்க மூக்கின் வழியாக (பிங்கலநாடி) மெள்ள வெளியிடல் வேண்டும்.

இவ்வாறு நிவர்த்திகால பீஜத்தை ஐந்து முறை உச்சரிப்பதால், கந்தம், ரசம், ரூபம், ஸ்பரிசம், சப்தம் எனும் ஐந்து (பூத) குணங்கள் நீக்கப்பட்டு ப்ரிதிவிக்கு மாறுபட்ட காற்றிலே அவை ஆக்ரமிக்கப் பட்டதாகவும் அவை வாயுரூபமாக உருமாறியதாகவும் பாவிக்க வேண்டும். இவ்வாறு செய்வது நிவித்திகலா சுத்தி எனப்படும்.

71. பிரதிஷ்டாகலாசுத்தி (அப்புமண்டலசுத்தி)

அப்புமண்டலசுத்தி (தண்ணீர் மண்டலம்) நீர்த்த வடிவம் (திரவ வடிவம்) அர்த்தசந்திர ரூபம், வெண்மை நிறம், சாந்த குணம், பத்ம ரேகை அடையாளம், 'ஹ்வீம்' எனும் பீஜாட்சரம், வாமதேவ மூர்த்தி அதிபதி, விஷ்ணுவை காரணேஸ்வரர் எனக் கொண்ட அப்பு மண்டலம் பிரதிஷ்டா கலை எனப்படும்.

இக்கலை தமது சரீரம் முழுவதும் பரவியுள்ளதாகப் பாவித்துக் கொண்டு "ஓம், ஹ்வீம், ஹ்வீம், ஹ்வீம், ஹ்வீம் பிரதிஷ்டா கலாயை ஹ: ஹூம்பட்" என்ற மந்திரோச்சாரணத்துடன் இடாநாடி வழியாக வாயுவைப் பூரித்து சுஷூம்நா நாடி வழியாக முன்போலவே த்வாதசாந்தம் வரைக் கொண்டு சென்று அதை பிங்கலை வழியாக மெள்ள வெளியே விடுக.

இவ்வாறு நான்குமுறை உச்சரித்து ரச, ரூப ஸ்பரிச, சப்தம் ஆகிய (கந்தம் (மணம்) தண்ணீருக்கு இல்லை) நான்கு குணங்களைப் போக்கி அதற்கு எதிரான அக்னியினால் அவை நான்கும் ஆக்ரமிக்கப் பட்டாகவும் பின் அவை அக்னிரூபம் அடைந்ததெனவும் எண்ணவும்.

72. வித்யாகலாசுத்தி (அக்னிமண்டலம் நெருப்பு மண்டலம்)

முக்கோண வடிவம், சிவப்பு நிறம், உஷ்ணத்தன்மை, ஸ்வஸ்திக அடையாளம், ஹ்ரூம் எனும் பீஜாட்சரம், அகோரமூர்த்தி அதி தேவதை, உருத்திரர்காரணேஸ்வரர் இவ்வாறான அக்னிமண்டலம் வித்யாகலை எனப்படும். இது பாதம் முதல் சிரசு வரை வியாபித்து இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வித்யாகலை சுத்தியின் பொருட்டு ஓம் ஹ்ரூம், ஹ்ரூம், ஹ்ரூம் வித்யாகலாயை ஹ: ஹூம் பட் எனும் மந்திரோச்சாரணத்துடன் முன்போலவே இடாநாடி வழியாக வாயுவைப் பூரகம் செய்து அதை சுஷும்நா நாடி வழியாகத் த்வாதசாந்தம் வரை கொண்டு சென்று பின் பிங்கலை வழியாக மெள்ள வெளியே விடவேண்டும்.

இவ்வாறு மூன்று முறைகள் உச்சரித்து ரூப ஸ்பரிச, சப்தம் எனும் மூன்று (நெருப்புக்கு, ரசம், சந்தம் கிடையாது) குணங்களையும் போக்கிவிட்டு அதற்கு மாறான தண்ணீரால் ஆக்ரமிக்கப்பட்டதாக எண்ணிப் பின் அவை தண்ணீரின் உருவம் அடைந்ததாக பாவித்துக் கொள்க.

73. சாந்திகலாசுத்தி (வாயு மண்டலம்) (காற்று மண்டலம்)

வாயுமண்டலம் அறுகோண வடிவம் உடையது. ஆறு புள்ளிகளை அடையாளமாக உடையது. கருப்பு நிறமுடையது. சலனத் தன்மை கொண்டது. 'ஹ்யைம்' எனும் பீஜாட்சரமுடையது. தத்புருஷ தேவர் அதிதேவதை. ஈசானார் காரணேஸ்வரர். இவ்வாறான வாயு மண்டலம் சாந்திகலாஸ்வரூபம் ஆகும்.

இது உடல் முழுவதும் வியாபித்து இருக்கும் என்ற பாவனையுடன் ஓம் 'ஹ்யைம்' ஹ்யைம் சாந்தி கலாயை ஹ: ஹூம் பட்" என்ற மந்திர உச்சாரணத்துடன் முன்பு போல் இடா நாடி வழியாகக் கர்ற்றை உள்ளிழுத்துப் பின்பு சுஷும்நா நாடி வழியாக த்வாதசாந்தம் வரை கொண்டு சென்று மீண்டும் அதை பிங்கலை வழியாக மெள்ள வெளியே விடவேண்டும்.

இவ்வாறு இரண்டுமுறை உச்சரித்து ஸ்பரிச, சப்த குணங்கள் இரண்டையும் போக்கி அதற்கு எதிரான மண்ணினால் ஆக்ரமிக்கப் பட்டதாக எண்ணுக. பின் அவை மண் உருவம் கொண்டு விளங்குவதாகவும் பாவனை செய்க.

(கந்த, ரச, ரூபம் வாயுவுக்கு இல்லை.)

74. சாந்தியதீதகலை (ஆகாசமண்டலம், விண்மண்டலம்)

ஆகாச மண்டலம் வட்ட வடிவமானது. சுத்தமான ஸ்படிகம் போன்ற நிறமுடையது. சூன்யமானது. பிந்துசக்தியுடன் கூடியது. 'ஹௌம்' எனும் பீஜாட்சரமுடையது. ஈசானர் அதிதேவதை. சதாசிவர் காரணேஸ்வரர். இவ்வாறான ஆகாசமண்டலம் சாந்தியதீத கலை எனப்படும். இதுவும் பாதம் முதல் சிரஸ் வரை வியாபித்து இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதைச் சுத்தம் செய்ய, "ஓம் ஹௌம்சாந்திய தீத கலாயை ஹ: ஹூம்பட்" என்ற மந்திர உச்சாரணத்துடன் முன்பு போல் பிராண வாயுவை இடா நாடி வழியாகப் பூரித்து அதை சுஷூம்நா நாடி வழியாக த்வாத சாந்தம் வரைக் கொண்டு சென்று பின்னர் பிங்கலை வழியாக மெள்ள வெளியில் விடவேண்டும்.

இவ்வாறு ஒருமுறை உச்சரித்து சப்த குணத்தைப்போக்க வேண்டும். (ஆகாசத்திற்கு ரூப, ரச, கந்த, ஸ்பரிசம் இல்லை)

அநித்யமாய், அவ்வியாபகமாய், அசுத்தமாய் இருக்கின்ற பூதாகாசத்தைக் கெடுத்துப் பின்பு, நித்யமாய், வியாபகமாய், சுத்த தத்துவாதியுக்தமாய் இருக்கின்ற பரமாகாசத்தால் ஆக்ரமிக்கப் பட்டதாக எண்ணுக. பின்பு அது பரமாகாசவடிவம் எய்தியதாகவும் பாவனை பண்ணுக. (பூதாகாசம் = மனவெளி)

பின்பு, பஞ்ச பூத மண்டலங்கள் ஒன்றினால் ஒன்று சுத்தியாகி பூத பரிமாண ரூபமான தேகம் மெலிந்ததாக எண்ணிக்கொண்டு வலக்கால்கட்டை விரலில் இருந்து சிவசக்தியினால் அதிஷ்டிக்கப் பட்ட அக்னியை "ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம்பட்" என்ற உச்சாரணத்துடன் மேலேழுப்பி பூததோஷங்களை எரித்து, மல பந்தங்கள் நீங்கியதாகவும், நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகள் மட்டும் முன்பு போலவே மாறுபடாமல் நிற்பது போலவும் பாவனை செய்து சிவமூல மந்திரத்தை ஓதி, துவாதசாந்தத்தில் உள்ள குடிலா சக்தியிலிருந்து பெருகும். அமிர்ததாரைகள் தனக்கு உள்ளும் புறமும் அபிஷேகம் ஆனதாகப் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

75. அனுக்கிரஹக்கிரம பூதசுத்தி

தனது உடலை ஒரு ஆலமரத்துக்கு ஒப்பிட வேண்டும். ப்ரித்வீ, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் ஐந்தும் விதையாகவும் அது பிரம்ம விஷ்ணுக்களின் உதவியுடன் முளைத்ததாகவும் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

விருப்பு, வெறுப்பு, தர்மம், அதர்மம், மோகம் இவைகளை வேராகவும் வித்தை, அவித்தை ஆகியன அதிபதிகளாகிக் காப்ப தாகவும் பாவனை செய்ய வேண்டும்.

கலை முதலான தத்துவங்கள் அனைத்தும் சாரமாகவும், தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளை, உபகிளைகளாகவும், சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனும் விஷயங்கள் தளிர்களாகவும், உலகம் புஷ்பமாகவும், சங்கல்பம் பழமாகவும், ப்ரகிருதி ஸ்தூல சரீரமாகவும், புருஷனாகிய பறவைகள் இவற்றை உண்பதாகவும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புண்ணிய பாவங்களே பக்க வேர்களாகவும் விளங்க வேர் மேலாகவும், மரம் கீழ்நோக்கியும் (தலைகீழாக) உள்ளதான ஓர் ஆல மரத்தைப் போல் தன்னை எண்ணிக் கொள்ள வேண்டும்.

பின்பு தலைமுதல் கால்வரையும் முறையே ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து தண்ணீரும், தண்ணீரிலிருந்து மண்ணும் தோன்றியதாகவும், இவை ஐந்தும் முறையே ப்ருதிவி முதல் ஆகாயம் வரை ஒன்றுகூடி விதையாக விளங்குவதாகவும் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

அதன்பின்பு, ஜாதி, குலம் இவைகட்கு இடமாக விளங்குவது இந்த ஸ்தூலதேகம் (மனித உடல்) என்று எண்ணிக் கொண்டு மேற்சொன்ன இந்திரியங்கள் சூஷ்ம பூதங்களாய் விளங்க இடம் போலும் யோனி எனக் கொண்டு பிரம்மா படைப்பதாகவும், விஷ்ணு காப்பதாகவும் தியானிக்க வேண்டும்.

ஆணவம் என்பது மாயையின் பிறப்புக்கு விதையாகும் என்றும், கர்மம், தர்மம், அதர்மம் ஆகியன மூல வேராக உள்ளதாகவும், ராகம் (அன்பு) துவேஷம் (வெறுப்பு) மோகம் (பேராசை) ஆகியன துணை வேராக உள்ளதாகவும் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

அசுத்தமான அவித்தை என்பது மாயாபீஜத்தில் (மாயா கர்பத்தில்) உள்ளதாக எண்ணிக்கொண்டு, வித்தையைப் பரம் எனவும், இதனைப் 'பரை' எனும் சக்தி ஆட்சி செய்வதாகவும் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

அதன்பின், இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனும் மூன்று காலங்களிலும் ஆலமரம் அசையாதிருக்கக் கால தத்துவம் அதன் சாரமாக இருப்பதாகப் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

கர்மம், ஞானம் எனும் இரண்டு பிரிவுகளை உடையதான தன்மாத்திரை இந்திரியங்கள் கிளை, உபகிளைகளாக உள்ளதென பாவனை செய்து கொள்ள வேண்டும்.

தளிர் இலைகள் (பல்லவம்) பிந்து ரூபம் என்று கொள்ள வேண்டும். இது ஓசை (ஒலி) முதலானவற்றிற்குத் தோற்றம் என்பதாகவும், ஐந்து இலைகளை உடையதாகவும் பாவனை செய்து கொள்ள வேண்டும்.

பின்னர் பயிர் செய்வதனால் உண்டான பழத்தைப் புத்தியின் வடிவமாக எண்ணி அது ஆத்மாவுக்குத் தர்மமாக உள்ளதெனவும், ஆத்மா பறவை ரூபமாக இருந்து புசிக்கத்தக்கதைப் புசிப்பதாகவும் (மனிதன் தன்னை) உடலை ஒரு ஆலமரமாக எண்ணித் தியானிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதன்பின்னர், நிவிருத்திகலா பீஜமான ஹ்லாம் என்னும் மந்திர உச்சாரணத்தால் இலையும் பூவுமில்லாத ஆலமரம் அசைவற்று நிற்பதாகவும், பிரதிஷ்டாகலாபீஜமான ஹ்வீம் எனும் மந்திர உச்சாரணத்தால் நனைக்கப்பட்டுப் பின் அவ்வாலமரத்தில் இலைகளும் பூக்களும் உண்டானதாகவும் பாவனை செய்ய வேண்டும்.

இதன்பின்பு, வித்யாகலாபீஜமென்னும் 'ஹ்ரூம்' எனும் மந்திர உச்சாரணத்தால் வலக்கால் கட்டை விரலில் இருந்து உண்டான காலாக்னியால் இலைகள் பூக்கள் உலரவும் மரம் பொசுக்கப்பட்டதாகவும் எண்ண வேண்டும்.

சாந்திகலாபீஜமெனும் 'ஹ்யைம்' எனும் மந்திர உச்சாரணத்தால் பொசுக்கப்பட்டதால் உண்டான சாம்பலைப் பத்து திசைகளிலும், சோடிகாமுத்திரையால் அஞ்சலியாலும் தன் தலையைச் சுற்றிலும் பரவியதாக பாவனை செய்ய வேண்டும்.

அதன்பின்பு சாந்தியதீதகலாபீஜம் எனும் 'ஹௌம்' எனும் மந்திர உச்சாரணத்தால் பத்து திக்குகளிலும் பரவியுள்ளதாக சாம்பலை ஆகாயத்தில் வியாபிக்கச் செய்ய வேண்டும். செய்தபின் தூயதான ஸ்படிகம் போன்ற நிர்மலமான ஆகாசம் தன் தலைக்கு மேல் உள்ளதாகவும், அது சூன்யமானதாக இருப்பதாகவும், பாவனை செய்து அந்த ஆகாயத்தில் இரண்டறக் கலந்த ஜீவனுடன் கூடியதான உயிரச் சிவபரம் பொருளுடன் லயிக்கச் செய்து,

பின்பு, பிந்துவானது நாதத்தையடைந்து உலக விஷயமான எண்ணங்களை எல்லாம் நீத்து, ஓம் ஹாம் சிவாயவௌஷட் என்ற மந்திரத்தை உச்சரித்து (உடலில்) அமிர்தம் தலைவழியாகப் புகுந்து கீழ்நோக்கியதாக உள்ள தாமரை வழியாக உட்புகுந்து பெருகி வருவதாக எண்ணி, உள்ளும்புறமும் அமிர்தத்தால் நனைந்ததாகப் பாவித்துக் கொண்டு இதய கமலத்தில் அகாரம், உகாரம், மகாரம் எனும் சுத்த வித்தையை ஆசனமூர்த்தி மூலங்களால் பூஜித்து அபரிமிதமான ஒளியுடனும், சர்வக்ஞத்வம் (எல்லாமறிதல்) முதலான ஆறு குணங்களோடு எல்லா வித்தைகளும் சுத்த வித்தையிலிருந்து உண்டானதாக எண்ணி கர்ணிகையின் நடுவில் உள்ள புர்யஷ்டக தேகமுடைய ஆத்மாவுக்கு உள்ளிருக்கும் பரமாத்மாவின் ஸ்வரூபமானது எல்லாவிதமான ஐஸ்வர்யங்களையும் கொடுப்பதாகவும், சாந்த ரூபமாகவும், ஆறுகுணங்களால் நிறைந்துள்ளதாகவும் ஆத்மா சிவரூபம் அடைந்துள்ளதாகவும், பாவனை செய்து கொண்டு சாந்தியதீதாகலைகள் ஐந்தையும் பிரணவ மந்திரத்தின் பயனால் தாண்டியதாக எண்ணிக் கொண்டு பின்பு பஞ்சப் பிரம்மத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம்) ஆவாஹனம் செய்து (ஓம், ஹாம், ஹௌம் சிவாயநம:) எனும் பிராசாத மந்திரத்தை உடலில் ஆவாஹித்துக் கொண்டு அஸ்த்ர மந்திரத்தால் திக்பந்தனம் செய்துகொண்டு அதன்பின்பு மூன்று கோட்டைகள் (பாதுகாப்புகள்) உண்டானதாக அவகுண்டனத்தால் பாவனை செய்து (கவசமந்திரத்தினால் அவகுண்டனம் செய்யவும்) கலாமயத்தைத் தாண்டிச் சிவதத்துவம் உண்டானதாக பாவனை செய்து கொள்ள வேண்டும். (கலாமயத்தைத் தாண்ட வேண்டுவது ஏனெனில் சிவதத்துவத்தை அடைவதற்காக என்க).

பின்பு இடாநாடி வழியாக பிராணவாயுவை உள்ளே இழுத்து சுஷு‌ம்நா நாடியில் நிறுத்தி அங்கு ஜீவாத்மாவைக் கூட்டி அதை ஜ்யோதிருபமானதாக பாவித்து, "ஓம், ஹாம், சக்தயே வௌஷட்" எனும் பீஜமந்திரத்தால் புருவ நடுவில் சுத்த சக்தியினால் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும் அமிர்தத்தால் தனது சரீரம் உள்ளும் புறமும் நனைக்கப்பட்டதாக பாவனை செய்து தனது உயிரை சிவனோடு ஐக்யப்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வது அனுக்கிரஹ பூதசுத்தி எனப்படும்.

குறிப்பு : ஆத்மாவுக்குச் சிவத்வம் உண்டாவதற்காகச் செய்யப்படும் பூதசுத்தியை சிவாசாரியார்கள் ஆலயங்களில் கும்பாபிஷேக மற்றும் பூஜா காலங்களிலும் செய்யும்போது இந்த அனுக்கிரஹ பூத சுத்தியைச் செய்யவேண்டுவது இன்றியமையாததாகும்.

ஆதி சைவர்கள் ஏழுவகை சம்ஸ்காரங்களைப் பெற்றவர்கள். அதனாலேயே ஆதி சைவர்களுக்கு 'அதீதா' என்றும், 'சிவாஸ்ரமி' என்றும் பட்டப் பெயர்கள் வழங்குகின்றன. இவர்கட்கும் சிவ பெருமானுக்கும் வேறுபாடு கிடையாது.

ஆதலால் ஆதிசைவர்கள் எப்போதும் அனுக்கிரஹக்கிரம பூத சுத்தியையே செய்தல்வேண்டும் என்பது ஆகமோத்த விதியாகும்.

76. அந்தர் யாகம் செய்வது எப்படி? (ஆத்மசுத்தி)

அந்தர்யாகம் செய்யாமல் செய்யப்படுகின்ற பூசை பயனற்றதாகும். எனவே அவசியம் அந்தர்யாகம் செய்தபின்பே சிவபூஜை செய்வது முறையாகும். அந்தர்யாகம் என்பது ஆத்மசுத்திக்காகச் செய்யப்படுவதாகும். எனவே இதை ஆத்மசுத்தி என்றும் வழங்குவர்.

தத்துவங்கள் அனைத்தும் சடமாகும். அவை இறைவன் கருணையால் மட்டுமே அறியப்படுவதாகும். உயிர்களால் தனித்து அறிய முடியாதது எனும் நோக்கத்துடன் செய்வதே ஆத்மசுத்தியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமது உடலில் நாபிக்குக் கீழ் (தொப்புளுக்குக் கீழே) ஒரு கிழங்கைப் போல் பிருதிவிதத்துவம் விளங்குவதாகக் கொள்க.

அப்பு முதலிய பிற இருபத்து மூன்று தத்துவங்களையும் எட்டங்குலப்பிரமாணமும் ஒன்பது துவாரங்களும் கூடியதாகவும், நான்கு பக்கங்களிலும் முட்களை உடையதான தண்டு வடிவமாகவும் கொள்ள வேண்டும்.

வித்யாதத்துவம் ஏழும் சுத்தவித்யாதத்துவம் ஒன்று ஆக எட்டு தத்துவங்களும் எட்டு இதழ்கள் என்று எண்ண வேண்டும்.

பிரணவம் முதலான எட்டு எழுத்துக்களை உடையதாகவும், ஈஸ்வரத்தத்துவமும், சதாசிவதத்துவமும், அறுபத்துநான்கு கேசரங் களாக இருப்பதாகவும், சக்தி தத்துவமும், சிவதத்துவமும் அந்த கேசரங்கட்கு இடையிலான காய் (தாமரைக்காய்) வடிவமாகவும், அந்தக் காய்களில் உள்ள விதைகள் ஐம்பத்தோரு பீஜமந்திரங்களாக வும் நான்கு அங்குலப் பிரமாணம் உள்ள தாமரை இதய கமலமே இறைவன் தங்கும் சிவாசனம் என்று கொள்ள வேண்டும்.

இவ்விதம் கற்பிக்கப்பட்ட சிவாசனத்தில் சக்தியாதி சக்தி பர்யந்தம் (ஆதாரசக்தி முதல் பராசக்தி வரை) ஸ்தாபிக்கப்பட்ட சிவா சனத்தின் மீது (இருதயகமலத்தில்) மின்னல் போன்ற ஒளியுள்ளவரும் நாத ஸ்வரூபியுமான சிவபிரான் இருப்பதாகப் பாவனை செய்து கொண்டு ஆவாஹனாதி அஷ்டவித சம்ஸ்காங்களையும் செய்ய வேண்டும். பின்பு கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறுமை, கருணை, அறிவு, தவம், வாய்மை, அன்பு, (அஹிம்சாபுஷ்பம் இந்திரிய நிக்ரஹபுஷ்பம், க்ஷமாபுஷ்பம் தயாபுஷ்பம், ஞானபுஷ்பம், தபப் புஷ்பம், ஸத்யபுஷ்பம், பா(BHA)வபுஷ்பம்) எனும் எட்டு மலர்களால் அர்ச்சித்துப் பின்பு மனமாகிய தூபக்காலில் பிராணன் என்னும் நெருப்பில் அகங்காரம் என்னும் சாம்பிராணியைப் புகைத்து சிவ பிரானுக்குத் தூபம் காட்டி மகிழ்விக்க வேண்டும். சிவஞானமே தீபமாக எண்ணி தீபமும் காட்டவேண்டும். உலக விஷயங்களில் நாட்டம் கொண்ட மனதையே நிவேதனமாக்க வேண்டும். பின்பு பாத்யாசமானர்க்யங்கள் கொடுத்து ரஜஸ்சத்வதமோகுணமான மூன்றையும் தாம்பூலமாகவும் தரவேண்டும். பின்பு பிரதிக்ஷண நமஸ்காரதிகளை மானசீகமாகவே எண்ணிச் செய்துவிட்டு அக்னிகார்யம் செய்வதாக வேண்டிக்கொண்டு அக்னிகார்யத்தையும் மானசீகமாகவே செய்தல் வேண்டும்.

அதுவருமாறு : இயற்கையாக நமக்குள்ள நாபியாகிய குண்டத்தில் ஞானாக்னியை ஸ்தாபித்து அதில் சிவபிரானை ஆவா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹனம் செய்து அக்னியை நன்றாக எரியப்பண்ணி, விந்துஸ்தானத்தி லிருந்து பெருகிவரும் அமிர்ததாரையை நெய்யாக எண்ணி இடாநாடி எனும் சுருவத்தைக் கொண்டு நூற்றெட்டு முறை சிவமூல மந்திரத்தால் ஹோமம் செய்து முடிவில் சுஷூம்நா எனும் நாடியைச் சுருவமாக எண்ணிப் பூர்ணாஹூதி செய்ய வேண்டும். பிறகு பூஜா பலனையும் ஹோமப்பலனையும் சிவபிரானுக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டும். சமர்ப்பணம் செய்தபின் ஹ்ருதய கமலத்தில் பூஜித்த சிவனை நிஷ்களஸ்வரூபமாகப் புருவ நடுவில் தீச்சுடர் போன்று விளங்கும் சிவனுடன் லயமடையச் செய்து பூஜையை முடிக்க வேண்டும். தன்னையும் சிவோஹம் பாவனை செய்துகொள்ள வேண்டும். (அதாவது சிவனைப்பூஜ்ய சிவனாகவும், தன்னை பூஜக சிவனாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும்) இவை அனைத்தையும் மனோபாவனையால் செய்து கொள்ள வேண்டும்.

அதன்பின் "நான் இனி உங்களை வெளிப்பூஜையாகச் செய்ய விழைகிறேன். அதற்கு அனுமதி தாருங்கள்" என்று உத்தரவு பெற்று பூஜைக்கான இடத்தை முதலில் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

77. இடசுத்திக்கு ஸ்தானசுத்தி என்பது பெயராகும். அது வருமாறு:

அஸ்தரமந்திரத்தினால் தாளத்திரயம் செய்க, சோடிகை முத்திரையால் அந்த ஸ்தானத்தில் உள்ள இடையூறுகளை அகற்றுக. மீண்டும் அஸ்திரமந்திரத்தால் நெருப்பாக எரிகின்ற உறுதியான மூன்று பரிகாரங்களை நிறுவி கவசமந்திரத்தால் வலக்கை ஆள்காட்டி விரலால் கோட்டையை அமைத்ததாகப் பாவிக்க (கோட்டை பாது காப்பு) தேனு முத்திரையை ஓம் ஹாம் ஹெளம் சக்தயே நம: என்று காட்டி சக்தியாகிய வலை தனக்கு மேலும் கீழும் உண்டானதான எண்ணுக. இதனால் சகலவிதமான பாதுகாப்பும் ஏற்பட்டதாகப் பாவனை செய்க. இதுவே ஸ்தானசுத்தியாகும்.

ஸ்தான சுத்தி செய்தபின் த்ரவ்யசுத்தி செய்ய வேண்டும். த்ரவ்ய சுத்திக்காகவும் பின்னர் செய்யப்போகின்ற மந்திரசுத்தி, லிங்க சுத்திக் காகவும், பாத்ய, ஆசமனீய, அர்க்யங்களைச் செய்ய வேண்டும். அவை பற்றி காண்போம்.

78. பாத்யம்

சந்தனம், வெட்டிவேர், அறுகு, வெண்கடுகு ஆகிய நான்கையும் சுத்தமான நீரில் இட்டுக் கால் கழுவுவதற்காக என காலில் சமர்ப் பிக்கப்படும் 'பாத்யம்' என்பதை தயாரிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

79. ஆசமனம்

ஆசமனம் செய்வதற்காகத் தயாரிக்கப்படுகின்ற தூய நீருக்கு ஆசமனம் என்பது பெயராகும்.

இதில் பச்சைகற்பூரம், ஏலக்காய், சாதிக்காய், இலவங்கம், சாப்பத்திரி, வால்மிளகு ஆக இந்த ஆறையும் சேர்த்துத் தயார் செய்தல் வேண்டும்.

80. அர்க்யம்

பால், தர்பை நுனி, அட்தை, சந்தனம், புஷ்பம், ஏலம், யவம், வெண்கடுகு ஆகியன சேர்த்துத் தயார் செய்தல் வேண்டும்.

மேற்கண்டவைகளில் பாத்யம் ஆசமனீயம் இரண்டிற்கும் தேவையான பாத்ரத்தை (அர்க்ய வட்டில்கள்) அஸ்திரமந்திரம் சொல்லி சுத்தம் செய்து ஹ்ருதய மந்திரத்தால் நீரை நிரப்பிக் கொள்ள வேண்டும். பாத்யத்தை அங்கமந்திரங்களால் பூஜை செய்ய வேண்டும். ஆசமனத்தைச் சம்ஹிதா மந்திரங்களால் பூஜை செய்ய வேண்டும். 9 முறை பிரணவத்தால் அபிமந்திரித்தல் வேண்டும். திக் பந்தனம், அவகுண்டனம் செய்ய வேண்டும். தேனுமுத்திரை காட்ட வேண்டும். பின்பு இதை தகுந்த இடங்களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

81. விசேஷார்க்யம்

அர்க்ய வட்டில்களை அஸ்திரமந்திரத்தால் சுத்தி செய்து பிந்து ஸ்தானத்தில் அமுதரூபமாக ஒழுகும் அமிருத தாரையாக நீரை எண்ணி வௌஷடந்தமான ஹ்ருதய மந்திரத்தால் நிரப்ப வேண்டும். பால், தர்பைநுனி போன்ற முன்சொன்ன த்ரவ்யங்களைச் சேர்த்துப் பின்பு ஆசன, மூர்த்தி, மந்திரங்களாலும், வித்யா தேஹ நேத்ர மந்திரங்களாலும் மற்ற அங்கமந்திரங்களாலும் (சமஹிதா மந்திரங் களால்) அர்ச்சித்து அதையே மீண்டும் நியாசம் செய்து அபிமந்திரித்து திக்பந்தனம், அவகுண்டனம் செய்து தேனுமுத்திரை காட்டி அமிர்த மயமாக ஆக்கித் தக்க சமயங்களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

த்ரவ்யசுத்தியின் பொருட்டுப் பூஜாத்ரவ்யங்களை நீரிட்சணம், ப்ரோக்ஷணம், திக்பந்தனம், அவகுண்டனம் செய்து விசேஷார்க்ய ஜலத்தால் அஸ்திரமந்திரம் சொல்லி புரோட்சிக்க வேண்டும்.

விசேஷார்க்ய நீரைத் தன்மீதும், தெளித்துக் கொண்டு அபிஷேகத் திரவ்யம், பூஜைக்கான பிறவற்றின் மீதும் தெளித்து சுத்தம் செய்தல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். பூஜைத் திரவ்யங்களை ஹ்ருதயமந்திரம் சொல்லியும், சந்தனம் முதலான வாசனைத் திரவ்யங்களைச் சத்யோகஜாத மந்திரம் சொல்லியும், ஆடைகளை வாமதேவ மந்திரத்தாலும், ஆபரணங் களை அகோரமந்திரத்தாலும் நிவேதனத்தைத் தத்புருஷ மந்திரத் தாலும், புஷ்பத்தை ஈசானமந்திரத்தாலும் அபிமந்திரத்தல் வேண்டு மென்பதறிக. இவ்வாறு செய்வது திரவ்யசுத்தி எனப்படும்.

82. மந்திரசுத்தி

பூஜை தொடங்கி பூஜை முடியும் வரை பூஜகர்கள் பேசாமல் மௌனமாக இருக்கவேண்டும். மந்திரங்களை மனதிற்குள்ளேயே சொல்லிக்கொள்ள வேண்டும்.

பற்கள் மேல் அண்ணம், உதடுகள் ஆகியவற்றின் செயல் பாட்டினால் ஏற்படுகின்ற மாயாகார்யமான அசுத்தம் நீங்குவதற்காக வும் மந்திரங்களின் பயன் முழுவதும் கிடைத்ததற்காகவும் பஞ்ச பிரம்ம மந்திரங்களை மூலாதாரம் தொடங்கி புருவநடுவரையிலும் எழுப்பவேண்டும். அங்கமந்திரங்களை புரு நடுவிலிருந்து பிரம்ம மந்திரம் வரை எழுப்ப வேண்டும். துவாதசாந்தம் வரைச் சிவ மூல மந்திரத்தை எழுப்பவேண்டும்.

மந்திரங்களை உச்சரிக்கும்போது அவசியம் குறில், நெடில், புலுதம், உதாத்தம் அநுதாத்தம் போன்ற ஏற்ற இறக்கங்களை நன்கு உணர்ந்து சொல்ல வேண்டும். ஒலி வேறுபாடு உண்டாயின் மந்திரங் களின் பலன் மாறிப்போகும். ஆகையால் மந்திரங்களை நன்கு அறிந்து தவறு ஏதும் இன்றிச் சொல்ல ஆசாரியர்கள் அப்பியாசம் பெற்றவராக இருக்கவேண்டும்.

அதாவது பஞ்சாட்சரம் முதலான மூலமந்திரங்களை வெறும் எழுத்துக்களால் ஆன சொற்கள் என்றெண்ணாமல் 'சி'யில் சிவமும் 'வ'வில் சக்தியும் 'ய'வில் உயிர்களும், 'ந'வில் மறைப்பு சக்தியும், 'ம'வில் மாயை முதலான மலங்களும் விளக்கப்பட்டன என்பதை உணர்ந் தும், இதுபோல் மற்ற மந்திரங்களுக்குண்டான உண்மைப் பொருள் களை உணர்ந்தும் பூசை செய்யவல்லமை பெற வேண்டுமென்க.

மந்திர சுத்தி செய்யுமுன் ஆன்மசுத்தியையும் செய்து கொள்ள வேண்டும்.

83. ஆத்மசுத்தி

அதாவது தன்னுடைய இருப்பிடத்தையே சிவாசனமாகவும், தன் இதயமே சிவபிரான் தங்குமிடம் என்பதை அறிந்து இதயத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபிரானை மானசீகமாக வழிபாடு செய்து நெற்றியில் சந்தனத்தால் பொட்டு இட்டுக்கொண்டு, சிவமூலமந்திர உச்சாரணையோடு சிரசில் மலர்சூட்டிக் கொள்ள வேண்டும். தனது உடலைச் சிவ ரூபமாகவே பாவனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதை ஆத்மசுத்தி என்பர்.

84. லிங்கசுத்தி

அவசியம் செய்யவேண்டிய பஞ்சசுத்தியில் கடைசியில் வருவது லிங்கசுத்தியாகும். அது வருமாறு:

சிவபிரானை அபிஷேகத்திற்காக எழுந்தருளச் செய்யும் வேதிகையில் ஆறு ஆசனங்களையும் பூஜை செய்யவேண்டும். பின்பு சிவபிரானின் லிங்க உருவை அதன்மீது எழுந்தருளச் செய்ய வேண்டும். நிர்மால்ய பூக்களை சிவகாயத்ரி மந்திரத்தால் நீக்க வேண்டும். சாமான்யார்க்ய நீரினால் ஹ்ருதயமந்திரத்தைச் சுவாஹாந்தமாகக் கூறி சிவமூல மந்திரத்தினாலும், சத்யோஜாதகிக்கிரமமாக ஐந்து சிரசுகளிலும் அர்க்யம் சமர்ப்பிக்க வேண்டும்.

பின்பு தூபதீபம் சமர்ப்பிக்க வேண்டும்.

சத்யோஜாதம் முதலாகப் பிரம்ம மந்திரங்களை உச்சரித்தும் அஸ்தமந்திரம் கூறியும் நிர்மால்யப்பூக்களைக் கையால் எடுத்து ஈசான பாகத்தில் ஒரு பாத்திரத்தில் சண்டேஸ்வரரை பூஜைக்கென வைத்து விடவேண்டும்.

லிங்கத்தை அஸ்திரமந்திரத்தாலும் பிண்டிகையை பாசுபதாஸ்திர மந்திரத்தாலும் நீரால் சுத்தப்படுத்தியபின்பு மீண்டும் அஸ்திரம்தி உச்சாரணத்துடன் சாமான்யார்க்ய ஜலத்தால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

குறிப்பு : பரிபூரணனான சிவன் 'சித்து' மற்றும் 'அசித்துப்' பிரபஞ்சங்களிலும் வியாபித்திருக்குந்தன்மையால் அவர் இந்த லிங்கத்திலும் உள்ளார் எனும் பாவனையாகவே லிங்கசுத்தி செய்ய வேண்டும் என்பர். மேற்கண்ட இந்த பஞ்சசுத்திகளினால், ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, பைந்தவம் எனும் ஐந்து பாசங்கள் நீங்கும் என்பது ஆகமங்களினாற் கூறப்பட்ட செய்தியாகும்.

85. ஆத்மார்த்தபூஜை செய்ய எவ்வகை லிங்கங்களைப் பயன் படுத்தலாம் அவற்றின் பலன்கள் யாவை?

முறையாக சிவதீக்ஷை பெற்றவர்களே ஆத்மார்த்த பூஜையைச் செய்யலாம். அவர் உலோகலிங்கம் சிலாலிங்கம் ஆகியவற்றில் பூஜை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யலாம். தன் முன்னோர்கள் வீட்டில் பூசித்து வந்ததை இவர்களும் பூசிக்கலாம்.

இவை தவிர, க்ஷணிகலிங்கபூஜையும் செய்யலாம். க்ஷணிகம் என்றால் பூஜை செய்யும்போது ஆவாஹித்து உடன் விஸர்ஜனம் செய்துவிடுவதாகும். (க்ஷணிகம் = கணநேரம் என்பது பொருள்) அவ்வாறு செய்ய விரும்புபவர்கள். ஆகமங்களில் சொல்லப்பட்ட ஸிகதம் (மணல்) தண்டுலம் (அரிசி) அன்னம் (சாதம்) நதிமிருத் (ஆற்று மணல்) கோமயம் (பசுஞ்சாணம்) நவநீதம் (பசுவின் வெண்ணெய்) ருத்ராக்ஷம் (ருத்திராட்சமணி) பஸ்மம் (விபூதி) சந்தனம் கூர்ச்சம் (தர்பையில் முடிச்சிட்டு செய்வது) புஷ்பமாலா (பூமாலை) குளம் (வெல்லம்) ஆகிய பன்னிரெண்டையும் பயன்படுத்தலாம்.

இவற்றில் பூஜை செய்தால் ஒவ்வொன்றுக்கும் தனிப்பலன் உண்டு.

அவையாவன: ஆற்றுமணல் : மோக்ஷமளிக்கும். அரிசி : தன தான்யப் பிராப்திதரும். அன்னம் : குறையின்றி உணவு கிடைக்கும். நதிமணல் : மிகுந்த நிலப்பரப்பையளிக்கும். பசுஞ்சாணம் : நோய் நீக்கும். பசுவெண்ணெய் : மனமகிழ்வு தரும். ருத்ராக்ஷம் : ஞானப் பெருக்களிக்கும். சந்தனம் : சுகபோகம் உண்டாக்கும். கூர்ச்சம் : முக்தியைத் தரும். புஷ்பமாலை : ஆயுள் விருத்தியைத் தரும். வெல்லம் : விரும்பியதை எல்லாம் தரும். விபூதி : சகல ஐஸ்வர்யங்களையும் உண்டாக்கும் என்று காரணாகமத்தில் கூறப்படுகிறது.

மேலும் ஆத்மார்த்த சிவபூஜையை விடாமல் தினமும் செய்து வந்தால் தீர்த்தயாத்திரை சென்று அங்குள்ள புண்ணிய நதிக்கரையில் செய்யும் யாகம், தபசு, தானம், ஜபம் இவைகளினால் உண்டாகும் புண்ணியத்தைக் காட்டிலும் கோடிமடங்கு அதிகமாகப் பெறலாம் என்றும் மேற்கண்ட ஆகமம் கூறுகிறது.

86. பரார்த்தபூஜையை எங்குச் செய்யலாம்? அதனால் என்ன பயன் உண்டாகும்?

உலகங்கள் அனைத்தையும் காக்க வேண்டும் என்பதற்காக கிராமங்களில் நகரங்களில் மற்றும் சிறப்புடன் (1) தானே தோன்றி விளங்கும் சுயம்புலிங்கம் (2) உமாதேவியால் பிரதிஷ்டை செய்யப் பட்ட 'தேவிகம்' (3) தேவர்களால் பூஜிக்கப்பட்டதான 'திவ்யம்' (4) ரிஷிகளால் பூஜிக்கப்பட்டதான ஆர்ஷிகம், ராக்ஷஸர்களால் பூஜிக்கப் பட்ட ராக்ஷஸம் அல்லது ஆசுரம். மனிதர்கள் பிரதிஷ்டை செய்யும் "மானுஷம்' ஆகிய ஆறு ஆலயங்களும் சிறப்புடையனவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றைச் சீர்படுத்தி வழிபாடு இயற்றினால் எல்லா நலமும் பெற்று உய்யலாம்.

சிவபூஜையும் சைவமும் சிறந்து விளங்கும் இடம் தென்னிந்தியாவே ஆகும்.

"விந்யாத்தே தக்ஷிணேதேசே சைவோத்பத்தி : ப்ரதீர்த்திதா:" விந்தியமலைக்குத் தென்தேசத்தில்தான் சைவம் தோன்றி வளர்ந்த தாகவும் அதனால் சிவபூஜையும், சிவன் கோவில்களும் தென்னகத்தில் மிகுதியாக விளங்குகின்றன என்பதையும் காணலாம்.

87. ஆகமத்தின் இரு பிரிவுகள் யாவை? அவற்றை விளக்குக.

கலம், அகலம் என்று இரண்டு பிரிவுகள் ஆகமத்திற்கு உண்டு.

சிவபெருமான் சனகாதிமுனிவர்கட்கு உபதேசித்த ஆகமம் 'கலம்' எனப்படும். (சிவன் உபதேசித்தது : கலம்)

அம்முனிவர்கள் அதை உலகுக்கு அளித்ததை அகலம் என்பார் கள். (கலம் : சுருக்கம், அகலம், விரிவு) பொதுவாகப் பிரதிஷ்டை, நித்ய பூஜை, குடமுழுக்கு உத்சவம் ஆகியவற்றை கலம் என்னும் ஆகமப் பிரிவின்படியும்,

ஆன்மார்த்தபூஜை கிராம தேவதை பூஜை இஷ்டலிங்கபூஜை ஆகியவற்றை ரிஷிகள் உபதேசித்த அகலம் எனும் ஆகமமுறைப்படி செய்வது சிறப்பாகும்.

88. சரீரம் பஞ்சபௌதிக வ்யாபகம் விளக்குக.

''பாதாதி ஜானுபர்யந்தம் ப்ருதிவீஸ்தானமுச்யதே'', மனித உடலில் பாதம் முதல் முழங்கால்வரை ப்ருதிவீ (பூமி) சம்மந்த முடையது.

"அம்பஸ்தானந்து நாப்யாந்தம்."

முழங்காலுக்கு மேல் நாபி (தொப்புள்) வரை அப்பு (தண்ணீர்) சம்பந்தமுடையது.

''வன்ஹிஸ்தானம் களாந்தகம்'' நாபிக்குமேல் கழுத்துவரை வன்னி (நெருப்பு) சம்பந்தமுடையது.

"வாயுஸ்தானம் லலாடகம்."

கழுத்துக்கு மேல் நெற்றி வரை வாயு (காற்று) சம்பந்தமுடையது.

ததூர்வே த்வாதசாங்குலம் ஆகாச ஸ்தானம் இதி உக்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெற்றிக்குமேல் 12 அங்குலம் வரை ஆகாச (காற்று சம்பந்த முடையது.

மேற்கண்ட இந்த ஐந்து ஸ்தானங்களில் நெற்றிக்கு மேல் உள்ள த்வாதசாந்தம் என்னும் இடம் சிவனின் இருப்பிடமாகும் என்பது ஆகம வசனமாம்.

"தாலமாத்ராலலா டோர்த்வே விதஸ்தித்வாதசாங்குலம்

சிவஸ்தான மிதம் குஹ்யம் ப்ரமாணம் கதிதாமயா"

என்று சிவபெருமானே கூறியுள்ளார்.

89. பஞ்சாத்மபேதம் என்பது என்ன?

ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா, தத்துவாத்மா, பூதாத்மா என ஐந்து உயிர்கள் ஆகமங்களில் விளக்கப்படுகின்றன. அவையே பஞ்சாத்ம பேதம் என்பதாகும்.

90. பூததேக குணங்கள் யாவை?

சம்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் எனும் ஐந்தும் பூததேக குணங்கள் ஆகும்.

91. கர்ணிகை என்பதென்ன? விளக்கு.

வடகிழக்கிலிருந்து வடமேற்குவரை ஒரு கோடும் வட மேற்கிலிருந்து தென்கிழக்குவரை ஒருகோடும் வரைந்தால் அதற்குக் கர்ணிகை என்பது பெயர். இந்த இரண்டு கோடுகளும் கூடுமிடம் மத்யமம் அதாவது நடுப்பகுதியாகும் (பெருக்கல் குறி கர்ணிகை எனப் படுகிறது). அங்கு ஈசானரையும் பின்பு கிழக்கில் தத்புருடரையும் தெற்கில் அகோரமூர்த்தியையும், வடக்கில் வாமதேவரையும் மேற்கில் சத்யோஜாதரையும் பூஜிக்க வேண்டும்.

92. யஜமானன், சிவாசாரியார், சாதாகசாரியார், போதகாசாரியர் விளக்குக

ஒரு விசேஷபூஜையையோ, யாகத்தையோ, கும்பாபிஷேகம் போன்ற சிவபுண்ணியகாரியங்களையோ செய்ய முற்படுகின்றவர் 'யஜமானர்' எனப்படுகின்றார். இவர் தன்னுடைய வருவாயைக் கொண்டு வழிபாடுகளை நிகழ்த்துபவர் ஆவார்.

சிவாசாரியார், யஜமானன் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்ப மேற்படி செயல்களைச் செய்து வைப்பார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கண்ட சிவாசாரியாருக்கு உடன் இருந்து ஆகமமுறைப் படியான பூஜைகள் ஹோமவிதிகள் முதலியவற்றை நினைவூட்டிச் செய்ய உதவியாக இருப்பவர் சாதகாசாரியார். மேற்கண்ட சிவாசாரி யாரும், சாதகாசாரியாரும் முறையாகக் கிரியைகளைச் செய்கின்றார் களா? என்றும் இடையில் ஏதேனும் ஐயம் ஏற்படின் அதைப் போக்கவும் கிரியை விளக்கங்களை மற்றவர்களுக்கப் புரியவைக்கவும் (மற்றவர் என்பது யஜமானன் முதல் பொதுமக்கள் வரை என்றுணர்க) போதகாசாரியார் உதவுவார்.

93. ஆசனம் (இருப்பிடம்) என்பது என்ன? எவையெவை ஆசனமாகும்? அதற்குப் பலன் ஏதேனும் உண்டா?

பூஜை செய்யும்போது, ஜபம் செய்யும்போதும், ஹோமாதிகள் செய்யும்போதும் அமர்ந்து செய்யுமிடத்தில் அமர்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருள் ‘ஆசனம்’ ஆகும். தருப்பையால் செய்த (தர்பாசனம்) ஆசனத்தில் அமர்ந்ததால் கீர்த்தி (புகழ்) பெருகும். மரப்பலகை பெருஞ்செல்வத்தைத் தரும். பட்டுத்துணி வியாதி நீங்கும். கம்பளம் சொக்யம் (சுகம் தரும்) புலித்தோல், செல்வம், மோட்சம் தரும். மான்தோல் ஞானம் தரும். கூர்மாசனம் (ஆமை அமைப்புடையது) போகமோட்சம் தரும்.

94. ஆசமனம் ஏன் செய்ய வேண்டும்? அதில் எத்தனை வகை?

ஆசமனம் இரு வகைப்படுகிறது. அவை (1) வேதோக்தம் (2) ஆகமோக்தம்.

1. வேதோக்தமாயின்

1) ரிக்வேதப் பிரீணாது 2) யஜுர் வேதப்பிரீணாது 3) சாமவேதப் பிரீணாது என மூன்று முறை வலக்கை உள்ளங்கையில் சிறிதளவு நீரைக்கொண்டு ஆசமனம் செய்ய வேண்டும். நான்காவதாக வலக்கையின் கட்டைவிரலால் அதர்வண வேதாயநம’ என்று கூறிக் கொண்டு உதடுகளைத் துடைத்தல் வேண்டும்.

இவ்வாறு செய்வதால் முதல் மூன்றினால் ருக், யஜுர், சாம வேதங்கள் ப்ரீதி அடைகின்றன என்றும், உதடுகளை அதோ முகமாய்த் துடைத்தால் விநாயகர் பிரீதி அடைவார் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன.

2. ஆகமோக்தமானால்

1. ஓம் ஹாம் ஆத்ம தத்வாய ஸ்வாதா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. ஓம் ஹாம் வித்யாதத்துவாய ஸ்வாதா

3. ஓம் ஹாம் சிவதத்துவாய ஸ்வதா என மூன்றுமுறை ஆசமனம் செய்ய வேண்டும்.

(1) 'ஆத்மதத்துவாய ஸ்வதா' எனக்கூறி ஆசமனம் செய்வதால் அதற்கு அதிபதியான பிரம்மன் தோன்றுவார். ஆத்ம தத்துவம் இருபத்து நான்கையும் சுத்தம் செய்வார். பின்பு திருவருட் சக்தி யானது ஆத்ம தத்துவம் இருபத்தி நான்கிலும் உள்ள வினைகளை நீக்கும். அதனால் ஆத்மதத்துவத் தொடர்பு நீங்கும்.

(2) 'வித்யா தத்துவாய ஸ்வதா' எனக் கூறி ஆசமனம் செய்தால் அதற்கு அதிபதியான விஷ்ணு தோன்றுவார். வித்யாதத்துவம் ஏழினையும் சுத்தம் செய்வார். பின்னர் வித்யாதத்துவம் ஏழிலும் உள்ள வினைகளைத் திருவருட்சக்தி நீக்கும். அதனால் வித்யா தத்துவத் தொடர்பு நீங்கும்.

(3) 'சிவதத்துவாய ஸ்வதா' எனக்கூறி ஆசமனம் செய்தால் அதற்கு அதிபதியான ருத்திரர் தோன்றுவர். சிவதத்துவம் ஐந்தனுள் சுத்த வித்தை ஈஸ்வரம், சாதாக்யம் எனும் மூன்று தத்துவங்களையும் சுத்தம் செய்வார். இத்தத்துவங்களில் உண்டான வினைகளைத் திருவருட் சக்தித் தோன்றி நீக்கும். அதனால், மேற்சொன்ன தத்துவங்களின் வினைகள் நீங்கி உயிர்கள் சிவகதி அடையும்.

ஆகவே, தத்துவ சுத்திகளின் பொருட்டு கிரியைகளைச் செய்பவர் கள் கிரியைகளைத் தொடங்குமுன்னர் கட்டாயமாக ஆசமனம் செய்தல் வேண்டும்.

மேலும் தும்மல், இருமல், இவற்றின் பின்னும் ஆசமனம் செய்ய வேண்டுமென்பர்.

95. சகளீகரளம் எத்தனை வகைப்படும்?

கரன்யாச, அங்கன்யாச ரூபமான சகளீகரணம் மூன்று வகைப் படுகிறது. 1. சிருஷ்டிரூபம் 2. ஸ்திதி ரூபம் 3. சம்ஹாரரூபம் என்பனவாம்.

இவற்றில் இல்லறத்தோர் சிருஷ்டிரூபமான சகளீகரணத்தையே செய்ய வேண்டும். அதுவருமாறு:

முதலில் வலக்கையினால் இடக்கையின் உள்ளங்கை, புறங்கை இரண்டையும் அஸ்திரமந்திரம் சொல்லித் துடைக்க வேண்டும்.

பின்பு இடக்கையினால் வலக்கையின் உள்ளங்கை புறங் கைகளைத் துடைக்கவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டு கைகளின் மணிகட்டுவரை அஸ்திரமந்திர தேஜஸ் பரவியதாக பாவனை செய்ய வேண்டும்.

இரண்டு கைகளையும் ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்து சம்புடம் போல் கொள்ள வேண்டும்.

இரண்டு கட்டைவிரல்களின் மத்தியிலும் அமிர்தமயமான சக்தி மண்டலத்தை "ஓம் ஹாம் சக்தயே வௌஷட்" என்ற மந்திரம் கூறி தியானிக்க வேண்டும்.

அமிர்தப் பிராவகத்தினால் கைகள் நனைந்ததாகப் பாவனை செய்து கொண்டு இரண்டு கட்டை விரல்களின் அடிப்பாகத்திலும் "ஓம் ஹாம் சிவாசனாய நம:" என்று நியாசம் செய்து பின்பு கைகளின் மத்தியில் ஓம் ஹாம் சிவமூர்த்தயேநம:" என்று உச்சரித்து ப்ராகசமான மின்னல் போல் ஒளிரும் வெண்மை நிறமுடைய பரமசிவ சூக்ஷ்ம மூர்த்தியை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

பின்பு சுட்டு விரல்களினால் இரண்டு கைகளின் கட்டை விரல் களிலும் கீழிருந்து மேலாகத் தடவி "ஓம் ஹோம் ஈசானமூர்த்தாய நம:" என்றும்,

பின்பு கட்டைவிரல்களினால் முறையே சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் ஆகியவைகளில் ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம: ஓம் ஹூம் அகோர ஹ்ருதாய நம: ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: ஓம் ஹம் சத்யோஜாதமூர்த்தயே நம: என்று நியாசம் செய்ய வேண்டும்.

அதன்பின்பு கட்டை விரல், மோதிரவிரல் ஆகிய இரண்டினாலும் இரண்டு கைகளின் உள்ளங்கைகளில் ஓம் ஹாம் வித்யா தேஹாய நம: என்ற மந்திர உச்சாரணத்துடன் முப்பத்தி எட்டு கலைகளின் ரூபமாய் உள்ள சதாசிவரூபமான சிவனை வித்யாதேஹமுடையவனாக எண்ணி நியாசம் பண்ண வேண்டும்.

பின்பு நேத்திர மந்திரத்தால் நேத்ரம் கற்பித்து கட்டைவிரல் மோதிரவிரல்களினால் ஓம் ஹாம், ஹௌம் சிவாய நம: என்று சொல்லி முன் நியாசம் செய்த சதாசிவனிடத்தில் சிவனை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

பிறகு சுண்டுவிரல் முதலாக ஹ்ருதயம் சிரஸ், சிகா, கவச, அஸ்த்ர மந்திரங்களை முறையே முன்புபோல் கீழிருந்து மேலாகத் தடவி நியாசம் பண்ண வேண்டும்.

பின்பு மீண்டும் கவச மந்திரம் சொல்லி இரண்டு கைகளையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றாகப் சேர்த்து மூடி வௌஷடந்த மூலமந்திரத்தினால் இரண்டு கைகளையும் பரமீகரணம்(தடவுதல்) செய்ய வேண்டும்.

குறிப்பு : பரமீகரணம் செய்வதால் நியாசம் செய்யப்பட்ட ஹ்ருதயம் முதலானவைகளும், வெவ்வேறு வண்ணமுடைய கலைகளும் ஆவாஹனம் செய்யப்பட்ட பரமசிவனுடைய மிக வெண்மையான ஒளியுடன் இரண்டறக் கலக்கும் என்க.

அங்கன்னியாசம்

வலக்கை கட்டைவிரல் மோதிரவிரல் இரண்டாலும் 'ஓம் ஹாம் சிவாசனாய நம:' என்று உச்சரித்தபடி ஹ்ருதயத்தை தொடவேண்டும். ஹிருதய தாமரையைச் சிவாசனமாக கற்பித்துக் கொண்டு அதில் ஓம் ஹாம் ஹம் ஹரம் சிவமூர்த்தயே நம: என்று சிவனை நாபி முதற்கொண்டு புருவ நடுவரை ஒளிமயமான சிவனுடைய மூர்த்தத்தை நியாசம் செய்யவேண்டும்.

பின்பு நான்கு விரல்களையும் முஷ்டியாகப் பிடித்து ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: என்று சொல்லி கட்டைவிரலால் சிரஸைத் தொடவேண்டும்.

கட்டைவிரல் சுட்டுவிரல் இரண்டாலும் முகத்தை ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராயனம் என்று சொல்லித் தொடவேண்டும்.

கட்டைவிரல் நடுவிரல் இரண்டையும் கூட்டி ஓ ஹூம் அகோர ஹிருதாய நம: என்று சொல்லி மார்பை தொடவேண்டும்.

கட்டை விரல் மோதிர விரல் ஆகியவற்றால் ஓம் ஹிம் வாம தேவகுஹ்யாய நம: என்று சொல்லி தொப்புளைத் தொடவேண்டும்.

கட்டைவிரல் சுண்டுவிரல் இரண்டையும் கூட்டி ஓம் ஹாம் சத்யோஜாதமூர்த்தயே நம: என்று சொல்லி பாதமிரண்டையும் தொடவேண்டும்.

பின்பு புருவ நடுவிரல் தொடங்கி பிரம்மமந்திரம் முடிய "ஓம் ஹாம், ஹௌம் வித்யாதேஹாய நம: என்று சொல்லி வித்யா தேகத்தை நியாசம் பண்ண வேண்டும்.

நேத்திரமந்திரம் சொல்லி வலக்கை சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் மூன்றாலும் நேத்திரம் கற்பிக்க வேண்டும்.

பின்பு வித்யாதேசத்தில் கட்டைவிரல், அணிவிரல் ஆகியன வற்றால் ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: என்று சொல்லி பரமசிவனை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மீண்டும் கட்டைவிரல் சுண்டுவிரல் ஆகிய இரண்டாலும் ஹ்ருதயமந்திர உச்சாரணத்துடன் இதயத்தைத் தொடவேண்டும்.

கட்டைவிரல் அணிவிரல் ஆகிய இரண்டாலும் சிரோமந்திர உச்சாரணத்துடன் சிரசைத் தொடவேண்டும். கட்டைவிரல், நடுவிரல் இரண்டாலும் சிகாமந்திர உச்சாரணத்துடன் சிகையைத் தொடவேண்டும். பின்னர் கவசமந்திரம் சொல்லி இரண்டு கைகளின் சுட்டுவிரல்களினால் மார்பளவு பக்கவாட்டில் உயர்த்திக் காட்டி கவசம் புரிதல் வேண்டும்.

அஸ்த்ர மந்திரம் சொல்லி கைகளில் கட்டைவிரல் அணிவிரல் ஆகியன கொண்டு மூன்றுமுறை நியாசம் பண்ண வேண்டும்.

குறிப்பு : மேற்சொன்ன மந்திரங்களில் அஸ்த்ர மந்திரம் மட்டும் 'ஹூம்பட்' என்று முடியுமாறும் மற்றவை 'நம:' என்று முடியுமாறும் சொல்லிக் கொள்ள வேண்டும்.

மீண்டும் அஸ்திர மந்திரத்தினால் தாளத்திரயம் செய்து கோடிகா முத்திரையால் திக்பந்தனம் செய்து கொண்டு பின்பு கவசமந்திரம் சொல்லி அவகுண்டனம் செய்துகொண்டு வௌஷடந்த மூல மந்திரத்தினால் மஹாமுத்திரை காண்பிக்கவேண்டும்.

பின்னர் தன்னையும் சிவனுக்கு சமானனாக பாவித்துக் கொள்ளவேண்டும். இதற்கு அங்கன்னியாசம் என்று பெயராகும்.

இவை இரண்டும் சேர்ந்ததைச் 'சகளீகரணம்' என்பர்.

96. ஆசமனம் செய்தபின் தொடவேண்டிய இடங்கள் யாவை? ஏன் தொடவேண்டும்? எப்படித் தொடவேண்டும்?

ஆசமனம் செய்தபின் தொடவேண்டிய இடங்கள்:

1. முகம் *2.* மூக்கு *3.* கண்கள் *4.* செவிகள் *5.* உந்தி *6.* மார்பு *7.*புஜங்கள் 8. சிரசு ஆக எட்டு இடங்கள் தொடவேண்டிய இடங்கள் ஆகும்.

முகத்தைத் தொடுவதால் கங்கையும், மூக்கைத் தொடுவதால் பிராணனும், கண்களைத் தொடுவதால் சூரியசந்திரர்களும், செவி களைத் தொடுவதால் லோகபாலகர்களும், உந்தியைத் தொடுவதால் பிரம்மனும் மார்பைத் தொடுவதால் ருத்ரனும், புஜங்களைத் தொடுவதால் அசுவனி தேவர்களும், சிரசைத் தொடுவதால் சிவனும் பூஜிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட இடங்களுக்கு மேற்கண்டவர்கள் அதிபதிகள் ஆவர். அவர்களது ப்ரீதிக்காகவும் அந்தந்த ஸ்தானங்கள் சுத்தியாவதின் பொருட்டு கட்டாயம் தொடவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடவேண்டிய முறையாதெனின், வலக்கையின் பெருவிரல், அணிவிரல் இவற்றை ஒன்று கூட்டி தொடவேண்டும். ஏனெனில் பெருவிரலில் அமிர்தகலையும், அணிவிரலில் ஈஸ்வரனும் அதிபர்களாக இருக்கின்றனர். மேற்கண்ட விரல்களினால்தான் தொடுமிடங்களை முறையாகத் தொடவேண்டுமென்க.

97. அர்க்யதீர்த்தம் (தர்ப்பணம்) எவ்வாறு விடவேண்டும்?

பிரஜாபதிகளுக்கு சுண்டுவிரல் நுனியிலும், விரல் நுனிகளால் தேவர்களுக்கும் நீர்விடவேண்டும்.

உள்ளங்கை வழியாக விடுவது பிரமதீர்த்தம் எனப்படும். சுட்டு விரல் நுனியில் பித்ருக்களுக்கு விடவேண்டும். விரல்கணுக்களின் வழியாக ரிஷிகளுக்கு விடவேண்டும். இடது உள்ளங்கையில் சந்திரத் தீர்த்தமும் வலது உள்ளங்கையில் அக்னி தீர்த்தமும் உள்ளதாகக் கற்பிக்கப்பட்டுள்ளது. முறையறிந்து செய்ய வேண்டும்.

98. ஏன் எல்லாக் காரியங்களிலும் பவித்ரம் தரித்துக் கொள்ள வேண்டும்? பவித்ரலக்ஷணமாவது யாது?

சிவபிரானுக்குச் சூலாயுதமும், இந்திரனுக்கு வச்ராயுதமும் விஷ்ணுவிற்குச் சக்ராயுதமும் எப்படி முக்கியமாக விளங்குகின்றனவோ அதுபோன்று கர்மங்கள் செய்கின்ற கர்த்தாவிற்குப் பவித்ரம் முக்கியமானதாகும்.

பதினாறு (16) அங்குலமுள்ள ஐந்து தர்பையைக் கொண்டு நுனி இரண்டு (2) அங்குலமுடையதாகவும், முடிச்சு ஒரு அங்குலமுடையதாகவும், வளயம் இரண்டு அங்குலம் உடையதாகவும் செய்து வலக்கை மோதிர விரலில் அணிந்துகொள்ள வேண்டும்.

99. திருவிழாக்காலங்களில் இறைவனை வாகனங்களில் உலா வரச் செய்வதின் நோக்கமென்ன? வெறும் அழகிற்காகவா? அன்றி அவற்றுக்கு ஏதேனும் உட்பொருள் உண்டா?

உட்பொருள் உண்டு. எந்த ஒரு விழாவும் பொழுது போக்கிற்காக அல்ல இறைவனின் ஐந்தொழில்களை உணர்த்தவே விழாக்கள் நடத்தப்படுகின்றன. வடமொழியில் உத்ஸவம் எனப்படும். உத்ஸவம் என்பதை உத்+ஸவம் என்று பிரிக்கவேண்டும். ஸவம் என்பதற்கு சிருஷ்டி என்பது பொருள். உத் என்பதற்கு உயர்வு என்பது பொருள். அதாவது உயர்பிறப்பாகிய மக்கள் இறைவனின் ஐந்தொழில் நிகழ்ச்சிகளின் உண்மைப் பொருளை உணர்ந்து கொண்டு மாயாமலம் நீங்கி இறைவன் திருவடி நிழலை அடைவதற்கான விளக்கமே திருவிழாக்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரந்தோறும் பக்ஷந்தோறும், மாதந்தோறும் அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் உத்ஸவங்கள் செய்ய வேண்டும். இவற்றிற்குப் பஞ்சபருவ உத்ஸவங்கள் என்பது பெயர். இவற்றைத் தவறாமல் செய்வதால், செய்பவர் தனதான்ய விருத்தியும், வெற்றியையும், புண்ணியங்களையும் சிவபதவியையும் அடைவர். தரிசிப்பவர்க்கும் இவை கிட்டும் என்பது குமாரதந்திரம் கூறும் உண்மையாகும்.

மேலும் குமாரதந்திரத்தில் உத்ஸவ பேதங்கள் கூறப்படுகின்றன. அவை, சிவம் (ஒரு நாள் உத்ஸவம்) சாத்துவிகம் (மூன்றுநாள் உத்ஸவம்) பௌதிகம் (ஐந்து நாள் உத்ஸவம்) ஸ்ரீகரம் (ஏழு நாள் உத்ஸவம்) சௌக்யம் (ஒன்பது நாள் உத்ஸவம்) பைத்ருகம் (பதினோரு நாள் உத்ஸவம்) என ஆறு விதமாகும்.

மேலும் பதினெட்டு நாட்கள் இருபத்தியோரு நாட்கள் விழாக்களும் உள்ளன. ஒருநாள் செய்வது சிவப்பிரீதி தரும். மூன்று நாள் கிராமம் நலம்பெறும். ஐந்துநாள் பஞ்சபூதங்கள் பிரீதி அடையும். ஏழு நாட்கள் செய்வது பார்வதிக்கு ப்ரீதி உண்டுபண்ணும். ஒன்பது நாள் (இப்போது பல கோவில்களில் நடைபெறும் பிரம்மோற்ச்ஸவம் என்பது இது) செய்வது உலக நன்மை கருதியாகும். பதினோறு நாள் உத்ஸவம் அறிவு வளர்ச்சியுண்டுபண்ணும்.

12 நாள் ஆயின் தேவாதி தேவர்கள் முதல் சகலருக்கும் நன்மை தரும். 13 நாள் உத்ஸவம் செய்தால் சாந்தி நிலவும். 15 நாள் செய்தால் ஜனங்களுக்கு புஷ்டி உண்டாகும். 19 நாள் செய்தால் சந்நியாசிகட்கு நன்மை உண்டாகும். 21 நாள் செய்தால் எல்லா தேவர்களும் மகிழ்வர் என்று காமிகாகமம் கூறுகிறது.

1 முதல் *5* நாள் வரை செய்யும் உத்ஸவத்திற்கு கொடியேற்றம் தேவையில்லை. மற்ற எல்லா விழாக்களுக்கும் கட்டாயம் கொடியேற்ற வேண்டும் என்பதறிக.

முதல் நாள் உத்ஸவத்தில் கற்பக மரம் வாகனமாக அமையும். இதன் கீழ் இறைவன் எழுந்தருளக் காணலாம்.

மரத்துக்கு வேர் ஆதாரம். அதுபோல் இறைவன் பிரபஞ்சமாகிய மரத்துக்கு ஆதாரம் என்பதை அறிவிக்க ஏற்பட்டதாகும்.

2ம் நாள் சூரியப்பிரபை, சந்திரப்பிரபைகளில் இறைவன் உலா வருவது

சூரியன் இன்றி உயிர்கள் (பயிர்கள்) வளராதென்பதையும் சந்திரனின்றி உயிர்கள் (பயிர்கள்) தோன்றாதென்பதையும் உணர்த்துதல் அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகத்தைக் காப்பவர் சந்திர சூரியர்களே என்பதை உணர்த்தவே இறைவனை சூரிய சந்திரப்பிரபைகளில் வைத்து வணங்குவதின் நோக்கமாகும்.

மூன்றாம் நாள் அதிகார நந்தி

இவர் இறைவனால் சாரூப பதவியை அடைந்தவர். எனவே இவரும் கையில் சிவனைப் போலவே, மான், மழு, நான்கு கைகள், மூன்று கண்கள் பெற்று விளங்குகின்றார். உயிர்க்கூட்டங்களில் சிறந்தவர் அதிகார நந்தி தேவர். இவரை வாகனமாகக் கொண்ட இறைவனை வணங்கினால் நாமும் சாரூப பதவியை அடைய அருள்புரிவார் என்பது கருத்து.

நான்காம் நாள் நாகவாகனம்

நாகம் நஞ்சு, நாகமணி, படம் ஆகிய மூன்றையும் தன்னகத்தே மறைத்து வைத்திருக்கும். தேவையானபோது வெளிப்படுத்தும் தானும் எங்கேனும் புற்றினுள் மறைந்து வாழ்ந்து வெளிப்படும் தன்மையுடையது. அதுபோல் இறைவன் மறைந்திருந்து தேவை யானபோது வெளிப்பட்டு அருள்புரிவார் என்பதை உணர்த்தவே நாகவாகனக் காட்சி என்பதறிக.

ஐந்தாம் நாள் விருஷப வாகனம்

விஷருபம் தர்மஸ்வரூபம் வெண்மை நிறமுடையது. நான்கு வேதங்களை நான்கு கால்களாகக் கொண்டது. ஆணவம் இல்லாதது. அருளோடு கூடிய ஞானவடிவானது.

விருஷபத்தைப் போலவே உயிர்களும் தங்கள் குணங்களைக் கொள்வார்களேயானால் இறைவன் விருஷபத்தின் மீது இருந்து அதற்கு அருள் பாலித்ததைப்போல் நமக்கும் நம் உள்ளத்தில் வந்திருந்து அருள்புரிவார் என்பது விளக்கப்படுகிறது. மேலும் விருஷபம் - பாசஸ்வரூபமாகும். உயிர்கட்கு இயல்பாக உள்ள பாசஞானம், நீங்கப்பெற்று பசுஞானத்தை அடையார்களேயானால் அவர்களை ஆட்கொள்ள இறைவன்தானே வந்து அவர்களிடம் தங்குவான் (அருள்புரிவான்) என்பதையும் விருஷபாரூடன் காட்சி விளக்குவதை உணரலாம்.

ஆறாம் நாள் யானை வாகனம் மற்றும் கைலாச பர்வதம்

மதங்கொண்ட யானையைப் பாகன் அடக்கி அதன்மேல் அமர்ந்து உலாவருவான். அதுபோல் காமம், க்ரோதம், லோபம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மோஹம், எனும் மதங்கொண்ட மனித உயிர்களின் அறியாமையை அகற்றி ஞானஸ்வரூபமான இறைவன் அவர்களின் உள்ளத்தில் உறைவான் என்பதாகவும்,

பிராணவஸ்வரூபமானது யானை இறைவன் பிரணவத்துள் அடக்கம். எனவே இறைவன் பிராணவஸ்ரூபமான யானையின் மீது அமர்ந்துதானே அதன் உண்மைப் பொருள் என்பதை விளக்குவ தாகவும் கொள்ளலாம்.

இராவணவாகனம் (கைலாசபர்வதம்)

ஆணவம் நிரம்பியவன் இராவணன். ஆணவ மிகுதியால் அவன் இறைவனைத் துச்சமாக நினைந்து அவரது கயிலைமலையையே தூக்க எண்ணினான். எண் குணம் நிரம்பிய இறைவனை ஆணவ குணம் வெல்ல முடியாது. எனவே அவன் மலைக்கு அடியில் நசுங்கித் துன்ப மிகுதியால் உண்மை ஞானம் பெற்று இறைவனைச் சாமகானத்தில் துதித்தான். உண்மை ஞானத்தால் ஆணவம் அகன்றது. அவன் அருள் பெற்றான்.

அவனைப்போலவே உயிர்களும் ஆணவம் அகலப்பெற்றால் மெய்ஞானஸ்வரூபியான இறைவன் அருளைப்பெற முடியும் என்பதை இராவண வாகனம் உணர்த்தும்.

ஏழாம் நாள் தேர் - இரதம்

தேர்த்திருவிழா ஆகம வேறுபாட்டுக்கிணங்கச் சில கோவில்களில் 7ம் நாளிலும், சில கோவில்களில் 9ம் நாளிலும் செய்யப்படுகிறது.

தாராகாக்ஷன் கமலாட்சன் வித்யுன்மாலி (ஆணவ மலம், மாயாமலம், கன்மமலம்) ஆகியவையே மூன்று அசுரஸ்வரூபம் என்க.

இம்மூவரையும் அழித்தவர் சிவன் “திரிபுரம் எரித்த பெருமான்” எனப்படுகிறார். இவரது திரிபுரசம்ஹாரத் தொழிலை உணர்த்துவதே தேர்த்திருவிழா.

இந்த நாளில் மக்கள் இறைவனை வணங்கினால் தங்களுக் குண்டான மும்மலம் நீங்கி நல்லருள் பெறுவார்கள் என்பது உண்மை.

தேரின் உருவம் உலகைக்குறிக்கும். உலகில் உள்ள அத்தனைப் பொருள்களையும் தேரில் திருவிழாக் காலங்களில் சித்தரிக்க காணலாம்.

அழித்தேர் என்பதும் உணர்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எட்டாம் நாள் - குதிரை வாகனம்

குதிரை ஓடும்போது நான்கு பக்கமும் செல்லாமல் தடுக்க அதற்குக் கண்ணடைவு கடிவாளம் இட்டு ஒரே நேர்க்கோட்டில் ஓட்டிச் செல்கின்றோம்.

அதுபோல் ஐம்புலன்களையும் அதன் வழியே செல்லவிடாமல் தடுத்து நெறிப்படுத்துகின்ற ஞானிகளின் உள்ளத்தில் இறைவன் குடி கொள்வான் என்பதை உணர்த்துவதாகக் கொள்ள வேண்டும். குதிரை - ஞானிகள் - கண்ணடைவு - கடிவாளம் முதலியன ஐம்புலன்கள். அவைகளை தடுத்து நிறுத்தும் ஆற்றல் யோகம் மார்க்கம் எனப்படும்.

யோக மார்க்கத்தின் மூலம் அவர்கள் இறைவனைத் தனது உள்ளத்தாமரையில் எழுந்தருளப் பண்ணுவார்கள் என்பதுபோல மக்கள் அனைவரும் நற்சிந்தனையுடன் நல்ல மார்க்கங்களில் தங்கள் எண்ணங்களைத் திருப்பி இறைவனிடம் சரணாகதியடைந்தால் இறைவன் அவர்களுடைய உள்ளத்திலும் தானே வந்து தங்குவான் என்பதுணர்க.

ஒன்பதாம் நாள் - பிட்சாடனர்

தட்ச யாகத்தில் சிவாபராதத்திற்கு உட்பட்ட தாருகாவனத்து ரிஷிகள் தங்கள் அறப்பணிகளை எல்லாம் விடுத்து அதர்மத்தை மேற் கொண்டு வாழ்ந்தனர். அவர்களை நேர்வழிப்படுத்தவே இறைவன் பிட்சாடனர் (பிச்சைக்காரன்) வேடமணிந்து தாருகாவனம் சென்று அவர்களின் அறியாமை எனும் மாயையை அகற்றி அவர்களை மீண்டும் தரும நெறியில் திருப்பினார் என்பது புராணவரலாறு.

உயிரினங்கள் தெளிவின்றித் துன்பப்படும்போது தயாபரனான இறைவன் உயிர்கள் மீது கருணைகொண்டு தானே எளிய கோலத்தில் வெளிப்பட்டு அவர்களது அறியாமையை யாசித்துப் பெற்று அறிவை ஊட்டுவான் என்பது இதன் மூலம் விளக்கப்படுவது காண்க.

நடராஜர் திருவிழா

ஒன்று முதல் ஒன்பது நாட்கள் வரை நடைபெற்ற திருவிழாக் களில், 1. அங்குரார்ப்பணம் 2. த்வஜாரோஹணம் 3. ரக்ஷாபந்தனம் 4. கல்யாண உத்சவம் ஆகியன சிருஷ்டியையும் வாஹன உத்ஸவங்கள் யாகசாலை பூஜாஹோமங்கள் பலிப்பிரதானம் ஆகியன ஸ்திதி (காத்தல்)யையும் சூர்ணோத்ஸவம், ரதாரோஹணம், கருப்புமை சாற்றுதல் முதலிய உத்ஸவங்கள் சம்ஹாரத்தையும், மௌனமாக இறைவன் கோவிலை வலம் வருதல் (வாத்யகோஷங்கள் இன்றி) திரோபாவம் (மறைத்தல்) எனும் தத்துவத்தையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கும்பாபிஷேகம் அவரோஹணம் ரக்ஷைசாற்றுதல் சக்தி ஊடல் திருவிழா ஆகியன அனுக்கிரஹத்தையும் குறிப்பதாகக் கூறுவர்.

மேற்கண்ட ஒன்பது நாள் உத்சவங்களிலும் விளக்கப்பட்ட ஐந் தொழில்களையும் ஒருசேர உணர்த்துவதே நடராஜர் திருவிழா வாகும். நடராஜப்பெருமான் பஞ்சகிருத்ய மூர்த்தம் என்பது யாவரும் உணர்ந்ததே.

நடராஜர் தனது மண்டபத்தில் இருந்து புறப்படுவது சிருஷ்டி அபிஷேகம், ஸ்திதி, சாந்து அணிவித்தல், சம்ஹாரம் வெள்ளைச் சாற்றுப்படி திரோபாவம், பின் வெள்ளைச் சாற்றுப்படி நீங்கி வீதி உலா வருதல் அனுக்கிரஹம் என்க.

பத்தாம் நாள் : தீர்த்தம் - தெப்போத்ஸவம் விளக்குக.

தீர்த்தவாரியும், கல்யாணோத்ஸவமும் உயிர்களையும் உயிர் களுக்கு ஆனந்தம் தருவதற்காகவே என்றுணர்க.

ஆனந்தவாரியில் உயிர்களை மூழ்கடித்து இறைவன் தனது திருமணக்கோலத்தை அவைகட்குக் காட்டி (உமை சமேதரராக என்றும் கயிலையில் மணக்கோலத்துடன்) காட்சி தருவது காண்க.

இவ்வாறு உத்ஸவ தத்துவங்களை உணர்தல் வேண்டும்.

தெப்போற்ஸவம் உலக உயிர்கட்கு அன்றி தண்ணீரில் வசிக்கும் ஜீவராசிக்கும் தானே இறங்கிவந்து இறைவன் அருள்தருவான் என்பதை உணர்த்தவே என்பதறிக.

100. பவித்ரோத்ஸவம் என்பதென்ன? எப்போது செய்யவேண்டும்?

பவித்ரதம்+உத்ஸவம்=பவித்ரோத்ஸவம். புனிதமடைவதற்காகச் செய்யப்படும் திருவிழா. இதையும் ஆண்டுதோறும் செய்ய வேண்டும்.

ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் செய்ய வேண்டும். ஆவணியில் செய்வது உத்தமம். ஆவணியில் சுக்ராஸ்தமனம் இருந் தால் மட்டுமே. மற்ற மாதங்களில் ஏதேனும் ஒன்றில் செய்யலாம்.

எதிர்பாராமல் மூன்று மாதங்களிலும் குரு சுக்மூடம் ஏற்படின் அதற்குண்டான பிராயச்சித்தம் செய்துவிட்டுப் பவித்ரோத்ஸவத்தை ஆவணியில் செய்யவேண்டும்.

சுக்லபக்ஷத்தில் செய்வது உலக மக்களுக்கு நன்மை தரும்.

மூன்று நாட்கள், ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் வரை செய்யலாம். த்வாஜாரோஹணம் இல்லை. அங்குரார்ப்பணம் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகசாலை அமைத்து மண்டலமிட்டுப் பூஜை செய்து ஹோமம் செய்து ஹோம ரக்ஷையுடன் பவித்ரத்தையும் இறைவனுக்குச் சாற்றுதல் வேண்டும்.

பவித்ரலட்சணம் பவித்ரோத்ஸவ விதியில் காண்க.

அரசன் முதல் நாட்டில், நகரத்தில், கிராமத்தில் மக்கள் வரை யாவர் செய்த பாவமும் போகப் பவித்ரோத்ஸவம் சொல்லப்பட்டு உள்ளது.

சர்வப் பிராயச்சித்தார்த்தம், பவித்ரோத்ஸவம், கர்த்தயம் என்பது அறிக.

101. தேவி எனப்படும் பராசக்தி

பராசக்தியின் தோற்றம்

ஜகத்திற்கு மூலகாரணமானவள் தாய். இவ்வுலகம் சப்த ரூபமாகவும் (ஒலி) அர்த்தரூபமாகவும் (பொருள்) காணப்படுகிறது. இந்த சப்தார்த்த ரூபமான உலகுக்கு மூலகாரணம் சக்தியே ஆவாள்.

சச்சிதானந்த ஸ்வரூபமாக விளங்கும் சிவபிரான் நிஷ்களம், சகளம் என இரண்டு வடிவினர் ஆவார். உலகத் தொடர்பற்ற நிலைக்கு நிஷ்களம் என்று பெயர்.

நித்யா : ஸர்வகத: சூக்ஷ்ம: ஸதானந்த: நிராமய விகாரரஹித: ஸாக்ஷீ சிவ: ஞ்யேய: ஸநாதந: என்பதனால் இதை அறியலாம். உலகத் தொடர்புடைய நிலைக்குச் சகளம் என்று பெயர். இந்த சகள ஸ்வரூபதத்தைச் சிவாகமங்கள் "சக்தி" என்று கூறுகின்றன.

சித் சித் ஆனந்தம் சச்சிதானந்தம். இந்த சச்சிதானந்த வடிவான சகளத்தினாலேதான் உலகம் பிரளய காலத்தில் அடங்கும் என்றும் பின்பு எள்ளில் மறைந்திருந்து எண்ணெய் வெளிப்படுவது போல் சிருஷ்டிகாலத்தில் தோன்றும் என்றும் நூல்கள் கூறுகின்றன.

சக்தியிடமிருந்து நாதம் தோன்றும். நாதத்தில் இருந்து பிந்து தோன்றும் நாதம்+பிந்து நாதபிந்து சேர்க்கையால் உலகச் சிருஷ்டி உண்டாகும். நாதம் ஆண் வடிவம் (சிவம்) பிந்து பெண் வடிவம் (சக்தி)

சிவபிரான் உலகைச் சிருஷ்டிக்க வேண்டும் என்று எண்ணிய போது அக்நியிலிருந்து சூடும், பூவிலிருந்து மணமும், சூரியனிலிருந்து கிரணமும் போல பிரிக்கமுடியாத சக்தி ரூபமாயுள்ள பராசக்தி என்ற ஒருவடிவம் அவரிடம் உண்டாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈண்டு சக்தி என்பது அவரது பராக்கிரமம் என்றும் சிவபிரான் சூரிய ஒளியாவான். சிவசூரியன் என்று பெயர் என்பதை முன்னர் கூறியுள்ளோம். அதன்படி ஞானசூரியன் அதாவது சிவசூரியன்தான் சிவம் என்று கொண்டால் அதிலிருந்து வீசுகின்ற கிரணங்களே சக்தி என்பது புலப்படும்.

அந்தச் சூரிய கிரணங்களின் தொகுப்புதான் பராசக்தி எனப்படுகிறது.

சிவன் தன்னிச்சையாக முதலில் பராசக்தியை ஆதாரமாகக் கொண்டு அறிவித்தால் அன்றி அறியமுடியாத ஆணவ மலத்தோடு கூடியதுமான உயிர்களைக் காக்க வேண்டுமென்ற பெருநோக்கில் பராசக்தியின் ஆற்றலில் ஆயிரத்தில் ஒரு பகுதியை ஆதிசக்தியாகவும், ஆதிசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியில் இருந்து இச்சாசக்தியையும் இச்சாசக்தியின் ஆயிரத்தில் ஒரு பங்கிலிருந்து ஞானசக்தியையும், ஞானசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியிலிருந்து கிரியாசக்தியையும் உண்டாக்கினர்.

சிவபிரானின் திரோதன சக்தியே ஆதிசக்தி அதாவது அருட்சக்தி என்றும் பெயர் பெறுகின்றது.

இந்த அருட்சக்தியே சிவபிரானின் மற்ற தொழிலுக்கும் காரணமாக அமைகின்றன.

அவை பராசக்தி இச்சாசக்தி ஞானசக்தி என்பதாக சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

சிவபிரானின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் பஞ்சசாதாக்யத்திற்கும் ஐந்து தேவிமார்கள் கூறப்படுகின்றனர்.

ஈசானசக்திக்கு உமா என்றும், தத்புருஷ சக்திக்கு கௌரி என்றும், அகோர சக்திக்கு கங்கா என்றும், வாமதேவ சக்திக்கு கணாத்யக்ஷா என்றும், சத்யோஜாத சக்திக்கு அம்பிகா என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

1. மேலும் உமாவுக்குச் சசிநி, அங்கதா, இஷ்டா மரீசி, ஜ்வாலினி என ஐந்து பெயர்களும்,

2. கௌரிக்கு சாந்தியதீதா, சாந்தி, வித்யா, பிரதிஷ்டா, நிவர்த்தி என ஐந்து பெயர்களும்,

3. கங்காவுக்கு தமா, மோகா, ரக்ஷா, நிஷ்டா, மிருத்யு, மாயா, ருத்ரபயா, ஜரா என்று எட்டுப் பெயர்களும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. கணாத்யக்ஷாவுக்கு, ரஜா, ரக்ஷா, ரதி, பாலி, காமா, சம்யமனி, கிரியா, புத்தி, காரி, தாத்ரி, பிராம்மணி, மோகினி, பவா என்று பதி மூன்று பெயர்களும்,

5. அம்பிகாவுக்கு, சித்தி, த்ருத்தி, தியுத்தி, லட்சுமி, மேதா, காந்தி, சுவதா, திருதி என்று எட்டுப்பெயர்களும்

ஆக முப்பத்திஎட்டுப் பெயர்களும் சிவாகமங்களில் அஷ்டத் திரும்சத்மாத்ருக்கள் என்ற பெயரில் கூறப்படுகின்றனர்.

சிவம், சக்தி, நாதம், பிந்து என அருவம் நான்கு சதாசிவம் (அரு வுருவம்) ஒன்று மஹேசன், உருத்திரன், பிரம்மா, விஷ்ணு என உருவம் நான்கு ஆக சிருஷ்டியாதி பஞ்சகிருத்யம் செய்கின்ற இறைவனுக்கு மேற்கண்ட அருவம், அருவுருவம், உருவம் எனும் மூன்று நிலை களுக்கும் மேலேகூறப்பட்ட சக்திகள் துணை நிற்கின்றன என்பது தெளிவு.

அருவம், அருவுருவம் தவிர உள்ள உருவத் திருமேனியின் முதல்வர் மஹேஸ்வரர், அவரிடம் ருத்திரன், ருத்ரனிடமிருந்து விஷ்ணு, விஷ்ணுவிலிருந்து பிரம்மன் தோன்றுவர்.

இதுபோலவே இச்சா சக்தியிலிருந்து நாதமும் அதிலிருந்து விந்துவும் உண்டாயிற்று. விந்துவிலிருந்து உமையும், உமை யிடமிருந்து அம்பிகையும், அம்பிகையிடமிருந்து ஈஸ்வரியும் இவரி லிருந்து மனோன்மணியும் உண்டாயினர். இவர்கள் ஐவரும் பஞ்ச சதாக்ய சக்திகள் எனப்படுவார். இதைச் சக்தி பேதம் என்று ஆகமங்கள் கூறும்.

இவ்வாறு மனோன்மணியிலிருந்து பிற சக்திகள் தோன்று கின்றன. அவற்றை ஆகமங்களில் விரிவாகக் காண்க.

இவ்வாறு தோன்றிய சக்தியைக் கூறும்போது சக்திவேறு, சிவம் வேறு என்று எண்ணலாகாது.

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்" என்று சிவஞான சித்தியார் கூறுவதால் இருவரும் ஒருவரே (சி+வ சிவ) சி-சிவம், வ-சக்தி என்பதாகக் கொள்க. சி-சிவம், வ-சக்தி, சிவ-சிவசக்தி மந்திரம் என்பது முன்னர் கூறப்பட்டது காண்க.

இவ்வாறு சிவபிரானின் பஞ்சகிருத்தியத் தொழிலுக்காக சிவனால் உண்டாக்கப்பட்ட சிவசக்தியே ஜகன்மாதா முதலான பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். அவளே உலகைப்படைக்கும் ஆற்றலுடையபோது "ஜனனி" என்றும், மக்களின் துயரைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துடைக்கும்போது "துர்கா" என்றும் சம்ஹார காலத்தில் "காளி" என்றும், சிருஷ்டித் தொழிலில் பிரமனுக்கு "வாகீஸ்வரி"யாகவும் காத்தல் தொழிலில் விஷ்ணுவுக்கு "இலக்குமி"யாகவும், போக சக்தியாகவும், யோக சக்தியாகவும், வீர சக்தியாகவும், ஞான சக்தியாகவும், பராசக்தி ஒருத்தியே நின்று செயலாற்ற வல்லவள் என்பது காண்க.

இவ்வாறு லோக நாயகியாக விளங்கும் அம்பிகைக்கு உலக க்ஷேமத்தின் பொருட்டு ஆலயம் அமைத்து வழிபடலாம். சிவன் கோவில்களில் இறைவனின் சக்தியாக இறைவனுக்கு வடபாலில் கோவில் அமைத்து வழிபடலாம். கல்யாண கோலமாயின் வலப் பக்கம் அமைக்கலாம். வடப்பாலிலும் தென்பாலிலும் கிழக்கு முகமாக அமைக்கலாம். வடபாலில் தெற்கு முகமாகவும் கோவில் கட்டி வழிபடலாம்.

இவள் சிவ பெருமாளின் ஆக்ஞைப்படிதான் சிருஷ்டி முதலான பஞ்சகிருத்யங்களைச் செய்வாள் என்பதை "அன்யஸ்ஸன் வ்யாப்தித: அன்யகர்த்தா கர்மானு ஸாரத : கரோதி சம்ஸ்ருதிம் பும்ஸாம் ஆக்ஞயா ஸமவேதயா" என்ற ஆகம வசனத்தால் அறிக.

இவருடைய பீஜாக்ஷரம் ஹீம் என்பதாகும். பராசக்தியை உருவ வழிபாடு செய்வது போலவே யந்திர வழிபாடும் செய்வார்கள். இவளுடைய யந்திரத்திற்குச் ஸ்ரீசக்ரம் என்பது பெயர். இதை மேரு என்றும் கூறுவர். இதில் அர்த்தமேரு மஹா மேரு என இருவகை கூறப்படுகிறது. இதைச் சாக்த்த நூல்களின் மூலம் அறியலாம்.

இந்த ஹீம் என்ற ஏகாக்ஷர மந்திரத்தை முப்பத்தி எட்டு லட்சம் (குருமுகமாக உபதேசம் ஏற்று) ஜபித்தால் மந்திரசித்தி ஏற்பட்டு எல்லா நலமும் பெறலாம் என்று சாக்தமார்க்கம் கூறுகிறது.

ஓம் என்பதைப் பிரணவம் என்பதுபோல (ஹீம்) ஹ்ரீம் என்ற மந்திரத்திற்கு சக்திப்பரணவம் என்று பெயர் வழங்குகிறது. இதை மாயாபீஜம், சக்திபீஜம் ஹ்ருல்லேகா, மாலினி, சிவவல்லரி, கலா, வாணி பீஜாசக்தி குண்டலி புவனேசீ எனும் பெயர்களும் வழங்கப் படுகின்றன.

"மாயா பீஜஸ்ய நாமானி மாலிநீ சிவவல்லரீ

மாயா மூர்த்தி : கலா, வாணீ, பீஜசக்திஸ்ச குண்டலீ"

என்ற செய்யுள் மூலம் அறியலாம்.

ஹ்ரீம் காரத்தில் ஹ, ர, ஈ, நாத பிந்து ஹகார, ரேப, ஈகார, நாதபிந்து ரூபமான ஐந்து அட்சரங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹகாரம் : சூரியசக்தி

ரேபம் : விஷ்ணுசக்தி

ஈகாரம் : கணபதி சக்தி

நாதம் : சிவசக்தி

பிந்து : சிவம். ஆக இந்த ஐந்து தெய்வங்களின் சக்தியும் ஒருங்கே ஹ்ரீங்காரத்தில் உள்ளது காண்க.

ஹ்ரீங்காரப் பிரணவமே சக்தி சக்தியே ஹ்ரீக்காரப் பிரணவம் என்பதை ஹ்ரீங்காரப் பிரணவாகாரயை நம: என்ற புவனேஸ்வரி திரசதி நாமத்தால் அறியலாம்.

மேலும் ஹ்ரீங்காரமானது ஹகாரம், ரேபம், ஈகாரம், நாதம், பிந்து இவை ஐந்தோடு சக்தி, சாந்தம் இரண்டையும் கூட்டி ஏழு பேதங்களைத்தன்னகத்தே கொண்ட ஏழு சமுத்ரம், ஏழு தீவுகள், ஏழு ஸ்வரங்கள், ஏழு ரிஷிகள் முதலாக உலகமனைத்தும் தோன்றியது என்பதை

"ஹகாரரேபா மாயாஸ்ச பிந்துநாத: ததைவச

சக்தி : சாந்தௌச ஸம்பிரோக்தா சக்தே பேதாஸ்ச ஸப்த்தாத்"

என்ற ஸ்லோகத்தின் மூலம் அறியலாம்.

ஆக சக்தியின் அருளைப் பெற விரும்புவோர் தேவிக்குத் தனி ஆலயம் அமைத்து வழிபாடு செய்தோ, சிவன் கோவில்களில் ஈசனின் நாயகியாய் பிரதிஷ்டை செய்வதோ மந்திரரூபமாகவோ, யந்திரரூப மாகவோ வழிபாடு இயற்றி இகபரசுகங்களைப் பெற்றிடுவார்களாக.

"இந்திரியாணாம் அதிஷ்டாத்ரீ பூதானாம்ச அகிலேஷு யா

பூதேஷு ஸததம் தஸ்யை வ்யாப்திதேவ்யை நமோநம:

யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண சம்ஸ்திதா

நமஸ்தஸ்யை நம: ஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:"

தேவியின் விரத நாட்கள்

கிழமை - வெள்ளி

திதி - பௌர்ணமி

நட்சத்திரம் - பூரம்

மாதம் - புரட்டாசி (நவராத்திரி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியின் முதல் ஆவாரண தேவிகள்

1. உமை 2. கௌரி 3. கங்கா 4. அம்பிகா 5. கணாம்பிகா 6. வாமினி 7. நீலினி 8. சக்ரா 9. கட்வாங்கி 10. பாசஹஸ்தா 11. கணாம்பிகா.

2ம் ஆவரண தேவிகள்

1. வாமா 2. ஜ்யேஷ்டா 3. ரௌத்ரி 4. காளி 5. கலவிகரணி 6.பலவிகரணி 7. பலம்ப்ரமதினி 8. ஸர்வபூததமனி.

3ம் ஆவரண தேவிகள்

1. பத்ரிணி 2. தீப்தா 3. குந்தினி 4. காளினி 5. மந்திரிணி 6. மாலினி 7. உன்மனா 8. முனினி

4ம் ஆவரண தேவிகள்

1. சசீதேவி 2. ஸ்வாஹாதேவி 3. ஸ்வர்க்கா தேவி 4. வர்க்காதேவி 5. காளகண்டிதேவி 6. நிர்மலாதேவி 7. நாரிணிதேவி 8. ஸுஸுகேதினி தேவி 9. சரஸ்வதிதேவி 10. மஹாலட்சுமி தேவி.

5ம் ஆவரணம்

1. கட்கம் 2. கபாலம் 3. மணி (கண்டா) 4. நாராசம் (கயிறு) 5.டமருகம் (உடுக்கை) 6. த்வஜம் 7. வேதாளம் 8. க்ஷுரிகா 9. பாசம் 10. வஜ்ரம்.

102. கிரியை செய்பவர்கள் கிரியைத் தொடங்குமுன் திருநீறு அணிவது கட்டாயமா?

சிவனடியார்கள் கட்டாயமாகச் சிவச் சின்னங்களான விபூதி, ருத்திராக்ஷம் இரண்டையும் அணியவேண்டும். நெற்றியில் திருநீறு இன்றி சைவர்கள் கிரியைகளைச் செய்வது பயன் தராது. எனவே கட்டாயமாக விபூதி அணிதல் வேண்டும்.

103. விபூதியின் வேறு பெயர்கள்

திருவெண்ணீறு, இரட்சை, திருநீறு, விபூதி, சாரம், பசிதம் என்பன போன்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. அதன் காரணம் என்னவெனில் ஆன்மாக்களை இரட்சிப்பதால் “இரட்சை” என்றும் ஆன்மாக்களின் தீவினைகளை நீறுபடுத்துவதால் “திருநீறு” என்றும், அழியாத செல்வம் தருவதால் “விபூதி” என்றும் உயிர்களின் மலமாசுக்களைப் போக்குவதால் “சாரம்” என்றும் அறியாமை என்னும் இருள் அகற்றி “ஞானம்” என்னும் ஒளியைத் தருவதால் “பசிதம்” என்றும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு திருவெண்ணீற்றுக்கு வேறு பெயர்கள் உண்டாயின என்பது அறிக.

104. விபூதியின் வகைகள் யாவை? அவை எவ்வாறு தயாரிக்கப் படுகின்றன?

விபூதி 'கற்பம்' எனவும் 'அநுகற்பம்' எனவும் 'உபகற்பம்' எனவும் மூன்று வகைப்படும். செந்நிறமுடைய பசு அல்லது வெள்ளைப் பசுவின் சாணத்தை அஷ்டமி, சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய திதிகளில் ஒன்றில் தாமரை இலையில் சேகரித்து சத்யோஜாத மந்திரம் சொல்லி கையால் உருட்டி நிழலில் உலரச்செய்து நெல் உமியில் ஓமத் தீயைக்கொண்டு பொசுக்கி நல்ல நிலையில் வெந்து உள்ள உருண்டைகளை ஈசான மந்திரம் சொல்லி எடுத்து அதை ஒரு புது விஸ்திரத்தில் இட்டு வஸ்திரகாயம் செய்து புதிய பானையில் நிரப்பி காயத்ரி மந்திரத்தைக் கூறி ஓர் ஆசனத்தின் மீது வைத்து மலரிட்டும் பாத்திரத்தின் வாயை வெள்ளையாடையால் மூடி சேகரித்து வைத்தல் வேண்டும். இவ்வாறு சேகரிப்பது "கற்பம்" எனும் சிறந்த விபூதியாகும்.

சித்திரை மாதத்தில் காட்டிற்குச் சென்று அங்கு உலர்ந்து காணப் படும் பசுஞ்சாணத்தைக் கண்டு எடுத்து வந்து கோமூத்ரம் வார்த்து பிசைந்து முன் சொன்ன மந்திர முறைப்படி சுட்டெடுத்துச் சேகரிப்பது "அனுகற்பம்" எனப்படும்.

பெருங்காடுகளில் இயற்கையாகப் பற்றிக் கொள்வதினால் உண்டான சாம்பற்பொடியைச் சேகரித்துப் பஞ்சகவ்யம் சேர்த்து உருட்டி முன் சொன்ன முறைப்படி மந்திரம் சொல்லி, ஓமாக்னி கொண்டு மீண்டும் சுட்டெடுத்து சேகரிப்பது "உபகற்பம்" எனப்படும்.

இவை தவிர மேற்கண்ட விபூதிகளை மந்திரமின்றித் தயாரித்தால் அதற்கு "அகற்பம்" என்று பெயராகும்.

105. விபூதியில் பல நிறங்கள் உள்ளனவா? அவை எப்படி உண்டாயின? அவற்றின் பயன் யாவை?

சிவபிரானின் ஐந்து முகங்களிலிருந்து ஐந்து வகைப் பசுக்கள் தோன்றினவென்றும், அவற்றின் கோமயத்தால் உண்டானவை பற்றி அவற்றிற்கு நிறமும் குணமும் உண்டாம் என்று அறியப்படுகிறது.

அதன்படி சத்யோஜாத முகத்தில் கபிலறிப்பசு தோன்றியது. அதன் மூலம் கிடைக்கும் விபூதிக்கு விபூதி என்பது பெயர். இந்தப் பசுவுக்கு நந்தா என்பது பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாமதேவ முகத்திலிருந்து வெண்மை நிறப்பசு தோன்றியது. அதன் மூலம் கிடைக்கும் விபூதிக்கு பசிதம் என்று பெயர். இந்தப் பசுவுக்கு பத்திரா என்று பெயர்.

அகோரமுகத்திலிருந்து தோன்றிய பசு கருநிறம் உடையது. இதன் மூலம் கிடைக்கும் விபூதிக்கு பஸ்மம் என்பது பெயர். இந்தப் பசுவுக்கு கிருஷ்ணா என்று பெயர். தத்புருஷ முகத்திலிருந்து தோன்றிய பசு புகை நிறமுடையது. இதன் மூலம் கிடைக்கும் விபூதிக்கு க்ஷாரம் என்பது பெயர். இந்தப் பசுவின் பெயர் சுசீலை என்பதாகும்.

ஈசான முகத்திலிருந்து செந்நிறப்பசு தோன்றியது. இதன் மூலம் கிடைப்பது 'ரக்ஷை' எனப்படும். இந்தப் பசுவின் பெயர் சுமனா என்பதாகும்.

"சத்யோஜாதாத் விபூதிச்ச வாமாத் பசிதமேவச அகோராத் பஸ்மம் ஸ்யாத், தத்புருஷாத் க்ஷார நாமச" என்பது வீராக மஸ்லோகமாகும்.

விபூதி என்பதற்கு மேலான ஐஸ்வர்யம் என்பது பொருள். வி : மேலான, பூதி : ஐஸ்வர்யம். வி பூதி : விபூதி என்றாயிற்று.

விபூதி, கருப்பு, சிவப்பு, புகை, பொன், வெண்மை ஆகிய நிறங் களில் காணப்படுகின்றன. இவற்றில் கருப்பு நிறமுடையது வியாதியை உண்டாக்கும். செந்நிறம் உடையது புகழ் சேர்க்கும். பொன்னிற விபூதி செல்வத்தைக் கொடுக்கும். வெண்ணிற விபூதி போகம், மோட்சம் இரண்டையும் தரும்.

106. விபூதி தாரணம் எத்தனை வகை?

விபூதி தாரண முறை இருவகைப்படும். அவை : 1. உத்தூளனம் 2. திரிபுண்டரம்.

நீரின்றிக் கையால் நெற்றியில் பூசிக்கொள்வது உத்தூளனம் எனப்படும்.

நீரிட்டு குழைத்து நெற்றியில் மூன்று பட்டையாகத் தெரியும் வண்ணம் மந்திர பூர்வமாக அணிந்துகொள்வது திரிபுரண்டரம் எனப்படும்.

32 இடங்கள், 16 இடங்கள், 8 இடங்கள், 5 இடங்கள் என விபூதி தரிப்பது சைவானுஷ்பின முறையாகும். பிரணவமந்திரத்தால் சிரசிலும், பஞ்சபிரம்ம மந்திரங்களினால் ஆறையே முகம், மார்பு, வயிறு, கால் மூட்டுகளிலும் விபூதி இடவேண்டும். கவச மந்திரத்தால் பிற இடங்களில் அணிய வேண்டும்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

107. ருத்ராக்ஷம் விளக்கம் தருக.

ருத்ராக்ஷம் என்பது, ருத்திர+அக்ஷம். மஹாருத்திரருடைய கண் என்ற பொருள் உடையது ஆகும். இது சிவபிரானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியதாகும். இது சிவபிரானின் கண் போன்றது. ஆகையால் ருத்ராக்ஷம் எனப்படுகிறது. சிவனடியார்கள் தங்களுக்கு அடையாளமாக அணிவது விபூதியும், ருத்ராக்ஷமுமேயாகும்.

இந்த இரண்டு அடையாளங்களையும் அணிந்தால் ஒருவேளை விபூதியானது வியர்வை முதலான காரணங்களால் அழிந்து போனாலும், ருத்திராக்ஷம் மட்டும் அழியாமல் நின்று ரக்ஷிக்கும் இயல்புடையதாகும்.

ருத்திராக்ஷம் என்ற பெயரைச் சொன்னாலும், அதை தரிசித் தாலும் அதைத் தொட்டாலும் மாபெரும் புண்ணியமுண்டாகும்.

மரணத்தருவாயில் உருத்திராக்ஷ நீரை பருகுபவர் சிவபதவியை அடைவார்கள் என்பது உபநிஷதமங்களின் கூற்றாகும்.

நூற்றெட்டு மணிகள் கொண்ட மாலையை அணிந்து கொண்டு சிவபிரானின் கோவிலை வலம் வருபவர்கள் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வோர் அஸ்வமேத யாகம் செய்த புண்ணியத்தையடைவார்கள்.

தானம் தருபவர்களில் சிவனடியார்க்கு ருத்ராக்ஷ தானம் தருவது பெரும் புண்ணியத்தைத் தரும்.

ருத்ராக்ஷத்தை அணிய விரும்புவோர் முகங்கள் நன்கு விளங்குவனவாகவும், செயற்கையாகச் செய்யப்படாததாகவும், பிஞ்சாக இல்லாமலும், நெல்லிக்காய் அளவு பருமன் உடையதாகவும் பார்த்து வாங்கி அணிய வேண்டும்.

ஒருமுகம் முதல் பதினாறும், அதற்கு மேலும் முகங்களை உடைய தாகவும் உள்ளனவென்பர். இவை பெரும்பாலும் நேபாள நாட்டில் கிடைக்கின்றன. இதை அக்ஷம், கண்டி, கண்டிகை, கண்மணி என்றெல்லாம் கூறுவர்.

மந்திரவாதியின் கண்விடத்தை நீக்குகிறது. மீனின் கண் அதன் முட்டையைக் குஞ்சாக மாற்றுகிறது. சிவபிரானின் கண் காண் போருக்கு சக்ஷு தீட்சை (நயனதீட்சை) அளிக்கிறது. இவைபோலவே ருத்ராக்ஷ மணியை அணிந்தால் அது திருவருள் சக்தியை நமக்குக் கூட்டுவித்து மும்மலங்களையும் நீக்கிச் சிவபதத்தை அளிக்கும் சக்தியுடையதாக உள்ளது.

கழுத்தில் அணியப்ப்டுகின்ற உருத்திராக்ஷமாலை நாபிவரை இருக்கவேண்டும். அதற்குகீழ் நீளக்கூடாது. மார்பளவு இருப்பது உத்தமம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களில் ருத்ராக்ஷத்தின் அடிப்பகுதி பிரம்மன் என்றும், நடுப்பகுதி விஷ்ணு என்றும், முகம் ருத்திரன் என்றும், கேசரங்கள் தேவஸ்வரூபம் என்னும் முழு உருவமும் சேர்ந்து "திருவருட்சக்தி ரூபம்" என்றும் கூறுகின்றன.

ருத்ராக்ஷமாலையின் கயிறு பிரம்ம ரூபம் என்றும், அதன் வலப்பகுதி ஸ்ரீகண்டருத்திரன் வடிவம் என்றும், இடப்பக்கம் விஷ்ணு ரூபம் என்றும், முகம் சரசுவதி ரூபம் என்றும், புச்சம் (குஞ்சம்) காயத்திரிமந்திரவடிவம் என்றும், கேசரம் சாவித்திரி வடிவமென்றும் கிரந்தி (முடிச்சு) பிரகுருதி ரூபம் என்றும் அக்ஷமாலிகா உபநிஷத் கூறுகிறது.

எக்காலத்திலும் (எப்போதும்) ருத்ராக்ஷ மாலையை அணியலாம். இயலாதவர்கள் காலை, பகல், மாலை வேளைகளில் சந்தியாவந்தன காலங்களில் அணியலாம். பிற நேரங்களில் பட்டுத்துணியில் சுற்றி பத்திரப்படுத்தவேண்டும். இவ்வாறு காத்துச் சந்தியா காலங்களில் தவறாமல் ருத்ராக்ஷமாலையை அணிபவர்களுக்குச் சிவபிரான் பிரத்யக்ஷமாகி இம்மை மறுமை இன்பங்களை ஈந்து முடிவில் சிவலோக பதவியையும் அளிப்பார். "ருத்ராக்ஷ விருக்ஷ பீசாயாம்பூத சம்பூத ஹேதவேத நேத்ரத் த்ரயாயருத்ராய நமோலோக ஹிதார்மணே" என்று சொல்லி ருத்ராக்ஷத்தைப் பூஜிக்க வேண்டும்.

ஒருமுக மணி அணிந்தால் சிவனருள் கிடைக்கும். இரு முக மணி அணிந்தால் சிவசக்தியின் அருள் கிடைக்கும். மூன்று முக மணி மும்மூர்த்திகளின் அருளைத் தரும். நான்குமுக மணி பிரம்மன் அருளைத்தரும். ஐந்து முக மணி சதாசிவனின் அருளைத்தரும். ஆறு முக மணி முருகன் அருளைத்தரும். ஏழு முக மணி சப்தமாதாக்களின் அருளைத்தரும். எட்டு முக மணி அஷ்டவித்யேஸ்வரரின் அருளைத் தரும். இதுபோலவே பிறமுக மணிகளுக்கும் அவ்வந்த தேவதைகளின் பலனைத்தரும் என்பதை புராணங்கள் கூறுகின்றன.

ஜபமாலைக்கு மணியைப் பயன்படுத்தும்போது நெல்லிக்காய் அளவு மணியை மாலையாகக் கொள்வது உத்தமம். இலந்தம்பழம் அளவு பத்தியமம். கடலை அளவு அதமம் என்று உணரவேண்டும்.

ஜபம் செய்யும் போது கிழக்கு நோக்கி அமர்ந்து செய்தால் உலக வசியம் உண்டாகும். தெற்கு நோக்கி செய்தால் உலக அபச்சாரம் உண்டாகும். தென்கிழக்கு முகமானால் வியாதி உண்டாகும். தென்மேற்கானால் துவேஷம் உண்டாகும். மேற்கு நோக்கிச் செய்தால் தனலாபம் கிடைக்கும். வடமேற்கானால் ஆகர்ஷணம் உண்டாகும். வடக்கு முகமாயின் சாந்தி உண்டாகும். வடகிழக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயின் மோக்ஷம் கிடைக்கும்.

மேலும் ருத்ராக்ஷமாலை ஜபம் செய்யும்போது காலையானால் நபிக்கு நேராகவும், பகலில் மார்புக்கு நேராகவும் மாலையைப் பிடித்துக்கொண்டு ஜபிக்கவேண்டும். வீட்டில் ஜபம் செய்தால் நூறு மடங்கு பலன் எனின் ஆலயம் நதிதீரம், மலை உச்சி போன்ற புனிதமான இடங்களில் ஜபித்தால் 1000 மடங்கு அதிகமான பலனை அடையலாம்.

எனவே ருத்ராக்ஷ மாலையைச் சிவனாகவே எண்ணி வழிபட்டு ஜபம் செய்து வந்தால் எல்லா நன்மைகளயையும் பெற்று நலமுடன் வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களை அடைந்து இறுதியில் சிவசாயுஜ்யமடையலாம் என்பதறிந்து அணிந்து போற்றுக.

108. கிரியாரம்ப காலத்தில் மணியடிப்பது முக்கியமானதாகும்.

மணியோசையானது, ராக்ஷஸர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி, விலகி ஓடும்படியும், தேவர்கள் மகிழ்ந்து வந்து கூடும்படியும் செய்யும் தன்மையை உடையது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. எனவே, கிரியாரம்ப காலத்தில் மணி அடிப்பது முக்கியமானதாகின்றது. இராட்சசர்களை விரட்டுவதற்காகவும் என்று கொள்ள வேண்டும்.

109. கிரியைகளைச் செய்பவர்கள் தரையில் அமரக்கூடாது. விதிக்கப்பட்ட ஏதேனும் ஒரு ஆசனத்தில் தான் அமரவேண்டும் என்பதேன்? ஆசனங்களின் பயன் யாவை?

பூஜை முதலான கிரியைகளைச் செய்யும்போது ஆசாரியர் ஆசனங்களில்தான் அமரவேண்டும். நிலத்தில் அமர்ந்து செய்தால் துக்கமுண்டாகும். கல்லில் அமர்ந்து செய்தால் மன உளைச்சல் உண்டாகும். இலைகளின் மீது அமர்ந்து செய்தால் கஷ்டமும் தரித்திரமும் உண்டாகும். எனவே, விதிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து செய்வது நல்லது.

1. தர்பையால் செய்த ஆசனம் தர்பாசனம் எனப்படும். அதன் மீது அமர்ந்து செய்தால் புகழ் பெருகும்.

2. மரப்பலகை மீது அமர்ந்து செய்தால் பெருஞ்செல்வம் கிட்டும்.

3. பட்டு முதலான துணிகளின் மீது அமர்ந்து செய்தால் வியாதிகள் விலகும்.

4. கம்பளி ஆசனத்தில் அமர்ந்து செய்தால் சகலநலமும் உண்டாகும்.

181 to 188 Pages Missing in the Book
In Public domain. Digitization Muthulakshmi Research Academy

127. கோவில்களில் தீபாராதனை செய்கிறபோது மந்திரம் சொல்லிச் செய்ய வேண்டுமா? எவ்வெவற்றிற்கு எந்தெந்த மந்திரம் சொல்ல வேண்டுமென்று ஏதேனும் வரைமுறை உண்டா?

கட்டாயம் மந்திரம் சொல்லித்தான் தீபாராதனை மட்டுமல்ல மற்ற எந்த பூஜையையும் செய்ய வேண்டும். மந்திரமின்றிச் செய்யும் எந்தச் செயலும் வீணாகும் என்பது ஆகமவிதியாகும்.

தூபம் - தூரசி என்று தொடங்கும் மந்திரத்தாலும்

தீபம் - உத்தீப்ய என்று தொடங்கும் மந்திரத்தாலும் செய்யப்பட வேண்டும்.

ஐந்து தட்டுகளில் - பஞ்சகலைகளையும், பஞ்சப்பிரம்மங்களையும் பூஜித்து பஞ்சபிரம்ம, மந்திரங்களைச் சொல்லி தீபாராதனை செய்யவேண்டும். பூர்ணகும்பத்தில் மூன்று தத்துவங்களையும், மூன்று தத்துவ தேவர்களையும் பூஜித்து தேனுமுத்திரைக்காட்டி தூபதீபம் காட்டிப்பின்பு, "ஹிரண்யபாத்திரம்" எனத் தொடங்கும் மந்திரத்தால் தீபாராதனை செய்யவேண்டும்.

ரதஹாரதியை - "சாங்கிரஹண்யேஷ்டி" என்ற மந்திரத்தாலும் நட்சத்திரஹாரதியை "அக்நிர்ந:பாது" என்ற மந்திரத்தாலும் கற்பூர ஹாரதியை "ராஜாதிராஜாய" அல்லது "சோமோவா" என்ற மந்திரங்களால் செய்யலாம். விபூதி சாற்ற (ரட்சை) "பிருஹத்ஸா" என்ற மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

மேற்கண்டவை போலவே குடை, விசிறி ஆலவட்டம், கண்ணாடி போன்ற எல்லாவித உபசாரங்களுக்கும் சிவாகமங்களில் விதித்தபடி வேத மந்திரங்களை ஆசாரியர் அறிந்து அநுஷ்டிக்க வேண்டும்.

புஷ்பதானத்திற்கு (மந்திரபுஷ்பம் செய்ய) "யோபாம்புஷ்பம்" என்ற மந்திரம் சொல்ல வேண்டும்.

குறிப்பு : இப்போது கோவில்களில் வேதம், ஆசீர்வாதம், தேவாரம், வாத்யகோஷம் என்ற வரிசையில் தீபாராதனை முடிவில் உபசாரங்கள் செய்யப்படுகின்றன.

ஆனால் வேதம் சொன்னபிறகு திராவிடவேதமாகிய தேவரா திருவாசகங்களைப் பாடச் சொல்லவேண்டும். அதன்பின் தான் ஆசீர்வசனம் சொல்லவேண்டும். பின்னர் வாத்ய ஆசீர்வசனம், கோஷங்களுடன் கற்பூர ஹாரதி செய்ய வேண்டும். இதுவே தகுந்த முறை என்பதை உத்தரகாரணாகமம் கூறுகிறது. கண்டு தெளிவு பெறுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

128. சோமசூத்ரப்பிரதக்ஷிணம் என்பது என்ன? எத்தனை பிரதட்சிணங்கள் செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும். பிரதக்ஷிணத்தின் பயன் யாது?

சிவன் கோவில்களில் பிரதோஷ தினத்தன்று பிரதோஷ பூஜை வேளையில் முதலில் நந்தியைத் தரிசனம் செய்துகொண்டு இடப் புறமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசனம் செய்ய வேண்டும்.

பின்பு சண்டேசர் தொடங்கி வலமாக வந்து, மீண்டும் நந்தியை வணங்கிப்பின் வலமாகவே சென்று சண்டேசர் சந்நிதி வரை செல்லாமல் அதற்குமுன் இறைவனின் அபிஷேக நீர் வெளிப்படுகின்ற கோமுகம் என்னும் பகுதிவரை சென்று அதைக் கடக்காமல் மீண்டும் இடப்புறமாகவே வந்து நந்தியை தரிசனம் செய்து கொண்டு தொடர்ந்து சண்டேஸ்வரர் வரை தரிசிக்க வேண்டும். இது வரை ஒரு பிரதட்சிணம் கணக்காகும்.

இவ்வாறு 12 பிரதக்ஷிணங்கள் செய்வது நல்லது.

ஒரு பிரதக்ஷிணம்	-	பாவம் அகற்றும்
இரண்டு பிரதக்ஷிணம்	-	ஸ்வர்கலோகபதவியைத் தரும்
மூன்று பிரதக்ஷிணம்	-	இந்திரபோகம் தரும்
நான்கு பிரதக்ஷிணம்	-	பிரமலோகமடையலாம்
ஐந்து பிரதக்ஷிணம்	-	சகலலோகப்பிராப்திதரும்
ஆறு பிரதக்ஷிணம்	-	அஷ்ட ஐஸ்வர்யம் தரும்
ஏழு பிரதக்ஷிணம்	-	சிவகைங்கர்யப்பலனை அடையலாம்
எட்டு பிரதக்ஷிணம்	-	சிவலோகமடையலாம் (சாலோகம்)
ஒன்பது பிரதக்ஷிணம்	-	இறைவனின் சமீபம் (சாமீப்யம்) அடையலாம்
பத்து பிரதக்ஷிணம்	-	சிவஸ்ரூபம் பெறலாம் (சாரூபம்)
பதினோரு பிரதக்ஷிணம்	-	இறைவனிடம் சேர்க்கை ஏற்படும் (சாயுஜ்யம்)
12வது பிரதக்ஷிணம்	-	இறைவனுடன் இரண்டறக் கலக்கலாம் (ஐக்யம்)

என்பதைப் புராணங்கள் மூலம் அறியலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் காலை, பகல், மாலை நேரங்களில் விநாயகருக்கு ஒரு பிரதக்ஷிணமும், சூரியபகவானுக்கு இரண்டு பிரதக்ஷிணங்களும் சிவபிரானுக்கு மூன்று பிரதக்ஷிணங்களும் அம்பாளுக்கு நான்கு பிரதக்ஷிணங்களும் செய்ய வேண்டும்.

காலையில் கோவிலைச் சுற்றினால் நோய்கள் நீங்கும். பகலில் கோவிலைச் சுற்றினால் விரும்பியது நிறைவேறும். மாலையில் கோவிலைச் சுற்றினால் நாம் செய்த எல்லாப் பாவங்களும் நீங்கும் இரவு நேரத்தில் கோவிலை வலம் வந்தால் மோட்சம் (வீடுபேறு) கிடைக்கும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

129. ஷோடசோபசார (16 வகை) பூஜை என்பன யாவை? அவற்றின் விளக்கம் என்ன?

ஷோடசோபசார பூஜை (16 வகை பூஜை உபசாரம்) என்பவை வருமாறு:

1. ஆவாஹனம் 2. ஷ்தாபனம் 3. பாத்யம் 4. ஆசமனம் 5. அர்க்யம் 6. அபிஷேகம் 7. வஸ்திரம் 8. சந்தனம் 9. புஷ்பம் 10. தூபதீபம் 11.நைவேத்யம் 12. பலிதானம் 13. ஹோமம் 14. பஹிர்பலிதானம் 15.வாத்யம் 16. நர்தனம் (உத்வாசனம்) என்று சில நூல்கள் கூறுகின்றன.

ஆனால் இன்று சிவாகமமுறைப்படி தமிழ்நாட்டின் சிவாலயங்களில் செய்யப்படுகின்ற சோடசோபசார பூஜை எவை என்பதைக் காண்போம்.

1. ஆவாஹனம் 2. ஸ்தாபனம் 3. சந்நிதானம் 4. சந்நிரோதனம் 5.திக்பந்தனம் 6. அவகுண்டனம் 7. தேனுமுத்திரை 8. பாத்யம் 9.ஆசமனீயம் 10. அர்க்யம் 11. புஷ்பதானம் 12. தூபம் தீபம் 13.நைவேத்யம் 14. பானீயம் 15. ஜெபசமர்ப்பணம் 16. ஆராத்ரிகம் (கற்பூரம் அல்லது நெய்விளக்கு, தீபாராதனை) என்பனவாம்.

ஆவாஹனம்

இறைவனைப் பூஜையின் பொருட்டு இலிங்கம் முதலான பிம்பங்களில் எழுந்தருளச் செய்து "அபிமுகமாகச் செய்தல்" என்பது "ஆவாஹனம்" எனப்படும்.

எங்ஙனமெனின், அரணிக்கட்டை எனும் கட்டையில் முழுவதும் பரந்துள்ள நெருப்பினைக் கட்டையைக் கடைந்து ஓரிடத்தில் நெருப்பைப் பெறுவது போல் உலகெங்கும் பரந்துள்ள இறைவனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு இவ்வடையாளத்தில் வந்து தோன்ற வேண்டுமென்று விருப்புடன் வேண்டிக்கொள்வது ஆவாஹனம் ஆகும். இதன் குறிப்பு யாதெனின் மூலமந்திரத்தால் அருச்சிக்கப்பட்ட பரிபூரணமான இறைவனை ஆன்மாக்கள் சிவப்பிரசாதம் என்னும் அருளினால் அறிந்து அந்த பரிபூரணத்தில் தானும் அழுந்துதல் என்பதாகும்.

மேலும் பிராசாத மந்திரத்தால் ஆவாஹனம் செய்ய வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. 'ப்ர' என்பது சிவஞானம் 'சா' என்பது கதி 'த' என்பது கொடுப்பது. அதாவது சிவஞானகதியாகிய முத்தியைக் கொடுப்பது "பிராசாத மந்திரம்" என்க.

ஆசாரியர் மூலமந்திரத்தில் இருந்து ப்ரகாசிக்கின்ற பிராசாத மந்திரமயமாகத் தன்னை எண்ணிக் கொண்டும், பிராசாதமந்திரத்தை ஜபித்துக் கொண்டும் இறைவனை ஆவாஹனம்செய்தல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் அன்புடன் தனக்கு எதிரில் உள்ள உருவில் இறைவனை இருக்கச் செய்வது "ஆவாஹனம்" ஆகும்.

ஸ்தாபனம் (தாபனம்)

தயாநிதியான இறைவனை ஆன்மாக்கள், "தமக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்றும், பிம்பங்களில் இறைவனை எழுந்தருளியிருந்து அருள்பாலிக்க வேண்டுமென்றும் அன்புடன் வேண்டிச் செய்யும் மனோபாவனையே "ஸ்தாபனம்" எனப்படும். இதன் குறிப்பு யாதெனின் ஆன்மாவானது, சிவபிரானை அவன் அருளால் அறிந்து அவன் அருளினால் பரிபூரணமாக அழுந்ததுல் வேண்டும்'' என்பதாகும். பக்தியுடன் இறைவனைக் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துவது ஸ்தாபனம்.

சந்நிதானம்

பூசிக்கப்படுகின்ற இறைவனின் அனுக்ரகிக்கும் தன்மையையும், பூசகனாகிய ஆன்மா அனுக்கிரகிக்கப்படுதலையும் தொடர்புபடுத்துவதே ''சந்நிதானம்'' எனப்படும். சந்நிதானம் என்றால் சமீபத்திலிருத்தல் என்பது பொருள். அதாவது நான் தங்களுடையவன் என்பதை இறைவனுக்குத் தெரிவிப்பது "சந்நிதானம்" ஆகும்.

சந்நிரோதனம்

இறைவன் தனக்கு எப்பொழுதும் அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று ஆன்மாக்கள் இறைவனை வேண்டும் மனோபாவனையே 'சந்நிரோதனம்" எனப்படும். இதன் கருத்து யாதெனின் ஆன்மாவிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

115. பெரியமணி (கண்டாமணி) அடிக்க வேண்டிய காலங்கள் எவை?

அபிஷேகம் ஆரம்பம், அபிஷேக முடிவு, அர்ச்சனை முடிவு, நைவேத்யத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை (நர்த்தனத்தின் முடிவில்) பெரிய மணியை அடிக்கவேண்டும்.

எப்பொதெல்லாம் வாத்யகோஷம் செய்ய வேண்டும்? விடியற் காலையில், அபிஷேகம், நைவேத்தியம், பலிதான காலம், உத்சவ காலங்கள் பிற விசேஷங்களிலும் கட்டாயம் வாத்யகோஷம் முழங்க வேண்டும்.

116. சங்கொலிக்கும் காலங்கள் எவை?

அபிஷேக காலம், பூஜையின் முடிவில், நைவேத்ய காலம், அலங்காரவேளை ஆகிய நேரங்களில் சங்கொலி எழுப்ப வேண்டும்.

117. வேதங்கள் எப்பொழுதெல்லாம் ஒலிக்கப்படவேண்டும்?

அபிஷேகம், நைவேத்யம், தூபதீபாராதனை, பூஜை முடிவு ஆகிய காலங்களில் வேதகோஷம் செய்யவேண்டும்.

118. கோவிலில் இறைவனை எப்போதெல்லாம் தோத்திரம் செய்யலாம்?

பக்தர்கள் கோவில்களில் இறைவனை, அபிஷேக பூஜை முடிவு ஆகிய காலங்களில் தீபாராதனை காலம் பூஜை முடிவு ஆகிய காலங்களில் ஸ்தோத்திரம் செய்யலாம்.

119. கோவில்களில் பூஜைக்கு உரித்தான வாத்யங்கள் யாவை?

1. தாருஜம் (மர்தால் ஆனவை) சங்கஜம் (சங்கு முதலியவற்றால் செய்தவை) லோஹஜம் (உலோகத்தால் செய்யப்பட்டவை) சுஷிரஜம் (துளைக்கருவிகள்) கேயம் (வாய்ப்பாட்டு) ஆகியவற்றால் உண்டாக்கப்படும் இனிய ஒலிகளைக் கோவில்களில் தினமும் சூரிய உதயத்திற்கு 2 மணி நேரம் முன்பு தொடங்கி ஒலிக்கச் செய்தல் வேண்டும்.

அவ்வாறு செய்தால் சகல உயிரினங்களுக்கும் அறியாமை விலகும். அறிவு பெருகும். மேலும் இவற்றிற்குப் பஞ்சமஹாத்வனி என்றும் பஞ்சமஹாசப்தம் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

120. கோவில், ஆலயம் பொருள் தருக.

கோ+இல்=கோவில். இறைவன் உரையும் வீடு ஆ+லயம் = ஆலயம்.

ஆ=உயிர்கள், லயம் ஒடுங்குமிடம் இறைவனிடம் உயிர்கள் சென்று சேருமிடம் ஆலயம் எனப்படும். கோவிலுக்குச் சென்றால் உயிர்களின் ஆணவம் தானே விலகும் என்க.

121. கோவில் அமைப்பில் எத்தனை வகை உண்டு?

கோவில் அமைப்பில் இரண்டு வகைகள் உள்ளன. (1) உடல் போன்ற அமைப்பு (2) இதயம் போன்ற அமைப்பு.

1. ராஜகோபுரம் பாதம், யாகசாலை, நாடி நரம்புகள், மகாமண்டபம், மார்பு அர்த்த மண்டபம் கழுத்து கருவறை தலை.
2. ஆலயம் உடல், வாய், கோபுரம், நாக்கு, நந்தி, கொடிமரம் உள் நாக்கு பஞ்சேந்திரியங்கள் ஒளிவிளக்கு இதயம் கருவறை உயிர் சிவலிங்கம் என்பனவாக விளங்குகின்றன என்பர்.

122. சிவாகமங்கள் கூறும் முறைப்படியான கோவில் அமைப்பினைக் கூறுக.

ஒன்று முதல் ஐந்துவரைப் பிரகாரங்கள், கருவறை, நந்தி, பலிபீடம், யாகசாலை, கொடிமரம், கோபுரவாயில் என்பனவற்றுடன் அமைக்கப்பட்டவை ஆகம விதிப்படியான கோவில்களாம்.

123. ப்ராகாரங்கள் ஐந்து ஏன்? அவை எதனைக் குறிக்கின்றன?

மனித உடலானது அன்ன மயகோசம், பிராண மயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என ஐந்து (கோசம் உடம்பு) கூறுகளுடன் அமைந்துள்ளது. இதைப் போலவே கோவில்களைக் கொள்ளும்போது மேற்கண்ட ஐந்து கோசங்களின் அடையாளமாக ஐந்துப் பிரகாரங்கள் அமைந்துள்ளன வாகக் கொள்ள வேண்டும்.

மற்றொரு வகையில் கூறுவதாயின் ஸ்தூலசரீரம், சூக்ஷ்மசரீரம், குணசரீரம் கஞ்சுக சரீரம், காரண சரீரம் எனும் மனித உடல் அமைப்பாக விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

124. தூண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மண்டபங்களின் பெயர்கள் யாவை? அவற்றைக் கூறுக.

நான்கு தூண்களைக் கொண்ட மண்டபம் நந்தியாவர்த்தம் என்றும், 16 தூண்களைக் கொண்ட மண்டபம் "ஸ்ரீப்ரிதிஷ்டம்" என்றும், 24 தூண்களைக் கொண்ட மண்டபம் "வீராசனம்" என்றும், 32 தூண்களைக் கொண்ட மண்டபம் "ஜயப்பிரதம்" என்றும், முப்பத்தி ஆறு தூண்கள் கொண்ட மண்டபம் ஸ்ரீஆவர்த்தம் என்றும் அறுபத்துநான்கு தூண்கள் கொண்ட மண்டபம் மணிபத்ரகம் என்றும் நூறு தூண்கள் கொண்ட மண்டபம் விசாலம் என்றும் ஆயிரம் தூண்கள் கொண்ட மண்டபம் அதிவிசாலம் என்றும் வழங்கப்படுகின்றன.

125. கோபுரம், ஸ்தூபி இரண்டிற்கும் வேறுபாடு உண்டா கூறுக.

கோபுரம், ஸ்தூபி இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. கோவிலின் நுழைவாயிலில் அமைக்கப்படுவது கோபுரம் எனப்படும். கோவிலுக்கு நான்கு பக்கமும் நுழைவாயில் இருந்தால் நான்கு திசையிலும் கோபுரங்கள் இருக்கக் காணலாம்.

கோபுரம் 11 நிலைகள், 9 நிலைகள், 7 நிலைகள், 5 நிலைகள், 3 நிலைகள் கொண்டவையாக இருக்கக் காணலாம். (நிலை அடுக்கு) ஒவ்வொரு நிலைக்கும் இருபுரமும் வாயில் (மாடம்) கள் இருக்கும். கோபுரத்தின் உச்சியில் ஒன்பது ஏழு, ஐந்து, மூன்று என்ற எண்ணிக்கையில் கலசங்கள் அமைக்கப்பட்டு இருக்கும். விமானங் களை விட கோபுரம் உயரமாக இருக்கும்.

கோபுரங்களில் சிவபிரானின் உருவங்கள் மற்றும் பிரம்மாதி தேவர்களின் உருவங்கள் சுதையால் அமைக்கப்பட்டு இருக்கும். புராண வரலாறுகளும் இறைவனின் திருவிளையாடல் காட்சிகளும் சதை பொம்மைகளாக அமைந்திருக்கும்.

நாம் கோவிலின் உள்ளே இருந்து வெளியே வருவதாக எண்ணிக் கொண்டால் கோவிலின் (உள்பிரகாம் முதற்பிரகார வாயிலில் அமைந்துள்ள கோபுரத்திற்கு துவாரசோபை என்று பெயர். இரண்டாம் பிரகார வாயில் கோபுரத்திற்கு துவாரசாலை என்று பெயர்.

மூன்றாம் பிரகார வாயில் கோபுரத்திற்கு துவாரப்பிராசாதம் என்று பெயர். நான்காம் வாயில் கோபுரத்திற்கு துவார ஹர்ம்யம் என்று பெயர். ஐந்தாம் வாயில் கோபுரத்திற்கு மஹாமர்யாதி என்று பெயர். இதை மஹாகோபுரம், ராஜகோபுரம் என்றும் கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்தர்கள் இந்த ராஜகோபுரத்தைச் ஸ்தூலலிங்கம் என்று வணங்குவர். ஸ்தூபி அல்லது விமானம் என்பது இறைவனின் கருவறை மீது அமைவதாகும். இதன் அமைப்பைக் கொண்டு நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று வகையாகக் கூறுவர்.

அடிப்பகுதி முதல் பிரம்ம மந்திரம் வரை சதுரமாக அமைவது நாகரம் எனப்படும். மேற்பகுதி வட்டமாகவும் அமைவது வேசரம் எனப்படும். கண்டம் முதல் எட்டுகோணமாக அமைவது திராவிடம் எனப்படும்.

விமானங்களின் கிழக்குப்பகுதியில் பெரும்பாலும் அவ்வந்தமூலமூர்த்தியின் உருவைச் சுதையால் அமைத்திருப்பார்கள்.

தெற்கில் தக்ஷிணாமூர்த்தி, மேற்கில் மஹாவிஷ்ணு, வடக்கில் பிரம்மன் உருவங்களும் மற்ற பகுதியில் மூலலிங்கத்துக்குத்தக்கபடி திக்பாலகர் முதலான பிற உருவங்களையும் அமைப்பார்கள்.

விமானங்கட்குப் "பிராசாதம் மேரு" எனும் பெயர்களும் உண்டு. விமானங்களில் 96 வகைகள் உள்ளனவென்று சிற்பசாத்திரங்கள் கூறுகின்றன.

தமிழகத்தில் ஏன் இந்தியாவிலேயே மிகவும் உயரமான விமானம் தஞ்சை பிரகதீஸ்வரர் விமானமே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதைக் கட்டியவன் ராஜராஜசோழன் ஆவான்.

126. கோவில்களில் பலவகை வாத்யங்கள் முழங்கப்படு கின்றனவே அவற்றால் பலன் ஏதேனுமுண்டா?

கோவில்களில் பேரீ, டக்கா, ஜல்லரீ, நாதஸ்வரம், சங்கு போன்ற வாத்யங்கள் வாசிக்கப்படுகின்றன.

டக்கா, பேரீ வாத்யம் முழங்கினால் உயிர்கட்குச் சந்தோஷம் உண்டாகும். ஜல்லரீ வாசித்தால் விரும்பியது கிடைக்கும். நாதஸ்வரம் போன்ற குழல் வாத்யங்கள் வாசித்தால் மக்கட்பேறு கிடைக்கும். மத்தளம் வாசிப்பதால் சுகம் உண்டாகும். தாளவாத்யங்கள் (தாளங்கள்) துன்பம் நீக்கும். வீணை முதலான தந்திவாத்யங்கள் வாசித்தால் யாகம் செய்த பலனை அடையலாம். திருச்சன்னம் வாசித்தால் ஜெபம் (வெற்றி) உண்டாகும். சங்கு வாசித்தால் சத்ரு நாசம் ஏற்படும். நாட்டியம் ஆடினால் ஆயுள்விருத்தி, தான்யவிருத்தி கிடைக்கும். எனவே தோற்கருவிகள், தந்திக்கருவிகள், குழல்கருவிகள் முதலான வாத்யங்களைக் கோவில்களில் ஒலிக்கச் செய்தால் அதனால் பற்பல நன்மைகள் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் என்பதறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. புலித்தோலாசனம் சகல செல்வங்களையும் மோட்சத்தையும் அளிக்கும்.

6. மான் தோல் ஆசனம் ஞானம் உண்டாக்கும்.

7. கூர்மாசனம் இகபர வாழ்வின் சுகங்களைத் தரும்.

எனவே, விதிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து கிரியைகளைச் செய்வது உத்தமமாகும்.

110. சங்கல்பம் என்றால் என்ன? ஏன் சங்கல்பம் செய்ய வேண்டும்? சங்கல்பத்தில் வகைகள் உண்டா? எங்கெங்கு எந்தெந்த சங்கல்பத்தைச் செய்வது நலம் தரும்.

ச - சிவஞானம், க - கொடுப்பது, ல - லீனம் (கெட்டியாக உள்ள பொருளை உருக்குவது லீனம் எனப்படும்) கடினமான மனித உள்ளத்தை உறுக்கி இறைவனுடன் கலக்கச் செய்வது என்ற பொருளில் லீனம் என்ற சொல் ஆளப்பட்டது.

சிவஞானத்தை அடையக்கூடிய சங்கல்பத்தை செய்து கொண்டால் காரியங்கள் தடங்கலின்றி நடைபெறும். எனவே எல்லா காரியங்களிலும் சங்கல்பம் கட்டாயம் செய்தல் வேண்டும்.

சங்கல்பம் சைவம், மிஸ்ரம், கேவலம் என்று மூவகைப்படும்.

ஆதிசைவர்கள் முதல் சைவர்கள் வரை சைவ சங்கல்பமும் கர்ம வாதிகள் மிஸ்ர சங்கல்பமும் மற்றவர்கள் கேவல சங்கல்பத்தையும் செய்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர்.

1. சைவ சங்கல்பம் : பிரணவத்தை முதலில் உச்சரித்து "சிவ சிவ சம்போராக்யா" எனக் கூறித் தொடங்குவது சைவ சங்கல்பம் ஆகும்.

2. "சுபே, சோபனே, முகூர்த்தே" எனக் கூறித் தொடங்குவது மிஸ்ரம் எனப்படும்.

கர்மமே முக்யம், கர்மபலனை அளிப்பவன் ஈஸ்வரன் அல்லன் என்ற கர்மவாதிகள் தங்கள் தங்கள் இஷ்டமான தெய்வத்தின் பெயரை முன்னர் சொல்லி சங்கல்பம் செய்வது கேவலம் எனப்படும்.

ஞானிகள் சிவசங்கல்பத்தையே செய்தல் வேண்டும். சைவர்கள் அனைவரும் நித்ய நைமித்திக காம்யகர்மாக்களில் எல்லாம் சைவ சங்கல்பத்தையே செய்தல் வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

111. புண்யாகவாசனத்தின் பொருள் என்ன? எப்போதெல்லாம் புண்யாகவாசனம் செய்ய வேண்டும்? ஏன் செய்யவேண்டும்?

பு - பாபநாசனம்

ண்ய - தேகசுத்தி

ஹ - ஸ்தான (இட)சுத்தி

பாபநாசத்தையும், தேகசுத்தியையும் ஸ்தானசுத்தியையும் தருவதால் "புண்யாகவாசனம்" என்ற பெயர்பெற்றது. இதை விக்னேஸ்வர பூஜைக்குப் பின் செய்ய வேண்டும்.

புண்யாகவாசனம், சர்வபாபத்தையும் போக்குவதாலும், சர்வ சித்திகளையும் உண்டாக்குவதாலும், நித்யகர்மாக்களிலும், விசேஷக் கிரியைகளிலும், இஷ்டமான கார்யம் (காம்யம்) செய்யும்போதும் இடங்களை சுத்தமாக்கும்போதும், பிம்பறங்களைச் சுத்தமாக்க விரும்பும்போதும் மற்ற மங்களகரமான காரியங்களை மேற் கொள்ளும்போதும் புண்யாகவாசனம் செய்ய வேண்டும்.

ஏன் செய்யவேண்டுமென்றால், எல்லா காரியங்களையும் செய்யும்போதும் புண்யாகவாசன ஜலத்தைப் புரோக்ஷணம் செய்வ தானது சுபத்தைத்தரும். செய்யும் கிரியை மூலம் நல்ல பலனைக் கொடுக்கச் செய்யும். இல்லையெனில் அநேக இடையூறுகள் வந்து சேரும். எனவே, அவசியம் புண்யாகவாசனம் செய்தல் வேண்டும். மேலும், எங்கெல்லாம் புண்யாகவாசனம் இன்றி செயல்கள் செய்யப் படுகின்றனவோ அங்கெல்லாம் அச்செயல்கள் எந்தவித நற்பலனையும் தராது. மாறாக, அங்கு பூத, பிரேத, பிசாங்கள் வந்து கூடும். எனவே, அவசியம் புண்ணியாகவாசனம் செய்வது நன்மை பயக்கும்.

விநாயகர் பூஜைக்குப் பின்னரும் மற்ற செயல்களைத் தொடங்கும் முன்னரும் புண்ணியாவாசனத்தைச் செய்ய வேண்டும்.

புண்ணியாவாசனம் மூவகையாகச் சொல்லப்படுகிறது.

1. சுத்தம் 2. வைதிகம் 3. கேவலம்.

(1) சுத்தம் வருண பகவானை சாங்கத்துடனும் ஆவரணத் துடனும், த்யானபூர்வமாகவும், மந்திரங்களோடு ஆவாஹித்துப் பூஜிப்பது சுத்தம் எனப்படும்.

(2) மிஸ்ரம் : ஆவரண பூஜையின்றி வேத விதிப்படி வேத மந்திரங் களை மட்டும் சொல்லி ஆவாஹித்து பூஜிப்பது வைதிகம் எனப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(3) கேவலம் : வருணனின் பெயர்களை மட்டும் சொல்லிப் பூஜிப்பது கேவலம் எனப்படும்.

13. எந்தெந்த இடங்களில் எந்தெந்த புண்ணியாவாசனம் செய்தல் வேண்டும்?

சிவாலயங்களில் சுத்தம் என்னும் புண்யாகவசனத்தையும் வைதீக காரியங்களில் வைதிகம் என்னும் புண்ணியாவாசனத்தையும் அந்தியேஷ்டியில் கேவலம் எனும் புண்ணியாவாசனத்தையும் செய்தல் வேண்டுமென்க.

நித்யகாம்ய காரியங்களில் சுத்த புண்யாகவாசனமே செய்தல் வேண்டும்.

112. பூஜை முறைகளில் வேறுபாடு உண்டா? உண்டெனின் எத்தனை வகை வேறுபாடு உள்ளது?

பூஜை முறைகளில் மூன்று வகை வேறுபாடுகள் உள்ளன. அவை *(1)* சசக்திகம் *(2)* விசக்திகம் *(3)* கேவலம் என்பன.

(1) மூர்த்திகளை ஆசனமூர்த்தி மூலத்துடன் தியானத்தையும் சொல்லி பூஜிப்பது சசக்திகம் எனப்படும்.

(2) தியான மந்திரமின்றி ஆசனமூர்த்தி மூல மந்திரங்களை மட்டும் சொல்லி பூஜிப்பது விசக்திகம் எனப்படும்.

(3) மூலமந்திரத்தை மட்டுமே கூறி பூஜிப்பது கேவலம் எனப்படும்.

113. சங்கோபங்க பூஜை என்பதென்ன?

பூஜை சாங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என மூவகைப்படும்.

1. ஸ்தாபனம், பாத்யம், ஆசமனம், அர்க்யம், வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம் இவைகளைக் கொண்டு முறையாகப் பூஜித்து சாங்கம் என்றும்.

தூபம், தீபம், இரக்ஷை, விபூதி, குடை, சாமரம், கண்ணாடி, நர்தனம், வாத்யகோஷம் ஆகியவற்றுடன் மேற்சொன்னவற்றையும் சேர்த்து செய்வது உபாங்கம் என்றும்,

மேற்சொன்னவற்றையும் சேர்த்து சுருகோதகம் பலிதானம், ஹோமம், நித்யோத்ஸவம் கூடியது பிரத்யங்கம் என்றும் கூறப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவை மூன்றையும் விடாமல் கூட்டிச் செய்வது சாங்கோபாங்க பூஜை எனப்படும்.

இதை மற்றொரு வகையிலும் கூறுவர். அதாவது சிரசு, முகம், இருதயம் ஆகியவை அங்கம் என்றும், மார்பு, கழுத்து, புஜம், நாபி, குஹ்யம், உதரம், கண்கள், நாசி, வாய், காதுகள், கைகள், கால்கள், விரல்கள், தொடைகள், முழங்கால்கள், கணுக்கால்கள் ஆகிய இவை பிரத்யங்கம் எனப்படும்.

சூலம், மழு, வாள், குலிசம், அபயம், அக்நி, அங்குசம், மணி, சர்பம், பாசம் ஆகியன சாங்கம் என்றும் வஸ்திரம், உபவீதம், மாலை, சந்தனம், ஆபரணங்கள் உபாங்கம் என்றும் கூறப்படுகின்றன. இவை அனைத்தையும் கூட்டி பூஜை பண்ணுவதை சாங்கோ பாங்க பூஜை என்பர்.

114. பூஜா காலங்களில் சிவாச்சாரியன் எவ்வாறு தன் கைமணியை அடிக்க வேண்டும்? எப்பொழுதெல்லாம் அடிக்க வேண்டும்? எத்தனை முறை அடிக்கவேண்டும்?

மணியில் எப்பொழுதும் தேவர்கள் சாந்நித்யமாக இருப்பார்கள். ஆகையால் சிவாச்சாரியார் மணியடிக்கும்போது மணி தமது நாபிக்குக் கீழே செல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். மணி யடிக்கும்போது அஸ்த்ர மந்திரத்தை உச்சரிக்கவேண்டும். இம் மணிச்சத்தத்தைக் கேட்டு யக்ஷர், ராக்ஷசர், பிசாசர், அசுரர் ஆகிய தீயவர்கள் ஓடிவிடுவார்கள் என்றும் தேவர்கள் மகிழ்ந்து சாந்நித்ய மாவார்கள் என்றும் சகலாகமசார சங்கரஹம் கூறுகிறது.

கர்ஷணம் முதலிய கிரியாரம்ப காலத்திலும், விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம் ஆரம்பிக்கும்போதும், தூபதீபம் காட்டும் போதும், நிவேதனம் செய்யும்போது பலிதானம் செய்யும்போதும் தொடர்ந்து பூஜை முடியும்வரை மணியடிக்க வேண்டும்.

மணி ஒலி இன்றேல் இந்தச் செயல்கள் பயன்தரா மணி யடித்தலில் முறையுண்டு. ஒரு முறை அடித்தால் மோட்சம், இரண்டு முறை மணி அடித்தால் போகம், மூன்றுமுறை அடித்தால் சகல கார்ய சித்தி, புண்யாஹம், தூபம், நைவேத்யம், பலி காலங்களில் 2 முறையும், தீபமெனில் ஒரு நாதமும் மற்றைய செயல்களுக்கு மூன்று முறையும் அடித்தல்வேண்டுமென்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருந்தியுள்ள அறிவு எப்போதும் நீங்காமல் சிவத்திலே கலந்திருக்க வேண்டும் என்பதாகும். சுருக்கமாகக் கூறினால் நான்செய்யும் கிரியைகள் முடியும் வரையில் தாங்கள் அன்புடன் இந்த உருவத்தில் இருக்கவேண்டுமென்று தளையிடுதல் ஆகும். இது "நிரோதனம்" எனப்படும்.

திக்பந்தனம்

கையினால் இறைவனைச் சுற்றி எட்டு இடங்களில் சோடிகை (சொடுக்கு) செய்வது "திக்பந்தனம்" எனப்படும். இதன் பொருள் யாதெனின் இறைவனைச் சுற்றியுள்ள விக்னங்களை அவன்பால் அண்டாதவாறு தடுத்தல் என்பதாகும்.

அவகுண்டனம்

"அவகுண்டனம்" என்பது ஆசாரியன் தனது வலக்கை ஆள் காட்டி விரலால் இறைவனைச் சுற்றிக் காட்டுவது. இதன் கருத்து யாதெனின் நெருப்புமயமான பிரகாரத்தை இறைவனைச் சுற்றி அமைப்பதாகும்.

தேனுமுத்திரை

"முத்திரை" என்பதன் பொருள் யாதெனின் "முத்" என்பது மகிழ்ச்சி "திரா" என்பது வேகமாகச் செய்வது என்பதாகும். எனவே முத்திரை என்பது, "இறைவனை விரைவாக மகிழ்விக்க பயன்படுவதாகும்" என்பது விதி.

செய்யப்படுகின்ற செயலின் தன்மையை விளக்க முத்திரை காட்ட வேண்டும். அவ்வாறு காட்டுவதால் அதற்குண்டான தேவதை ஆன்மாக்கள் மனதிற் கொண்ட எண்ணங்களை அனுகூலமாக்கும். இறைவனை மகிழ்விக்க அமிர்தம் பொழிகின்றதான பாவனையுடன் கூடிய தேனுமுத்திரையைக் காட்டுதல் மரபாகும். பிறமுத்திரை களையும் கற்று தகுந்த இடங்களில் பயன்படுத்துக.

பாத்யம், ஆசமனீயம் அர்க்யம்

ஆன்மாக்கள் சிவபிரானின் பிரகாசமாகிய இச்சா, ஞானம், கிரியைகள் பொருந்திய ஸ்தானமாகிய திருவடியை அடைந்து சக்திகளின் விளக்கத்தால் திருவருள் தன்மை பெற்று திருமுகத்திற் பொருந்தி அருள் விளக்கத்திலே நிஷ்களமாகிய திருவமுடியை அடைதல் என்னும் பாவனையாக பாத்யம், ஆசமனீயம், அர்க்யம் மூன்றையும் முறையாகத் தருதல் வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனின் திருவடிகளில் வலம் இடமாக ஒவ்வொரு முறை ஞான சக்தி காரியமாகிய பாத்யத்தை 'நம:'' என்று மூலமந்திரம் முடியுமாறு தருதல் வேண்டும்.

'சுவதா' என்று முடியுமாறு மூல மந்திரமுச்சரித்து சதாசிவமாகிய ஈசனாதி ஐந்து முகங்களிலும் மும்மூன்று முறைகள் கிரியாசக்தி காரியமாகிய ஆசமனீயத்தைத் தருதல் வேண்டும்.

அர்க்யம் : 'சுவாஹா' என்று முடியுமாறு மூலமந்திரத்தைச் சொல்லி நிஷ்களமாகிய ஈசனாதி ஐந்து சிரசுகளிலும் ஒவ்வொரு முறை இச்சா சக்தி காரியமாகிய அர்க்கியத்தைக் கொடுத்தல் வேண்டும்.

சந்தனம்

திருவருட் சக்தி பதிதல் என்னும் பாவனையால் மெய்யன்போடு சந்தனம் இடுதல் வேண்டும். அகில், பச்சை கற்பூரம், குங்குமப்பூ முதலிய வாசனைப் பொருட்களைக் கூட்டிச் சந்தனத்தைக் குழம்பாக்கிச் சாத்துகின்றவர்கள் பிரபஞ்ச வைராக்யமுடையவர் களாகச் சிவபுண்ணியப் பயனால் கைலாயம் அடைவார்கள் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

புஷ்பதானம்

'வௌஷட்' என்று முடியுமாறு மூலமந்திரத்தைக் கூறி புஷ்பம், அட்சதை, அருகம்புல் இவைகளை இறைவனின் திருமுடியில் அன்போடு இடுதல் வேண்டும். இவ்வாறு செய்தால் சுத்த சைதன்ய மாகிய ஆனந்தம் கிடைக்கும்.

வஸ்திரதானம்

வெள்ளியநுரை போன்றதான பட்டுவஸ்திரம், அல்லது மெல்லிய இழைகளுடைய பருத்தி ஆடை ஆகியவற்றை அன்புடன் இறைவனுக்குச் சாற்றினால் ஒவ்வோர் இழைக்கும் ஆயிரம் கற்பகாலம் என்ற நிலையில் சிவலோகப் பதவி அடைந்து வாழ்வார்கள். இதன் குறிப்புப் பொருள் யாதெனின் திரோபாவம் (நீக்குதல்) என்னும் பலனைத்தரும் என்பர்.

உபவீதம் : முறைப்படி செய்யப்பட்ட உபவீதத்தை (பூணலை) சிவபிரானுக்குத் தினமும் அணிவித்தல் வேண்டும். இவ்வாறு செய்பவர்கள் மறுமையில் மறையோனாகப் பிறப்பார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புஷ்பமாலை

பிரணவரூபமான கொன்றை முதலான மலர் மாலைகளை அணிவித்தல் வேண்டும்.

தூபதீபம்

கிரியா சக்திஸ்வரூபமாகிய தூபத்தைச் சிவசந்நிதானத்தில் இட்டால் ஆன்மாவை மறைந்துக் கொண்டிருக்கும் ஆணவமலமாகிய அறியாமையைக் கிரியா சக்தியைக் கொண்டு சிவபிரான் அழிப்பார் என்பது குறிப்பு.

தூபக்கா்லின் முகத்தில் அக்நியும், தண்டத்தில் ஈஸ்வரனும், பாதத்தில் பிரம்மாவும் அதிபர்களாய் விளங்குகின்றனர். தூபமானது உத்தமம், மத்யமம், அதமம் என்று மூன்றாகக் கூறப்படுகிறது.

உத்தமம்

அகிற்பொடி ஒரு பங்கு, குங்கிலியம் இரண்டு பங்கு, சந்தனப்பொடி *3* பங்கு, கொஞ்சம் பச்சை கற்பூரப்பொடி, கொஞ்சம் தேன் இவைகளைக் கூட்டிப் புகையிடுவது உத்தமமாகும்.

மத்யமம்

விளாமிச்சை வேர்ப்பொடி *1* பங்கு, குங்கிலியம் *2* பங்கு, சந்தனப்பொடி *3* பங்கு, சிறிது தேன், நெய் இவைகளைக் கூட்டிப் புகையிடுவது "மத்யமம்" எனப்படும்.

அதமம் குங்கிலியத்தையும், சிறிது நெய்யையும் கூட்டிப் புகையிடுவது அதமம் ஆகும்.

உத்தமம் சாத்வீக குணத்தையும் மத்யமம், ராஜஸ குணத்தையும், அதமம் தாமத குணத்தையும் நல்குமென்றறிக. இக்காலத்தில் சாம்பிராணியைப் பொடியாக்கித் தூபம் தருவது வழக்கத்தில் உள்ளது.

தீபம்

தூபத்தைப் போலவே தீபமும், "உத்தமதீபம்", "மத்யம தீபம்", "அதம தீபம்" என மூன்று வகையாகும்.

கபிலநிறமுடைய (செம்மைநிறம்) பசுவின் நெய்யையும், தாமரைத் தண்டின் நூலையும் அல்லது வெள்ளெருக்கின் நூலையும் அல்லது பருத்தி நூலையும், *21* இழையாகக் கொண்டு பச்சை

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கற்பூரப்பொடியைக் கூட்டித்திரி செய்து ஏற்ற வேண்டும். திரியினில் சுடர் நான்கு அங்குலம் எரியவேண்டும். இவ்வாறு ஏற்றுவது "உத்தமதீபம்" ஆகும். இதன் குணம் சாத்துவீகமாகும்.

மற்ற நிறமுடைய பசுக்களின் நெய்யினால் பதினாறு இழைகளுடைய திரியைக் கொண்ட மூன்று அங்குலம் உயரம் எரியும்படி ஏற்றும் தீபம் "மத்யம்" தீபமாகும். இதன் குணம் ராஜசம் என்க.

ஆட்டு நெய் அல்லது எண்ணெய் கொண்டு 14 இழை நூலினால் அல்லது 7 இழை நூலினால் செய்யப்பட்ட திரியில் 2 அங்குலம் உயரம் எரியுமாறு ஏற்றப்படும் தீபம் "அதமதீபம்" எனப்படும். இதன் குணம் "தாமசம்" என்பதாகும்.

தீபமேற்றியவருக்கு உண்டாகும் பலன் யாதெனின், சித்சக்தியின் வாசமுடையதாயும் ஞானவிளக்கமாய் இருப்பதும் தீபமாகும். எனவே, சிவ சந்நிதானத்தில் தீபம் ஏற்றுபவர்கள் அபமிருத்தியு தோஷமின்றி வாழ்வார்கள். பாப நீக்கத்தையும் சகல சித்திகளையும் ஞானத்தையும் அடைவார்கள் என்பது ஆகம வசனமாகும்.

குறிப்பு : மரக்கொட்டைகளின் நெய்யும், எருமை நெய்யும், கந்தைத் துணி கொண்டு செய்யும் திரியும் கொண்டு தீபமேற்றுவது பெரும்பாவமாகும்.

நைவேத்யம்

செந்நெல் அரிசி, வ்ரீஹி, யவம், சாலி, நெல் அரிசி இவைகளை நிவேதனப் பொருளாக கொள்ள வேண்டும். ஆறுவிதமான அதாவது சுத்தான்னம் (ஈசானமுகம்) சர்க்கரைப்பொங்கல் (தத்புருஷமுகம்) எள் அன்னம் (அகோரமுகம்) தயிர் அன்னம் (வாமதேவமுகம்) வெண் பொங்கல் (சத்யோஜாதமுகம்) எனும் முறையில் இவற்றுடன் பாயாசம், தேன்சாதம், தயிர், வெல்லம், தேன் இவை மூன்றும் கலந்த சாதம், இத்துடன் காய்கறி வகைகள் இவற்றுடன் பசுநெய், பசுந்தயிர் ஆகியவற்றையும் நிவேதனம் (நைவேத்யம்) செய்ய வேண்டும்.

நைவேத்யங்களில் முறையே சுத்தான்னத்தைக் காட்டிலும் பாயசன்னமும், அதைக்காட்டிலும் எள் அன்னமும் தைக் காட்டிலும் சர்க்கரைப் பொங்கலும் அதைக் காட்டிலும் வெண்பொங்கலும் சிறந்தது என்க.

"எவன் ஒருவன் மனம் விரும்பி சிவபெருமானுக்கு நெய்வேத்யம் செய்ய அரிசியைத் தருகிறானோ, அவன் தரும் அரிசி அளவில் எத்தனை உள்ளனோ, அத்தனை நாட்கள் வரை அவன் சிவ லோகத்தில் வாசம் செய்வான்" என்று காரணாகமம் கூறுகின்றது".

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனுக்கு 2 மரக்கால் அளவு நிவேதனம் செய்வது உத்தமம். 6 படி அளவு செய்வது மத்யம் 4 படி அளவு செய்வது அதமம் என்க.

குறிப்பு : நெய்வேத்யப் பொருளில் கேசம், புழு, மணல், உமி இவைகள் இருக்கலாகாது. சாதம் குழையக்கூடாது. துர்நாற்றம் வரக்கூடாது. அதிக சூடும் ஆகாது. அதிகக் குளிர்ச்சியும் ஆகாது.

கேசத்துடன் கூடிய உணவை நிவேதனம் செய்தால் மரணம் உண்டாகும். கல் இருக்குமாயின் வியாதி உண்டாகும். உமி முதலியவை இருக்குமானால் தரித்திரம் (வறுமை) உண்டாகும். எனவே இவைகளை அறிந்து தூய்மையான முறையில் நைய்வேத்யம் அமைத்துச் செய்ய வேண்டும்.

பானீயம் (குடிக்க நீர்)

இறைவனின் திருப்தியின் பொருட்டு 'பானீயம்' தரப்பட வேண்டும்.

ஏலக்காய், இலவங்கள், சந்தனம், பச்சை கற்பூரம், ஜாதிக்காய், செங்கழுநீர்பூ என்பனவற்றை நீரில் சேர்த்துப் பானீயமாகக் கொடுக்க வேண்டும். பானீயம் தந்த உடன் ஆசமனமும், கையலம்புவதற்கான தண்ணீரும் (பாவனையால்) தருதல் வேண்டும்.

ஜபசமர்ப்பணம்

மந்திரத்தை மானசீகமாக (மனதிற்குள்ளாக) ஜபிப்பது "ஜபம்" எனப்படும். 108 முறைகள் அல்லது 54 முறைகள் அல்லது 25 முறைகள் சிவமூல மந்திரத்தை ஜபித்து இறைவனுக்கு ஜப சமர்ப்பணத்தைச் செய்ய வேண்டும். 108 முறை ஜபிப்பது உத்தமம் என்க.

ஆன்மாவின் சர்வ குணங்களும் நீங்கிப்பின் மோக்ஷடைய வதற்காக ஜப சமர்ப்பணம் கட்டாயம் ஆகும். 'ஜ' பிறவி நீக்கம் 'பம்' பாப நிவாரணம், ஜபம் பிறவியை நீக்கும் பாபத்தைப் போக்கும் என்பதை உணர்ந்து செய்க.

கற்பூர தீபாராதனை

எல்லா உபசாரங்களும் முடிந்த பின்பு கடைசியாகக் கற்பூர ஆரத்தி காட்டப்படுகிறது.

கற்பூர தீபத்தின் அதிபதி "அக்னி". அக்னியில் இட்ட எந்தப் பொருளும் எரிந்து அக்னியுடன் கலந்து ஒன்றும் இல்லாமல் போய்விடும். அதுபோலக் கற்பூரம் ஏற்றி வழிபாடு செய்யும் ஆன்மாக்களின் பாபங்கள், பிறவித்துன்பங்கள் எல்லாம் கற்பூரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எரிந்து கரைந்து காற்றுடன் கலந்துவிடுவது போலக் கரைந்துப்பின் உயிர் இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுவதை உணர்த்துகிறது. "முடிவில் உயிர்கள் இறைவனுடைய திருவடித் தாளினையடைந்து பேரின்பம் அடையும்" என்பதற்கு எடுத்துக்காட்டாகவே கற்பூர ஆரத்தி காட்டப்படுகிறது.

இவ்வாறு மேற்கண்ட சோடசோபசார பூஜைகளைத் தினமும் செய்பவர்கள் இகபர சுகங்களைப் பெற்றுப் பல்லாண்டு நலமுடன் வாழ்வார்கள் என்பது ஆகமங்களின் ஒருமித்த கருத்தாக விளங்குகிறது.

130. சோடசோபசார தீபாராதனை எவை? அவற்றின் பயன்கள் யாவை?

1. தூபம் 2. தீபம் 3. நாகதீபம் 4. விருஷபதீபம் 5. மிருகதீபம் 6.பஞ்சதீபம் 7. பூர்ணகும்பதீபம் 8. நட்சத்திரதீபம் 9. மேருதீபம் 10.கற்பூரதீபம் 11. விபூதி சமர்ப்பணம் 12. கண்ணாடி 13. குடை 14.சாமரம் 15. விசிறி 16. கொடி (துவஜம்) இவையே சோடச உபசாரம் ஆகும்.

1. தூபம் : ஆன்மாக்களை மறைத்துக் கொண்டுள்ள ஆணவ மலத்தை நீக்கும்.

2. தீபம் : அபமிருத்யுதோஷம் நீக்கும். பாபம் விலகும்.

3. நாகதீபம் : புத்திர விருத்தியை உண்டாக்கும்.

4. விருஷபதீபம் : பசு விருத்தியை உண்டாக்கும்.

5. மிருகதீபம் : சகல கார்ய சித்தியுண்டாகும்.

6. பஞ்சதீபம் : ஐந்து தட்டுகள் பஞ்சபிரம்மங்களின் தொழிலான சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார திரோபாவ, அனுக்கிரகம் எனும் இறைவனின் ஐந்தொழிலைக் குறித்து அவற்றின் பயனை ஆன்மா அடைய வழி செய்யும்.

7. பூர்ணகும்பதீபம் : ஆன்மாக்களுக்கு மும்மல நீக்கம் தரும்.

8. நட்சத்திரதீபம் : மனிதன் பிறப்பதற்குண்டான நட்சத்திரம் 27. 27 விளக்குகளையுடைய இந்த தீபம் நட்சத்திரங்களைக் குறிக்கும். மேலும் அது அந்தந்த நட்சந்திரங்களில் பிறந்தவர்களின் மல மாயைகளை நீக்கும்.

9. மேருதீபம் : இது ஒன்பது அடுக்கு, ஏழு அடுக்கு ஐந்து அடுக்கு, மூன்று அடுக்கு என்பனவாக இருக்கும். ஒன்பது அடுக்கு தீபமாயின் இறைவனின் ஒன்பது உருவங்களைக் குறிக்கும். ஏழு அடுக்காயின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏழு உலகைக் குறிக்கும். ஐந்தடுக்கு தீபமாயின் பஞ்ச கலைகளைக் குறிக்கும். மூன்றடுக்காயின் மூன்று தத்துவங்களைக் குறிக்கும். இதன் பயன் ஆன்மா தூய்மையடைகிறது என்பதாகும்.

10. கற்பூரதீபம் : வெண்ணிறமுடையது. ஆனால் தீப்பற்றியதும் தீவண்ணம் பெறுகிறது. மேலும் எரிந்த காற்றுடன் கலந்து மறைந்து விடுகிறது. அதுபோல் "ஆன்மா இறைவனுடன் கலந்தால் இறைவனின் தன்மை பெற்று தன்னிலை இழந்து அவனுடன் இரண்டறக் கலந்துவிடும்" என்ற உண்மையைக் கற்பூர தீபம் விளக்குகிறது.

11. விபூதி சமர்ப்பணம் : விபூதி மூவுலக ரட்சையின் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகிறது. இதனால் மூன்று உலக உயிர்களும் மேன்மை பெறும் என்க. (ரட்சிக்கப்படும் என்க)

12. கண்ணாடி : கண்ணாடியில் சக்தியும், அதன் ஒளியில் சிவனும் இருப்பதாக ஐதீகம். எனவே, கண்ணாடியினால் ஆராதனை புரிந்தால், ஆராதிப்பவர்கள் சிவசக்தியை உணர்ந்து அதன்மூலம் சிவஞானம் அடைந்து சிவலோகப் பதவியை அடைவார்கள் என்பது பொருளாகும்."

13. குடை : குடையில் சூரிய மண்டலமும், காம்பில் சூரியனும் இருப்பதாகக் கூறுவர். எனவே குடையினை ஆராதனை செய்பவர் கள் அரச பதவி பெறுவதுடன் மிகுந்த பலசாலியாகவும் விளங்கு வார்கள்.

14. சாமரம் : சாமரத்தில் வாயுதேவனும், காம்பில் கார்கோடகனும் உள்ளதால் சாமரம் கொண்டு வீசிப் பூசிப்பவர்கள் மும்மலமும் நீங்கப்பெற்றுத் திருவருட்செல்வம் பெறுவார்கள்.

15. விசிறி : விசிறியில் சூரியனும், காம்பில் பதுமன் எனும் பாம்பும் அதன் காற்றில் வாயுதேவனும் இருப்பதால் விசிறியைக் கொண்டு பூசிப்பவர்கள் சகலசுகபோகங்களையும் அடைவார்கள்.

16. கொடி : வெற்றியின் சின்னம் கொடி. "ஆன்மாக்கள் பாச நீக்கம் ஏற்பட்டு வாழ்வில் வெற்றிகண்டு மோட்சம் அடையும்" என்பதை உணர்த்துவதாகும்.

131. சிவாசார்யர்கள் தீபராதனையை எப்படிச் செய்யவேண்டும்? தீபங்களை எத்தனைச் சுற்று சுற்ற வேண்டும். தீபாராதனையின் போது தீபத்திற்குச் செய்ய வேண்டிய கிரியைகள் யாவை?

சிவாசார்யர்கள் இடக்காலலைச் சமமாகவும் வலக்காலைச் சற்ற முன்னோக்கித் தூக்கியபடியும் வைத்துக்கொண்டு நின்று தீபாராதனை செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனின் முகம், கண், மூக்குநுனி, கழுத்து, மார்பு, கால்கள் ஆகிய இடங்களில் தனித்தனியாகப் பிரணவாகாரமாய் மூன்று முறை சுற்றிக் காட்ட வேண்டும்.

மூன்று உலகங்களைக் காக்க வேண்டும் என்பதற்காக மூன்று சுற்றுகள் சொல்லப்படுகிறது.

மேலும் தீபாராதனை செய்யும்போது தீபங்களின் மீது மலர்சூட்டி நீரிக்ஷணம் செய்துப் பின் புரோட்சித்துப் பஞ்ச பிரம்ம மந்திரத்தைச் சொல்லி நியாசம் செய்து, திக்பந்தனம், அவகுண்டனம் செய்து தேனு முத்திரை காட்டி மந்திரத்தை உச்சரித்துக் கொண்டும், தீபத்தைக் கையில் எடுத்துக்கொண்டும், திருஷ்டி தோஷம் நீங்குதற் பொருட்டாக இறைவனின் கண்களுக்கு நேராக தீபத்தையும், தூபமாயின் மூக்கிற்கு நேராகவும் காட்டவேண்டும் என்பது ஆகம நெறியாகும்.

இவ்வாறு நெறியுணர்ந்து தீபாராதனைகளைச் செய்வதால் மூன்று உலகவாசிகளும் இறைவன் அருளால் பற்பல நன்மைகளை அடைவார்கள் என்பதை உணரவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

132. வில்வார்ச்சனை செய்வதின் பலன் யாது?

பில்வமும் அதன் பெருமைகளும் :

வில்வத்தில் மஹாலஷ்மி வசிக்கிறாள். பில்வ நிலயாயை நம: பில்வப் பிரியாயை நம: என்பது லக்ஷ்மி அஷ்டோத்திரத்தில் வரும் நாமங்கள்.

பில்வப் பத்திரத்தில் அர்ச்சனை செய்தால் சொர்ண (தங்க) புஷ்பத்தில் அர்ச்சனை செய்த பலனையடையலாம். திருமால் சிவபிரானை பில்வத்தால் அர்ச்சித்தவரலாறும் புராணங்களில் காணப்படுகின்றன. ஸ்ரீரங்கம் கோவிலின் ஸ்தலவிருக்ஷமே பில்வமரம்தான்.

ஒரு பில்வதளத்தையாவது பரமேஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்தால் எல்லா தோஷங்களும் நீங்கி சகல நன்மைகளையும், அடைவார்கள் என்று சிவபுராணம் கூறுகிறது.

அதர்வணவேதத்தில் 108 பில்வஸ்லோகங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றை ஓதி சிவனுக்கு பில்வ அர்ச்சனை செய்தால் சர்வாபீஷ்டங்களும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

பில்வ பத்திரத்தால் அர்ச்சனை செய்வது போல பில்வப் பழத்தால் ஹோமம் செய்யலாம். ஸ்ரீமஹாலக்ஷிமி ஹோமத்தில் "**ஸ்ரீ பலம்**" எனும் பில்வப்பழம் சொல்லப்பட்டு இருக்கிறது.

பில்வ மரத்தில் மஹாலக்ஷ்மியும், பில்வமரத்து அடியில் சிவபிரானும் எப்போதும் சாந்நியத்தப்பட்டு இருப்பார்கள் என்பது புராண வரலாறாகும்.

பில்வத்தின் மூலிகைக் குணங்களாவன :-

1) **ஆஸ்துமா** எனும் நோய் குணமாக தினமும் காலையில் வெறும் வயிற்றில் சிறிது பில்வ இலையுடன் இரண்டு மூன்று மிளகைச் சேர்த்து மென்று தின்றுவிட்டுச் சிறிதளவு நீர் பருக வேண்டும்.

2) பில்வவேர்ப் பொடியைத் தினமும் பாலுடன் கலந்து அருந்தினால் நீர்கடுப்பு நீங்கும்.

3) தினமும் பில்வ இலையைத் தின்றுப்பின் பால்குடித்து வந்தால் தொற்றுவாய் (திக்கிப்பேசுதல்) குணமாகும்.

4) பில்வ இலைக்கிழாயம் (கஷாயம்) பருகினால் வாதக்காய்ச்சல் மற்றும் மஞ்சள் காமாலை குணமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5) பில்வப் பட்டையுடன் சீரகம் சேர்த்துப் பொடி செய்து அதை நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் தாதுவிருத்தி உண்டாகும்.

6) பில்வப் பழத்தின் சதையுடன் நாட்டுச் சர்க்கரை சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் உண்டால் குடல் சுத்தம் உண்டாகும்.

7) நீண்டநாள் நோயின்றி வாழ விரும்புவோர் பில்வப்பட்டைத் தூளினை பாலுடன் கலந்து குடித்துவரவேண்டும்.

8) புளியைச் சேர்க்காமல் பில்வப் பூக்கொண்டு ரசம் தயார் செய்து சாப்பிட்டால் குடல் வலிமைபெறும்.

9) பில்வக்காயின் ஓட்டைத் தாய்ப்பாலில் அரைத்து வரும் மையை உதட்டின் மீது தடவினால் வெண்மையான உதடு சரியான நிறம் பெறும். (வெண்குஷ்டம்போல் வெளுக்கும் உதடு)

10) பில்வப்பழம், வெள்ளாட்டுப்பால், பசுவெண்ணெய், பசுஞ்சாணம் இவைகளை ஒன்று சேர்த்துக்காய்ச்சி ஆறியபின்பு சில சொட்டுகளைக் காதில் விட்டுவர செவிட்டுத் தன்மை நீங்கும்.

11) ஆறு பில்வ இலைகள் மிளகு மூன்று, ஆக இரண்டையும் கஷாயம் செய்து காலை மாலை என இருவேளைகளிலும் இரண்டு அவுன்ஸ் அளவு குடித்து வர பெருங்குடற்புண் நீங்கிவிடும்.

12) பில்வஇலை, அருகம்புல் இரண்டையும் சிறிதளவு எடுத்து இடித்துச் சாறுபிழிந்து காலை மாலை என இருவேளையும் பருகிவர உடல்வலிகள் குணமாகும்.

13) தினமும் பில்வப்பழம் சாப்பிட்டால் மூளை தொடர்பான பல பிணிகள் (பைத்தியம் முதலான நோய்கள்) பூரணமாக குணமாகும்.

14) பில்வ இலை, வல்லாரை இலை, துளசி இலை, எலுமிச்சை இலை, அம்மான்பச்சரிசி, அரசிலை, அகத்தி இலை ஓரிதழ் தாமரையிலை பொடுதலை இலை, தூதுவளை இலை, கண்டங்கத்தரி இலை, நெருஞ்சி இலை ஆகிய இவைகளை நிழலில் உலர்த்தி எடுத்துப் பொடி செய்துவைத்துக்கொண்டு தினமும் கால் தேக்கரண்டி வீதம் இரவில் சாப்பிட்டுவிட்டு வெந்நீர் பருகி வர மலச்சிக்கல் மறையும்.

இவை சித்தர்கள் கண்ட முறைகளாகும்.

ஸ்ரீ சிவபிரான் துதி

நல்லானை நான்மறையோடு இயல் ஆறங்கம்
வல்லானை வல்லவர்பால் மலிந்தோங்கிய
சொல்லானைத் தொன்மதில் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தி நின்றார்க்கு உளது இன்பமே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீறுமெய்பூசி நிறைசடை தாழ நெற்றிக்கண்ணால் உற்றுநோக்கி
ஆறுஅதுசூடி ஆடு அரவு ஆட்டி ஐவிரல் கோவண ஆடை
பால்தருமேனியர் பூதத்தார் பாச்சிலாச் சிரமத்து உறைகின்ற
ஏறுஅது ஏறியார் ஏழையை இடர்செய்வதோ இவர் ஈடே!

சிவபிரான் தியானம்

சாந்தம் பத்மாஸனஸ்தம் சசிதர மகுடம் பஞ்சவக்த்ரம் த்ரிணேத்ரம்
சூலம்வஜ்ரஞ்ச கட்கம் பரசும் அபயதம் தக்ஷபாகே வஹந்தம்!
நாகம்பாசஞ்ச கண்டாம் ப்ரளயஹுத வஹம் ஸாங்குசம் வாமபாகே
நாநா அலங்காரயுக்தம் ஸ்படிகமணி நிபம் பார்வதீசம் நமாமி!!

ஸ்ரீ சிவபிரானின் பில்வஸ்த்தோத்திர அஷ்டோத்திரம்

1) ஓம் ஹாம், த்ரிதளம் த்ரிகுணாகாரம் த்ரிணேத்ரஞ்சத் த்ரியாயுதம்!
த்ரிஜன்ம பாபசம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம்ஹாம், சிவாய நம:

2) த்ரிசாகை: பில்வபத்ரைச்ச அச்சித்ரை: கோமளை: சுபை:
தவபூஜாம் கரிஷ்யாமி ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம், மஹேஸ்வராய நம:

3) ஸர்வத் த்ரைலோக்ய கர்த்தாரம் ஸர்வத் த்ரைலோக்ய பாவனம்!
ஸர்வத் த்ரைலோக்ய ஹர்த்தாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!
ஓம் ஹாம் சம்பவே நம:

4) நாகாதி ராஜவலயம் நாகஹாரேண பூஷிதம்
நாககுண்டல ஸம்யுக்தம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பினாகினே நம:

5) அக்ஷமாலா தரம் ருத்ரம் பார்வதிப் பிரியவல்லபம்
சந்த்ரசேகரம் ஈசானம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் சசிசேகராய நம:

6) த்ரிலோசனம் தசபுஜம் துர்கா தேஹார்த தாரிணம்
விபூதி: அப்யர்ச்சிதம் தேவம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் வாமதேவாய நம:

7) த்ரிசூல தாரிணம் தேவம் நாகாபரண சுந்தரம்
சந்த்ரசேகரம்ஈசானம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் விருபாக்ஷாய நம:

8) கங்காதரம் உமாநாதம் பணிகுண்டல மண்டிதம்!
காலகாலம் கிரீசஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கபர்த்தினே நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9) சுத்தஸ் படிக ஸங்காசம் சிதிகண்டம் கிருபாநிதிம்
ஸர்வேஸ்வரம் சதாசாந்தம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் நீலலோஹிதாய நம:

10) சச்சிதானந்த ரூபஞ்ச பரானந்த மயம் சிவம்!
வாகீஸ்வரம் சிதாகாசம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சங்கராய நம:

11) சிபிவிஷ்டம் ஸஹஸ்ராக்ஷம் துந்துப்யாஞ்ச நிஷங்கிணம்!
ஹிரண்ய பாஹும் ஸேனான்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் சூலபாணிநே நம:

12) அருணம் வாமனம் தாரம் வாஸ்தவ்யஞ்சைவ வாஸ்தவம்!
ஜேஷ்டம் கனிஷ்டம் வைசாந்தம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கட்வாங்கினே நம:

13) ஹரிகேசஞ்ச வனாதீசம் உச்சைர்கோஷம் ஸநாதனம்!
அகோர ரூபகம் கும்பம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் விஷ்ணு வல்லபாய நம:

14) கைலாச வாஸினம் பீமம் கடோரம் த்ரிபுராந்தகம்!
வ்ருஷாங்கம் வ்ருஷபாரூடம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் சிபிவிஷ்டாய நம:

15) பூர்வஜா அபரஜம் யாம்யம் ஸூக்ஷ்மம்தஸ்கரநாயகம்!
நீலகண்டம் ஜகந்யஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் அம்பிகாநாதாய நம:

16) ஸுராஸ்ரயம் விஷஹரம் வர்மிணஞ்ச வரூத்தினம்!
மஹாஸேனம் மஹாவீரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸ்ரீ கண்டாய நம:

17) குமாரம் குசலம் கூப்யம் வதான்யஞ்ச மஹாரதம்!
பார்யாவார்யஞ்ச திவ்யஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பக்தவத்ஸலாய நம:

18) தசகர்ணம் லாலாடாக்ஷம் பஞ்சவக்த்ரம் சதாசிவம்!
அசேஷ பாபசம்ஹாம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பவாய நம:

19) நீலகண்டம் ஜகத்வந்த்யம் நிலநாதம் மஹேஸ்வரம்!
மஹாபாப ஹரம் சம்பும் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சர்வாய நம:

20) சூடாமணீ க்ருதவிதிம் வலயீக்ருத வாஸுகிம்!
கைலாஸ நிலையம் பீமம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் த்ரிலோகேசாய நம:

21) கற்பூர குந்ததவளம் நரகார்ணவ தாரகம்!
கருணாம்ருத ஸிந்துஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சிதிகண்டாய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22) மஹாதேவம் மஹாத்மானம் புஜங்காதிபகங்கணம்!
மஹாபாப ஹரம் தேவம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சிவப்பிரியாய நம:

23) பூதேசம் கண்டபரசும் வாமதேவம் பினாகினம்!
வாமே சக்திதரம் ஸ்ரேஷ்டம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் உக்ராய நம:

24) பாலேக்ஷணம் விருபாக்ஷம் ஸ்ரீ கண்டம் பக்தவத்ஸலம்!
நீலலோஹித கட்வாங்கம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கபாலினே நம:

25) ஸாமப்பிரியம் சுரமயம் பஸ்மோத்தூளித விக்ரஹம்!
ம்ருத்யுஞ்ஜயம் லோகநாதம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் காமாரயே நம:

26) தாரித்ரியதுக்க ஹரணம் ரவிசந்த்ர அனல அக்ஷகம்!
ம்ருகபாணிம் சந்த்ரமௌளிம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அந்தகாசுரசூதனாய நம:

27) ஸர்வலோக அபயாகாரம் ஸர்வலோகைக சாக்ஷிணம்!
நிர்மலம் நிர்குணாகாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கங்காதராய நம:

28) ஸர்வ தத்வாத்மகம் சாம்பம் ஸர்வதத்வ விதூரகம்!
ஸர்வதத்வஸ்வரூபஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் லலாடாக்ஷாய நம:

29) ஸர்வலோககுரும் ஸ்தாணும் ஸர்வலோக வரப்பிரதம்!
ஸர்வலோகைக நேத்ரஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் காலகாலாய நம:

30) மன்மத உத்தாரணம் சைவம்பவம் பர்க்கபராத்மகம்!
கமலாப் பிரியபூஜ்யஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் க்ருபா நிதயே நம:

31) தேஜோமயம் மஹாபீமம் ஸ்மரபஸ்ம விலேபனம்!
பவரோக விநாசஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பீமாய நம:

32) ஸ்வர்காபவர்க பலதம் ரகுநாத வரப்பிதம்!
நகராஜ சதாகாந்தம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பரசுஹஸ்தாய நம:

33) மஞ்சீர பாதயுகளம் சுபலக்ஷண லக்ஷகம்!
பணிராஜ விராஜஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ம்ருக பாணிநே நம:

34) நிராமயம் நிராதாரம் நிஸ்ஸங்கம் நிஷ்ப்ரபஞ்சகம்!
தேஜோ ரூபம் மஹாரௌத்ரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஜடாதராய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35) ஸர்வலோகைக பிதரம் ஸர்வலோகைக மாதரம்!
ஸர்வலோகைக நாதஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கைலாசவாஸினே நம:

36) சித்ராம்பரம் சிதாபாஸம் வ்ருஷபேஸ்வர வாஹனம்!
நிலக்கிரீவம் சதுர்வக்த்ரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கவசிநே நம:

37) ரத்னகஞ்சுகம் ரத்னேசம் ரத்னகுண்டல மண்டிதம்!
நவரத்ன கிரீடஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கடோராய நம:

38) திவ்ய ரத்னாங்குளீகர்ணம் ரத்னாபரண பூஷிதம்!
நாநாரத்னம் மணிமயம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் த்ரிபுராந்தகாய நம:

39) ரத்னாங்குளீயவிலஸத் கரசாகா நகப்பிரபம்!
பக்தமானஸ கேஹஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் வ்ருஷாங்காய நம:

40) வாமாங்க பாகவிஸத் அம்பிகா வீக்ஷணப் பிரியம்!
புண்டரீக நிபாக்ஷஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் வ்ருஷபாரூடாய நம:

41) ஸம்பூர்ணகாமதம் சௌக்யம் பக்த இஷ்டபலபூரகம்!
ஸௌபாக்யதம் ஹிதகரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பஸ்மோத்தூளித விக்ரஹாய நம:

42) நாநா சாஸ்த்ர குணோபேதம் ஸ்புரத் மண்டல விக்ரஹம்!
வித்யா விபேதன ஹிதம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸாமப்பிரியாய நம:

43) அப்ரமேய குணாதாரம் வேதக்ருத் ரூபவிக்ரஹம்!
தர்ம அதர்மப்ரவிருத்தஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸ்வரமயாய நம:

44) கௌரீ விலாஸ சதனம் ஜீவம் ஜீவபிதாமஹம்!
கல்பாந்த பைரவம் சுப்ரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் த்ரயீமூர்த்தயே நம:

45) சுகதம் சுகநாதஞ்ச துக்கதம் துக்கநாசனம்!
துக்க அனதானாம் பத்ரஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அநீஸ்வராய நம:

46) சுகரூபம் ரூபநாசம் ஸர்வதர்ம பலப்ரதம்!
அதீந்த்ரியம் மஹாமாயம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸர்வக்ஞாய நம:

47) ஸர்வபக்ஷி ம்ருகாகாரம் ஸர்வபக்ஷிம்ருகாதிபம்!
ஸர்வபக்ஷி ம்ருக ஆதாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பரமாத்மனே நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

48) ஜீவாத்யக்ஷம் ஜீவவர்யம் ஜீவஜீவனரக்ஷகம்!
ஜீவக்ருத் ஜீவஹரணம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சோம சூர்ய அக்நிலோசனாய நம:

49) விஸ்வாத்மானம் விஸ்வவந்த்யம் வஜ்ராங்கம் வஜ்ர ஹஸ்தகம்!
வஜ்ரேசம் வஜ்ர பூஷஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஹவிஷே நம:

50) கணாதிபம் கணாத்யக்ஷம் ப்ரளயானல நாசகம்!
திகம்பரம் க்ஷோபநாசம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் யக்ஞ்யமயாய நம:

51) த்ரியம்பகஞ்ச ம்ருடம் சூலம் அரிஷட்வர்க நாசகம்
ஜிதேந்த்ரியம் வீரபத்ரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸோமாய நம:

52) குந்தேத்து சங்கதவளம் பவநேத்ரபிது: ஜ்வலம்!
காலாக்நிருத்ரம் ஸர்வேசம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பஞ்சவக்த்ராய நம:

53) கம்புக்ரீவம் கம்புகண்டம் தைர்யதம் தைர்யவர்த்தகம்!
சார்தூலசர்ம வஸனம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸதாசிவாய நம:

54) ஜகத்உத்பத்தி ஹேதுஞ்ச ஜகத்ப்ரளய காரணம்!
பூர்ணானந்த ஸ்வரூபஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் விஸ்வேஸ்வராய நம:

55) ஸ்வர்ணகேசம் மஹத்தேஜ: புண்யஸ்ரவண கீர்த்தனம்!
ப்ரும்ஹாண்ட நாயகம் தாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் வீரபத்ராய நம:

56) மந்தாரமூலநிலயம் மந்தாரகுஸுமப்ரியம்!
வ்ருந்தாரகப் பிரயதரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கணநாதாய நம:

57) மஹேந்த்ரியம் மஹாபாஹும் விஸ்வாஸ பரிபூர்ணகம்!
ஸுலபாஸுலபம் லப்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ப்ரஜாபதயே நம:

58) பீஜாதாரம் பீஜரூபம் நிர்பீஜம் பீஜவ்ருத்திதம்!
பரேசம் பீஜநாசஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஹிரண்ய ரேதஸே நம:

59) யுகாகாரம் யுகாதீசம் யுகக்ருத் யுகநாசனம்!
யுகேசம் யுகநாசஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் துர்தர்ஷாய நம:

60) தூர்ஜடம் பிங்கள ஜடம் ஜடா மண்டல மண்டிதம்!
கர்ப்பூரகௌரம் கௌரீசம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கிரீசாய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

61) ஸுராவாசம் ஜனாவாசம் யோகீசம் யோகிபுங்கவம்
யோகதம் யோகினம் ஸிம்ஹம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கிரிசாய நம:

62) உத்தமா அநுத்தமம் தத்வம் அந்தகாசுர ஸுதனம்!
பக்தகல்பத்ருமம் ஸ்தவ்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அநகாய நம:

63) விசித்ர மால்யா வஸநம் திவ்யசந்தன சர்ச்சிதம்
விஷ்ணுப் ப்ரம்மாதி வந்தயம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் புஜங்க பூஷணாய நம:

64) குமார பிதரம் தேவம் ஸிதசந்த்ரம் கலாநிதிம்!
ப்ரும்ம சத்ரும் ஜகந் மித்ரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பர்க்காய நம:

65) லாவண்ய மதுராகாரம் கருணாரஸ வாரிதிம்!
ப்ருவோர்மத்யே ஸஹஸ்ரார்ச்சி: ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கிரிதன்வநே நம:

66) ஜடாதரம் பாவகாக்ஷம் ருக்ஷேசம் புவனாஸ்ரயம்!
காமதம் ஸர்வதா கம்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கிரிப்ப்ரியாய நம:

67) சிவம் சாந்தம் உமாநாதம் மஹாத்யான பராயணம்!
ஞானப் ப்ரதம் க்ருத்தி வாசம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் க்ருத்தி வாஸஸே நம:

68) வாஸுக்யுரக ஹாரஞ்ச லோகானுக்ரஹ காரணம்!
ஞானப் ப்ரதம் க்ருத்தி தரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் புராராதயே நம:

69) சசாங்க தாரிணம் பர்கம் ஸர்வலோகைக சங்கரம்!
சுத்தஞ்ச சாஸ்வதம் நித்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பகவதே நம:

70) சரணாகத தீனார்த்தி பரித்ராண பராயணம்!
கம்பீரஞ்ச வஷட்காரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ப்ரமதாதிபாய நம:

71) போக்தாரம் போஜனம் போஜ்யம் ஜேதாரம் ஜிதமானஸம்!
கரணம் காரணம் ஜிஷ்ணும் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ம்ருத்யுஞ்ஜயாய நம:

72) க்ஷேத்ரக்ஞம் க்ஷேத்ரபாலஞ்ச பரார்த்தைகப் ப்ரயோஜனம்!
வ்யோமகேசம் பீமவேஷம் ஏகபில்பம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸுக்ஷ்மதனவே நம:

73) பாவக்ஞம் தருணோபேதம் க்ஷோதிஷ்டம் யமசாஸகம்!
ஹிரண்ய கர்பம் ஹேமாங்கம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஜகத் வியாபினே நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

74) தக்ஷம் சாமுண்டஜனகம் மோக்ஷதம் மோக்ஷ நாயகம்!
ஹிரண்யதம் ஹேமரூபம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஜகத்குரவே நம:
75) மஹா ச்மசானநிலயம் ப்ரஸன்ன ஸ்படிகப் ப்ரபம்!
வேதாஸ்வம் வேதரூபஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் வியோமகேசாய நம:
76) ஸ்திரம் ஸ்வதர்ம மானாபம் ப்ரம்ஹண்யம் சாஸ்ரயம் விபும்!
ஜகந்நிவாசம் ப்ரதமம் ஏகபில்வம் சிவார்ப்பணம்
ஓம் ஹாம் மஹாஸேன ஜனகாய நம:
77) ருத்ராக்ஷ மாலாபரணம் ருத்ராக்ஷப் பிரிய வத்ஸலம்!
ருத்ராக்ஷபக்த ஸம்ஸ்தவ்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சாரு விக்ரமாய நம:
78) பணீந்த்ர விலசத்கண்டம் அஹீந்த்ர வலயான்விதம்!
முனிவந்தயம் முனிஸ்ரேஷ்டம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ருத்ராய நம:
79) நாகேந்த்ர விலஸத்கர்ணம் புஜங்க - ஆபரணப்பிரியம்!
தக்ஷாத்வர விநாசஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பூதபதயே நம:
80) ம்ருகேந்த்ர சர்மவஸனம் முனிஸாத்யைக ஜீவனம்!
ஸர்வதேவாதி பூஜ்யஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸ்தாணவே நம:
81) நிதநேஸம் தனாதீஸம் அப ம்ருத்யு விநாஸனம்!
லிங்கமூர்த்திம் அலிங்காக்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அஹிர்புத்னியாய நம:
82) பக்தகல்யாணதம் வ்யஸ்தம் வேதவேதாந்த ஸம்ஸ்துதம்!!
கல்பக்ருத் கல்ப நாசஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் திகம்பராய நம:
83) கோரபாதக தாவாக்நிம் ஜன்மகர்ம விவர்ஜிதம்!
கபால மாலாபரணம் எகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அஷ்டமூர்த்தயே நம :
84) மாதங்க சர்ம வஸனம் விராட்ரூபம் விதாரகம்!
விஷ்ணுக்ராந்தம் அனந்தஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அனேகாத்மநே நம:
85) யக்ஞகர்ம பலாத்யக்ஷம் யக்ஞவிக்ன விநாஸகம்!
யக்ஞேஸம் யக்ஞபோக்தாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸாத்விகாய நம:
86) காலாதீதம் த்ரிகாலக்ஞம் துஷ்டநிக்ரஹ காரகம்!
யோகிமானஸ பூஜ்யஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் சுத்த விக்ரஹாய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

87) மஹோன்னதம் மஹாகாயம் மஹோதரம் மஹாபுஜம்!
மஹாவக்த்ரம் மஹா வ்ருத்தம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸாஸ்வதாய நம:

88) ஸுநேத்ரம் ஸுலலாடஞ்ச ஸர்வம் பீமபராக்ரமம்!
மஹேஸ்வரம் சிவதரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் கண்ட பரஸவே நம:

89) சமஸ்த்த ஜகதாதாரம் ஸமஸ்த குணஸாகரம்!
ஸத்யம் ஸத்ய குணோபேதம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அஜாய நம:

90) மாக க்ருஷ்ண சதுர்தஸ்யாம் பூஜார்ஹஞ்சஜகத்குரும்!
துர்பலம் சர்வதேவானாம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பாஸவிமோசனாய நம:

91) ஸாலக்ராமேஷு விப்ராணாம் தடாக சத கூபயோ:!
கோடிகன்யா மஹாதானம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ம்ருடாய நம:

92) தர்ஸனம் பில்வ வ்ருக்ஷஸ்ய ஸர்பஸனம் பாபநாசனம்!
அகோர பாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பசுபதயே நம:

93) துளஸீ நீலநீர்குண்டீ ஜம்பீர ஆமலகம்ததா!
அகோர பாபஸம்ஹாம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் தேவாய நம:

94) அகண்ட பில்வபத்ரைச்ச பூஜயேத் நந்திகேஸ்வரம்!
முச்யதே ஸர்வ பாபேப்ய: ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் மஹாதேவாய நம:

95) ஸாலங்க்ருதம் ஸதாம் வ்ருத்தம் கன்யாகோடி ஸஹஸ்ரகம்!
ஸாம்ராஜ்யப் ப்ரித்வீதானஞ்ச ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அவ்யயாய நம:

96) தசகோடி துரங்காணாம் அஸ்வமேத ஸஹஸ்ரகம்!
துலாபாரம் சதாவர்த்தி: ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஹரயே நம:

97) சதுர்வேத ஸஹஸ்ராணி பாரதாதி புராணகம்!
ஸாம்ராஜயப் ப்ருத்வீதானம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பூஷ தந்த பிதே நம:

98) ஸர்வ ரத்னானி மேருஞ்ச காஞ்சனம் திவ்ய வஸ்த்ரகம்!
ஸவத்ஸ தேனு கோடீனாம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அவ்யக்தாய நம:

99) அஷ்டோத்தர சதம்பில்வம்யோ அர்ப்பயேத்லிங்க மஸ்தகே!
அதர்வோக்தம் பலம் லப்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் தக்ஷாத்வர ஹராய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

100) காசீ க்ஷேத்ர நிவாஸஞ்ச காலபைரவதர்சனம்!
அகோரபாப ஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஹராய நம:
101) அஷ்டோத்தர ஸதஸ்லோகை: ஸ்தோத்ராத்யை: பூஜயேத்யதா!
த்ரிஸந்த்யாம் மோக்ஷம் ஆப்னோதி ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் பகநேத்ரபிதே நம:
102) தந்தி கோடி ஸஹஸ்ராணாம் பூஹிரண்ய ஸஹஸ்ரகம்!
ஸர்வக் க்ருதுமயம் புண்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அவ்யக்ராய நம:
103) புத்ரபௌத்ராதிகம் போகம் புக்த்வாச அத்ர யதேப்ஸிதம்!
அந்தேச சிவஸாயுஜ்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸஹஸ்ராக்ஷாய நம:
104) விப்ரகோடி ஸஹஸ்ராணம் பக்த தாநாச்ச யத்பலம்!
தத்பலம் ப்ராப்நுயாத் ஸத்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் ஸஹஸ்ரபதே நம:
105) சிவநாமகீர்த்தனம் யச்ச சிவபாதாம்பு:ய:பிபேத்!
ஜீவன் முக்தோ பவேத் ஸத்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அபவர்க்கப் ப்ரதாய நம:
106) அனேகதான பலதம் அனந்த சுக்ருதார்ப்பகம்!
தீர்த்த யாத்ரா அகிலம் புண்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் அனந்தாய நம:
107) த்வம் மாம் பாலய ஸர்வத்ர பதத்யானம் க்ருதம் தவ!
பாவனம் சங்கரம் நித்யம் ஏகபில்வம் சிவார்ப்பணம்!!
ஓம் ஹாம் தாரகாய நம:
108) ஏககாலம் படேன்நித்யம் சர்வசத்ரு நிவாரணம்!
த்விகாலம் ய:படேத் நித்யம் ஸர்வ பீதி நிவாரணம்!!
ஓம் ஹாம் பரமேஸ்வராய நம:
109) த்ரிகால ய:படேத் நித்யம் மனோவாஞ்சா பலப்ப்ரதம்!
அசிராத் கார்ய சித்திஞ்ச லபதே நாத்ர ஸம்ஸய!!
ஓம் ஹாம் பவாய தேவாய நம:
110) ஏககாலம் த்விகாலம் வா த்ரிகாலம் ய:படேந்நர!
லக்ஷ்மீப் ப்ராப்தி: சிவாவாஸ : சிவேநஸஹ மோததே!!
ஓம் ஹாம் சர்வாய தேவாய நம:
111) கோடி ஜன்ம க்ருதம் பாபம் அர்ச்சநேன விநஸ்யதி!
சப்தஜன்மக்ருதம் பாபம் கீர்த்தனேன விநஸ்யதி!!
ஓம் ஹாம் ஈசானாய தேவாய நம:
112) ஜன்மாந்தர க்ருதம் பாபம் ஸ்ரவணேன விநஸ்யதி!
திவாராத்ரி க்ருதம் பாபம் தர்சனேன விநஸ்யதி!!
ஓம் ஹாம் பசுபதேர் தேவாய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

113) க்ஷணம் க்ஷணம் க்ருதம் பாபம் ஸ்மரணேன வினஸ்யதி!
புஸ்தகம் தாரயேத்தேஹம் ஆரோக்யம் பயனாஸகம்!!
ஓம் ஹாம் ருத்ராய தேவாய நம:

114) த்ரயோதச உத்தரசதம் ஸ்லோகை: ஸங்கடிதம் வரம்!
ஏகபில்வார்ப்பணஸ்த் தோத்ரம்ய: படேத் சிவசந்நிதௌ!!
ஓம் ஹாம் உக்ராய தேவாய நம:

115) ஸ ஸர்வஸித்திம் அவாப்னோதி ஆயு: கீர்த்திஞ்ச விந்ததி!
ஸர்வே ஸம்பூஜ்யதே லோகே சிவலோகே மஹீயதே!!
ஓம் ஹாம் பீமாய தேவாய நம:

116) அஷ்டம்யாம் ஸோமவாரேச ப்ரதோஷ சிவாரத்ரிஷு!
ஆர்த்ராயாம் குருவாரேச த்ரிதலை: பில்வபத்ரகை:!!
ஓம் ஹாம் மஹதோ தேவாய நம:

117) அஷ்டோத்தர சதம் கார்யம் அர்ச்சனம் சிவமஸ்தகே!
தேன ஸ்வர்கம் அவாப்னோதி சிவஸாயுஜ்யம் அவாப்நுயாத்!!
ஓம் ஹாம் மஹாதேவாய நம:

மேற்கண்ட இந்த பில்வஸ்தோத்திர அஷ்டோத்தர சதநாமங்களை பில்வ இதழ் கொண்டு எவர் ஒருவர் அஷ்டமி, திங்கட்கிழமை, ப்ரதோஷம், சிவராத்திரி, திருவாதிரை நாள், வியாழக்கிழமை போன்ற சிறப்புடைய நாட்களில் சிவபெருமானை அர்ச்சித்து வழிபடுகிறார்களோ அவர்கள் சர்வா பீஷ்டங்களையும் அடைவார்கள் என்பது திண்ணம்.

உயிர்க்கொலை செய்த பாவங்கள், நம்பிக்கைத் துரோகம் செய்த பாவங்கள், சிசுஹத்தி, பிரமஹத்தி தோஷங்கள் நீங்கும்.

மேலும் மூன்றுதளங்கள் உள்ள வில்வத்தினால் சிவனை அர்ச்சிப்பதால் மூன்று ஜென்மத்துப் பாவங்கள் நீங்கும். நீண்ட ஆயுள் கூடும். பதினாறு வகையான செல்வங்களையும் கொடுக்கும்.

"திரிகுணம், திரிகுணாகாரம், திரிணோத்ரஞ்சத், திரியாயுதம், திரிஜன்மபாப சம்ஹாரம் ஏக பில்வம் சிவார்ப்பணம்".

சிவமஸ்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

RMG

GROUP COMPANIES

SAHORA

SAHORA ENGINEERING INDIA (P) LTD.,

Roads & Bridges

ves

The people to work with

VALLE E-SOLUTION PRIVATE LIMITED

The people to work with

RMG GROUP COMPANIES

.No:42-B) N.No:51, C.P. Manor Building, C.P. Ramasamy Road,
Alwarpet, Chennai - 600 018. Ph : +91 (44) 4553 5253
Email : rmgdeva@gmail.com www.rmg.org.in